புதிய பாடத்திட்டத்திற்கேற்ப 2019இல்
இருந்து பரீட்சைக்கு தோற்றுவோருக்கானது

1603

க.பொ.த உயர்தரம்

பொருளியல்

தேர்ச்சி - 1

பொருளாதார முறைமையொன்றில் அடிப்படை
பொருளாதாரப் பிரச்சினைகளை தீர்க்கும்
மாற்று முறைகளை நுணுக்கமாக விளக்குவார்

எஸ். ஸ்ரீராம்
BA, MA(Econ), PGDE, M Ed(R), JP(All Island)

LOYAL PUBLICATION

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Class No:	330
Acc No	1603

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய பாடத்திட்டத்திற்கேற்ப **2019** இல்
இருந்து பரீட்சைக்கு தோற்றுவோருக்கானது

க.பொ.த உயர்தரம்

பொருளியல்

தேர்ச்சி – 1

பொருளாதார முறைமையொன்றில் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்கும் மாற்று முறைகளை நுணுக்கமாக விளக்குவார்.

எஸ். ஸ்ரீராம்
BA, MA(Econ), PGDE, M Ed(R), JP(All Island)
ST. Anthony's Tamil Mahavidthiyalayam
Colombo - 14

லோயல் பப்ளிகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் பதிப்பு : யூன் 2020

தலைப்பு : தேர்ச்சி – 01
பொருளாதார முறைமையொன்றில்
அடிப்படைப் பொருளாதாரப்
பிரச்சினைகளைத் தீர்க்கும் மாற்று
முறைகளை நுணுக்கமாக விளக்குவார்.

பக்கங்கள் : 210

ஆசிரியர் : எஸ். ஸ்ரீராம்
B.A, M.A(Econ), P.G.D.E, M.Ed(R), J.P(All Island)
ST. Anthony's Tamil Mahaviddiyalayam,
Colombo - 14.
077-1611571, sri20-ram@hotmail.com
www.ecraam.blogs.com

பதிப்புரிமை : லோயல் பப்ளிகேசன்

பதிப்பு : லோயல் அச்சகம்

வெளியீடு : *Loyal Publication*
125, New Moor Street,
Colombo - 12.
T.P : 011 - 2433874, 011 - 4280880
0777 556277

விலை : 350/=

ISBN : 978-955-3426-42-0

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணிந்துரை

பொருளிய எனும் பரந்த பாடப்பரப்பில் தேர்ச்சி பெற்றவரும், பல வருட கற்பித்தல் துறையில் அனுபவமுடைய திரு. எஸ். ஸ்ரீராம் அவர்களினால் க.பொ.த (உ/த) பொருளியல் புதிய பாடத்திற்கு அமைவாக முதலாவது தேர்ச்சி, விளக்கமாகவும் பரீட்சைக்கு ஆயத்தமாகும் மாணவர்களுக்கு உரிய முறையில் புத்தக வடிவில் வடிவமைத்து வழங்குவதற்கான இந்த முயற்சி பெரிதும் வரவேற்கத்தக்கது.

பொருளியல் மட்டுமன்றி பலதுறை நூல்களை எழுதி பிரசுரித்திருக்கும் திரு. எஸ். ஸ்ரீராம் அவர்களின் முயற்சி தொடரவேண்டும் என வாழ்த்துவதோடு மாணவர்கள் மற்றும் பொருளியல் பாடச்சம்பந்தமான அடிப்படை அறிவைப் பெறும் அனைவரும் இந்நூலை பயன்படுத்தி பயன்பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு உயர்தர மாணவர்கள் அனைவருக்கும் பொருளியல் பாடத்தில் சிறந்த பெறுபேறு கிடைக்க இந்நூல் துணைப்புரியும் என்பது திண்ணம்.

"உன்னிடம் மறைத்திருக்கும்
ஆற்றல்களை வெளிக்கொணரும் வழி
விடா முயற்சியும்
தொடர் உழைப்புமே ஆகும்"

- Sir Winston Churchill

திரு. எஸ். வைகுந்தன்
B.Com(Hons) in Accounting,
Dip in ECHE, Dip in CCM
Principal & Director -
Xellence International School

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் உரை

பொருளியல் புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாக 2019 இல் இருந்து க.பொ.த (உயர்தர) பரீட்சைக்கு தோற்றுவோருக்கான முதலாவது தேர்ச்சிக்கு உரிய வள நூலாக இந்நூல் வெளிவருகிறது.

முதலாவது தேர்ச்சிக்கு உரிய தேர்ச்சி மட்டங்களை மையப்படுத்தி தேவையான குறிப்புக்களையும் வினா–விடைகளையும் உள்ளடக்கி அங்கங்கே பெட்டிக் குறிப்புகளையும் இறுதியில் பல்தேர்வு வினாக்கள், கட்டமைப்பு வினாக்கள் என்பவற்றையும் வழங்கி உள்ளேன்.

இறுதி பரீட்சையில் இத்தேர்ச்சியில் மாணவர்கள் உச்ச புள்ளியை பெற இவ்வளநூல் வழிகாட்டும் என திடமாக நம்புகிறேன்.

இது எனது 27 ஆவது நூலாகும். சக ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் சமூகநலன் விரும்பிகளினதும் ஆதரவுமே என்னைத் தொடர்ந்து எழுத தூண்டியது. அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

இக்கட்டான சூழ்நிலையிலும் இந்நூலை வெளியீடு செய்கின்ற லோயல் பப்ளிகேசனின் சமூக அக்கறை போற்றத்தக்கதாகும். அவர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்வதுடன் அணிந்துரை வழங்கியவருக்கும் அட்டை குறிப்பு வழங்கியவருக்கும் இந்நூலை அழகாக வடிவமைத்து தந்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றிகள்.

ஆக்கபூர்வமான விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன.

தொடர்புகளுக்கு
எஸ். ஸ்ரீராம்
111, கல்லூரி வீதி,
கொழும்பு – 13.
077-1611571
sri20-ram@hotmail.com
www.ecraam.blogs.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளடக்கம்

தேர்ச்சி - 01

பொருளாதார முறைமையொன்றில் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்கும் மாற்று முறைகளை நுணுக்கமாக விளக்குவார்.

பக்கம்

தேர்ச்சி மட்டம் 1.1 1 - 18

- மனிதனின் பொருளாதார நடத்தை
- பொருளியல் ஒரு சமூக விஞ்ஞானம்
- பொருளியலின் முக்கியத்துவம்
- நுண்பாக பொருளியல், பேரின பொருளியல் ஆகியவற்றிற்கு இடையிலான வேறுபாடுகள்
- நேர் பொருளியல், நியமப் பொருளியல் என்பவற்றுக்கிடையிலான வேறுபாடுகள்

தேர்ச்சி மட்டம் 1.2 19 - 32

- மனித தேவைகள் விருப்பங்களுக்கிடையிலான வேறுபாடுகள்.
- பொருளாதார பண்டங்களும், பொருளாதாரமல்லா பண்டங்களும்.
- பொருளாதார வளங்கள், பொருளாதாரமல்லா வளங்கள்
- மீள் உருவாக்கக்கூடிய வளங்கள், மீள் உருவாக்க முடியாத வளங்கள்.

தேர்ச்சி மட்டம் 1.3 33 - 54

- உற்பத்தி காரணிகளின் பண்புகள்.
- உற்பத்தி காரணிகளின் விளைதிறன்.
- உற்பத்தி காரணிகளின் விளைதிறனைத் தீர்மானிக்கும் காரணிகள்.

தேர்ச்சி மட்டம் 1.4 55 - 68

- அருமை
- அருமைக்கான காரணங்கள்
- மாற்றுப்பயன்பாடும் தெரிவும்
- சந்தர்ப்பச் செலவு
- சந்தர்ப்பச் செலவு பூச்சியமாகும் சந்தர்ப்பங்கள்

தேர்ச்சி மட்டம் 1.5 69 - 73

- அடிப்படை பொருளாதார பிரச்சினைகள்
- பொருளாதார அடிப்படை பிரச்சினைகள் தோன்றுவதற்கான காரணங்கள்

தேர்ச்சி மட்டம் 1.6 74-79

- பொருளாதார முறைமைகள்
- பொருளாதார முறைமையொன்றின் அடிப்படை விடயங்கள்
- பொருளாதார முறைமையொன்றினை தீர்மானிக்கும் பிரிவினர்கள்
- பொருளாதார முறைமையொன்றில் தீர்மானம் மேற்கொள்ளும் பிரிவினரின் தொழிற்பாடுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கம்

தேர்ச்சி மட்டம் 1.7 80 - 111

- பொருளாதார அமைப்புக்களின் வகைகள்
- சந்தை பொருளாதார அமைப்பின் பண்புகள்
- சந்தை பொரளாதாரம் அடிப்படை பொருளாதார பிரச்சினைக்கு தீர்வு காணும் முறைகள்
- கட்டளை பொருளாதார அமைப்பின் பண்புகள்
- கட்டளை பொருளாதாரம் அடிப்படை பொருளாதார பிரச்சினைக்கு தீர்வு காணும் முறைகள்
- கலப்பு பொருளாதார அமைப்பின் பண்புகள்
- கலப்பு பொருளாதாரம் அடிப்படை பொருளாதார பிரச்சினைக்கு தீர்வு காணும் முறைகள்
- பொருளாதார முறைமைகள் தொடர்பான புதிய போக்குகள்
- பொருளாதார அமைப்பொன்றின் செயலாற்றுகையை அளவிடக்கூடிய நியதிகள்

தேர்ச்சி மட்டம் 1.8 112 - 123

- உற்பத்தி சாத்திய வளையி
- உற்பத்தி சாத்திய வளையிகளை அமைக்கும் போது பயன்படுத்தும் எடுகோள்கள்
- நிலையான, கூடிச்செல்லும் சந்தர்ப்பர்ச் செலவு நிலைமைகளில் உற்பத்தி சாத்திய வளையி
- கூடிச் செல்லும் சந்தர்ப்பச் செலவுக்கும் யாதார்த்த நிலைமைகளுக்கான பொருத்தப்பாடுகள்

தேர்ச்சி மட்டம் 1.9 124 - 170

- சிற்றினப் பொருளாதார எண்ணக்கருக்களை உற்பத்திச் சாத்திய வளையியின் அடிப்படையில் முன்வைத்தல்.
- பேரினப் பொருளாதார எண்ணக்கருக்களை உற்பத்திச் சாத்திய வளையியின் அடிப்படையில் முன்வைத்தல்.
- உற்பத்தி இயலளவு மாற்றமடைவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளுக்கேற்ப உற்பத்தி இயலளவு மாற்ற மடையும் விதத்தை உற்பத்திச் சாத்திய வளையியின் மூலம் காட்டுதல்.

- **பல்தேர்வு வினாக்கள் - பகுதி I** 171 - 197
- **கட்டமைப்பு வினாக்கள் - பகுதி II** 198-203
- **பல்தேர்வு வினாக்களுக்கான விடைகள்** 204

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்ச்சி – 01

பொருளாதார முறைமையொன்றில் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்கும் மாற்று முறைகளை நுணுக்கமாக விளக்குவார்.

தேர்ச்சி மட்டம் 1.1 : பொருளியலின் அடிப்படையை பரிசீலனை செய்வார்.

பாட உள்ளடக்கம் :

- மனிதனின் பொருளாதார நடத்தை
- பொருளியல் ஒரு சமூக விஞ்ஞானம்
- பொருளியலின் முக்கியத்துவம்
- நுண்பாக பொருளியல், பேரின பொருளியல் ஆகியவற்றிற்கு இடையிலான வேறுபாடுகள்
- நேர் பொருளியல், நியமப் பொருளியல் என்பவற்றுக் கிடையிலான வேறுபாடுகள்

மனித பொருளாதார நடத்தை

சமூகத்தில் காணப்படும் வரையறுக்கப்பட்ட வளங்களைப் பயன்படுத்தி மனிதன் தனது பௌதீக தேவைகளையும் விருப்பங்களையும் பூர்த்தி செய்ய மேற்கொள்ளும் செயற்பாடுகளும் நடத்தைகளும் பொருளாதார நடத்தை ஆகும்.

உதாரணம் : பொருட்கள் சேவைகளின் உற்பத்தி, பங்கீடு, முதலீடு

சமூகத்தில் மக்களுக்கிடையில் பல்வேறுவிதமான நடத்தைகள் காணப்படுவதுடன் மனிதனின் பொருளாதார நடத்தை தொடர்பான ஆய்வு பொருளியல் மூலம் இடம்பெறும்.

பொருளியல் பொருட்கள் சேவைகளின் உற்பத்தி, பரிமாற்றம் நுகர்வுடன் தொடர்புடைய மனித நடத்தை ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக விஞ்ஞானம்

மனித நடத்தைகளை சமூக விஞ்ஞானம் பல்வேறு கண்ணோட்டத்தில் ஆய்வு செய்யப்படுகிறது.

மனிதன் சமூகத்தில் செயற்படும் முறையைப் பல்வேறான கண்ணோட்டத்தில் ஆய்வு செய்வது சமூக விஞ்ஞானத்தின் மூலம் இடம்பெறும்.

சமூகத்தில் மனிதன் செயற்படும் முறையைப் பல்வேறான கோணங்களில் ஆய்வு செய்து அதனால் பெறப்படும் முடிவுகளுடன் இணைந்த ஒரு கல்வியாக அமையும்.

பொருளியல் ஒரு விஞ்ஞானம்

பொருளியல் கோட்பாடுகளும் மூலாதாரங்களும் விஞ்ஞான ஆய்வு முறையினை பயன்படுத்தி உருவாக்கப்படுவதனால் பொருளியல் ஒரு சமூக விஞ்ஞானம் ஆகும்.

பொருளியல் கோட்பாடுகளும் விதிகளும் விஞ்ஞான அணுகு முறையின் கீழ் கட்டியெழுப்பப்படுவதால் பொருளில் ஒரு விஞ்ஞானம் ஆகும். பொருளியல் ஒரு விஞ்ஞானமாக காணப்படினும் அது சமூக விஞ்ஞானத்தில் ஒன்றாகவே வகையிடப்படுகிறது.

சமூகத்தில் மனிதனின் பொருளாதார நடத்தையை பொருளியலானது பொருளியல் நோக்கில் ஆராய்கின்ற விஞ்ஞானமாகக் காணப்படுவதால் பொருளியல் ஒரு சமூக விஞ்ஞானமாகக் கருதப்படுகிறது.

நுகர்வுப் பொருட்களுக்கான கேள்வி எல்லைப்பயனிலும் *(Marginal Utility)* காரணிகளுக்கான கேள்வி அவற்றின் எல்லை விளைதிறனிலும் தங்கியுள்ளது. *(Marginal Productivity)*

குறிப்பு :-

- சமூக விஞ்ஞானத்தின் பிரதான நோக்கம் மனித நல்வாழ்வை மேம்படுத்தல்.
- பொருளியலானது பொருளியல் நோக்கில் ஆராய்ந்து பொருளாதார ரீதியில் மனித நல்வாழ்வை மேம்படுத்தலை மிகப் பிரதான இலக்கமாக கொண்டது.
- இதனை அளவிடும் பல விடயப்பரப்புக்களும்/ தலையங்களும் சுட்டிகளும் உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளியல் ஒரு சமூக விஞ்ஞானம்

பொருளியல் ஆனது மனித சமூகத்தில் இடம்பெறும் மனிதனின் பொருளாதார நடவடிக்கைகளை சமூக விஞ்ஞான ஆய்வுமுறையியலை பயன்படுத்தி ஆய்வு செய்யப்படுவதனால் பொருளியல் ஒரு சமூக விஞ்ஞானம் ஆகும்.

சமூகத்தில் மக்களுக்கிடையே பல்வேறு நடத்தை கோலங்கள் காணப்படும். அதில் மனிதனின் பொருளாதார நடத்தை தொடர்பான ஆய்வு மட்டுமே பொருளியலில் இடம் பெறும்.

பொருளியலானது மனித நடத்தைப்பற்றி பொருளியல் நோக்கில் ஆராய்கின்ற விஞ்ஞானமாக காணப்படுவதால் பொருளியல் ஒரு சமூக விஞ்ஞானமாகும்.

சமூகத்தில் மனிதனின் பொருளாதார நடத்தையை பொருளியலானது பொருளியல் நோக்கில் ஆராய்கின்ற விஞ்ஞானமாகக் காணப்படுவதால் பொருளியல் ஒரு சமூகவிஞ்ஞானம் ஆகும்.

தனிநபர் நடத்தை பற்றியும் சமூக நடத்தைப்பற்றியும் அவற்றுக்கு இடையிலான தொடர்பு பற்றியும் பொருளியலானது பொருளியல் நோக்கில் ஆராய்கின்ற விஞ்ஞானமாக காணப்படுவதால் பொருளியல் ஒரு சமூக விஞ்ஞானமாகும்.

சமூக விஞ்ஞானங்களின் ஆய்வு முறை

- ஆய்வு பொருள் தீர்மானிக்கப்படும்.
- சரியான ஆய்வுத் தொகுதி தெரியப்படும்.
- தரவுகள் திரட்டப்படும்.
- தரவுகள் பகுப்பாய்வு செய்யப்படும்.
- தற்காலிக முடிவுகள் பெறப்படும். (கருதுகோள்கள் அமைக்கப்படும்)
- இவை வாய்ப்பு பார்க்கப்படும்.
- முடிவு பெறப்படும்.

குறிப்பு :-

♣ மனித நடத்தையினை நேரடியாகவோ அல்லது மறை முகமாகவோ கட்டுப் படுத்தப்படும் போது அவற்றின் சுயாதீனத்தன்மை இழக்கப்படுகின்றது.

♣ ஆகவே ஆய்வு பொருளுக்கான விடயம் சரியான தொகுதியில் இருந்து மிக நுட்பமான முறையில் தரவுகள் திரட்டப்பட்டு ஆய்வு இடம்பெறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பு :-

♣ இவை 100% நிச்சய தன்மை உடைய முடிவுகளை தருவதில்லை. அதாவது இவை தருவன நிகழ்தகவு ரீதியான முடிவுகளாகும்.

இயற்கை விஞ்ஞானம்

இயற்கை நிகழ்வுகளுக்கு இடையிலான காரண காரிய தொடர்பை தனக்கே உரியதான ஆய்வு முறையியல் அடிப்படையில் ஆய்வு செய்வது இயற்கை விஞ்ஞானம் ஆகும்.

இயற்கை புதிர்களை விடுவித்தல் இதன் மூலம் இடம்பெறும்.

உதாரணம் : இரசாயனவியல், பௌதிகவியல், புவியியல்

பொருளியலானது இயற்கை விஞ்ஞானங்களில் வேறுபடும் விதம்

பொருளியலானது ஒரு சமூக விஞ்ஞானம். பல விதங்களில் அது இயற்கை விஞ்ஞானங்களில் இருந்து வேறுபடுகின்றது.

- சமூகத்தில் மனிதனுடைய பொருளாதார நடத்தைகளை ஆய்வு செய்கிறது.
- பொருளியல் விதிகளை உருவாக்கி சமூகத்தில் பொருளாதார நடத்தைகளை ஆய்வு செய்கின்றன.
- பொருளியல் விதிகள் மனித நடத்தையுடன் மிக நெருங்கிய தொடர்புடையன.
- பொருளியல் விதிகளை ஆய்வுகூடப் பரிசோதனைக்கு உட்படுத்த முடியாது.
- பொருளியல் விதிகளும் கோட்பாடுகளும் என்றுமே நிலைத்து நிற்கக் கூடிய தன்மையற்றவை அவை மாற்றம் உருவாவதாகவும் சுழற்சி அடைவதாகவுள்ளன.
- பொருளியல் முடிவுகள், விதிகள் 100% நிச்சயதன்மை கொண்டவை அல்ல. இவை நிகழ்வுகள் ரீதியானவையே ஆகும்.
- பொருளியல் விதிகளானவை காலம், இடம், வலயம், மனித நடத்தை கோலங்கள், சனத்தொகை அமைப்பு போன்ற காரணிகளின் அடிப்படையில் வேறுபடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கை விஞ்ஞானம்	சமூக விஞ்ஞானம்
♦ இயற்கைப் பற்றிய ஆராய்வு	♦ மனித நடத்தைகள் பற்றிய ஆராய்வு
♦ ஆய்வுகூட பரிசோதனை மேற் கொள்ளலாம்.	♦ ஆய்வுகூடத்தில் ஆய்வு செய்ய முடியாது.
♦ முடிவுகள் நிச்சயத் தன்மை வாய்ந்தவை.	♦ முடிவுகள் நிகழ்தகவு தன்மை வாய்ந்தவை.
♦ காலம், இடம், மனித நடத்தை போன்ற காரணிகளின் அடிப்படையில் வேறுபடுவதில்லை.	♦ காலம், இடம், மனித நடத்தை போன்ற காரணிகளின் அடிப்படையில் வேறுபடும்.
♦ அலகுகள் ஒவ்வொன்றும் ஒத்த தன்மை வாய்ந்தவை.	♦ அலகுகள் ஒவ்வொன்றும் ஒத்த தன்மை வாய்ந்தவை அல்ல.
♦ முடிவுகள் ஒத்தத் தன்மை வாய்ந்தவை.	♦ ஒரே மனித நடத்தைக்கான முடிவுகள் வேறுப்பட்டவையாக அமையலாம்.
♦ திட்டவட்டமான ஆய்வு முறை உண்டு.	♦ பல்வேறு விதமான சமூக ஆய்வு முறைகள் உண்டு.

பொருளியல் விஞ்ஞானத்தில் மாதிரிகளை உருவாக்கும் செயல் முறை

இது யதார்த்த உலகிலுள்ள சிக்கலான நிகழ்வு ஒன்றை இலகுபடுத்தும் ஒரு வழிமுறையாக மாதிரிகள் பயன்படுத்தப்படுகின்றன. உதாரணமாக எளிய பொருளாதாரமொன்றில் வருமான வட்டப்பாய்ச்சல் மாதிரிகளை உருவாக்கும் போது சிக்கலான நிகழ்வுகளை எளிமை யாகவும், திட்டவட்டமாகவும் முன்வைப்பதற்குப் பயன்படுத்தப்படும் நிபந்தனைகளே எடுகோள்கள் ஆகும்.

உதாரணமாக எளிய பொருளாதாரமொன்றில் அரச துறையும் வெளிநாட்டுத் துறையும் இல்லையெனக் கருதப்படுவது ஓர் எடுகோள் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதாரக் கொள்கைகள், நேர்கூற்றுக்கள் என்பவற்றை உருவாக்கும் போது பின்பற்றப்படும் படிமுறைகள்.

1. பொருளாதார நடத்தைகள், நிகழ்வுகள் (மாதிரிகள்) பற்றிய தரவுகளை அவதானித்து பெறலும் மதிப்பீடு செய்தலும்
2. மாதிரிகளை உருவாக்குதல்.
3. மாதிரிகள் உண்மையான தரவுகளாக அமைகின்றனவா? எனப் பரிசோதித்தல்.

குறிப்பு :-

- ♣ சமூக விஞ்ஞான ஆய்வு முறையில் அவதானித்தலும், தரவுகளை மதிப்பீடு செய்து வகையிடலும், மாதிரிகளை உருவாக்கல், எடுகோள்களை வரையறுத்தல் முடிவுகளை அல்லது உருவாக்கப்பட்ட மாதிரிகளை உண்மைத் தரவுகளுடன் அவற்றைப் பரிசோதித்தல், முடிவுக்கு வருதல் என்ற வகையில் அமைகிறது.
- ♣ இங்கு நேர்கூற்றுக்கள் முக்கியம் பெற பல காரணங்கள் உள்ளன.

பொருளியலில் மாதிரிகளை உருவாக்கல் செயல் முறை/ படிமுறை



பொருளியல் பாட ஆய்வு பிரச்சினை

மனித சமூகத்தில் மிகவும் விரிவான பாடப்பரப்பு ஒன்று பொருளாதாரக் கண்ணோட்டத்துடன் தொடர்புபடுவதுடன், மனிதன் எதிர்நோக்கும் அதிகமான பிரச்சினைகள் பொருளாதார வடிவங்கள் பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளியலில் அவதானிக்கிற்குட்படும் எல்லாப் பொருளாதார நடவடிக்கைகளும் பொருட்கள் சேவைகளின் உற்பத்தி, பங்கீடு, நுகர்வு என்பவற்றுடன் தொடர்புடைய செயற்பாடுகள் ஆகும்.

இதனடிப்படையில் ஒரு சமூகமான வாழ்க்கையை நடத்துவதற்குத் தேவையான பொருட்களையும் சேவைகளையும் நுகர்வு செய்து, விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காகத் தனிநபரும், சமூகமும் செயற்படும் முறையும், அதற்காகத் தீர்மானம் எடுக்கப்படும் முறையும் பொருளியல் பாடத்துறையின் மூலம் ஆய்விற்கு உட்படுத்தப்படும்.

பொருட்கள் சேவைகளை உடைமையாக்கிக் கொள்வதற்கு மனிதனுள் காணப்படுகின்ற எல்லையற்ற ஆசைகளும் அதற்கு ஒப்பீடாக அப்பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்வதற்குத் தேவையான வளங்களின் வரையறுக்கப்பட்ட தன்மைக்கும் இடையிலான சிக்கலைத் தீர்த்து வைப்பதற்கு மனிதன் எவ்வாறு செயற்படுகின்றான் என்பது பொருளியல் மூலம் ஆய்வு செய்யப்படும்.

இதனால் பொருளியலைப் போன்று மனித வாழ்வுடன் நெருக்கமான வேறு எந்தப் பாடமுமில்லை எனக் கூறலாம்.

சமூக விஞ்ஞானங்களின் இராணியாகப் பொருளியல் கருதப் படுவதும் இதனாலேயாகும்.

மனித தேவைகளின் இருவகைகள்

1. பௌதீகத் தேவைகள்
2. உளத் தேவைகள்

1. பௌதீகத் தேவைகள்

பொருட்கள் சேவைகளின் நுகர்வின் மூலம் நேரடியாக நிறைவேற்றிக் கொள்ளக்கூடிய மனித தேவைகளே பௌதீகத் தேவைகள் எனப்படும்.

உதாரணம் : உணவு, உடை, உறையுள்

பௌதீகத் தேவைகளை பூர்த்தி செய்ய இடம்பெறும் நடவடிக்கைகள் பொருளாதார நடவடிக்கை எனப்படும்.

2. உளத் தேவைகள்

பொருட்கள் சேவைகளின் நுகர்வின் மூலம் நேரடியாக பூர்த்தி செய்யமுடியாத பல உளத்தேவைகளும் மனிதரிடத்தே காணப் படுகின்றன.

உதாரணம் : அன்பு, மன்னிப்பு, கருணை, காதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார நடத்தை

ஒரு சமூகம் தனக்கு கிடைக்கும் வரையறுக்கப்பட்டதும், பற்றாக்குறையுடையதும் மாற்றப்பயன்பாடுடைய வளங்களை கொண்ட மனிதன் தனது பௌதீகத் தேவைகளையும் விருப்பங்களையும் பூர்த்தி செய்ய மேற்கொள்ளும் செயற்பாடுகள் அனைத்தும் பொருளாதார நடத்தையாக வரையறை செய்யப்படும்.

மனிதனின் பொருளாதார நடத்தை தொடர்பான ஆய்வு பொருளியலில் இடம் பெறும்.

மனித தேவைகள் பல்துறைசாரந்த விடயம்

பொருளியல் ஆராய்கின்ற மனித தேவையானது பொருட்கள் சேவைகளுடன் தொடர்புடைய மனித தேவைகளை மட்டுமே பொருளியல் ஆராயும்.

பொருட்கள், சேவைகளால் பூர்த்தியாக்க முடியாத வேறு தேவைகளும் உள்ளன.

உதாரணம் : அன்பு, பாசம், காதல், கருணை, விடுதலை, மன்னிப்பு போன்ற உயர்ந்த மானிடப்பண்புகளை குறிப்பிடலாம்.

உதாரணம் : அரசியல் துறை, உளவியல் துறை

முடிவு : ஆகவே மனித தேவைகள் என்பது பல்துறை சார்ந்த விடயமாகும்.

பொருளியலுக்கான பொதுவரைவிலக்கணம்

"மாற்றுப் பயன்பாடுடைய அருமையான வளங்களுக்கும் எல்லையற்ற மனித விருப்பங்களுக்கும் இடையிலான தொடர்பு பொருளியல் ஆகும்."

பொருளியலுக்கான வரைவிலக்கணங்களை வகைப்படுத்தல்.
Types of Definition on Economics

- செல்வம் பற்றியது.
- பொருள் சார் நலன் பற்றியது.
- வள அருமை பற்றியது.
- பேரின பொருளாதார உறுதி பற்றியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளியலுக்கான வரைவிலக்கணம் வழங்கிய முக்கிய பொருளியல் அறிஞர்கள்

People who defined "Economics"

1. *அடம் சிமித் (Adam Smith)*
2. *அல்பிரட் மார்ஷல் (Alfred Marshall)*
3. *லயனல் ரொபின்ஸ் (Lionel Robinsons)*
4. *ஜேக்கப் வைனர் (Jacob Viner)*

பொருளியலை கற்பதன் முக்கியத்துவம்

பொருளியலை கற்பதன் முக்கியத்துவத்தை பின்வரும் உதாரணங்கள் மூலம் காட்டலாம்.

அரச பரிபாலனத்திற்கு தேவையான ஆலோசனைகளையும் கொள்கைகளையும் வழங்குவதற்கு.

நற்பிரஜையாக சமூகத்தில் வாழ, சமூகத்தில் நிகழும் பொருளியல் நிகழ்வுகளை புரிந்து கொள்ள, தர்க்கரீதியில் சிந்தித்துச் செயற்பட தேவையான ஆற்றலை வழங்குவதற்கு.

சாதூர்யமான வாக்காளர்களாக திகழ, பொருளாதாரத் திட்டங்களை மதிப்பீட செய்யும் ஆற்றலை வளர்த்து போலி அரசியல்வாதிகளிடம் இருந்து நாட்டைக் காத்துக் கொள்ளத் தேவையான அறிவை வழங்குவதற்கு

அரசினதும் தனிநபர்களினதும் பொருளாதாரத் திட்டங்களையும் வாய்ப்புக்களையும் மதிப்பிட்டு, இனம்கண்டு பயன்படுத்திக் கொள்ளும் ஆற்றலை விருத்தி செய்து கொள்வதற்கு.

அரசின் பொதுக் கொள்கையைத் தாக்கமுடையதாக மாற்றுவதற்கு தேவையான வலுவை பெறுவதற்கு.

- பொருளியல் நிகழ்வுகளை தெளிவாக விளங்கிக்கொள்ள அவசியமாகும்.
- முதலீட்டாளர், உற்பத்தியாளர், நுகர்வோர் என்போர் விளைத் திறனான தீர்மானங்களை மேற்கொள்வதற்கு அவசியம் ஆகும்.
- பாடசாலை மாணவன் ஒருவன் தர்க்க ரீதியாக சிந்திக்கத் தீர்மானம் மேற்கொள்ள அவசியமாகும்.
- ஒரு தனி நபருக்கு நல்லதொரு தொழிலை பெற்றுக்கொள்ள அவசியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளியலின் பிரிவுகள்

விடயப்பரப்பு நோக்கம் என்பவற்றின் அடிப்படையில்

1. சிற்றினப் பொருளியல்
2. பேரினப் பொருளியல்

தன்மையின் அடிப்படையில்

1. நலப்பொருளியல்
2. அபிவிருத்திப் பொருளியல்

செயற்பாட்டின் அடிப்படையில்

1. நேர்ப் பொருளியல்
2. நியமப் பொருளியல்

நுண்பாகப் பொருளியல்/ சிற்றினப் பொருளியல்

பொருளியல் ஒவ்வொரு பிரிவு, நிறுவனம், தனிநபர், பொருளியல் மாறிகள் போன்ற ஒவ்வொரு சிறிய அலகையும் தனித்தனியாக எடுத்து அவற்றின் நடத்தையை ஆய்வு செய்வது நுண்பாக்கப் பொருளியலாகும்.

பொருளியலில் தனி அலகொன்றை ஆய்வு செய்யும் நடவடிக்கையானது சிற்றினப் பொருளியல் ஆகும். மொத்தப் பொருளாதாரத்தில் ஒவ்வொரு அலகொன்றையும் தனித்தனியாகப் பிரித்து நுணுகி ஆராய்வது சிற்றினப் பொருளியல் ஆகும்.

பொருளாதார முறையொன்றினுள்ள நுகர்வோர், உற்பத்தி நிறுவனங்கள், ஊழியர்கள் போன்ற தீர்மானம் மேற்கொள்ளும் அலகுகளின் ஆய்வு செய்யும் நடவடிக்கையாக சிற்றினப் பொருளியல் உள்ளது.

உதாரணம் : நிறுவனமொன்றின் உற்பத்தி தொழிற்பாடு
ஒவ்வொரு பண்டம் தொடர்பான சந்தை செயற்பாடு
சந்தையில் நுகர்வோரின் நடத்தை அருமை
மாற்று பயன்பாடுக்களுக்கிடையே தெரிவு எல்லைச் செலவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதாரத்தின் மொத்த ரீதியான ஆய்வானது பேரினப் பொருளியல் ஆகும்.

பொருளாதாரத்தின் மொத்த செயற்பாடானது இடம்பெறுவது ஒவ்வொரு அலகு, நிறுவனம், தனிநபர் போன்ற சிறிய அலகுகளின் கூட்டுத்தொகையினாலாகும்.

பொருளாதாரத்தின் மொத்த உற்பத்தி, பணவீக்கம், மொத்த வேலை வாய்ப்பு, சர்வதேச வர்த்தகம் போன்றன பேரினப் பொருளியலில் ஆராயப்படுகின்றன.

சிற்றினப் பொருளியலும் பேரினப் பொருளியலும் பல அடிப்படையில் வேறுபட்டிருப்பினும் உண்மையாக அதன் வேறுபாடு நோக்கலிலேயே தங்கியுள்ளது.

ஒரு விடயத்தை பேரினப் பொருளியல் விடயமாக நோக்கிவிட்டு அதனை விடப்பரந்த நோக்கில் அவ்விடயத்தை நோக்க முற்படும் போது முன்பு கொள்ளப்பட்ட விடயம் தற்போது சிற்றினப் பொருளியலாக கருதப்படும்.

அந்தந்த அலகுகளின் மொத்த செயற்பாடு, அச்செயற்பாட்டை தீர்மானிக்கும் காரணி, அதனால் தோன்றும் பிரச்சினை போன்றவை பேரினப் பொருளியலில் ஆய்விற்கு உட்படுத்தப்படும்.

உதாரணம் : பணவீக்கம், வேலைவாய்ப்பு, பொருளாதார வளர்ச்சி, மொத்த முதலீடு, எண்மதி நிலுவை, நாணயமாற்று வீதம்

பேரினப் பொருளியலின் முக்கியத்துவம்

- அரசு செயற்றிறன் மிக்க பொருளாதாரக் கொள்கையை உருவாக்க.
- தீர்க்கதரிசனமான திட்டங்களையும் கொள்கைகளையும் உருவாக்க.
- முழுத்தொகுதி பற்றியும் அவற்றின் பொதுவான போக்குகளை அறிய
- சிற்றினப் பொருளியலை முகாமை செய்ய
- நாடு தனக்கு கிடைக்கின்ற பொருளாதார வாய்ப்புக்களை கண்டறியவும் பயன்படுத்திக் கொள்ளவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுபாடுகள்

நுண்பாகப் பொருளியல்	பேரினப் பொருளியல்
♦ பொருளாதார அலகு ஒவ்வொன்றையும் தனித்தனியாக நுணுகி ஆராய்தல்.	♦ பொருளாதாரத்தின் மொத்த ரீதியான ஆய்வு
♦ அதிக எடுகோள்களைக் கொண்டது. யதார்த்தத்திலிருந்து விலகியிருக்கும்.	♦ யதார்த்தத்துடன் தொடர்பானது.
♦ தெளிவான விளக்கம்	♦ போதிய தெளிவினைக் கொண்டிருப்பதில்லை.
♦ பகுதிப்பகுதியாக ஆய்வு செய்தல் அவற்றினுள் இணைப்பினை ஏற்படுத்தி முழுப் பகுதிப் பற்றிய ஒரு விளக்கத்தை பெற அடித்தள மிடுகிறது.	♦ நுண்பாக பொருளியல் விளக்க முறையினைத் தனது தேவைக் கேற்ப கையாளுகிறது.

நேர்ப் பொருளியல் *Positive Economics*

பொருளாதார விடயங்களை ஆராய்ந்த உள்ளவற்றை உள்ளவாறே விளக்குவது நேர்ப்பொருளியல் ஆகும்.

நியமப் பொருளியல் *Normative Economics*

பொருளாதாரம் எப்படி இருத்தல் சிறப்பானதென நியம முறையில் நியமங்களை கூறும் பொருளியலே இதுவாகும்.

பொருளியியல் விஞ்ஞானத்தில் கையாளப்படும் இரு கூற்று வழவங்கள்

1. நேர் கூற்று
2. நியமக்கூற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர் கூற்று

அது என்ன, யாது, நிகழ்ந்தது, அதனால், யாது நிகழும் என்ற பிரச்சினைகளுக்கு விடைகாணக்கூடியதாகவும் கூற்றில் உண்மை தன்மையை அறிந்துகொள்ள பரிசோதனைக்கு உட்படுத்தக்கூடிய கூற்றுகள் நேர் கூற்றுகளாகும்.

நேர்கூற்றுக்களில் விஞ்ஞான தன்மையும் கோட்பாடு தன்மையும் காணப்படும்.

நடைமுறை உலகில் என்ன நடைபெறுகிறது? என்ன நிகழ்கின்றது என்பதை யதார்த்தமான முறையில் விளக்கும் கூற்றுக்கள்.

பல்வேறு பொருளியல் விதிகளின் ஊடாக விளக்கப் பட்டிருப்பவையாகும்.

விஞ்ஞானத்தன்மை வாய்ந்தவை.

கோட்டுபாட்டுத்தன்மை வாய்ந்தவை.

நேர் கூற்றுக்களின் நியமக்கூற்றில் செல்வாக்கு செலுத்துவதனால், நியமக்கூற்றின் அடிப்படையில் விளக்கப்படும் பொருளாதார கொள்கைகளில் வேண்டிய மாற்றத்தை ஏற்படுத்த விஞ்ஞானத் தன்மை வாய்ந்த நேர் கூற்றுக்களின் பயன்பாடு முக்கியத்துவம் உடையதாக காணப்படுகிறது.

அதிகமான பொருளியல் கோட்பாடுகள் மூலம் விளக்கப்படுவது நேர்கூற்றுகளாகும்.

உதாரணம் :
- பண நிரம்பலுக்கும் பொது வலை மட்டத்திற்கும் இடையில் எதிர் கணிய தொடர்பு காணப்படும்.
- குறித்த பண்ட விலைக்கும் அதன் கேள்வித் தொகைக்கும் எதிர்க்கணியத் தொடர்பு காணப்படும்.

நியமக் கூற்று

சமூகத்தில் யாது நிகழ வேண்டும், எவ்வாறு இருக்க வேண்டும் என்றடிப்படையில் முன்வைக்கப்படும் கூற்றுக்கள் நியமக்கூற்று ஆகும்.

நியமக்கூற்று அதிகளவில் தனிநபர் ரீதியானது. நியமக்கூற்றுக்கள், தனிநபர்க்கருத்துகள், நம்பிக்கைகள் அடிப்படையில் இருப்பதனால் பெரும்பாலும் தனிநபர் ரீதியானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறிகளுக்கிடையிலான தொடர்பை அல்லது நிகழ்வொன்றை தெளிவாகவும் இலகுவாகவும் காட்டுவதற்காக நியமமான முறையில் பயன்படுத்தப்படும் கூற்றுக்கள்.

பல்வேறு பொருளாதாரக் கொள்கைகளின் ஊடாக விளக்கப் படுபவையாக அமைகின்றன.

பொதுவாக விஞ்ஞானத் தன்மை வாய்ந்தவையல்ல.

நியமக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் நேர்கூற்றுக்கள் செல்வாக்குச் செலுத்துகின்றன.

நியமக் கூற்றுக்களின் ஊடாக பல்வேறு பொருளாதார கொள்கைகள் விளக்கப்படுகின்றன.

உதாரணம் : • இலங்கையின் பொருளாதார வளர்ச்சியை 8% மேலாக பேணுதல் வேண்டும்.
• விவசாயிகளுக்கு மானியம் வழங்கல் வேண்டும்.

உலகில் காணப்படும் சிக்கலான நிலமையின் கீழ் தேவையான மாதிரிகளை வேறுபடுத்தி இலகுவாக விளங்கிக் கொள்ள மாதிரிகள் உருவாக்கப்படுகின்றன.

மாதிரிகளின் வெற்றித்தன்மை அவற்றின் எதிர்வு கூறும் ஆற்றலிலேயே தங்கியுள்ளது.

பொருளாதாரக் கொள்கை விமர்சனமானது நியமமுறைக் கூற்றின் அடிப்படையில் இடம் பெறுகிறது.

பொருளியல் விஞ்ஞானச் செயற்பாடுகளில் கையாளப்படும் இரு பிரதான கூற்று வடிவங்கள்

1. நேர்க்கூற்று 2. நியமக் கூற்று

பொருளியல் விஞ்ஞானச் செயல்பாடுகளின் போது பயன் படுத்தப்படும் கூற்றுகளின் இரு பிரதான வடிவங்களாக இவை காணப் படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைமுறை உலகில் என்ன நடைபெறுகிறது? என்ன நிகழ்கின்றது என்பதை யதார்த்தமான முறையில் விளக்கும் கூற்றாக உள்ளவை நேர் கூற்றாகக் கருதப்படும்.

நேர் கூற்றுக்கள் பல்வேறு பொருளியல் விதிகளின் ஊடாக விளக்கப்பட்டிருப்பவையாக அமையும்.

நேர்க்கூற்றுக்கள் விஞ்ஞானத்தன்மை வாய்ந்தவை ஆகும்.

நேர்க்கூற்றுக்களை நடைமுறை உலகில் உள்ள யதார்த்தத் தரவுகளுடன் ஒப்பீட்டு ஆராய்ந்து அக்கூற்றின் திருத்தமான தன்மையை அறிய அல்லது நிராகரிக்கக் கூடியதாக உள்ளதாலேயே நேர் கூற்றுக்கள் விஞ்ஞானத்தன்மை வாய்ந்தவை எனப்படுகிறது.

மாறிகளுக்கிடையிலான தொடர்பை அல்லது நிகழ்வொன்றை இலகுவாகவும் தெளிவாகவும் நியமமுறையில் கூறும் கூற்றுக்களை உள்ளடக்கிய நியமமுறைப் பொருளாதாரப் பகுப்பாய்வுகளும் காணப்படுகின்றன.

பொருளாதாரக் கொள்கை பற்றி விளக்குவதற்கு நியம முறைப் பொருளாதாரப் பகுப்பாய்வே பயன்படுத்தப்படுகின்றது.

நியமக் கூற்றுக்களை விஞ்ஞானமய அடிப்படையில் பரிசோதனை செய்து திருத்தம் காண முடியாது.

அவை வழக்காறு, அரசியல் சித்தாந்தம், அறவழிப்பட்டவை என்ற அடிப்படையில் அமைந்திருக்கும்.

ஆகவே நியமமுறைப் பொருளாதாரப் பகுப்பாய்வு முறையினை கையாண்டு பொருளாதாரக் கொள்கை விளக்கப்படுவதால் அதனையும் விஞ்ஞான மய அடிப்படையில் பரிசோதனை செய்து திருத்தத்தை அறிய முடியாது.

நியமமுறைக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் நேர் கூற்றுக்கள் செல்வாக்குச் செலுத்துவதால் பொருளாதார நடத்தையை மாற்ற பொருத்தமான பொருளாதாரக் கொள்கையை சிபாரிசு செய்ய பொருளாதார நடத்தை பற்றிய நேர் கூற்றுக்கள் அதிக பயன்பாடு உடையனவாக அமைந்து விடுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறிகளுக்கிடையிலான தொடர்பை அல்லது நிகழ்வொன்றை இலகுவாகவும் தெளிவாகவும் காட்டுவதாக நியாயமான முறையில் பயன்படுத்தப்படும் கூற்றுக்களே நியமக் கூற்றுக்கள் ஆகும்.

உதாரணமாக பண நிரம்பல் மாற்றத்திற்கும், பொது விலை மட்டத்தின் மாற்றத்திற்கும் இடையே நேர்க்கணியத் தொடர்பு என இவ்விரு மாறிகளுக்கும் இடையிலான தொடர்பை இலகுவாகவும் தெளிவாகவும் காட்டுவதற்காக நியமமான முறையில் இந்நியமக் கூற்று அமைந்துள்ளது.

எடுகோள்கள், மாதிரிகள், விதிகள் என்பவற்றை நியமக் கூற்றுக்கள் அதிகம் உள்வாங்கி, தெளிவுபடுத்த வேண்டிய மாறிகளுக்கு இடையிலான தொடர்பை அல்லது குறித்த நிகழ்வை மிகவும் தெளிவாக வெளிப்படுத்தும் கூற்றுக்களாக நியமக் கூற்றுக்கள் உள்ளன.

நியமக் கூற்றுக்கள் பல்வேறு பொருளாதாரக் கொள்கைகளின் ஊடாக விளைவிக்கப்படுபவையாக அமைகின்றன.

யதார்த்த உலகில் நடைபெறும் உண்மையான நிகழ்வு தொடர்பாக முன்வைக்கப்படுகின்ற விஞ்ஞான ரீதியானதோராய்வே ஒரு விதியாக கருதப்படுகிறது.

உதாரணமாக குறித்த பண்டத்தின் விலைகூடும் போது நிரம்பல் தொகை அதிகரிக்கும்.

நியமக் கூற்றுக்களின் திருத்தத்தை விஞ்ஞானமுறையில் பரிசோதித்து அறிய முற்படல் சிறந்தது அன்று

எல்லா மக்களுக்கும் இலவச நலனோம்பு சேவைகளை வழங்க வேண்டும் என்ற இந்நியமக் கூற்றானது அறிவழிப்பட்டதாகவும் அதிக மனித உளவுணர்வுத் தன்மையுடைதாகவும் காணப்படுவதால் விஞ்ஞானமய அடிப்படையில் இக்கூற்றின் திருத்தத்தன்மையை அறிய முற்படல். பொருத்தமற்றதாக அமைந்து விடுகிறது.

நடைமுறை உலகில் என்ன நடக்கிறது, நிகழ்கிறது என்பதை யதார்த்தமான முறையில் விளக்கும் நேர்கூற்றுக்களை உள்ளடக்கிய நேர்கூற்றுக் கோட்பாட்டுத் தொகுப்பு ஒன்றும் பொருளியலில் காணப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளியல் ரீதியாக சிந்தித்தல்

பொருளியல் ரீதியாகச் சிந்தித்தல் என்பது எல்லை விளைவு களையும் எல்லைச் செலவுகளையும் ஒப்பீடு செய்து தர்க்க ரீதியாக தீர்மானம் மேற்கொள்ளும் நடவடிக்கையே ஆகும்.

பொருளியல் ரீதியாக சிந்தித்து செயற்பட்டு பயன்பெறும் வகுதியினர்

- உற்பத்தியாளர்கள்
- நுகர்வோர்
- தொழிலாளர்
- தொழில்தருநர்
- அரச துறையினர்
- வாக்காளர்

போன்றோர் பொருளியில் ரீதியாக (எல்லை விளைவுகள், எல்லைச் செலவுகள் என்பவற்றை ஒப்பீடு செய்து) தர்க்க ரீதியான தீர்மானங்களை மேற்கொள்ள பொருளியல் அவசியமாகும்.

பொருளாதார இலக்கும் அதனை அடைவதற்கான இரு அணுகு முறைகளும்

பொருளாதார இலக்கு

1. மக்களின் நல்வாழ்வை மேம்படுத்தல்.

அணுகு முறைகள்

1. சிற்றினப் பொருளாதார அணுகுமுறை
2. பேரினப் பொருளாதார அணுகுமுறை

சிற்றினப் பொருளாதார அணுகுமுறை

மாற்றுப் பயன்பாடுடைய வளங்களை வினைத்திறனாக ஒதுக்கீடு செய்வதன் மூலம்

பேரினப் பொருளாதார அணுகுமுறை

நிறைதொழில் மட்ட வெளியீட்டை பெறுவதற்காக வளங்களை முழுமையாகப் பயன்படுத்தப்படுவதன் மூலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கை வளப்பயன்பாட்டை தீர்மானிக்கின்ற காரணிகள்

1. மூலதனம், ஊழியம், தொழில்நுட்ப அறிவு என்பவற்றின் கிடைப்பனவின் அளவு.
2. சந்தை கேள்வியின் அளவு
3. சுற்றாடல் பாதுகாப்பு
4. சட்டங்களும், அரச கொள்கைகளும்
5. பொருளின் உற்பத்தி செலவு
6. அரசியல் நிலைமைகள்

பொருளாதார வளங்கள்	பொருளாதாரமல்ல வளங்கள்	மீள் உருவாக்கக்கூடிய வளங்கள்	மீள் உருவாக்க முடியாத வளங்கள்
கனியநெய்	சூரிய ஒளி	காட்டுவளம்	கனிய நெய்
ஊழிய வளம்	அலை சக்தி	சனத்தொகை	நிலக்கரி
நிலக்கரி		மண்	மணல்

வற்றாத வளங்கள்	வரையறுக்கப்பட்டதும் அழிவடையாத வளங்கள்	வரையறுக்கப்பட்டதும் புதுப்பிக்கக் கூடிய வளங்கள்	வரையறுக்கப்பட்டதும் புதுப்பிக்க முடியாத வளங்கள்
உப்பு,	தங்கம்	சனத்தொகை	நிலக்கரி
அலைச்சக்தி	வெள்ளி	காடு	கனியநெய்
சூரிய ஒளி	இரும்பு	மண்	மணல்

கனிவள நாடுகள் தமது வருமானத்தை உச்சளவில் வைத்திருக்க நிரம்பல் தொகைகளில் மாற்றத்தை உண்டு பண்ணுகின்றன.



கேள்விக் கோட்டின் நடுப்புள்ளியில் வைத்திருக்க முயற்சிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்ச்சி மட்டம் 1.2 : பொருட்கள், சேவைகளின் கொள்வனவு மூலம் தேவைகளும் விருப்பங்களும் திருப்திப்படுத்தப்படும் முறையைக் காட்டுவார்.

பாட உள்ளடக்கம் :

- மனித தேவைகள் விருப்பங்களுக்கிடையிலான வேறுபாடுகள்.
- பொருளாதார பண்டங்களும் பொருளாதாரமல்லா பண்டங்களும்.
- பொருளாதார வளங்கள், பொருளாதாரமல்லா வளங்கள்
- மீள் உருவாக்கக்கூடிய வளங்கள், மீள் உருவாக்க முடியாத வளங்கள்.

மனித தேவைகள்

மனிதன் உயிர் வாழ அவசியமானதும் இயல்பாகவே எழுகின்றதுமான நாட்டங்கள் மனித தேவைகள் எனப்படும். இவை உயிர்வாழ அவசியமான இயல்பூக்க நிலைமைகளாக காணப்படும்.

உதாரணம் : உணவு, உடை, உறையுள்

தேவைகள் பல்துறைசார்ந்த விடயமாகும்.

பொருளியலானது பொருட்கள், சேவைகள் மூலம் பூர்த்தி செய்யக் கூடிய மனித தேவைகளை மட்டுமே ஆராயும். அதாவது பௌதீக தேவைகளை மட்டுமே ஆராயும்.

மனித விருப்பங்கள்

மனித தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் பல்வேறு வடிவங்களே மனித விருப்பங்கள் எனப்படும்.

உதாரணம் : தேவை - உணவு
விருப்பம் - இடியப்பம், தோசை, சோறு, ரொட்டி

தேவைகள் உயிரியல் காரணிகளுடன் தொடர்புபட்டிருப்பதுடன், விருப்பங்களானது பழக்கவழக்கம், பாரம்பரியம், சம்பிரதாயம், கலாசாரம் என்பவற்றுடன் தொடர்புடையது.

மனித விருப்பங்கள் எண்ணற்றவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருப்பங்களின் வகைகள்

1. பொருள் சார்ந்த (பௌதீக) விருப்பங்கள்
2. பொருள் சாராத (உளரீதியான) விருப்பங்கள்

குறிப்பு :-

♣ பொருளியல் பொருட்கள் சேவைகளின் கொள்வனவு மூலம் திருப்திபடுத்தப்படும் பொருள் சார்ந்த விருப்பங்களையே ஆய்வு செய்யப்படும்.

வேறுபாடுகள்

மனித தேவைகள்	மனித விருப்பங்கள்
♦ உயிரியல் காரணியுடன் தொடர்புபட்டிருக்கும்.	♦ பாரம்பரியம், சம்பிரதாயம், கலாசாரம், பழக்கவழக்கங்கள் என்பவற்றுடன் தொடர்பு பட்டிருக்கும்.
♦ வரையறுக்கப்பட்டவை	♦ வரையறுக்கப்படாதவை
♦ காலத்திற்கு ஏற்ப மாற்ற மடையாது	♦ காலத்திற்கு ஏற்ப மாற்ற மடையும்
♦ பொதுவானவை	♦ ஆளுக்கு ஆள் வேறுபடும்
♦ மனிதன் உயிர் வாழ்வதற்கு அவசியமான விடயங்கள்	♦ தேவைகளை நிறைவேற்றும் பல்வேறு வடிவங்கள்
உதாரணம் :- உணவு உடை உறையுள்	உதாரணம் :- தேவை உணவு → விருப்பங்கள்: சோறு, இடியப்பம், தோசை

பண்டம்

நேர்கணிய திருப்தியை அதாவது பயன்பாடொன்றை பெற்றுத்தரக் கூடிய எந்தவொரு பொருளும் பொருளியலில் பண்டமாகக் கருதப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிததேவைகளையும் விருப்பங்களை நிறைவேற்றும் பண்டங்கள்

1. பொருளாதாரமல்லாப் பண்டம்
2. பொருளாதார பண்டம்

மறுபெயர்கள்	
இலவசப் பண்டம்	பொருளியற் பண்டம்
♦ இயற்கைப் பண்டம்	♦ பொருளாதாரப் பண்டம்
♦ செலவில்லாப் பண்டம்	♦ விலை பெறுமதியும் உடைய பண்டம்
♦ கட்டில்லாப் பண்டம்	♦ கட்டுண்டபண்டம்
♦ பொருளியல்லாப் பண்டம்	♦ பொருளியற் பண்டம்
♦ சிக்கனமல்லாப் பண்டம்	♦ சிக்கனப் பண்டம்

இலவச பண்டங்கள்/ பொருளாதாரமல்லாப் பண்டம்

பூச்சிய விலையில் எல்லையற்ற நிரம்பலைக் கொண்ட பண்டம் பொருளாதாரமல்லாப் பண்டமாகும். மனித தேவையை விட அதிகமானது இயற்கையில் இருந்து நேரடியாக பெறப்படுவதுமான பண்டங்களே இலவசப்பண்டங்கள் ஆகும்.

உற்பத்தி செய்யப்படாததும் உற்பத்தி செலவு அற்றதும் அமையச் செலவு அற்றதும் விலைப்பெறுமதி அற்றதும் உரிமைகொள்ள முடியாததுமான பண்டங்கள்.

உதாரணம் : இயற்கையிலிருந்தே கிடைக்கும் நீர், சூரிய ஒளி

இலவசப் பண்டங்களின் பண்புகள்

1. மனித தேவையை விட அதிகமாக காணப்படும்.
2. இயற்கையில் இருந்து நேரடியாக கிடைக்கின்ற பண்டங்கள்.
3. மனிதனால் உற்பத்தி செய்யப்படாதது.
4. உற்பத்தி செலவு அற்றது.
5. பயன் பெறுமதியை மட்டும் உடையது.
6. அமையச்செலவு அற்றது.
7. விலைப்பெறுமதி அற்றது.
8. உரிமை கொள்ள முடியாதது.
9. ஆக்கசாதன செலவு அற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. நுகர்வில் இருந்து விலக முடியாது.

11. நுகர்வில் போட்டிதன்மை அற்றதாக காணப்படும்.

12. கிடைக்கும் போது மட்டுமே நுகர முடியும்.

13. சில சந்தர்ப்பங்களில் பொருளாதார பண்டமாக மாறும்.

பொருளாதாரப் பண்டங்கள்

நிரம்பலில் அருமைத்தன்மை காணப்படும் பண்டங்கள் இவை ஆகும்.

பொருளாதாரப் பண்டங்களுக்கு வளச் செலவும் சந்தர்ப்பச் செலவும் காணப்படும்.

பொருளாதாரப் பண்ட உற்பத்தியில் மனிதர்கள் தலையீடு செய்து காரணிகளை ஒன்றிணைத்து உற்பத்தியை மேற்கொள்வர்.

பொருளாதாரப் பண்ட உற்பத்தியில் அருமையான வளங்கள் பயன்படுத்தப்படுவதனால் அவற்றிற்கு விலை காணப்படுவதுடன், பொருளாதாரப் பண்டங்களுக்கு தெரிவுப் பிரச்சினையும் காணப்படும்.

மனித தேவையை விட குறைவானதும் மனித முயற்சியால் கிடைக்கும் பண்டங்கள் பொருளியல் பண்டங்கள் ஆகும்.

உற்பத்தி செய்யப்படுவதும் உற்பத்தி செலவு உள்ளதும் விலைபெறுமதி உள்ளதும் சந்தர்ப்பச் செலவு உடையதும் ஆக்கச் செலவு உடையதும் உரிமைகொள்ளக் கூடியதும்

நுகர்வில் இருந்து விலகக்கூடியதும், நுகர்வில் போட்டிதன்மை உள்ளதும், எப்பொழுதும் கிடைக்ககூடியதுமான பண்டங்களாக இவை காணப்படுகின்றன.

உதாரணம் : புத்தகம், பேனை, அரிசி, மா போன்றவை

பொருளாதார பண்டங்களுக்கு உதாரணங்கள்

1. பொது பண்டங்கள்/ இலவச சவாரிப் பண்டம்

   உதாரணம் : வீதி வெளிச்சம், வீதிகள், தேசிய பாதுகாப்பு, வெளிச்ச வீடு

2. தனியார் பண்டங்கள்

   உதாரணம் : வானொலி, தீப்பெட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. நலன்தரு பண்டம்

உதாரணம் : கல்வி, சுகாதாரம், மருத்துவம்

4. நன்கொடைகள்/ மாற்றல்கள்

உதாரணம் : உலர் உணவுகள், இலவச பாடநூல், அன்பளிப்புக்கள்

குறிப்பு :-

♣ இவை மட்டுமல்ல மனிதனால் உற்பத்தியாக்கப்பட்ட பண்டங்கள் அனைத்தும் பொருளாதாரப் பண்டங்களேயாகும்.

இலவசப் பண்டங்களும், பொருளாதாரப் பண்டங்களுக்கும் இடையிலான வேறுபாட்டு

இலவசப்பண்டம்	பொருளியல் பண்டம்
♦ மனித தேவைகளிலும் பார்க்க கூடுதலாக காணப்படுவதும் இயற்கையின் நேரடிக் கொடையாகவும் அமையும் பண்டங்களாகும்.	♦ மனித தேவைகளிலும் பார்க்க குறைவாக காணப்படுவதும் மனித முயற்சியினால் கிடைக்கும் பண்டங்களாகும்.
♦ உற்பத்தி, உற்பத்திச்செலவு, சந்தர்ப்பச்செலவு, விலைப் பெறுமதி, உரிமைக்கோல், நுகர்வில் போட்டித் தன்மை, நுகர்வில் விலக்குதல் என்பவையற்றதுமான பண்டங்கள்	♦ உற்பத்தி, உற்பத்திச்செலவு, சந்தர்ப்பச்செலவு, விலைப் பெறுமதி, உரிமைக்கோரல், நுகர்வில் போட்டித் தன்மை, நுகர்வில் விலகக் கூடிய பண்டங்களாகும்.
♦ எல்லா நேரமும் நுகரமுடியாததும் சில வேளைகளில் பொருளியல் பண்டங்களாக மாறவும் முடியும்.	♦ எந்நேரமும் நுகரக்கூடிய பண்டங்கள். நுகர்வில் இருந்துவிலக கூடியதுமான பண்டங்கள்
♦ இலவசப் பண்டங்களுக்கு உதாரணமாக சூரிய ஒளி, காற்று என்பவற்றைக் குறிப்பிடலாம்.	♦ ஒரு போதும் இலவசப் பண்டமாக மாறாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணம் : கடலுக்கு அடியில் பயணம் செய்பவர் ஒட்சிசன் கொண்டு செல்லுதல்.

ஒரு நோயாளிக்கு ஒட்சிசன் பெற்றுக்கொடுத்தல்.

சூரியசக்தியின் மூலம் சூரிய கதிர்களை உற்பத்தி செய்தல்.

போத்தலில் அடைக்கப்பட்ட நீர்

இத்தகைய சந்தர்ப்பத்தின்போது ஒட்சிசன், சூரிய ஒளி, நீர் என்பன பொருளாதாரப் பண்டமாக மாற்றமடைவதுடன், இதற்கான காரணம் வளங்களுக்கான செலவு, அமையச் செலவு என்பன காணப்படுவதே ஆகும்.

பொருளாதாரமல்லாப் பொருட்கள் பொருளாதாரப் பொருட்களாக மாற்றமடையும் விசேட சந்தர்ப்பங்கள் உள்ளன.

1. உற்பத்தி செலவு, நிலையான பண செலவு காணப்படும் போது,

   உதாரணம் : போத்தலில் அடைக்கப்பட்ட நீர்

2. கிடைப்பருமைக்குட்படும் போது,

   உதாரணம் : பாலைவனத்தில் நீர்

3. அமைப்புச்செலவு, ஆக்கசாதன செலவு, பராமரிப்பு செலவு ஏற்படுகின்ற போது

   உதாரணம் : கிணற்று நீர்

Q. "குறிப்பிட்ட ஒரு பண்டம் பொருளாதார பண்டமா இலவசப் பண்டமா என நிர்ணயிப்பதற்கான முக்கிய தகுதி நுகர்வோர் விலை செலுத்து கிறார்களா இல்லையா என்பதாகும்." **இக் கூற்றை ஏற்பீரா? எமது விடைக்கான விளக்கம் தருக.**

- இக்கூற்றை ஏற்க முடியாது.
- ஒரு பண்டம் பொருளாதார பண்டமா இலவசப் பண்டமா என நிர்ணயிக்கின்ற முக்கிய தகுதி நிரம்பலின் அருமைத்தன்மை ஆகும்.
- பூச்சிய விலையில் எல்லையற்ற நிரம்பலை கொண்டவை பொருளாதாரமல்லாப் பொருட்கள்.
- ஒரு பண்டம் பொருளாதார பண்டமா இலவசப் பண்டமா என நிர்ணயிக்கின்ற தகுதி அதற்கு ஆக்கசாதன செலவு உண்டா? இல்லையா? என்பதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

♠ ஆக்கசாதன செலவு காணப்படுமாயின் அது பொருளாதார பண்டம், ஆக்கசாதன செலவு காணப்படாமல் இயற்கையின் நேரடி கொடையாக கிடைக்கும் பண்டம் இலவசப் பண்டமாகும்.

♠ இலவசப் பண்டத்தையும் பொருளாதார பண்டத்தையும் பிரிக்கும் முக்கிய தகுதி நுகர்வோர் விலை செலுத்துகிறார்களா? இல்லையா? என்பதல்ல.

♠ எனவே இலவசப் பாடநூல்களை மாணவர்களாகிய நுகர்வோர் எவ்வித விலையும் செலுத்தாது பெற்றுக் கொள்கின்ற போதிலும் அவை பொருளாதாரப் பண்டங்களாகும்.

♠ எவ்வாறெனின் அவற்றிற்கு ஆக்கசாதன செலவு உண்டு என்பதாலாகும்.

Q. பாடசாலை பாடநூல்களை பொருளாதார பண்டமாக கருதமுடியாது ஏனெனில் மாணவர்கள் கட்டணம் செலுத்தாது அவற்றை இலவசமாக **பெற்றுக்கொள்கின்றார்களா?**

♠ **இல்லை**

♠ இலவசப் பாடநூல்கள் பொருளாதாரப் பண்டமாகும். ஏனெனில், நிரம்பலில் அருமைத்தன்மை உடைய இப் பாடநூல்களை உற்பத்தி செய்ய, உற்பத்திச் செலவு, சந்தர்ப்ப செலவு, விலைப் பெறுமதி ஆகியவற்றை உடையதாகக் காணப்படுகின்றது என்பதாலாகும்.

குறிப்பு :- இச்செலவுகளை அரசு ஏற்கிறது

ரஷியாவின் எரிவாயு விஸ்தரிப்பதற்கு உதவும் நிறுவனங்களை அமெரிக்க எச்சரித்துள்ளது. இதனால் பல நிறுவனங்கள் பின் வாங்கிவிட்டன.

ரஷிய ஜேர்மனிக்கு, துருக்கிக்கு எரிவாயுவை எடுத்துச் செல்லும் திட்டம் பிசுபிசுத்து போய்விட்டதா? பொறுத்துதான் பார்க்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுட்பம் - 1

(அ) காட்டிலிருந்து கிடைக்கும் விறகு **பொருளியல் பண்டமா?**

- **ஆம்**
- மனிததேவையை விட குறைவு
- விறகுகளை வெட்ட இயந்திர, மனித உழைப்பு பயன்படுத்தப் படுகிறது.
- கத்தி, கோடாரி போன்ற ஆயுதப் பயன்பாடு உண்டு.
- விறகுகள் சேகரிக்க, எடுத்து வர செலவுகள் காணப்படுகின்றன
- நுகர்வில் போட்டியுண்டு.
- நுகர்வில் இருந்து விலகமுடியும்.

ஆகவே இது பொருளியற் பண்டம்

(ஆ) காட்டில் இருந்து கிடைக்கும் விறகு ஒரு **இலவசப் பண்டமா?**

- **இல்லை**
- கத்தி, கோடாரி போன்ற ஆயுத பாவனை உண்டு.
- விறகுகளை சேகரித்து எடுத்துவர செலவுகள் காணப்படுகிறது.
- விறகிற்கு ஆக்கசாதன செலவு உண்டு.
- உற்பத்தி செலவுண்டு.
- நுகர்வில் இருந்து விலகமுடியும்.
- நுகர்வில் போட்டிதன்மை உண்டு.

ஆகவே இது பொருளியற் பண்டம்

காட்டிலிருந்து கிடைக்கும் விறகு	
இலவசப் பண்டமா? **இல்லை**	பொருளியற் பண்டமா? **ஆம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளங்கள்

மனித தேவைகளையும் விருப்பங்களையும் பூர்த்தி செய்ய தேவையான பொருட்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்ய பயன்படும் அனைத்து உள்ளீடுகளும் வளங்கள் எனப்படும்.

பொருளாதார வளங்களின் நான்கு வகைகள்

1. நிலம் 2. உழைப்பு 3. மூலதனம் 4. முயற்சி

வளங்களின் இரு வடிவங்கள்

1. பொருளாதார வளங்கள் 2. பொருளாதாரமல்லா வளங்கள்

குறிப்பு :-

- வளப்பற்றாக்குறை/ வள அருமை
- சந்தர்ப்ப செலவு ஆகிய அடிப்படையில் இவ்வகையீடு இடம் பெறுகின்றது.

இயற்கை வளங்களின் இரு வகைகள்

1. மீள் உருவாக்கக் கூடிய வளங்கள்
2. மீள் உருவாக்க முடியாத வளங்கள்

பொருளாதார வளங்கள்

சமூகத்தின் எல்லையற்ற விருப்பங்களுடன் ஒப்பிடுகையில் நிரம்பல் வரையறுக்கப்பட்ட அல்லது அருமை தன்மையை கொண்ட வளங்கள் பொருளாதார வளங்களாகும்.

அருமை தன்மையானது பொருளாதார வளங்களாக காணப்படுவதனால் பொருளாதார வளப் பயன்பாட்டின் போது அமையச் செலவு தோன்றும்.

உதாரணம் :- நிலக்கரி, கனியநெய்

எண்ணற்ற மனிதத்தேவைகளுடன் ஒப்பீடுகையில் வரையறுக்கப் பட்டதாகவும் பற்றாக்குறையானதாகவும் உள்ள வளங்கள் பொருளாதார வளங்களாகும்.

அருமையாகவுள்ள வளங்கள் பொருளாதார வளங்களாகும்.

பொருளாதார வளங்கள் அருமையாக காணப்படுவதால் இவற்றுக்கு வாய்ப்புச் செலவும் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதாரமல்ல வளங்கள்

இயற்கையினால் இலவசமாக வழங்கப்படுவதும், சந்தர்ப்பச் செலவு அற்ற பொருட்கள் சேவைகளுடன் உற்பத்திக்காக பயன்படுத்தக்கூடிய அருமையற்ற வளங்கள் பொருளாதாரமல்லா வளங்களாகும்.

உற்பத்திக்கு செயற்பாட்டிற்கு பயன்படுத்தப்படும் இவ்வாறான இயற்கையினால் பெறப்பட்ட இயற்கை வளங்களாக கருதப்படும்.

உதாரணம் :- சூரிய ஒளி, வளிமண்டலம், மழைநீர்

புதுப்பிக்கக்கூடிய வளங்கள்/ மீளுருவாக்கக் கூடிய வளங்கள்

பயன்பாட்டிற்கு உட்படுத்தப்படும் போது குறைந்தாலும், மீண்டும் உருவாகும் வளங்கள் புதுப்பிக்கக்கூடிய வளங்களாகும். இவ்வளங்களை மீண்டும் உருவாக்கலாம்.

இவ்வளங்களை உற்பத்திப் பயன்படுத்தும் போது இவற்றின் அளவு குறைவடைகின்றன. ஆனால் அழிவடைவதில்லை. இதனால் மீண்டும் மீண்டும் பயன்படுத்தக் கூடியதாகவும் எதிர்கால சந்ததியினருக்கு இவ்வளங்களை பயன்படுத்தக் கூடியதாகவும் இவை காணப்படுகின்றன.

உதாரணம் :- வனவளம், மீன்வளம்

மீளமைக்க கூடிய வளங்கள் சில காரணங்களால் மீளமைக்க முடியாத வளங்களாக மாறிவிட முடியும்.

மீளமைக்கக் கூடிய வளங்கள் உயிர் வளங்கள் எனவும் மீளமைக்க முடியாத வளங்கள் உயிரற்ற வளங்கள் எனவும் அழைக்கப்படுவதாக கூறுகிறார்கள்.

புதுப்பிக்கமுடியாத வளங்கள்

பயன்பாட்டின் காரணமாகப் பெறுமானத் தேய்விற்கு உட்படக்கூடிய மீள் உருவாக்க முடியாத வளங்கள் புதுப்பிக்க முடியாத வளங்களாகும்.

இயற்கையின் அளிப்பாக உள்ள சில வளங்கள் உற்பத்தியுடன் அருகிவிடுகின்றன. அதாவது மீள் முடியாத அளவுக்கு இரசாயன மாற்றத்திற்கு உட்படுகின்ற வளங்களை மீளமைக்க முடியாத வளங்கள் எனப்படும்.

உதாரணம் :- கனிய நெய், நிலக்கரி, எரிவாயு, இரத்தினக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கை வளங்கள் எல்லையற்று பயன்படுத்தப்படுவதனால் சர்வதேச ரீதியாக எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள்

1. வளிமண்டல வெப்பநிலை உயர்வடைதல்.
2. பனிக்கட்டி உருவாகுதல்.
3. ஓசோன் படலத்தில் துவாரம் ஏற்படுதல்.
4. வரட்சியை எதிர்நோக்கல்.
5. வெள்ளம் போன்ற இயற்கை அழிவுகள்.

குறிப்பு :- *Day After Tomorrow (Film)*

Q. புதுப்பிக்கத்தக்க வளங்கள் புதுப்பிக்கமுடியாத வளங்கள் என்பவற்றை வேறுபடுத்துக.

- பயன்பாட்டிற்கு உட்படுத்தப்படும் போது குறைந்தாலும், மீண்டும் உருவாகும் வளங்கள் புதுப்பிக்கக்கூடிய வளங்களாகும். இவ்வளங்களை மீண்டும் உருவாக்கலாம்.

- புதுப்பிக்கத்தக்க வளங்கள் என்பது பயன்படுத்தப்படுவதனால் இழக்கப்படாத/ குறைந்துவிடாத மீண்டும் மீண்டும் பயன்படுத்தக்கூடிய (மீள் உருவாகின்ற) இயற்கை வளங்களையே குறிக்கும்.

- நுகரப்படும் வீதத்திலும் பார்க்க கூடிய வீதத்தில்/ சமனான வீதத்தில் மீண்டும் உருவாக்கப்படுகின்ற/ புத்துயிர்ப்பு அடைகின்ற வளங்களே புதுப்பிக்கத்தக்க வளங்கள் எனப்படும்.

- சரியான முறையில் முகாமைத்துவம் செய்யப்பட்டு புத்தி சாதூரியமாக பயன்படுத்தப்படுகின்ற உயிருள்ள வளங்கள் அனைத்தும் புதுப்பிக்கத்தக்க வளங்கள் ஆகும்.

  உதாரணம் :- காட்டுவளங்கள், மீன்பிடிவளங்கள், புல் நிலங்கள். விவசாய உற்பத்திப்பொருட்கள்

- சரியான முகாமைத்துவத்துடன் புத்தி சாதுரியமாக பயன்படுத்தப் படுகின்றன வளி, நீர், வளமான மண் போன்ற உயிரற்ற வளங்களும் அனைத்தும் புதுப்பிக்கத்தக்க வளங்கள் ஆகும்.

- பயன்பாட்டின் காரணமாகப் பெறுமானத் தேய்விற்கு உட்படக்கூடிய மீள் உருவாக்க முடியாத வளங்கள் புதுப்பிக்க முடியாத வளங்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

♠ புதுப்பிக்க முடியாத வளங்கள் என்பது பயன்படுத்தப் படுவதனால் இழக்கப்படுகின்ற/ குறைவடைகின்ற/ இயற்கையினால் மீள் உருவாக்கப்படாத/ புறக்கணிக்கத்தக் களவில் மீள் உருவாக்கப்படுகின்ற இயற்கை வளங்களையே குறிக்கும்.

♠ நுகரப்படும் வீதத்திலும் பார்க்க குறைந்த வீதத்தில் மீண்டும் உருவாக்கப்படுகின்ற/ குறைந்த வீதத்தில் புத்துயிர்ப்பு அடைகின்ற/ வரையறுக்கப்பட்டளவில் காணப்படுகின்ற/ தொடர்ந்து பெருமளவில் உருவாக்க முடியாத/ உருவாக்க மிக மிக நீண்ட காலம் தேவைப்படுகின்றன வளங்களே புதுப்பிக்க முடியாத வளங்கள் எனப்படும்.

உதாரணம் :- பெற்றோலியம், மணல், நிலக்கரி

போன்ற உயிரற்ற வளங்கள் புதுப்பிக்கமுடியாத வளங்கள் எனலாம்.

குறிப்பு :-

♣ நுகர்வுக்கு, பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படுகின்ற போது வளங்கள் மீள உருவாக எடுகின்ற கால அடிப்படையிலும் தேய்வு அடிப்படையிலும் புதுப்பிக்க கூடிய வளங்கள், புதுப்பிக்கமுடியா வளங்கள் என வகைப்படுத்தப்படும்.

Q. புதுப்பிக்க கூடிய வளங்கள் புதுப்பிக்க முடியாத வளங்களாக மாறுப்படும் சந்தர்ப்பங்களைத் தருக.

சில மனித நடத்தைகள் காரணமாகவும், சில சூழலியல் காரணமாகவும் இவ்வாறு இடம்பெற முடியும்.

♠ மிகை பயன்பாட்டிற்கு உட்படுத்துதல்.

♠ அதிகமாக விரயம் செய்வதன் மூலம்.

♠ பொருத்தமற்ற தொழினுட்பங்களை பயன்படுத்துதல்.

உதாரணம் :-

கடல்வளம் : டைனமைட் வைத்து மீன்பிடித்தல்

ஊசி வலையை பயன்படுத்தி மீன்பிடித்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Q. இயற்கை வளங்களை சரியான முறையில் பயன்படுத்த வேண்டியதன் அவசியம் யாது?

- இயற்கை வளங்களை சரியாக பயன்படுத்துவதன் மூலம் அவற்றிலிருந்து **உச்ச நன்மைகளை** பெற்றுக்கொள்வதோடு எதிர்கால சந்ததியினரும் அவர்கள் தேவையைப் பூர்த்தி செய்ய **வழிவகுக்கலாம்.**

வளங்களைச் சரியாக பயன்படுத்தாததினால் ஏற்படும் **தீய விளைவுகளையும் தவிர்த்துக்** கொள்ளலாம்.

1. இயற்கையின் அடித்தளம் பாதுகாக்கப்படும்.
2. நிகழ்கால சந்ததியினர் தமது தேவைகளை பூர்த்தி செய்யக் கூடியதாகவும் எதிர்கால சந்ததியினருக்கு தேவைகளை பூர்த்தி செய்ய வழிவகுக்க.
3. அமைதியான சூழல் அமைவதுடன் சூழல் மாசடைவதும் குறைவடையும்.
4. உற்பத்திமட்டத்தையும் நுகர்வுமட்டத்தையும் வாழ்க்கை தரத்தையும் உயர்ந்த நிலையில் பேண.
5. வளவிரயம் குறைவடையும்.
6. பூமியின் உயிர்க்கோலம் பாதிப்புறுவதை குறைக்கலாம்.
7. நாடுகள் நிலைத்து நிற்கக் கூடிய ஒரு அபிவிருத்தியை அடையக் கூடியதாகக் காணப்படும்.
8. சில வளங்கள் அற்றுப்போகக் கூடிய கால அளவை நீடித்துக் கொள்ளலாம்.
9. வளங்கள் புனரமைப்பதற்கான செலவுகளை குறைத்துக் கொள்ளலாம்.

குறிப்பு :-

♣ புதுப்பிக்க தக்க வளங்களான மீன்வளம், வனவளம், புல்நிலங்கள் போன்றவற்றை அளவுக்கு அதிகமாக அவதானமின்றிப் பயன்படுத்து வோமாயின் அவை புதுப்பிக்க முடியாத வளங்களாக மாறிவிட முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Q. நிகழ்கால சமூகம் தனக்கு கிடைக்கின்ற பற்றாக்குறையுடையதும் மாற்றுப் பயனுடையதுமான வளங்களை முழுமையாக பயன்படுத்துமாயின் எதிர்கால சந்ததியினருக்கு அவ்வளங்கள் கிடைக்காது போகலாம். இக்கூற்று உண்மை எனின் மூலவளங்களை முற்று முழுதாக உபயோகித்தல் சிறந்த காரியமன்று இக் கூற்றின் தகுதி உடமைப்பற்றி **ஆராய்க?**

- சில வளங்கள் அற்றுப்போகலாம்.

  உதாரணம் :- பெற்றோலியம், நிலக்கரி

- சில வளங்களை முழுமையாக நிகழ்கால சமூகத்தால் பயன்படுத்தவே முடியாது.

  உதாரணம் :- அலைச்சக்தி, சூரியஒளி

- எதிர்காலத்தில் 1. புதிய தொழிநுட்ப பயன்பாடு
  2. வினைத்திறன் அதிகரிப்பு
  3. புதிய வளக்கண்டுபிடிப்பு

  உதாரணம் :- இலங்கையின் கிழக்கு கரையோரக் கடல் அடியில் பெற்றோலிய வளம் உள்ளது. இது எதிர்காலத்தில் இலங்கை பொருளாதாரத்திற்கு வலு சேர்க்கும். ஆதாரம் BBC ஒலிபரப்பு. இவற்றின் மூலம் தேவைகள் பூர்த்தியாக்கப்படும்.

- நிகழ்கால சமூகம் பின்வருமாறு செயற்படுவதன் மூலம் அவர்களின் தேவையையும் பூர்த்தி செய்ய முடிவதுடன் எதிர்கால சந்ததியினருக்கும் தேவைகளைப் பூர்த்தி செய்ய வழிவகுக்கலாம்.

  1. அநாவசிய உற்பத்திகளை கட்டுப்படுத்தல்.
  2. உற்பத்தி திறனை அதிகரித்தல்.
  3. வளங்களை திட்டமிட்டுப் பயன்படுத்தல்.
  4. செயற்கை வளத்தேய்வை கட்டுப்படுத்தல்.
  5. யுத்தம், சூழலைப் பாதிக்கின்ற கைத்தொழில்கள் போன்ற வற்றில் இருந்து வளத்தை பாதுகாத்தல், இவற்றை நிறுத்தல்.
  6. வளங்களை சிறந்த முகாமையின் கீழ் பயன்படுத்தல்.
  7. நிகழ்கால சந்ததியினர் வளங்களை அதிகளவு முதலீட்டுக்குப் பயன்படுத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்ச்சி மட்டம் 1.3 : உற்பத்திகாரணிகளின் பண்புகளை இனங்கண்டு உற்பத்தி காரணிகளின் விளைதிறனை கண்டு தீர்மானிக்கும் காரணிகள்.

பாட உள்ளடக்கம் :

- உற்பத்தி காரணிகளின் பண்புகள்.
- உற்பத்தி காரணிகளின் விளைதிறன்.
- உற்பத்தி காரணிகளின் விளைதிறனைத் தீர்மானிக்கும் காரணிகள்.

உற்பத்தி காரணிகள்/ உற்பத்தி வளங்கள் *Resources*

மனித தேவைகளை பூர்த்தி செய்ய பொருட்களும் சேவைகளும் பயன்படுகின்றன. அப்பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்ய பயன்படுபவை அனைத்தும் வளங்கள் எனப்படும்.

உற்பத்தியை மேற்கொள்வதற்கு பயன்படுத்தும் நிலம், உழைப்பு, மூலதனம், முயற்சி என்பன உற்பத்தி காரணிகள் எனப்படும்.

உற்பத்திக் காரணிகளின் பண்புகள் *Characteristics of Resources*

1. வளங்கள் வரையறுக்கப்பட்டவை.
2. வளங்கள் மாற்றுப்பயன்பாடுடையவை.
3. வளங்கள் பற்றாக்குறையுடையவை.
4. வளங்கள் மனித தேவைகளை பூர்த்தி செய்ய தேவையான பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்ய பயன்படுகின்றன.
5. வளங்கள் நிலம், உழைப்பு, மூலதனம், முயற்சி என நான்கு வகைப்படும்.

உற்பத்தி காரணிகள் நான்கு

1. நிலம் 2. உழைப்பு 3. மூலதனம் 4. முயற்சி

பௌதிக வளங்கள்

1. நிலம் 2. மூலதனம்

மானிடவளங்கள்

1. உழைப்பு 2. முயற்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் நிலை உற்பத்தி காரணிகள்

1. நிலம்
2. உழைப்பு

இரண்டாம் நிலை உற்பத்திக் காரணிகள்

1. மூலதனம்
2. முயற்சி

நிலம் *Land*

உற்பத்திக்கு பயன்படுகின்ற இயற்கையின் நேரடிக் கொடைகள் யாவும் நிலம் எனப்படும்.

இயற்கையினால் வழங்கப்படும் வினைத்திறனுடைய உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்கு முடியுமான இயற்கை வளங்கள் நிலம் என்று கருதப்படும். காடு, கனிய வளங்கள், கடல், ஆறு, வளி மண்டலம் போன்ற புவியின் மேற்பரப்பைப் போன்று உட்பரப்பில் உள்ள சகல வளங்களும் நிலத்திற்கு உடைமையாகும்.

நிலத்தின் பண்புகள் *Characteristics of Land*

1. அசைவுத்தன்மை இல்லாதது.
2. வினைத்திறனை உயர்த்த முடியும்.
3. ஓரினத்தன்மை அற்றது. (உருவாக்கம், காலநிலை, கனியவளங்கள், நீர் வளங்கள்)
4. இயற்கையின் நேரடி கொடையாகும்.
5. உற்பத்திக்கு பயன்படுத்தும் போது நிலத்தின் செழிப்ப குறைவடையும்.
6. நிலத்தின் செழிப்பு இடத்திற்கிடம் வேறுபடும்.
7. நிலத்தினை உற்பத்திக்கு பயன்படுத்தும் போது குறைந்து செல்லும் எல்லை விளைவு விதிக்கு உட்பட்டது.
8. நிலத்தின் மொத்த நிரம்பல் மாற்றம் அற்றது.
9. நிலத்தினை இடம்பெயர்க்க முடியாது.
10. மாற்றமின்றி உற்பத்திக்கு பயன்படுத்த முடியாது.
11. நிலத்தினை உற்பத்திக்கு பயன்படுத்தியதற்கு வெகுமதியாக/ கொடுப்பனவுகளாக வாடகை அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. இயங்காக்காரணி

13. அழியக்கூடிய தன்மை அற்றது.

14. அளிப்பு நிலையானது. (பெரியளவில் மாறுவதில்லை)

Q. நிலம் எனும் உற்பத்தி காரணிக்குள் அடங்குவனவற்றின் **கீழ் கோடிடுக.**

1. சவுதி அரேபியாவில் உள்ள எண்ணெய்க்கிணறு.
2. தெஹிவளையில் அமைந்துள்ள மிருகக்காட்சிச் சாலை.
3. பேராதனை தாவரவியல் பூங்கா
4. உல்லாச பயணிகளை கவர்வதாக அமைந்த நீர் வீழ்ச்சி
5. வடகீழ் பருவக்காற்று
6. இயற்கைத் தாவரங்கள்

உழைப்பு *Labour*

பொருட்கள், சேவைகளின் உற்பத்திக்கு பயன்படுகின்ற மனிதனுடைய உடல், உள சக்தியே உழைப்பாகும்.

பொருளாதார வளர்ச்சிக்குப் பயன்படும் மனிதனுடைய சிறப்பானாற்றல்கள் உழைப்பு எனப்படும்.

உழைப்பின் பண்புகள் *Characteristics of Labour*

1. உற்பத்திக்கு பயன்படும் மனிதனுடைய உடல், உள சக்தியே உழைப்பாகும்.
2. ஊழியத்திற்கு ஊழியம், தன்மை வேறுபடும்.
3. பேரம் பேசக்கூடிய ஆற்றல் உடையது.
4. ஒருவரிடமிருந்து பிரிக்கவோ, இன்னொருவருக்கு உரிமை மாற்றவோ முடியாது.
5. அழியக்கூடிய தன்மையுடையது.
6. ஊழியத்திற்கு பெறுமானத்தேய்வு கணிக்கப்படுவதில்லை.
7. உழைப்பு உற்பத்தியில் பயன்படுத்தியதுக்கு வெகுமதியாக சம்பளம் அல்லது கூலி வழங்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. உழைப்பு சிறக்குமியல்புடையது.

9. நிரம்பல் கேள்விக்கேற்ப மாற்றமுடியாது.

10. நேரடியாக சமூகம் அளிக்கும் தன்மை கொண்டுள்ளது.

11. கூட்டுச்சேரக் கூடியது.

12. பயன்படுத்தாவிடின் தீயவிளைவுகளை வெளித்தள்ளக்கூடியது.

13. பிரயோக ரீதியில் முக்கியமான காரணி

14. தீர்மானம் மேற்கொள்ளவும் ஒழுங்கமைக்கவும் முடிதல்.

உழைப்பை நிர்ணயிக்கும் காரணிகள்

1. கல்வி
2. உடல் வலு
3. தொழில்நுட்ப அறிவு
4. காலநிலை
5. சனத்தொகை
6. வளதமைப்பு
7. பால் அமைப்பு
8. சமூகப் பொருளாதாரக் காரிணகள்

பொருளாதாரத்தில் உழைப்பை வழங்கும் பிரிவிகள்

1. சம்பளம் பெறும் ஊழியர்கள்

2. தொழில் கொள்வோர்

3. சுயதொழில் முயற்சியாளர்

மூலதனம் *Capital*

உற்பத்திக்காக மனிதனால் உருவாக்கப்பட்ட பௌதீக சொத்துக்களே மூலதனம் ஆகும்.

பொருள், சேவை உற்பத்தி செயற்பாட்டிற்குப் பயன்படுத்துவதற்கு மனிதனால் உற்பத்தி செய்யப்படுகின்ற உபகரணங்களும் கருவிகளும் மூலதனம் எனப்படும்.

உதாரணம் : தொழிற்சாலை, கட்டிடம், இயந்திர உபகரணங்கள், துறைமுகம், பெருந்தெருக்கள், விமான நிலையங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலதனத்தின் பண்புகள் *Characteristics of Capital*

1. மூலதனம் மெய் எண்ணக்கரு
2. மூலதனம் இருப்பு எண்ணக்கரு
3. மீண்டும் மீண்டும் உற்பத்திக்கு பயன்படுத்த முடிதல்.
4. உற்பத்தியில் பயன்படுத்தப்பட்ட மூலதனத்திற்கு வெகுமதியாக வட்டி வழங்கப்படும்.
5. ஏனைய ஆக்க காரணிகளை விட விளைதிறன் கூடியது.
6. மூலதனம் ஒரு பௌதீகச் சொத்து
7. நீண்ட ஆயுளை உடையது.
8. மூலதனம் உற்பத்திக்காக மனிதனால் உருவாக்கப்பட்ட பௌதீகச் சொத்தாகும்.
9. உற்பத்தியின் போது பெறுமானத்தேய்வடையும்.
10. தளபாடம், இயந்திரம், பொறிவிருட்சம் என்பன மூலதன சொத்துக்களுக்கு உதாரணம் ஆகும்.
11. மூலதன சொத்துக்களை உருவாக்கும் செயற்பாடு மூலதன ஆக்கம் ஆகும்.

மூலதனப் பயன்பாட்டினால் கிடைக்கும் நன்மைகள்

1. உற்பத்தியை அதிகரிக்கும்
2. பேரளவு உற்பத்தியை மேற்கொள்ளலாம்
3. சிக்கனங்களை (அகபுறச்சிக்கனங்கள்) அனுபவிக்கலாம்
4. நிரம்பலை சந்தைக்கேற்ற முறையில் முகாமை செய்ய முடிதல்.
5. உழைப்பாளர்களின் பணியை இலகுவானதாகவும் வினைத்திறன் மிக்கதாக மாற்ற முடியும்.

குறிப்பு :-

♣ மூலதன வளங்களின் பல்லினத்தன்மையும் அதன் பயன்பாடும் அந்தந்த நாட்டில் நிலவும் தொழில்நுட்ப மட்டத்திலேயே தங்கியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலதனத்தில் பல்வேறான வடிவங்கள்

- நிலையான மூலதனம்/ மெய் மூலதனம்/ பௌதீக மூலதனம்
- தொழிற்படு மூலதனம்/ சுழலும் மூலதனம்/ இருப்பு
- பொருளாதாரப் பொதுச் செயற்பாட்டு மூலதனம்
- சமூக பொதுச் செயற்பாட்டு மூலதனம்
- மானிட மூலதனம்
- இயற்கை மூலதனம்
- சமூக மூலதனம்

பௌதீக மூலதனம் *Real Capital*

உற்பத்திக்காக மனிதனால் உருவாக்கப்பட்டதும் உற்பத்தியின் போது பெறுமானத் தேய்வடைவதும் நீண்ட ஆயுளை உடைய பௌதீக சொத்துக்களே பௌதீக மூலதனமாகும்.

உற்பத்திச் செயற்பாட்டிற்கு இடைவிடாது பயன்படுத்தக்கூடிய நீண்டகாலப் பாவனையுடைய சொத்துக்களான தொழிற்சாலை, இயந்திர உபகரணம், களஞ்சியசாலை போன்றவை நிலையான மூலதனமாகக் கருதப்படும்.

நிலையான மூலதனத்தைப் பயன்படுத்தும் காலமெல்லாம் ஏதாவது ஒரு பிரதிபலன் சொத்துடையமையாளருக்குக் கிடைக்கும்.

சுழலும் மூலதனம்

குறுங்காலத்தில் மாற்றமடைவதும் நிறுவனத்தின் தொடர்ச்சியான செயற்பாட்டுக்கு அவசியமான மூலதனம்.

உதாரணம் : கையிருப்பு



உற்பத்திச் செயற்பாட்டிற்குப் பயன்படும் மூலப்பொருள், அரை இறுதிப்பொருள், இறுதிப்பொருள் போன்ற அனைத்தும் தொழிற் பாட்டு மூலதனமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை உற்பத்திச் செயற்பாட்டைத் தடையின்றி மேற்கொள்ளவும், நாட்டில் எதிர்கால உற்பத்தியை திட்டமிடவும் முக்கியமானது.

பொருளாதார பொதுப்பணி மூலதனம்
Economics Infrastructure Capital

பொருட்கள் சேவைகளின் உற்பத்தியையும் பரிமாற்றத்தையும் இலகுபடுத்தவும் வினைதிறன் மிக்கதாக்கவும் அவசியமான பொருளாதார கீழ்கட்டமைப்புக்களை வழங்குவதற்காக மேற் கொள்ளபடும் முதலீடுகளே பொருளாதார பொதுப்பணி மூலதனம் ஆகும்.

உதாரணம் : புகையிரத வீதிகள்
விமான நிலையம்
துறைமுகம்
தொலைதொடர்பு சேவைகள்
நெடுங்சாலைகள்
நீர்பாசன கால்வாய்கள்
மின்சாரமும் சக்தியும்

பொருளாதாரத்தில் பொருள், சேவை உற்பத்தியையும் பங்கீட்டுச் செயற்பாட்டை இலகுபடுத்துகின்ற மூலதனமாகக் கருதப்படுவதுடன், இவை பொருளாதார கீழ் கட்டமைப்பு வசதிகளாக காணப்படும்.

உள்நாட்டு வெளிநாட்டு தனியார் முதலீட்டை உயர்த்துவதற்கு உதவுவதுடன் நடைமுறையில் அதிகமான நாடுகளில் அரசாங்கத்தினால் வழங்கப்படும்.

சமூக பொதுப்பணி மூலதனம் *Social Infrastructure Capital*

சமூகத்தின் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைகின்றவற்றின் மீது மேற்கொள்ளப்படும் முதலீட்டை குறிக்கும்.

மனிதனின் அடிப்படைத்தேவைகளை நிறைவேற்றுவதற்குப் பயன்படுத்தப்படும் சேவைகளை வழங்கும் மூலதனப் பொருட்கள் சமூக பொதுச் செயற்பாட்டு மூலதனமாகும். இவற்றால் சமூக நலன் நிறைவேற்றப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போஷாக்கு, சுகாதாரம், கல்வியறிவு, வதிவிடம் போன்ற அடிப்படை சமூக தேவைகளை பூர்த்தி செய்வதற்காக பயன்படும் மூலதன பொருட்களே சமூகப்பொதுப்பணி மூலதனமாகும்.

உதாரணம் : பாடசாலை கட்டிடங்கள்
பல்கலைகழக கட்டிடங்கள்
உபகரணங்கள்
வைத்தியசாலை, பொது மலசல கூடம்
குழாய் நீர் அமைப்பு, வதிவிட கட்டிடங்கள்
கழிவகற்றும் வடிகால் அமைப்பு

சமூக மூலதனம் *Social Capital*

சமூகங்களுக்கிடையிலான தொடர்புகளை அளவு ரீதியாகவும் பண்பு ரீதியாகவும் விருத்தியடையச் செய்யும் நிறுவனங்கள், நல்லொழுக்கங்கள், விழுமியங்கள், நியமங்கள் சங்க அங்கத்துவம் போன்ற தொடர்பாடல் வலையமைப்புக்கள் சமூக மூலதனமாகக் கருதப்படும்.

பொது நலனை அடைவதனை நோக்கமாக கொண்டு மக்களால் பரஸ்பர ஒத்துழைப்புடன் உருவாக்கப்படுகின்ற குழுக்கள் அல்லது அமைப்புகள் சமூக முதல் ஆகும்.

உதாரணம் : மரண சகாய சங்கம்
விவசாய அமைப்புக்கள்
பெண்கள் அமைப்புக்கள்

சமூக முதலாவது இலங்கை கலாசாரத்தின் ஒரு பங்காகும். இச்சமூக ஒன்றிணைவானது அச்சமூகத்தின் விளைதிறன், நலன் என்பவற்றில் தாக்கத்தை ஏற்படுத்துவதன் ஊடாக பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்யும்.

மக்கள் பிரிந்து காணப்படும் நிலையில் இருந்து நீக்கி அவர்கள் அனைவரையும் ஒன்றிணைப்பதன் மூலம் அவர்களின் சக்தி திரட்டப்பட்டு பொது இலக்குகளை அடைய இலகுவாக பயன் படுத்தப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊழியர்கள், தொழிலில் ஈடுபடும்போது மிகவும் வினைத்திறன் கொண்டவர்களாக மாற்றமடைவதற்கு உதவக்கூடிய கல்வி, பயிற்சி, ஆராய்ச்சி, அனுபவம், சுகாதார நிலை என்பவற்றுள் ஊழியரிடம் பொதிந்துள்ள தேர்ச்சி மானிட மூலதனமாகக் கருதப்படும்.

மானிட மூலதனத்தின் மூலம் வினைத்திறனை அதிகரிக்க முடிவதுடன் உற்பத்தியின் அளவையும் தரத்தையும் உயர்த்தலாம்.

அதிகளவில் முன்னேற்றமடைந்த உழைப்பாகிய மானிட மூலதனத்திற்கு உதாரணங்களாகத் திட்டமிடல் நுட்பவியலாளர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பயிற்சிபெற்ற ஆசிரியர்கள், விசேட வைத்தியர்கள் போன்றவர்களைக் குறிப்பிடலாம்.

ஊழியத்தின் வினைத்திறனை உயர்த்துவதற்கு தேவையான விடயங்களையே மனித மூலதனம் குறிக்கின்றது.

ஊழியரிடமுள்ள அறிவு, ஆற்றல், நிபுணத்துவம், திறமை, அனுபவம், பயிற்சி என்பவற்றை மனித மூலதனத்துக்கு உதாரணமாக குறிப்பிடலாம்.

மனித மூலதனம் என்பது ஊழியத்தின் தரத்தினை காட்டும் ஒரு விடயமாகும்.

கல்வி, சுகாதாரம், தொழிநுட்பம், முகாமைத்துவம் உற்பத்தியுடன் தொடர்புடைய அனுபவம் போன்றவற்றில் முதலீடு செய்வதன் மூலம் மனித மூலதனத்தை விருத்தி செய்து கொள்ளலாம்.

இயற்கை மூலதனம்

பொருளாதாரமொன்றின் காணப்படும் இயற்கை வளங்களானது இயற்கை மூலதனம் என அழைக்கப்படும். இயற்கை வளங்களுக்கு உதாரணங்களாக நிலம், ஆறுகள், கனிய வளம் போன்றவை.

இயற்கை மூலதனம் அதிகளவில் கிடைப்பதானது பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியத்துவம் வாய்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Q. பொருளியலில் பணமானது மூலதனமாகக் கருதப்படாதது ஏன்?

1. பொருட்கள் சேவைகளின் உற்பத்திக்காக மனிதனால் உருவாக்கப்பட்ட சாதனங்ளே மூலதனம் ஆகும்.

   உதாரணம் : கருவிகள், கட்டடம், இயந்திரம்

2. பொருட்கள் சேவைகளின் உற்பத்திக்கு இவை நேரடியாகப் பங்களிப்புச் செய்கின்றன.

3. பணத்தைப் பயன்படுத்தி பொருட்கள் சேவைகளை நேரடியாக உற்பத்தி செய்ய முடியாது.

4. பணமானது பொருட்கள் சேவைகளை பரிமாற்ற உதவுகின்ற பொது ஊடகமாக தொழிற்படுகிறதே அன்றி நேரடியாக பொருட்கள் சேவைகளின் உற்பத்திக்கு பங்களிப்பு செய்வதில்லை. மூலதனம் ஒரு மெய்ச் சொத்தாகும். பணமானது ஒரு நிதிச் சொத்தாகும்.

மூலதனம் என்பது உற்பத்திச் செயற்பாட்டில் உறுதுணையாகப் பயன்படுத்தப்படும் ஒரு மெய்ச்சொத்தாகும். பணத்தைப் பயன்படுத்தி உற்பத்திக்குத் தேவையான மெய்ச் சொத்துக்களைப் பெற்றுக் கொண்டு பயன்படுத்தலாமே ஒழிய பணத்தை உற்பத்திச் செயற்பாட்டில் ஒரு மெய்ச் சொத்தாகப் பயன்படுத்த முடியாது. இதனால், பொருளியலில் பணம் ஒரு மூலதனமாகக் கருதப்படுவதில்லை.

மூலதன ஆக்கம் அல்லது முதல் உற்பத்தி அல்லது முதலீடு

குறித்த நாட்டில் குறித்த காலப்பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட மூலதன சொத்துக்களின் அளவே மூலதன ஆக்கம் எனப்படும்.

குறித்த நாட்டில் குறித்த காலப்பகுதியில் முதலிருப்பில் ஏற்பட்ட அதிகரிப்பை முதலீடு ஆகும்.

முதல் இருப்பு

- குறித்த நாட்டில் குறித்த காலத்தில் உள்ள மூலதன சொத்துக்களின் பண அளவே முதலிருப்பாகும்.

- சேமிப்பு கூடினால் முதலீட்டாற்றல் அதிகரிக்கும், முதலீடு அதிகரிக்கும், முதல் இருப்பு அதிகரிக்கும். ஆகவே சேமிப்புக்கும் இவற்றுக்கும் நேர்க்கணிய தொடர்பு காணப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலீட்டுக்கான மூலாதாரங்கள்

முதலீடானது சேமிப்பிலிருந்து உருவாகும்.

1. **உள்நாட்டு சேமிப்பு :-**
   - a. வீட்டுத்துறையின் சேமிப்பு
   - b. நிறுவனத்துறையின் சேமிப்பு
   - c. அரசாங்கத்துறை சேமிப்பு

2. **வெளிநாட்டு சேமிப்பு :-**
   - a. வெளிநாட்டு நேரடி முதலீடு
   - b. பட்டியலிடப்பட்ட முதலீடு
   - c. வெளிநாட்டு உதவிகள்

(1) வீட்டு துறையின் சேமிப்பு

வீட்டுத்துறை வருமானத்தில் அன்றாட நுகர்விற்கு நுகரப்படாத படுதி வீட்டுத்துறை சேமிப்பாகும்.

(2) வணிக சேமிப்பு

வணிகத்தின் இலாபத்தில் ஒரு பகுதி பகிராத இலாபம் என்ன பெயரில் வணிகத்தில் சேர்த்து வைக்கப்படும். அது வணிக சேமிப்பாடும். அது எதிர்கால முதலிட்டிற்காகப் பயன்படுத்தப் படும்.

(3) அரசாங்க சேமிப்பு

மொத்த அரச வருமானத்தில் நடைமுறைச் செயலை நீக்க வருவது அரச சேமிப்பாகும்.

> அமெரிக்க விண்வெளி படையை அமைக்க திட்டமிட்டு உள்ளது. எதிர்காலத்தில் லேசர் யுத்தம், செய்மதி தகர்ப்பு, 0 யுத்தம் என்றெல்லாம் இடம்பெறுமோ என்று அஞ்ச வேண்டியுள்ளது.

> கனிய நெய் உற்பத்தி நாடுகள் 30 வருடங்களின் பின் அந்தஸ்தை இழந்துவிடும் மாற்றுச் சக்தி வளப்பயன்பாடுகளை உடைய சாதனங்கள் கோலோச்சப்போவதினால்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதாரத்தில் வருமானம், சேமிப்பு, மூலதனம் என்பவற்றுக்கு இடையிலான நேர்க்கணியத் தொடர்பை பாய்ச்சல் கோட்டு விளக்கப் படம் மூலம் காட்டல்

முதலீட்டு வருமானம், வருமானம் அதிகரித்தல்



சேமிப்பு உயர்ந்து, முதலீடு உயர்ந்து முதல் இருப்பு/ மூலதனம் உயரும்.

சேமிப்பு முதலீடு, மூலதனம் என்பவற்றிக்கிடையில் நெருங்கிய தொடர்பு காணப்படும்.

காரணி உள்ளீடுகளும் காரணியல்லா உள்ளீடுகளும்

உள்ளீடுகள்

பொருட்கள் சேவைகளின் உற்பத்திக்கு பயன்படுபவை அனைத்தும் உள்ளீடுகள் எனப்படும்.

காரணி உள்ளீடுகள்

பொருட்கள் சேவைகளின் உற்பத்திக்குப் பயன்படும் உள்ளீடுகளான நிலம், உழைப்பு, மூலதனம், முயற்சி என்பன காரணி உள்ளீடுகள் ஆகும்.

காரணியல்லா உள்ளீடுகள்

பொருட்கள் சேவைகளின் உற்பத்திக்குப் பயன்படும். மூலப்பொருட்கள், எரிபொருட்கள், இடைநிலைப் பொருட்கள் என்பன காரணியல்லா உள்ளீடுகள் ஆகும். இவை உற்பத்தியுடன் அழிவடையும் தன்மையைக் கொண்டவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சி *Entrepreneur*

- உற்பத்தி தீர்மானங்களை எடுத்தலும் நடைமுறைப்படுத்தலும் எதிர்கால ஆபத்தை எதிர் கொள்வதும் தேவைக்கு ஏற்ப ஏனைய உற்பத்தி காரணிகளை (நிலம், உழைப்பு, மூலதனம்) இணைத்தலும் உற்பத்தியின் போது ஏற்படும். உற்பத்தி விலகலை கண்டறிந்து கட்டுப்படுத்தலும் புதிய பொருட்கள் சேவைகளை வெளியீடு செய்வதுமான மனிதக் காரணியே முயற்சி ஆகும்.
- உற்பத்தி காரணிகளுள் மிகவும் முக்கியமான இடம் முயற்சி யாண்மைக்கு வழங்கப்படுகிறது.
- முயற்சியாளனது உற்பத்தியில் ஈடுபட்டதற்கு வெகுமதியாக இலாபத்தை பெற்றுக்கொள்ளும்.

முயற்சியின் பண்புகள் *Characteristics of Entrepreneur*

1. உற்பத்தி தீர்மானங்களை எடுத்தலும் (என்ன பொருளை உற்பத்தி செய்தல்? எவ்வளவு உற்பத்தி செய்தல்?) நடைமுறைப்படுத்தலும்.
2. எதிர்கால ஆபத்தை (நட்டம்) எதிர் கொள்ளல்.
3. தேவைக்கேற்ப ஏனைய உற்பத்திக்காரணிகளை (நிலம், உழைப்பு, மூலதனம்) இணைத்தல்.
4. உற்பத்தியின் போது ஏற்படும் உற்பத்தி விலகலை (தடையை) கண்டறிதலும் கட்டுப்படுத்தலும்.
5. புதிய பொருட்கள் சேவைகளை கண்டுபிடித்தல்.
6. முயற்சி உற்பத்தியில் ஈடுபட்டதற்கு வெகுமதியாக இலாபத்தை பெறும்.
7. முயற்சி ஒரு மனிதக்காரணி ஆகும்.
8. புதிய வாய்ப்புக்களை கண்டறிதலும் சாதகமாக்கலும்.
9. எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய நிச்சயமற்ற தன்மைகளை எதிர் கொள்ளல்.

முயற்சியை நிர்ணயிக்கின்ற காரணிகள்

1. கல்வியறிவு
2. முகாமைத்துவ கல்வி
3. முகாமைத்துவ பயற்சி
4. நிதிச் சந்தை
5. முகாமைத்திட்டமிடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சியாண்மை விருத்தியடையச் செய்ய எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்

1. கல்வியறிவை அதிகளவில் வழங்கல்.
2. முகாமைத்துவ கல்வியை அதிகளவில் வழங்கல்.
3. முகாமைத்துவ பயிற்சி என்பவற்றை அதிகளவில் வழங்கல்.
4. சிறந்த முகாமைத்திட்டமிடல்களை மேற்கொள்ளல்.
5. சிறந்த முகாமைத்திட்டமிடல்களை மேற்கொள்ளல்.
6. முதலீட்டுக்கான கடன்வசதிகளை செய்து கொடுத்தல்.

முகாமை *Management*

- முயற்சியின் நோக்கத்தை அடைவதற்கான கருமங்களை திட்டமிடல், நடைமுறைப்படுத்தல், நெறிப்படுத்தல், ஆளுதல் என்பன முகாமையின் பாற்படும்.
- முகாமைக்கு சம்பளம் அல்லது பங்கிலாபம் வழங்கப்படும்.

முகாமையை நிர்ணயிக்கும் காரணிகள்

1. கல்வியறிவு
2. முகாமைத்துவ கல்வி
3. முகாமைத்துவ பயிற்சி
4. நிதிச்சந்தை
5. முகாமைத்திட்டமிடல்

முயற்சியாளர்	முகாமையாளர்
♦ தீர்மானங்களை மேற்கொள்வார்.	♦ அத்தீர்மானங்களை செயற்படுத்தவார்.
♦ வெகுமதியாக இலாபம் அமையும்.	♦ வெகுமதியாக சம்பளம் அமையும்.
♦ காப்புறுதி செய்ய முடியாத அபாயங்களை எதிர் கொள்வார்.	♦ எதிர் கொள்வதில்லை.
♦ நிறுவன இலக்குகளையும் நோக்கங்களையும் கையாளுவர்.	♦ கருமங்களை கையாளுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Q. முயற்சியாளனுக்கு இருக்க வேண்டிய பண்புகள் **எவை?**

1. தன்னம்பிக்கை, ஆரம்பிக்கும் திறன்
2. தளர்வுறதா உற்சாகத்துடன் செயற்படும் திறன்
3. தூரநோக்கு
4. இனம் காணும் ஆற்றல்
5. எதிர்கால சவால்களுக்கு முகம் கொடுக்கும் ஆற்றல்.
6. சிறந்த அவதானிப்பும் பகுப்பாய்வு செய்து முடிவுகளை பெறும் ஆற்றலும் செயல்திறனும் உடையவராய் இருத்தல்.
7. சிறந்த தலைமைத்துவம்

Q. முயற்சியின் முக்கியத்துவங்கள் **யாவை?**

1. வளப்பயன்பாட்டை அதிகரிக்க.
2. புதிய வெளியீடுகள் பெற.
3. போட்டித் தன்மையை அதிகரிக்க.
4. உற்பத்தி செலவுகளை குறைக்க.
5. உற்பத்தி தரத்தை உயர்த்த.
6. வருமானம், வாழ்க்கைத்தரம் என்பவற்றை உயர்த்த.
7. வேலையில்லாப் பிரச்சினையை குறைக்க.
8. நாட்டின் வருமானத்தை உயர்த்த.
9. சார்புத் தன்மையை குறைக்க.

Q. "நவீன பொருளாதாரமொன்றில் உற்பத்தி அதிகரிப்பதற்கான பிரதான மூலக்காரணிகளின் உற்பத்தித்திறன் அதிகரிப்பேயாகும்". **இக் கூற்றை ஏற்பீர்?**

- இல்லை
- அபிவிருத்தி அடைந்த நாடுகளில் உற்பத்தி அதிகரிப்பிற்குப் பிரதான இடம் வகிப்பது காரணிகளின் வினைத்திறன் அதிகரிப்பேயாகும். மொத்த உற்பத்தி அதிகரிப்பில் 2/3 பங்கு இதன் மூலம் பெறப்படுகின்றது.
- ஆனால் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் இன்றும் உற்பத்தி அதிகரிப்பில் செல்வாக்குச் செலுத்துவது காரணிகளின் அளவு அதிகரிப்பேயாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணிகளின் விளைதிறன்

ஒரு அலகு உள்ளீட்டிற்கான சராசரி வெளியீடு விளைதிறனாக கருதப்படும்.

காரணி விளைதிறன் கணிக்கப்படுவது.

$$\text{காரணி விளைதிறன்} = \frac{\text{வெளியீட்டின் அளவு}}{\text{உள்ளீட்டின் அளவு}}$$

காரணிகளின் விளைதிறனை தீர்மானிக்கும் காரணிகள்

1. தொழினுட்பம்
2. மனித மூலதனம்
3. முகாமைத்துவத்திறன்
4. தொழிற்பிரிப்பும், சிறப்பு தேர்ச்சியும்

காரணிகளின் வினைத்திறன்

வெளியீட்டளவை அதற்குப் பயன்படுத்தப்பட்ட உள்ளீட்டு அளவினால் வகுப்பதன் மூலம் அக்காரணியின் வினைத்திறனைக் கணிப்பிடலாம்.

$$\text{காரணிகளின் வினைத்திறன்} = \frac{\text{வெளியீடு}}{\text{உள்ளீடு}}$$

$$\text{ஊழிய வினைத்திறன்} = \frac{\text{மொத்த உற்பத்தி}}{\text{ஊழியர்களின் அளவு}}$$

$$\text{மூலதன வினைத்திறன்} = \frac{\text{மொத்த உற்பத்தி}}{\text{மூலதன அளவு}}$$

$$\text{நிலத்தின் வினைத்திறன்} = \frac{\text{மொத்த உற்பத்தி}}{\text{நிலத்தின் அளவு}}$$

நாடுகள் தங்களிடமுள்ள வளங்களை சிறப்பாக இனங்கண்டு வளர்ச்சி காணமுடியும்.

நிலம் :- நியூசிலாந்து, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் அதிகளவில் நிலம் காணப்பட, அவற்றையே அவர்கள் அதிகளவில் உற்பத்திக்கு பயன்படுத்துவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைப்பு :- உலகில் அதிக சனத்தெதகையைக் கொண்ட சீனா, இந்தியா போன்ற நாடுகள் உழைப்பு என்ற உற்பத்திக் காரணியை அதிகளவில் உற்பத்திக்குப் பயன்படுத்துவர்.

மூலதனம் :- யப்பான், அமெரிக்கா போன்ற நாடுகள் மூலதனத்தை அதிகளவில் உற்பத்தியில் ஈடுபடுத்துவர்.

முயற்சி :- நிலம், உழைப்பு, மூலதனம் என்ற உற்பத்திக் காரணிகள் குறைந்தளவில் இருந்தாலும் முயற்சியின் மூலம் முன்னேற்றமடைந்த நாடாக சிங்கப்பூர் காணப்படுகின்றது.

Q. பாண்வெதுப்பகமொன்றில் பயன்படுத்தப்படும் வளங்களை பின்வரும் தலைப்புக்களில் **பட்டியற்படுத்துக.**

- ♠ *இயற்கை வளங்கள் : விறகு, நீர்*
- ♠ *மனித வள்ங்கள் : பாண்மா குழைப்பவர், பாண் சுடுபவர்*
- ♠ *மனிதனால் உருவாக்கப்பட்ட வளங்கள் : பாண்போரணை, பாண் அச்சுக்கள், பாண்மா குழைக்கும் இயந்திரம்*

Q. செங்கல் உற்பத்தி சாலையில் பயன்படுத்தப்படும் வளங்களை இயற்கை வளங்கள், மனித வளங்கள், மனிதனால் உருவாக்கப்பட்ட வளங்கள் என **வகைப்படுத்துக.**

- ♠ *இயற்கை வளங்கள் : களி, நீர், விறகு*
- ♠ *மனித வளங்கள் : செங்கல் அறுப்பவர், செங்கல்களி குழைப்பவர்*
- ♠ *மனிதனால் உருவாக்கப்பட்ட வளங்கள் : செங்கல் அச்சு, மண்வெட்டி*

Q. பாய் உற்பத்தி நிலையமொன்றில் பயன்படுத்தப்படும் வளங்களை இயற்கை வளங்கள், மனிதவளங்கள், மனிதனால் உருவாக்கப்பட்ட வளங்கள் எனும் அடிப்படையில் **நிரற்படுத்துக.**

- ♠ *இயற்கை வளங்கள் : நீர், பாய்ப்புல்*
- ♠ *மனித வளங்கள் : பாய் பின்னுபவர், பாய்க்குச் சாயமிடுபவர்*
- ♠ *மனிதனால் உருவாக்கப்பட்ட வளங்கள் : கத்தி, கத்தரிக்கோல், பாய்ப்பின்னல் கருவிகள்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Q. இலைக்கஞ்சி உற்பத்தியில் பயன்படுத்தப்படும் வளங்களை இயற்கை வளங்கள், மனிதவளங்கள், மனிதனால் உருவாக்கப்பட்ட வளங்கள் எனப் **பட்டியல்படுத்துக.**

- இயற்கை வளங்கள் : நீர், இலைகள், விறகு
- மனித வளங்கள் : கஞ்சி காய்ச்சுபவர், இலைகளை சுத்தம் செய்து தயார்ப்படுத்துபவர்
- மனிதனால் உருவாக்கப்பட்ட வளங்கள் : கஞ்சிக் கவளம், கரண்டி, கத்தி, பாத்திரங்கள்

Q. ஊழியப் பிரிவு உற்பத்தி செலவுகளை குறைத்து, போட்டித் தன்மையினை எவ்வாறு அதிகரிக்கும் என்பதனை **விளக்குக.**

- ஒரு உற்பத்தியானது பல பிரிவுகளாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவிலும் வெவ்வேறு ஊழியர்களை நியமித்து உற்பத்தியை மேற்கொள்ளுதல் ஊழியப்பிரிப்பு எனப்படும்.
- இதன் மூலம் குறிப்பிட்ட வேலைகளை மிகவும் திறன்படச் செய்யக்கூடிய தொழிலாளர்களுக்கே அவற்றை கையளிக்க கூடியதாக உள்ளது.
- இங்கு குறித்தபிரிவில் தொடர்ச்சியாக ஈடுபடும் ஊழியர் விசேட அனுபவங்களையும், சிறந்த வினைத்திறனையும் பெற்றுக் கொள்கிறார்.
- இதன் மூலம் தொழில் நிறுவனங்கள் ஊழியரின் உற்பத்தி திறனை உயர்த்தி தமது வெளியீட்டு மட்டங்களை உச்சப்படுத்தும்.
- தொழில் பிரிப்பு, சிறக்கும் இயல்பு என்பவை காரணமாக புதிய கண்டுப்பிடிப்புக்களும் உயர் தொழிநுட்ப பயன் பாடுகளும் சாத்தியமாகின்றது.
- தொழிலாளியின் தேவையற்ற இடநகர்வுகள், வேறுபட்ட இயந்திரங்களையும் கருவிகளையும் கையாளுதல் என்பன தவிர்க்கப்பட்டு காலம் சேமிக்கப்படுகின்றது.
- ஊழியப் பிரிப்பு தொழிலாளர்களிடம் இருக்கும் ஆற்றல்களையும் வினைத்திறன்களையும் சிறப்பாக கையாள்வது சாத்திய மாகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ♠ குறிப்பிட்ட வேலைக்கு தொழிலாளர்களைப் பயிற்றுக் கூடியதாக இருக்கும்.
- ♠ மிகவும் திறன்படச் செய்யக் கூடிய தொழிலாளர்களுக்கே அச் செயன்முறை கையளிக்கப்படுவதாலும் தொழிலாளர்கள் அத்தொழில் சம்பந்தமாக சிறப்பான அனுபவங்களைப் பெறுவதாலும் புதிய கண்டுப்பிடிப்புக்கள் இடம் பெற வழிவகுப்பதாலும் உயர் தொழிநுட்பங்களை அறிமுகம் செய்து பயன் பெறக்கூடியதாக இருப்பதாலும் காலம் சேமிக்கப்படுவதாலும் வளவிரயம் குறைக்கப்படுவதாலும் வளங்கள் திறமையாக கையாளுவதற்கு வழி அமைப்பதாலும் ஊழியர்களைப் பயிற்றுவிப்பது இலகுவாக இருப்பதாலும் உற்பத்தி திறன் அதிகரிப்பதாலும் உற்பத்திச் செலவு குறைக்கப் படுவதாலும் வளங்கள் திறமையாக கையாளுவதற்கு வழி அமைப்பதாலும் ஊழியர்களைப் பயிற்றுவிப்பது இலகுவாக இருப்பதாலும் உற்பத்தி திறன் அதிகரிப்பதாலும் உற்பத்திச் செலவு குறைக்கப்படுவதுடன் நிறுவனம் எதிர்பார்க்கின்ற உற்பத்தி இலக்கை அடையக்கூடியதாக இருப்பதாலும் போட்டித் தன்மை அதிகரிக்கிறது.

Q. பின்நோக்கி சாயும் ஊழிய நிரம்பல் வளையி என்றால் என்ன?

- ♠ குறித்த நேரத்தில் பொருளாதாரத்தில் கிடைக்கக் கூடிய தாகவுள்ள மொத்த ஊழிய மணித்தியாலங்களின் அளவு ஊழிய நிரம்பலாகும்.
- ♠ ஊழிய நிரம்பலை
  - I. ஊழியப்படையின் அளவு
  - II. ஊழியரால் வழங்கப்பட தயாராக உள்ள சராசரி ஊழிய மணித்தியாலங்கள் என்பவற்றால் நிர்ணயிக்கப்படும்.
- ♠ பொதுவாக கூலி மட்டம் அதிகரிக்கும் போது ஊழிய நிரம்பலும் அதிகரித்து செல்கிறது.
- ♠ கூலி மட்டம் ஒரு நிலையின் பின் தொடர்ந்து அதிகரித்து செல்லும் போது ஊழிய நிரம்பல் வீழ்ச்சியடைந்து செல்லும்.
- ♠ இந்நிலையில் ஊழிய நிரம்பல் வளையியானது பின் நோக்கி வளையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



W கூலி (Wage)

W ஊழிய நிரம்பல் (Labour Supply)

W ஊழிய நிரம்பல் வளையி (Labour Supply Curve)

கூலி மட்டம் W_2 விலிருந்து W_3 ஆக அதிகரிக்கும் போது ஊழிய நிரம்பலும் L_1 இலிருந்து L_2 வாக அதிகரிக்கிறது.

இந்நிலையில் ஊழிய நிரம்பல் வளையி முன் நோக்கி செல்கிறது. இது ஊழிய நிரம்பல் வளையியில் மெல்லியதாக அமைத்து காட்டப்பட்டுள்ளது.

மேலும் கூலி மட்டம் W_3 யிலிருந்து W_5 ஆக அதிகரிக்கும் போது, ஊழிய நிரம்பல் L_2 விலிருந்து L_0 ஆக வீழ்ச்சியடைகிறது.

இந்நிலையில் ஊழிய நிரம்பல் வளையி பின் நோக்கி சாய்கிறது. இது ஊழிய நிரம்பல் வளையியில் தடிப்பாக அமைத்து காட்டப்பட்டுள்ளது.

இங்கிலாந்தில் நிலக்கரி தொழிலாளர்களின் கூலி மட்டம் குறிப்பிட்ட எல்லைக்கு மேல் உயர்த்தப்பட்ட போது ஊழிய நிரம்பல் குறைவடைந்தது. இந்நிலையில் இவர்கள் தொடர்பான குறித்த கால ஊழிய நிரம்பல் வளையியானது பின்நோக்கி சாய்வு உடையதாக அமைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Q. ஊழிய நிரம்பல் வளையி பின் நோக்கி வளைவதற்கான காரணங்கள் யாவை?

கூலிமட்டம் அதிகரிக்கும் போதும் ஊழிய நிரம்பல் வீழ்ச்சி அடையும் நிலையில் ஊழிய நிரம்பல் வளையி பின் நோக்கி வளையும் இதற்கான காரணங்கள் :

1. குடும்பத்துடன் நேரத்தை செலவிட விரும்பல்.
2. சலிப்புத் தன்மை.
3. உல்லாசப் பயணங்களை மேற்கொள்ளல்.
4. உடலையும் உள்ளத்தையும் புத்துணர்ச்சியுடன் வைத்திருப்பதற்கு
5. சமூக கடமைகளை நிறைவேற்றுவதற்கு
6. உடற்பாதிப்புகளைத் தவிர்ப்பதற்கு
7. விளையாடுவதற்கு

Q. ஊழிய நிரம்பலை வரையறை செய்க.

குறித்த காலத்தில் குறித்த பொருளாதாரத்தில் உற்பத்தி நடவடிக்கைக்காக ஊழியர்கள் வழங்க தயாராக உள்ள மொத்த ஊழிய மணித்தியாலங்கள் ஊழிய நிரம்பல் எனப்படும்.

Q. ஊழிய நிரம்பலை நிர்ணயிக்கும் இரு பெரும் காரணிகள் எவை?

- ஊழியப்படையின் அளவு
- அவர்கள் வழங்க தயாராக உள்ள ஊழிய மணித்தியாலம்

Q. ஊழியப் படை என்பதனால் கருதப்படுவது யாது?

குறித்த பொருளாதாரத்தில் குறிப்பிட்ட நேரத்தில் கூலி அல்லது ஏனைய பொருளாதார நன்மைகள் பெறும் நோக்கில் வேலை செய்வோரும், வேலை தேடி கொண்டு இருப்போரும் குறிப்பிட்ட வயது எல்லைக்குள் அடங்கும் அனைவரும் ஊழியப்படையில் அடங்குவார்.

ஊழியப்படை = தொழில் வாய்ப்பில் உள்ள சனத்தொகை + தொழில் வாய்ப்பற்ற சனத்தொகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Q. ஊழியப்படையை நிர்ணயிக்கும் காரணிகள் யாவை?

1. *சனத்தொகையின் அளவு*
2. *வயதமைப்பு*
3. *பாலமைப்பு*
4. *தொழினுட்ப அறிவு*
5. *கலாச்சாரம்*
6. *பொதுவிலைமட்டத்தின் போக்கு*
7. *நாட்டின் அமைதி நிலை*
8. *ஏனைய சமூக பொருளாதார காரணிகள்*

Q. பேரளவுச் சிக்கனங்கள் எக்காரணிகளில் ஏற்படுகின்றன?

- *பங்கீட்டுச் சிக்கனம்*
- *முகாமைச் சிக்கனம்*
- *தொழில்நுட்பச் சிக்கனம்*

Q. வளங்களின் வினைத்திறனைத் தீர்மானிக்கும் காரணிகள் யாவை?

- *தொழில் நுட்பம்*
- *மனித மூலதனம்*
- *முகாமைத்துவம்*
- *தொழிற்பிரிப்பும் சிறப்புத் தேர்ச்சியும்*

Q. முயற்சியாண்மையால் எதிர்கொள்ளப்படும் ஆபத்துக்கள் எவை?

- *நட்டம்*
- *நிச்சயமற்ற தன்மைகளை எதிர்கொள்ளல்*
- *விலை வீழ்ச்சி, உற்பத்தி செலவு அதிகரிப்பு என்பவற்றால் வருமானத்திற்கு ஏற்படும் பாதிப்புக்களை எதிர்கொள்ளல்.*
- *முயற்சி, முயற்சியாண்மை, தொழிலாண்மை, வினையாண்மை என்பன ஒத்தபதங்களாகும்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்ச்சி மட்டம் 1. 4 : பொருளாதாரமொன்றில் மையப் பிரச்சினையைத் தர்க்க ரீதியாக ஆய்வு செய்வார்.

பாட உள்ளடக்கம் :

- அருமை
- அருமைக்கான காரணங்கள்
- மாற்றுப்பயன்பாடும் தெரிவும்
- சந்தர்ப்பச் செலவு
- சந்தர்ப்பச் செலவு பூச்சியமாகும் சந்தர்ப்பங்கள்

வளப்பற்றாக்குறை/ அருமை *Scarcity*

எண்ணற்ற மனித விருப்பங்களுடன் வரையறுக்கப்பட்ட வளங்களை ஒப்பிடும்போது வளங்கள் பற்றாக்குறையுடையதாக காணப்படும். இதுவே வன்பற்றாக்குறை ஆகும்.

எண்ணற்ற மனித விருப்பங்களுடன் வரையறுக்கப்பட்ட வளங்களால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள், சேவைகளை ஒப்பிடும்போது பொருட் சேவைகள் (அவை) பற்றாக் குறையுடைவையாகக் காணப்படும். இதுவே வளப்பற்றாக்குறை ஆகும்.

மனித விருப்பங்கள் வரையறையற்றதாக இருப்பதுடன் வளங்கள் வரையறுக்கப்பட்டவையாக உள்ளது. வரையறுக்கப்பட்ட வளங்களைக் கொண்டு வரையறுக்கப்படாத எல்லையற்ற விருப்பங்களை பூர்த்தி செய்யும்போது அருமை தோன்றும்.

வளப்பற்றாக்குறையின் பண்புகள் *Characteristics of Scarcity*

1. இது ஒரு ஒப்பீட்டுப் பிரச்சினை
2. வளப்பற்றாக்குறையின் செறிவு தன்மை வேறுபடலாம்.
3. பொருளாதார அடிப்படைப் பிரச்சினைகளின் தோற்றத்திற்கு வழிவகுத்தது. (என்ன பொருளை உற்பத்தி செய்தல்? எவ்வளவு உற்பத்தி செய்தல்? எவ்வாறு உற்பத்தி செய்தல்? யாருக்காக உற்பத்தி செய்தல்?)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. எல்லா பொருளாதாரங்களுக்கு பொதுவானது.

5. எந்த ஒரு பொருளாதாரத்தாலும் தீர்க்க முடியாத பாரிய பொருளியல் பிரச்சினை.

சமூகத்தில் நிலவும் இரு பிரதான பண்புகள் காரணமாக அருமை பிரச்சினை தோன்றுகிறது/ ஏற்படுகிறது.

1. குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் மனித விருப்பங்கள் எல்லையற்று இருத்தல்.

2. குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் அவ்விருப்பங்களை நிறைவேற்று வதற்குத் தேவையான பொருட்கள், சேவைகளை உற்பத்திச் செய்ய பயன்படுத்தும் வளங்கள் பற்றாக்குறையாக இருத்தல்.

வளப்பற்றாக்குறை பிரச்சினை

- வளப் பற்றாக்குறையானது எண்ணற்ற மனித விருப்பங்களை வரையறுக்கப்பட்ட வளங்களையும் மட்டுமே ஒப்பீடு செய்து வரையறுக்கப்படும்.

- எண்ணற்ற மனித விருப்பங்களை வரையறுக்கப்பட்ட வளங்களால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் சேவைகளையும் ஒப்பீடு செய்து அருந்தல் பற்றிய முடிவு கூறுவது சரியானதாகும்.

- எண்ணற்ற மனித விருப்பங்களையும் வரையறுக்கப்பட்ட எந்த ஓர் வளத்தையும் ஒப்பீடு செய்து அவ்வளத்தின் அருமை பற்றி முடிவுக்கு வரலாம்.

  உதாரணம் : எண்ணற்ற மனித விருப்பங்கள், ஊழிய வளம் என்பவற்றை ஒப்பீட்டு ஊழிய வளம் அருந்த லானது என்ற முடிவுக்கு வரலாம்.

- மனித விருப்பங்களையும் பயன்படுத்தப்படாத வளத்தினையும் ஒப்பீடு செய்து (வேலையின்மை) அருந்தல் கூறப்படுவது இல்லை.

- மனித விருப்பங்களையும் பௌதீக அளவுகளையும் வைத்தும் அருந்தல் பற்றிய முடிவு கூறப்படுவது இல்லை.

- அருந்தல் மூலாதாரப் பிரச்சினையாகும் அதாவது தீர்வு காணமுடியாத பாரிய பொருளில் பிரச்சினை ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* ஆகவே வளங்களின் அருந்தல் அபிவிருத்தி அடைந்த அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் எதிர்நோக்குகின்ற முக்கிய பாரிய பொருளியல் பிரச்சினையாக காணப்படுகின்றது.
* வளங்களின் அருந்தல் எல்லா நாடுகளுக்கும் பொதுவானதாக காணப்படுகின்ற போதும் அவற்றின் தன்மை (அருந்தலின் செறிவு) நாடுகளுக்கிடையே வேறுபடலாம்.

Q. "வளப்பற்றாக்குறை ஒரு ஒப்பீட்டுப் பிரச்சினை ஆகும்." **விளக்குக.**

♠ எண்ணற்ற மனித விருப்பங்களுடன் வரையறுக்கப்பட்ட வளங்களை ஒப்பீட்டே வளப்பற்றாக்குறையானது வரைவிலக் கணப்படுத்தப்படுகின்றது. என்பதால், வளப்பற்றாக்குறை ஒரு ஒப்பீட்டுப் பிரச்சினை ஆகும்.

Q. "அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் வளப்பற்றாக்குறையை ஒரு பாரிய பிரச்சினையாக கருதலாம் ஆனால் அபிவிருத்தி அடைந்த நாடுகளில் வளப்பற்றாக்குறையை பாரிய பொருளியல் பிரச்சினையாக கருத முடியாது." **இக்கூற்றை ஏற்பீரா?**

♠ ஏற்க முடியாது.

♠ எண்ணற்ற மனித விருப்பங்களுடன் வரையறுக்கப்பட்ட வளங்களை ஒப்பீடும் போது வளங்கள் பற்றாக் குறையுடைய தாக காணப்படும். இதுவே வளப்பற்றாக்குறை எனப்படும்.

♠ வளப்பற்றாக்குறையானது எல்லா பொருளாதாரங்களுக்கும் பொதுவானது, எந்த ஒரு பொருளாதாரத்தாலும் தீர்க்க முடியாத பாரிய பொருளியல் பிரச்சினை ஆகும்.

♠ அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் மனித விருப்பங்களுடன் அங்குள்ள வரையறுக்கப்பட்ட வளங்களை ஒப்பீடும் போது அங்குள்ள வளங்கள் பற்றாக்குறை உடையதாக இருக்கும். அதேபோல்

♠ அபிவிருத்தி அடைந்தது நாடுகளின் மனித விருப்பங்களுடன் அங்குள்ள வரையறுக்கப்பட்ட வளங்கள் ஒப்பிடும் போது அங்குள்ள வளங்கள் பற்றாக்குறை உடையதாக இருக்கும். ஆகவே,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

♠ அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் மட்டுமல்ல அபிவிருத்தி அடைந்த நாடுகளிலும் வளப்பற்றாக் குறையை ஒரு பாரிய பொருளியல் பிரச்சினை ஆகும்.

Q. "இலங்கையில் வேலையின்மையின் அளவுகள் உயர்வாக காணப்படுகிறது. ஆகவே இலங்கையில் ஊழிய வளம் அருமையற்றது" **இக் கூற்றை ஏற்பீரா?** உமது விடையை **விளக்குக.**

♠ ஏற்றுக்கொள்ள முடியாது.

♠ வளப்பற்றாக்குறை மூலாதார பொருளியல் பிரச்சினை ஆகும்.

♠ எந்த ஒரு பொருளாதாரத்திலும் தீர்க்க முடியாது.

♠ ஊழியம் ஒரு வளம் ஆகவே எல்லா பொருளாதாரங்களிலும் பற்றாக்குறையுடையதாக காணப்படுகிறது.

♠ ஊழிய வளப்பற்றாக்குறை என்பது எண்ணற்ற மனித விருப்பங்களுடன் ஊழிய வளத்தை ஒப்பீடும் போது ஊழிய வளப்பற்றாக்குறையாக காணப்படும்.

♠ வேலையின்மையுடன் ஒப்பீட்டு ஊழிய வள பற்றாக்குறை பற்றி கூறப்படுவது தவறு.

♠ இலங்கையில் வேலையின்மையிலுள்ள ஊழியத்தை கல்வி, சுகாதார மருத்துவ வசதி, தொழில் கல்வி, தொழில் பயிற்சி போன்றவற்றை வழங்கி உற்பத்தியில் ஈடுபடுத்துவோமாயின் புதிய முடிவுப்பொருட்கள் சேவைகள் பெறப்படும்.

♠ இம் புதிய முடிவுப்பொருட்களையும் இலங்கை மக்களின் விருப்பங்களை ஒப்பிடும் போதும் இம்முடிவுப் பொருட்கள் சேவைகள் பற்றாக்குறையுடையவையாக காணப்படும்.

♠ ஏனெனில் அவை பற்றாக்குறை உள்ள ஊழிய வளத்தால் உற்பத்தியாக்கப்பட்டமையினாலாகும்.

♠ ஆகவே இலங்கையிலும் ஊழிய வளம் பற்றாக்குறையானது ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருமையானது பொருளியலில் மைய பிரச்சினையாகக் கருதப்படக் காரணங்கள்

1. பொருளாதாரச் செயற்பாடுகள் யாவற்றிற்கும் இப்பிரச்சனை பொதுவானதாகும்.
2. எந்தவொரு சமூகமும் எந்தப்பொருள், எந்தளவு, யாருக்காக, எவ்வாறு உற்பத்திச் செய்ய வேண்டும் என்ற அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுப்பதனாலாகும்.
3. அருமை எல்லாச் சமூகங்களுக்கும் பொதுவானதாக இருத்தல்.

Q. பெருந்தொகையான மக்கள் தங்களது அடிப்படை தேவைகளை யேனும் நிறைவேற்ற முடியாமல் இருக்கும் இலங்கையைப் போன்ற நாடுகளிலே அருமையாக இருப்பதை அடிப்படைப் பொருளாதார பிரச்சினையாகக் கருதலாம். ஆனால் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை அனுபவிக்கும் மக்கள் வாழும் அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம் போன்ற அபிவிருத்தியடைந்த பொருளா தாரங்களின் வளங்கள் அருமையாக இருப்பதைப் பிரதானமான ஒரு பிரச்சினையாகக் கருதமுடியாது.

இக்கூற்றை ஏற்பீரா? உமது விடையை **விளக்குக?**

- ஏற்க முடியாது.
- எண்ணற்ற மனித விருப்பங்களுடன் வரையறுக்கப்பட்ட வளங்களை ஒப்பீடும் போது வளங்கள் பற்றாக்குறையுடையதாக காணப்படும். இதுவே வளப்பற்றாக்குறை எனப்படும்.
- வளப்பற்றாக்குறையானது எல்லா பொருளாதாரங்களுக்கும் பொதுவானது, எந்த ஒரு பொருளாதாரத்தாலும் தீர்க்க முடியாத பாரிய பொருளியல் பிரச்சினை ஆகும்.
- அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் மனித விருப்பங்களுடன் அங்குள்ள வரையறுக்கப்பட்ட வளங்களை ஒப்பிடும் போது அங்குள்ள வளங்கள் பற்றாக்குறை உடையதாக இருக்கும். அதேபோல்
- அபிவிருத்தி அடைந்த நாடுகளின் மனித விருப்பங்களுடன் அங்குள்ள வரையறுக்கப்பட்ட வளங்கள் ஒப்பீடும் போது அங்குள்ள வளங்கள் பற்றாக்குறை உடையதாக இருக்கும். ஆகவே,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

♠ அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் மட்டுமல்ல அபிவிருத்தி அடைந்த நாடுகளிலும் வளப்பாற்றாக் குறையை ஒரு பாரிய பொருளியல் பிரச்சினையாகும்.

Q. இலங்கையில் உள்ள மூலதனப்பற்றாக்குறையை அமெரிக்காவிலுள்ள மூலதனப்பற்றாக்குறையுடன் ஒப்பீட்டு ஆராய்க.

♠ இலங்கையிலும் அமெரிக்காவிலும் மூலதன வளம் பற்றாக்குறை உடையதாக காணப்படுகிறது.

♠ ஆனால் மூலதனப் பற்றாக்குறை ஒப்பீட்டு ரீதியில் அமெரிக்காவை விட இலங்கைக்கு உயர்வானதாகும்.

♠ அதாவது மூலதனப் பற்றாக்குறையின் செறிவு இலங்கையில் உயர்வாக காணப்படுகிறது.

Q. "வளப் பற்றாக்குறையின் செறிவு" என்பதை வரைவிலக்கணப்படுத்துக.

♠ வளப்பற்றாக்குறைகளை ஒப்பீட்டு வளப்பற்றாக்குறையின் செறிவு வரைவிலக்கணப்படுத்தப்படும்.

♠ பற்றாக்குறையுடைய குறித்த வளத்தை இருவேறுப்பட்ட பிரதேசங்கள், மக்கள் என்பவற்றுடன் ஒப்பீட்டு குறித்த வளப்பற்றாக்குறையின் செறிவு கூறப்படுகிறது.

♠ உதாரணம் : இலங்கையில் உள்ள மூலதனப் பற்றாக்குறையையும் அமெரிக்காவிலுள்ள மூலதனப்பற்றாக் குறையையும் ஒப்பீடுவோமாயின் இலங்கையின் மூலதனப் பற்றாக்குறையின் செறிவு உயர்வாக காணப்படுகிறது.

Q. அமெரிக்காவிலுள்ள ஊழிய வளப்பற்றாக் குறையையும் இலங்கையிலுள்ள ஊழிய வளப்பற்றாக்குறையையும் ஒப்பிட்டு ஆராய்க.

♠ இலங்கையிலும் அமெரிக்காவிலும் ஊழிய வளம் பற்றாக்குறை உடையது.

♠ ஊழிய வளப்பற்றாக்குறை இலங்கையைவிட அமெரிக்காவுக்கு உயர்வானதாகும்.

♠ ஊழிய வளப்பற்றாக்குறையின் செறிவு அமெரிக்காவில் உயர் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Q. வளங்களை சரியான முறையில் கையாள தவறுவதன் விளைவுகளாக இருக்கக் கூடியவை யாவை?

1. இயற்கையின் அடித்தளம் பாதிப்படையும்.
2. நிகழ்கால சமுதாயமும் எதிர்கால சமுதாயமும் பாதிப்படையும்.
3. சாத்தியமான மட்டத்தை விட குறைவாகவே உற்பத்தி இடம் பெறும்.
4. வளவிரயம் ஏற்படும்.
5. வாழ்க்கைத் தரத்தை பேணமுடியாது.
6. வளங்களை புனரமைப்பதற்கு அதிக செலவுகள் ஏற்படும்.
7. மனித நடத்தை கோலம் சீர்குலையும்.
8. பூமியின் உயிர்க் கோளம் பாதிப்படையும்.
9. வளத்தேய்வு துரிதப்படுத்தப்படும்.
10. நிலைத்து நிற்கும் அபிவிருத்தியை ஏற்படுத்த முடியாமல் போகும்.
11. பூமியின் உயிர்கோலம் பாதிப்புறும்.

Q. "அருமைத்தன்மை காரணமாக தெரிவு தவிர்க்க முடியாதாகின்றது" இக்கூற்றை விளக்குக.

எண்ணற்ற மனித விருப்பங்களுடன் வரையறுக்கப்பட்ட வளங்களை ஒப்பீடும் போது வளங்கள் பற்றாக்குறையாக காணப்படுவதே அருமைத் தன்மை ஆகும்.

மனித விருப்பங்கள் எண்ணற்ற அதனை பூர்த்தி செய்யத் தேவையான பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்ய தேவையான வளங்கள் ஒப்பிட்டு ரீதியில் அருமைத் தன்மை யுடைதாக காணப்படுவதால்,

ஒரு சமூகம் தனக்குத் தேவையான எல்லாப் பொருட்கள் சேவைகளையும் உற்பத்தி செய்ய முடியாது.

ஆகவே உற்பத்தியிலும், நுகர்விலும் தெரிவு தவிர்க்க முடியாத தாகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளங்கள் அருமைத் தன்மை காரணமாகவே உற்பத்தியில் தெரிவுக் பிரச்சினைகளான

1. என்ன பொருளை உற்பத்தி செய்தல்? எவ்வளவு உற்பத்தி செய்தல்?
2. எவ்வாறு உற்பத்தி செய்தல்?
3. யாருக்காக உற்பத்தி செய்தல்? என்பனவும்

நுகர்வில் தெரிவுப் பிரச்சினைகளான.

1. என்ன பொருளை நுகர்வது?
2. எவற்றை நுகராது விடுவது? ஆகியனவும் தோன்றின.

ஆகவே அருமைத் தன்மை காரணமாக தெரிவு தவிர்க்க முடியாத தாகின்றது.

குறிப்பு :-

♣ வளங்கள் அருமை அற்றவையாக இருப்பின் ஒரு சமூகம் தனக்குத் தேவையான எல்லாப் பொருட்களையும் தேவையான அளவில் பெற்றுக் கொள்ள முடியும். இந்நிலையில் பொருளாதார பண்டங்கள் காணப்படமாட்டா. இங்கு அனைத்துப் பண்டங்களையும் பூச்சிய விலையில் பெறக்கூடியதாக அமையும்.

Q. "வளங்களை சிக்கனமாக பயன்படுத்துவதன் மூலம் வள அருமைப் பிரச்சினையை தீர்க்க முடியும்" **இக்கூற்றை ஏற்பீரா? இவ்விடைக்கான காரணம் தருக.**

♠ உடன்பட முடியாது.

♠ வளங்கள் வரையறைக்கப்பட்டன. அவ்வளங்களைச் சிக்கனமாக பயன்படுத்துவதன் மூலம் தம்மிடமுள்ள வளங்களை மிகவும் வினைத்திறனுள்ள விதத்தில் ஒரு தனிநபர் பயன்படுத்த முடியுமாயினும் அதனூடாக அருமைப் பிரச்சினைக்கு தீர்வு கண்டுவிட முடியாது.

♠ அருமை பிரச்சினையானது வளங்கள் வினைத்திறனுள்ள விதத்தில் பயன்படுத்தபடாமையினால் உருவாவதன்று. மாறாக அளவற்ற தேவைகளுடன் ஒப்பிடும் நேரத்தில் வளங்கள் போதியளவில் இல்லாமையினாலே அருமைப் பிரச்சினை உண்டாகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

♠ ஒரு தேவை பூர்த்தி செய்யப்படும் போது புதிய தேவைகள் தோன்றுகின்றன. ஆகையால் மனித தேவைகள் அளவற்ற தாகவும் அவற்றை பூர்த்தி செய்யப்படும் வளங்கள் வரையறைக் குட்பட்டதாகவும் இருக்கும் வரையில் அருமைப்பிரச்சினையும் இருந்தே தீரும்.

வள அருமைப் பிரச்சினையுடன் தொடர்பான தேர்வுகள்

- எதனை உற்பத்தி செய்வது?
- எவ்வளவு உற்பத்தி செய்வது?
- எவ்வாறு உற்பத்தி செய்வது?
- யாருக்காக உற்பத்தி செய்வது?

குறிப்பு :- உற்பத்தித் தேர்வு, நுகர்வுத் தேர்வு, முதலீட்டுத் தேர்வு என்றும் வகைப்படுத்தப்படும்.

வளங்களின் மாற்றுப்பயன்பாடு

குறித்த நேரத்தில் குறித்த வளம் பல உற்பத்திகளுக்கு பயன்படுத்தக்கூடியதாக இருத்தல் வளங்களின் மாற்றுப் பயன்பாடு ஆகும்.

வளங்களின் பல்லினப்பயன்பாட்டுத் தன்மையை இது குறிக்கிறது.

தெரிவுப் பிரச்சினை தோன்றவும், அமையச் செலவு தோன்றவும் வளங்களின் மாற்று உபயோகத்தன்மை காரணமாகும்.

வளங்களின் செயற்திறனான ஒதுக்கீட்டு சிந்தனைக்கு வளங்களின் மாற்று உபயோகத்தன்மை காரணமாகிறது.

தெரிவுப் பிரச்சினை Choice

- வளங்கள் பற்றாக்குறை உடையவையாகவும் மாற்றுப்பயன்பாடு உடையதாகவும் காணப்படுவதால் எமக்கு தேவையான எல்லா உற்பத்திகளையும், நுகர்வுகளையும் மேற்கொள்ள முடியாது.

- ஓர் உற்பத்தியாளனும் நுகர்வோனும் அவரவர் கொடுக்கின்ற முக்கியத்துவத்திற்கு ஏற்ப தேவைகளை/ விருப்பங்களை கொள்கின்றனர் இதுவே தெரிவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஓராம் தெரிவுக்கான அமையச் செலவு 2ம் தெரிவாகும்.
- எந்த ஒரு தெரிவினதும் உண்மையான செலவு அத்தெரிவு தொடர்பான கணக்கியல் செலவன்று மாறாக அத்தெரிவினால் உண்டாகும் அமையச் செலவு ஆகும்.
- வளங்களானது பற்றாக்குறையாகவும் மாற்றுப் பயன்பாடு கொண்டவையாகவும் காணப்படுவதனால் மனிதர்கள் தாம் விரும்பிய எல்லாப் பொருட்களையும் கொள்வனவு செய்வதற்குப் பதிலாக ஒரு விருப்பத்தை மட்டும் தெரிவு செய்தல் வேண்டும்.
- உதாரணமாக நிலத்தை எடுத்தால் அவை தொழிற்சாலையொன்றை நிர்மாணிக்க, விவசாயம் செய்வதற்கு விளையாட்டு மைதானம் அமைத்தல் போன்ற பல மாற்றுப் பயன்பாடுகள் காணப்படும்போது எந்த மாற்றுத் தெரிவைத் தெரிவு செய்வது என்ற விடயத்திற்குத் தீர்வுக்காண வேண்டியுள்ளது.
- இதனால் எந்த விருப்பத்திற்கு முக்கியத்துவம் அளித்தல் வேண்டும். பின்னர் பூர்த்தி செய்யக்கூடிய விருப்பங்கள் எவை என்று தனி நபர் ரீதியாக வரிசைப்படுத்துவது அவசியமாகும்.
- பொருளாதாரமொன்றில் வீட்டுத்துறை, நிறுவனத்துறை, அரசதுறை, ஏனைய ஒழுங்கமைப்புகள் என்பன வித்தியாசமான அடிப்படைகளில் தெரிவை மேற்கொள்வர்.

தெரிவுப் பிரச்சினை தோன்றுவதற்கான காரணங்கள்

1. வளங்களின் அருமை (வளப்பற்றாக்குறை)
2. வளங்களின் மாற்றுபயோகத்தன்மை
3. மனித விருப்பங்கள் எண்ணற்றவை
4. வளங்கள் வரையறுக்கப்பட்டவை

சிறந்த தெரிவை மேற்கொள்ளும் போது கவனிக்க வேண்டியவை

1. வளங்களின் அளவு
2. வளங்களின் மாற்றுபயோக தன்மை
3. நுகர்வோன் சுவை
4. நாகரிகம்
5. சட்டம்
6. சமூக நிலையமைகள்
7. பண்டத் தொகுதி பற்றிய அறிவு
8. தெரிவுத் தொகுதி பற்றிய அறிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விவசாயம்

தொழிற்சாலை கட்டிடம்

கல்நிலம்

வீடமைப்பு

- வீடமைப்புக்கான விட்டுக்கொடுப்பனவு = கைத்தொழிற்சாலை அல்லது விவசாயம்
- வீடமைப்புக்கான அமையச் செலவு = கைத்தொழிற்சாலை (இழக்கப்படுவதனுள் மிகச்சிறந்தது)
- 1ம் தெரிவுக்கான அமையச் செலவு = 2ம் தெரிவு

அமையச் செலவுக்கான வரைவிலக்கணம்

- குறித்த நேரத்தில்
  குறித்த வளத்தை
  குறித்த உற்பத்திக்கு அல்லது நுகர்வுக்கு பயன்படுத்தப்படும் போது இழக்கப்படுகின்ற ஏனைய உற்பத்திகளுள் அல்லது நுகர்வுகளுள் மிகசிறந்த தெரிவே குறித்த உற்பத்திக்கான அல்லது நுகர்வுக்கான அமையச் செலவாகும்.

- ஓராம் தெரிவுக்கான அமையச் செலவு இரண்டாம் தெரிவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அமையச் செலவு எப்போதும் ஓரலகுக்கே கூறப்படும்.

- மாற்றுத் தெரிவுகளுக்கிடையில் ஒன்றை தெரிவு செய்தால் இன்னொரு மாற்றுச் சந்தர்ப்பத்தை இழக்க நேரிடும்.

- இந்த வகையில் மாற்றுப் பயன்பாடுகளுக்கிடையில் ஒரு மாற்றைத் தெரிவு செய்தால் அதற்காக இழக்கப்படுகின்ற அடுத்த சிறந்த தெரிவின் பெறுமதியானது அமையச் செலவாகக் கருதப்படும்.

அமையச்செலவு தோன்றக் காரணங்கள்

1. வளங்கள் பற்றாக்குறையாக காணப்படல்.
2. வளங்கள் மாற்றுபயோகதன்மை உடையனவாய் இருத்தல்.
3. எண்ணற்ற மனித தேவைகள்.
4. தெரிவு இடம்பெறல்.
5. வளங்கள் வரையறுக்கப்பட்டிருத்தல்.

அமையச்செலவு தோன்றாத சந்தர்ப்பங்கள்/ அமையச் செலவு பூச்சியமாகும் சந்தர்ப்பங்கள்

1. மனித தேவைகளை விட பண்டங்கள் கூடுதலாக காணப்படும் போது. உதாரணம் : இலவசப்பண்டங்கள்
2. வளங்கள் மாற்றுபயோகதன்மை அற்றதாக காணப்படும் போது.
3. பொதுபண்டங்களின் நுகர்வின் போது.
4. பயன்படுத்தாத வளத்தை பயன்படுத்தி உற்பத்தி அதிகரிப்பு பெறப்பட்டால் அந்த உற்பத்தி அதிகரிப்புக்கு (ywxz பிரதேசத்தில்)
5. திறமையற்ற முறையில் பயன்படுத்தம் வளத்தை திறமையாக பயன்படுத்தி உற்பத்தி அதிகரிப்பு பெறப்பட்டால் அந்த உற்பத்தி அதிகரிப்புக்கு அமையச் செலவு பூச்சியம். (y w x z பிரதேசத்தில் மட்டும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



yw அல்லது **yz** அல்லது **yx** வரை உற்பத்தி அதிகரிப்புக்கு அமையச்செலவு பூச்சியம்.

அமையச் செலவுக்கான விளக்கமுறைகள் அல்லது அமையச் செலவின் வகைகள்

1. நுகர்வு முறையில் அல்லது நுகர்வோனுக்கான அமையச் செலவு.
2. உற்பத்தி முறையில் அல்லது உற்பத்தியாளனுக்கான அமையச் செலவு.
3. முதலீட்டு முறையில் அல்லது முதலீட்டாளனுக்கான அமையச் செலவு

- பயன் இழப்பும் ஈடுசெய்தலும் என்ற வகையில் எழுந்த அமையச் செலவு

குறிப்பு : அமையச் செலவானது செயற்பாட்டாளர் அல்லது தாங்குபவர் அடிப்படையில் வகையிடப்பட்டுள்ளது.

உற்பத்தி சாத்திய வளையியின் வடிவத்திற்கேற்ப அமையச் செலவின் வகைகள்

1. அதிகரித்து செல்லும் அமையச் செலவு.
2. மாறா அமையச் செலவு.
3. குறைந்து செல்லும் அமையச் செலவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமையச் செலவு எண்ணக்கருவின் முக்கியத்துவங்கள்

1. சிறந்த முதலிட்டு தீர்மானங்களை மேற்கொள்ள
2. தனிநபர் தீர்மானம் சிறப்பாக அமைய
3. சர்வதேச வர்த்தகத்தை விளங்கிக் கொள்ள
4. இறக்குமதி, ஏற்றுமதி வர்த்தகம் தொடர்பாக சிறந்த கொள்கையை அமுல்படுத்த
5. வள ஒதுக்கீட்டை திறமையாக மேற்கொள்ள
6. பொருளியல் இலாபத்தைக் கணிக்க.

சந்தர்ப்பச்செலவு எண்ணக்கருவின் பண்புகள்

1. இது ஒரு மெய்ரீதியான எண்ணக்கரு
2. ஓராந்தெரிவுக்கான அமையச்செலவு இரண்டாம் தெரிவாகும்.
3. அமையச் செலவு ஓர் உள்ளாந்த எண்ணக்கருவாகும். ஆகவே அத்தெரிவை மேற்கொள்பவரே அதற்கான அமையச் செலவை நிர்ணயம் செய்ய முடியும்.
4. நபருக்கு நபர் வேறுபடும் தன்மையுடையது.
5. கணக்கியல் இலாபத்தில் இது கவனத்தில் கொள்ளப்படுவதில்லை.
6. அமையச் செலவின் காரணமாக வெளிவாரியான செலவொன்று தோன்றாது.
7. அமையச் செலவானது நேர்கணிய எண்ணக்கருவாக இருப்பதுடன், நேர் கணிய விடையை பெறுவது பொருளாதாரப் பண்டம் தொடர்பாக மட்டுமேயாகும்.
8. அமையச் செலவானது உள்ளார்ந்த எண்ணக்கருவாகும். அதாவது அமையச் செலவை அதனைத் தெரிவு செய்யும் நபருக்கு மட்டுமே குறிப்பிடலாம்.
9. இது நிதி ரீதியான எண்ணக்கரு அன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்ச்சி மட்டம் 1.5 : வளங்களையும், உற்பத்திகளையும் பங்கீடு செய்வது தொடர்பாகத் தீர்மானம் எடுக்கும் முறையை விளக்குவார்.

பாட உள்ளடக்கம் :

- அடிப்படை பொருளாதார பிரச்சினைகள்
- பொருளாதார அடிப்படை பிரச்சினைகள் தோன்றுவதற்கான காரணங்கள்

பொருளியல் பிரச்சினைகள்

தீர்க்க முடியாத பொருளியல் பிரச்சினைகள்/ மூலாதாரப் பொருளியல் பிரச்சினைகள்	பொருளாதார அடிப்படை பிரச்சினைகள்/ கட்டாயம் தீர்க்க வேண்டிய பொருளியல் பிரச்சினைகள்
(i) வளப்பற்றாக்குறை பிரச்சினை (ii) தெரிவுப் பிரச்சினை (iii) பரிமாற்றுப் பிரச்சினை	(i) என்ன பொருளை உற்பத்தி செய்தல்? (ii) எவ்வளவு உற்பத்தி செய்தல்? (iii) எவ்வாறு உற்பத்தி செய்தல்? (iv) யாருக்காக உற்பத்தி செய்தல்?

	மூலாதாரம் பொருளியல் பிரச்சினைகளின் பண்புகள்	பொருளாதார அடிப்படைப் பிரச்சினைகளின் பண்புகள்
ஒற்றுமை	♦ எல்லாப் பொருளாதாரங்களுக்கு பொதுவான பிரச்சினை	♦ எல்லாப் பொருளா தாரங்களுக்கும் பொதுவான பிரச்சினை
வேற்றுமை	♦ எந்த பொருளாதாரத் தாலும் தீர்க்க முடியாத பிரச்சினை	♦ கட்டாயம் தீர்க்க வேண்டிய பிரச்சினை
தொடர்பு	♦ அடிப்படை பொருளாதார பிரச்சினைகள் தோன்ற வழிவகுத்தது	♦ மூலாதார பொருளியல் பிரச்சினையால் தோற்று விக்கப்பட்டவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பு :-

♣ பொருளியல் பிரச்சினைகளை தனிப்பட்ட பொருளியல் பிரச்சினை, சமூக பொருளியல் பிரச்சினை எனவும் வகையிடலாம்.

அடிப்படை பொருளியல் பிரச்சினைக்கான தீர்வுக் கருவிகள்/ தகவல் தொடர்பாடல் இயந்திரங்கள் (பொறிகள்)	பொருளாதார முறைமைகள்
(i) விலைப் பொறி முறை ➡	சந்தைப் பொருளாதாரம்
(ii) மத்திய திட்டமிடல் குழு ➡	திட்டமிட்டல் பொருளாதாரம்
(iii)விலைப் பொறிமுறையும், மத்திய திட்டமிடல் குழுவும் இணைந்து தொழிற்படுத்தல் ➡	கலப்பு பொருளாதாரம்

சமூகம் ஒன்றின் அடிப்படைத்தெரிவுகள்

அருமை என்ற பிரச்சினையானது எந்தவொரு சமூகத்திற்கும் பொதுவான பிரச்சினை என்றும் வளங்களில் மாற்றுப் பயன்பாடு இருப்பதனால் மாற்றுப் பயன்பாடுடைய வளங்களிடையே பங்கீடு செய்யும் பிரச்சினையை எந்தவொரு சமூகமும் பொதுவாக எதிர்நோக்க வேண்டியுள்ளது.

வளங்களில் நிலவும் அருமையும் அருமையான வளங்களின் மாற்றுப் பயன்பாடு காரணமாக எந்தவொரு சமூகமும் அடிப்படைத் தெரிவுகள் மூன்றை மேற்கொள்ளல் வேண்டும்.

அத்தெரிவுகள் மூன்றும் எந்தவொரு சமூகத்திற்கும் பொதுவான வையாகும்.

பொருளியலில் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினையாகக் கருதப்படுவது அத்தெரிவாகும்.

இதனடிப்படையில் அடிப்படைப் பொருளாதார பிரச்சினைகள் என வருபவை,

1. எதனை, எந்தளவில் உற்பத்தி செய்தல் வேண்டும்.
2. எவ்வாறு உற்பத்தி செய்தல் வேண்டும்.
3. யாருக்காக உற்பத்தி செய்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார அடிப்படை பிரச்சினைகள்

1. என்ன பொருளை உற்பத்தி செய்தல்?
   (வளப்பங்கீட்டு பிரச்சினை)

2. எவ்வளவு உற்பத்தி செய்தல்?
   (உற்பத்திமட்ட தீர்மான பிரச்சினை)

3. எவ்வாறு உற்பத்தி செய்தல்?
   (கையாள் தொழிநுட்ப தெரிவுப் பிரச்சினை)

4. யாருக்காக உற்பத்தி செய்தல்?
   (வருமான பங்கீட்டுடன் தொடர்புடைய பிரச்சினை, முடிவுப் பொருள் பங்கீட்டுப் பிரச்சினை)

பொருளாதார அடிப்படை பிரச்சினைகள் பண்புகள்

1. பொருளாதார அடிப்படை பிரச்சினைகளுக்கும் எல்லா பொருளாதாரத்துக்கும் பொதுவான பிரச்சினை ஆகும்.

2. கட்டாயம் தீர்க்கப்பட வேண்டியது.

3. மூலாதார பொருளியல் பிரச்சினையால் தோற்றுவிக்கப்பட்டவை.

01. என்ன பொருளை உற்பத்தி செய்தல்?

- தீர்மானிக்கப்பட்ட உற்பத்திகளை நிகழ்கால, எதிர்கால தேவைகளுக்கு இடையிலான வள ஒதுக்கீடு தொடர்பாகவும் இங்கு கவனத்திற்கொள்ளப்படும்.

- ஒரு சமூகம் தனக்கு கிடைகின்ற பற்றாக்குறையுடையதும் மாற்றுபயோகத்தன்மையுடையதுமான வளங்களின் பெரும் பகுதியை எந்த உற்பத்திக்கு ஒதுக்கீடு செய்வது என்ற வளப்பகிர்வு பிரச்சினை இதுவாகும்.

- ஒரு சமூகம் தனக்கு கிடைக்கின்ற பற்றாக்குறையுடையதும் மாற்றுபயோகத்தன்மை உடையதுமான வளங்களை உற்பத்திக்கிடையில் எந்தெந்த அளவில் ஒதுக்கீடு செய்வது என்ற வளப்பங்கீட்டு பிரச்சினை இதுவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02. எவ்வளவு பொருளை உற்பத்தி செய்தல்?

- குறித்த பொருளாதாரம் உற்பத்தி செய்கின்ற பொருட்கள் சேவைகளை எந்த அளவில் உற்பத்தி செய்வது? என்ற பிரச்சினை இதுவாகும் இது உற்பத்தி மட்ட தீர்மான பிரச்சினை இது ஆகும்.

03. எவ்வாறு உற்பத்தி செய்தல்?

- பொருட்கள் சேவைகளின் உற்பத்திக்கு எந்த தொழில்நுட்ப முறையினை தெரிவு செய்வது கையாள்வது என்ற தொழிநுட்ப தெரிவுப் பிரச்சினை இதுவாகும்.

- இது ஒரு கையாள் தொழில் நுட்ப பிரச்சினையாகும்.

- ஒவ்வொரு பண்ட உற்பத்திக்கும் எந்த வளங்களை என்ன விகிதத்தில் பயன்படுத்தல் வேண்டும் என்ற பிரச்சினை உருவாகும்.

தொழில்நுட்ப முறைகள்

1. **மூலதன செறிவான தொழில்நுட்ப முறை :-**

ஊழியத்தின் அளவை விட மூலதனத்தின் அளவு மிக உயர்வாக காணப்படுமாயின் அது மூலதன செறிவான தொழில்நுட்ப முறையாகும்.

இது முதலாம் தர தொழில்நுட்ப முறை எனவும் அழைக்கப்படும்.

2. **நடுத்தர அளவிலான தொழில்நுட்ப முறை :-**

மூலதனத்தின் அளவும் ஊழியத்தின் அளவும் ஏறத்தாள சமனாக காணப்படுமாயின் அது நடுத்தர அளவிலான தொழில்நுட்ப முறையாகும்.

3. **ஊழிய செறிவான தொழில் நுட்ப முறை :-**

மூலதனத்தின் அளவைவிட ஊழியத்தின் அளவு மிக உயர்வாக காணப்படுமாயின் அது ஊழியம் செறிவான தொழில்நுட்ப முறை யாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. யாருக்காக உற்பத்தி செய்தல்?

- இப்பிரச்சினையால் கருதப்படுவது சமூகத்தின் மொத்த உற்பத்தியானது யாருக்கிடையே பங்கீடு செய்யப்படும் என்பதாகும்.
- முடிவுப் பொருட்கள் சேவைகளை பொருளாதாரத்தில் உள்ள பல்வேறு பொருளாதார வர்க்கங்களுக்கிடையே எவ்வாறு பங்கீடு செய்வது என்ற முடிவுப் பொருள் பங்கீட்டுப் பிரச்சினை இதுவாகும்.
- இது ஒரு வருமானப் பங்கீட்டுடன் தொடர்புடைய பிரச்சினை ஆகும்.
- சமூகத்தின் மொத்த உற்பத்தியானது யாருக்கிடையே பங்கீடு செய்யப்படும். என்பதே யாருக்காக உற்பத்தி செய்தல் என்ற பிரச்சினையினால் சுட்டப்படுகின்றது.
- பண்டத்தின் நுகர்வு ஒவ்வொரு நபரின் வருமானத்தில் தங்கியுள்ளது.
- காரணி உடமையாளர்கள் வாடகை, வட்டி, சம்பளம், இலாபம் என்ற வகையில் காரணி வருமானத்தை உழைப்பர்.
- காரணி உடமையின் அளவு, காரணிகளின் விலை என்பன ஒவ்வொரு நபரினதும் வருமானத்தை தீர்மானிக்கும்.
- உயர்வருமானம் பெறுபவர்கள் உயர் அளவிலும் மாறாக தாழ்வருமானம் பெறுபவர்கள் மிகக் குறைந்த அளவிலும் உற்பத்தி பண்டங்களை அனுபவிக்க நேரும்.
- ஆகவே யாருக்காக உற்பத்தி செய்வதென்பது வருமானப் பங்கீட்டுடன் தொடர்பான பிரச்சினையாக அமைந்துவிடுகின்றது.

பொருளாதார வர்க்கங்கள்

1. உயர்வர்க்கம் அல்லது முதலாம் வர்க்கம்
   உயர்ந்த வருமானத்தை பெறும் பிரிவினர்
2. நடுத்தர வர்க்கம் அல்லது இரண்டாம் வர்க்கம்
   நடுத்தர அளவிலான வருமானத்தைப் பெறும் பிரிவினர்
3. கீழ் வர்க்கம் அல்லது மூன்றாம் வர்க்கம்
   மிக குறைந்த வருமானத்தைப் பெறும் பிரிவினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட உள்ளடக்கம் :

- பொருளாதார முறைமைகள்
- பொருளாதார முறைமையொன்றின் அடிப்படை விடயங்கள்
- பொருளாதார முறைமையொன்றினை தீர்மானிக்கும் பிரிவினர்கள்
- பொருளாதார முறைமையொன்றில் தீர்மானம் மேற் கொள்ளும் பிரிவினரின் தொழிற்பாடுகள்

பொருளாதார முறை அல்லது பொருளாதார ஒழுங்கமைப்பு

பொருளாதார அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகச் சமூகத்தினுள் வாழும் மக்களால் உருவாக்கப்பட்ட நிறுவன ரீதியான செயல்திட்டம் பொருளாதார முறை/ பொருளாதார ஒழுங்கமைப்பு எனப்படும்.

தாம் எதிர்நோக்கும் பொதுவான பொருளாதார அடிப்படைப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக நிறுவன அமைப்பு ரீதியில் ஒன்றுபட்டு செயற்படும் ஒரு மக்கள் சமூகத்தை பொருளாதார அமைப்பு என்ற பதம் குறிக்கின்றது.

எல்லாப் பொருளாதார அமைப்புகளும் எதிர்நோக்குகின்ற அடிப்படைப் பொருளாதார பிரச்சினைகள்.

என்ன பொருளை உற்பத்தி செய்தல் (Production Deci)
எவ்வளவு பொருளை உற்பத்தி செய்தல்.
எவ்வாறு உற்பத்தி செய்தல் (Choice of Techiues Decision)
யாருக்காக உற்பத்தி செய்தல் (Distribution Decision)

நிறுவனங்கள் பொருளாதார முறைமையொன்றில் மனிதனால் உருவாக்கப்பட்ட சட்டதிட்டத்திற்கு அமையவே செயற்படுகின்றன.

நிறுவனங்கள் மனிதர்களையும் அவர்களின் உயிரோட்டமான செயற்பாடுகளை உடையதாக காணப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌதீக முறைமையொன்றில் நிலவும் இயற்கைப் பொருட்களைப் போல் பொருளாதார முறையில் காணப்படும் பொருட்களாக இருப்பது அங்கு காணப்படும் பொருளாதார நிறுவனங்களாகும்.

இப்பொருளாதார நிறுவனங்களானவை பொருளாதார முறைமையின் அடிப்படைப் பிரிவுகள், நிறுவன ரீதியான பண்புகள் போன்ற பெயர்களாலும் அழைக்கப்படும்.

அந்தந்த நாடுகளில் காணப்படும் சமூக, கலாசார வரலாற்றுக் கோலங்களின் அடிப்படையில் பல்வேறான வடிவங்களில் நிறுவன ரீதியான அலகுகள் அந்தந்தப் பொருளாதாரங்களில் காணப்படலாம்.

பொருளாதார முறையில் காணப்படும் நிறுவன ரீதியான அம்சங்கள்

நாடுகளுக்கிடையே சட்டம், கலாச்சாரம், வரலாறு, தத்துவ ரீதியான சிந்தனை என்பன வேறுபடுகிறது. இதனால் இயல்பாகவே நிறுவன ரீதியான சூழ்நிலை எழுகிறது.

நிறுவனங்கள் தமது இலக்குகளை அடைய மாறுபட்ட சூழ்நிலைகளுக்கேற்ப தம்மை வடிவமைத்துக் கொள்வது போலவே பொருளாதாரங்களும் நிறுவன ரீதியான அம்சங்களை தன்னுள் கொண்டு விளக்குகின்றன.

நிறுவன ரீதியான அம்சங்கள்

- இலக்குகளை வரையறுத்தல், அடைதல் மதிப்பிடல்.
- வளங்களைத் திறமையாகப் பயன்படுத்தல்.
- வளங்களைச் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்தல்.
- கிடைக்கும் வாய்ப்புக்கான சிறப்பாக பயன்படுத்தல்.
- தீர்க்கதரிசனம் மிக்க செயற்றிட்டங்களை அமுல்படுத்தல்
- பன்முனைச் செயற்பாட்டுத் தன்மை கொண்டு விளக்குதல்.
- பல வடிவங்களை பெற்று விளக்குதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார நிறுவனக் கட்டமைப்புக்களில் காணப்படும் சேர்க்கைகள்

1. வீட்டுத்துறை (Households)
2. அரசாங்கம் (Goverment)
3. வணிகத்துறை (Enterpriser)
4. தொழிலாளர் அமைப்புகள் (Labour Organization)
5. அரசாங்கச் சார்பற்ற அமைப்புக்கள் (Non-Goverment Organizations)
6. சந்தை (Markets)
7. ஊக்குவிப்புக்கள் (Incentives)
8. மரபுகள், பழக்கவழக்கங்கள் கலாசாரம்
9. சட்டமைப்பு

பொருளாதார முறையொன்றில் தீர்மானம் மேற்கொள்ளும் முக்கிய பிரிவினர்

- வீட்டுத்துறை
- அரசதுறை
- வணிகத்துறை
- தொழிலாளர் அமைப்பு
- அரசாங்கமல்லா அமைப்பு

வீட்டுத்துறையினர்

ஒரே கூரையின் கீழ் ஒரே வரவு செலவுத் திட்டத்தின் கீழ் தமது தேவைகளை நிறைவேற்றும் மக்கள் குழுவினர்.

இது கூட்டுக்குடும்பமாகவோ/ தனிக்குடும்பமாகவோ காணப் படலாம்.

வீட்டுத்துறையினர் உற்பத்திகாரணிகளின் உடமையாளர்களாகத் திகழ்வார்.

எந்தவொரு பொருளாதார நடவடிக்கையின் இறுதி இலக்கு வீட்டுத்துறையினரின் தேவைகளைப் பூர்த்தி செய்தல் ஆகும்.

வெளியீடுகள் மீது செலவுகளை மேற்கொள்வார், சேமிப்பில் ஈடுபடுவார், முதலீடாகப் பயன்படுத்துவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுத்துறையின் பொருளாதார தீர்மானங்கள்

1. காரணி நிரம்பல் தொடர்பாக தீர்மானம் எடுப்பது.
2. பொருட்களையும் சேவைகளையும் கொள்வனவு செய்தல் தொடர்பாக தீர்மானம் மேற்கொள்வது.
3. வருமானத்தில் எந்தளவை நுகர்விற்கும் எந்தளவை சேமிப்பிற்கும் பயன்படுத்துவது தொடர்பாக தீர்மானம் மேற்கொள்வது.

வீட்டுத்துறையின் பொருளாதார தொழிற்பாடு

1. உழைப்பை நிரம்பல் செய்பவராக காணப்படல்.
2. காரணி உடைமையாளராக திகழ்தல்.
3. அதிகளவு பொருட்கள், சேவைகளை நுகர்பவராக இருத்தல்.
4. சேமிப்பில் ஈடுபடல்.
5. சேமிப்பை முதலீடாக வழங்கல்/ பயன்படுத்தல்
6. வீட்டுத்துறையினரின் பொருளாதார தீர்மானங்களும் வீட்டுத் துறையினரின் தொழிற்பாடுகளாகும்.
7. காரணி நிரம்பல் தொடர்பாக தீர்மானம் எடுப்பது.
8. பொருட்களையும் சேவைகளையும் கொள்வனவு செய்தல் தொடர்பாக தீர்மானம் மேற்கொள்வது.
9. வருமானத்தில் எந்தளவை நுகர்விற்கும் எந்தளவை சேமிப்பிற்கும் பயன்படுத்துவது தொடர்பாக தீர்மானம் மேற்கொள்வது.

அரசுக்கு உரித்தான தொழிற்பாடுகள்

1. பொருளாதார, தனியார் உரிமைகளைப் பாதுகாத்தல்.
2. தொழிற்சாலைகளையும் வணிக நிலையங்களையும் கண்காணித்தல்.
3. பொருட்களையும், சேவைகளையும் உற்பத்தி செய்தல்.
4. நியாயமான விலையில் பொருட்களையும் சேவைகளையும் விநியோகித்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலாளர் அமைப்பு

தொழிலாளர்களால் தமது உரிமைகளைப் பாதுகாப்பதை தலையாய நோக்கமாக கொண்டு உருவாக்கப்பட்ட அமைப்பு.

தொழிலாளர் அமைப்பின் தொழிற்பாடுகள்

1. தொழிலாளர் உரிமைகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்தல்.
2. வேலைவாய்ப்பு, உற்பத்தி தொழினுட்பம், சம்பளமட்டம்.
3. பொருட்களையும் சேவைகளையும் வழங்குதல்.
4. வருமான செலவுப் பங்கீட்டில் நியாயத்துவத்தை ஏற்படுத்தல்.
5. சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டடல்.

அரசல்லா அமைப்பின் தொழிற்பாடுகள்

1. வறுமையை நீக்குதல்.
2. மனித உரிமைகளைப் பாதுகாத்தல்.
3. சுற்றாடல் பாதுகாப்பு.
4. இயற்கை அனர்த்த நிலைமைகளில் பாதிக்கப்பட்ட மக்களின் நலனுக்காக செயற்படுதல்.

வணிக நிறுவனங்களின் பல்வேறு வடிவங்கள்

1. தனியார் நிறுவனம்
2. அரச நிறுவனம்
3. கூட்டுறவு

வணிக நிறுவனங்களின் தொழிற்பாடுகள்/ வணிக நிறுவனங்களின் தீர்மானங்கள்

1. என்ன பொருளை எந்தளவு எவ்வாறு யாருக்காக உற்பத்தி செய்வதென தீர்மானமெடுத்தல்.
2. உற்பத்தி காரணிகளை கொள்வனவு செய்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார முறைமையில் காணப்படுகின்ற அடிப்படைகள்

1. வீட்டுத்துறை
2. அரசதுறை
3. வணிகப்பிரிவுகள்
4. தொழிலாளர் அமைப்புக்கள்
5. அரசல்லா அமைப்புகள்
6. சந்தைகள்
7. ஊக்குவிப்புக்கள்
8. சட்டக்கட்டமைப்புக்கள்
9. பழக்கவழக்கம், மரபுகள், கலாசாரங்கள்

பொருளாதார முறைமை ஒன்றில் தீர்மானம் மேற்கொள்வதுடன் தொடர்புடைய விசேட பிரிவினர்

1. வீட்டுத்துறை
2. அரசதுறை
3. வணிகத்துறை
4. தொழிலாளர் அமைப்பு
5. அரசல்லா அமைப்புக்கள்

பொருளாதார முறைமை ஒன்றில் மிகவும் முக்கிய நிறுவன ஒழுங்கமைப்பு

வீட்டுத்துறை

நிறுவனங்கள் பல்வேறு வழிவங்கள் பெறக்காரணங்கள்

அந்தந்த நாடுகளில் காணப்படும் சமூக, கலாசார வரலாற்றுக் கோலங்களின் அடிப்படையில் பல்வேறான வடிவங்களில் நிறுவன ரீதியான அலகுகள் அந்தந்தப் பொருளாதாரங்களில் காணப்படலாம்.

பொருளாதார முறைமையிலுள்ள நிறுவனத்தொகுதிகள் செயற்படும் அடிப்படை

பொருளாதார முறைமையொன்றில் மனிதனால் உருவாக்கப்பட்ட சட்டத்திட்டத்திற்கு அமைவாக நிறுவனத் தொகுதிகள் செயற்படு கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்ச்சி மட்டம் 1.7 : பல்வேறு நியதிகளைப் பயன்படுத்திப் பொருளாதார அமைப்புக்களை வகைப்படுத்துவார்.

பாட உள்ளடக்கம் :

- பொருளாதார அமைப்புக்களின் வகைகள்
- சந்தை பொருளாதார அமைப்பின் பண்புகள்
- சந்தை பொரளாதாரம் அடிப்படை பொருளாதார பிரச்சினைக்கு தீர்வு காணும் முறைகள்
- கட்டளை பொருளாதார அமைப்பின் பண்புகள்
- கட்டளை பொருளாதாரம் அடிப்படை பொருளாதார பிரச்சினைக்கு தீர்வு காணும் முறைகள்
- கலப்பு பொருளாதார அமைப்பின் பண்புகள்
- கலப்பு பொருளாதாரம் அடிப்படை பொருளாதார பிரச்சினைக்கு தீர்வு காணும் முறைகள்
- பொருளாதார முறைமைகள் தொடர்பான புதிய போக்குகள்
- பொருளாதார அமைப்பொன்றின் செயலாற்றுகையை அளவிடக்கூடிய நியதிகள்

பொருளாதார அமைப்புக்களை வகைப்படுத்தும் நியமங்கள்

1. வள ஒதுக்கீடு தொடர்பாக தீர்மானம் எடுத்தலும், அதற்காக பின்பற்ற வேண்டிய பொறி முறையும்.
2. வளங்கள் தொடர்பான உரிமையும் உரிமை கொள்ளலும்
3. பொருளாதார தீர்மானங்கள், அவை அலகு மீது செல்வாக்குச் செலுத்தும் ஊக்குவிப்பு முறை

பொருளாதார அமைப்புக்களை தீர்மான தொடர்பாடல் பொறி முறையின் வழவத்திற்கேற்ப வகைப்படுத்தல்

1. சந்தை பொருளாதார முறை
2. கட்டளை (திட்டமிடல்) பொருளாதார முறை
3. கலப்புப் பொருளாதார முறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார அமைப்புக்களை உற்பத்தி வளங்களின் உடமை மற்றும் சொத்துரிமைகளின் தன்மைக்கேற்ப வகைப்படுத்தல்

1. முதலாளித்துவப் பொருளாதார முறை
2. சமதர்மப் பொருளாதார முறை

பொருளாதார முறைமைகள் தொடர்பான விளக்க அட்டவணை

நியதிகள்	முதலாளித்துவப் பொருளாதாரம்	சமவுடைமைப் பொருளாதாரம்	கலப்பு பொருளாதாரம்
	பொருளாதாரத்தில் அரச தலையீடு அற்ற நிலையில்/ குறைந்த நிலையில்		
ஆக்கச் சாதனங்கள் உடமையாகவும்	தனியாருக்கு	அரசுக்கு	அரசுக்கு தனியாருக்கும்
நோக்கம்	இலாப நோக்குடனும்	சமூக நலன் சமூக நீதி	அரசு சமூகநலன் சமூக நீதி தனியார் நோக்குடனும்
பொருளாதார அடிப்படை பிரச்சனைகள் தீர்வு பொறிமுறை	விலைப் பொறிமுறை மூலம்	மத்திய திட்டமிடல் குழு மூலம்	மத்தியதிட்டமிடல் குழுவும் விலைபொறிமுறையும் இணைந்து
உற்பத்தி, விலை நிர்ணயம், பங்கீடு என்பன	தனியாரால்	மத்திய திட்டமிடல் குழுவால்	மத்தியதிட்டமிடல் குழுவும் தனியாரும்

ஊக்குவிப்புக்கள் மூன்று வகைப்படும்

1. பொருள் ரீதியான பிரதிபலன்கள் கொண்ட ஊக்குவிப்பு
2. ஒழுக்கம் விழுமியம் தொடர்பான ஊக்குவிப்பு பொது மக்களுக்கான பணியொழுங்கு
3. அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்ட ஊக்குவிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வகைப் பொருளாதார முறைமைகள் காணப்படுவதற்கான காரணங்கள்

எந்தவொரு பொருளாதாரமும் செயற்படுவது சட்டதிட்டங்கள், மரபுகள், பழக்கவழக்கங்கள் என்பவற்றை உள்ளடக்கிய நிறுவன கட்டமைப்பொன்றின் அடிப்படையிலாகும்.

இந்த நிறுவன கட்டமைப்புக்களின் தன்மைக்கேற்பப் பொருளாதார அமைப்புக்களிடையே வேறுபாடுகள் காணப்படுகின்றன.

பொருளாதார முறைமைகள் வேறுபடுவதற்கான பிரதான காரணங்கள் மூன்று ஆகும்.

1. வளங்களின் உடமைகளும் உரிமைகளும்
2. அடிப்படை பொருளாதார பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படும் முறை
3. பொருளாதார ரீதியாக தீர்வுகள் மேற்கொள்ளும் அலகுகள் மீது பாதிப்பை ஏற்படுத்தும் ஊக்குவிப்பு பொறியமைப்பு

வளங்களின் உடமைகளும் உரிமைகளும் :

தனியார் சொத்துரிமை, தனியார் முயற்சியாண்மைச் சுதந்திரம், காரணி அசைவுச் சுதந்திரம், தொழிலை தெரிவு செய்வதற்கான சுதந்திரம், (சொத்துரிமை மற்றும் முயற்சியாண்மைச் சுதந்திரம் என்பவற்றின் அடிப்படையில் முதலாளித்துவ முறைமையும் சமவுடமை முறைமையும் வேறுபடுகின்றது.)

அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதில் காணப்படும் வேறுபாடுகள் :

சந்தைப் பொறிமுறை, திட்டமிடல் பொறி முறை, பழக்கவழக்கங்களும் சம்பிரதாயங்களும் (சந்தைப் பொருளாதாரம், கட்டளைப் பொருளாதாரம், கலப்புப் பொருளாதாரம், மரபுரீதியான பொருளாதாரம்)

பொருளாதாரத்தின் தீர்வுகள் மேற்கொள்ளப்படும் அலகுகள் மீது பாதிப்பை ஏற்படுத்தும் ஊக்குவிப்பு அமைப்பு :

தனிநபர்கள் காட்டும் துலங்கல்கள் அவர்களுக்கு வழங்கப்படும் ஊக்குவிப்புக்களில் தங்கியுள்ளன. சந்தைப்பொருளாதார முறைமையில் பிரதான ஊக்குவிப்பாக அமைவது இலாபமாகும். கட்டளைப் பொருளாதாரத்தில் ஊக்குவிப்பானது அதிகாரத்தினுடாக வழங்கப்படுகிறது. சில பொருளாதார முறைமைகளில் தாய்நாடு/ தந்தைநாடு பற்றிய உணர்வு பூர்வமாக ஈடுபாடுகள், கலாச்சார ரீதியான பிணைப்புக்கள் ஊடாக ஊக்குவிப்பு வழங்கல் நடைபெறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு பொருளாதார முறைகளில் காணப்படுகின்ற ஊக்குவிப்புக்களின் பிரதான மூன்று வடிவங்கள்

1. பொருள் ரீதியான பிரதிபலன்கள் கொண்ட ஊக்குவிப்புக்கள்
2. ஒழுக்க விழுமியம் தொடர்பான ஊக்குவிப்புக்கள் (பொது மக்களுக்கான பணியொழுங்கு)
3. அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்ட ஊக்குவிப்புக்கள்

குறிப்பு :-

* ஒழுக்க விதிகளை அடிப்படையாக கொண்ட ஊக்குவிப்புக்கள்.

  இயற்கை அனர்த்தங்கள், அரசாங்கம் வீழ்ச்சியடைதல் போன்ற நிகழ்வுகள் காரணமாகப் பொருளாதாரத்தில் அதிர்வுகள் தோன்றும் சந்தர்ப்பங்களில் ஒழுக்க விதிகளின் அடிப்படையில் ஒவ்வொருவரும் அச்சந்தர்ப்பங்களில் செய்ய வேண்டியவற்றை தீர்மானித்து அதன்படி நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். அதன் மூலம் அவர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர்.

பொருளாதார முறைகளை வகைப்படுத்துவதற்குப் பயன்படுத்தும் எல்லா நியமங்களையும் கவனத்தில் கொண்டு பொருளாதார முறைகளை வகைமீடு செய்தல்

1. சந்தை பொருளாதார முறை
2. திட்டமிடல் பொருளாதார முறை
3. கலப்புப் பொருளாதார முறை

சந்தைப் பொருளாதாரம்

சந்தையில் இயங்கும் கேள்வி நிரம்பல் சக்திகளினூடான சார்பு விலைகள் தீர்மானிக்கப்பட்டு அதனூடாக பொருளாதார அடிப்படை பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு இயங்குகின்ற பொருளாதாரமே சந்தை பொருளாதாரம் எனப்படும்.

பொருளாதார நடவடிக்கைகள் அனைத்தும் அரசினது தலையீடுகளின்றி தனியார் துறையினால் சந்தை கேள்வி, நிரம்பல் நிலைமைகளுக்கு ஏற்ப உச்ச இலாபத்தின் அடிப்படையில் இயங்குகின்ற ஒரு பொருளாதார முறைமை சந்தை முறைமை எனப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தைப் பொருளாதாரத்தின் பண்புகள்

1. ஆக்கச்சாதனங்கள் தனியாருக்கு சொந்தமாய் இருத்தல்.
2. சுதந்திரமான முயற்சி மற்றும் தொழில் சுதந்திரம்
3. உச்ச இலாப நோக்கம்
4. விலைப்பொறி மூலம் பொருளாதார அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வுகாணல்.
5. மூலதனத்திரட்சி
6. தொழில் சுதந்திரம்
7. நுகர்வோர் இறைமை வாய்ந்தவராக காணப்படுதல்
8. வருமான ஏற்றத்தாழ்வு
9. சொத்துரிமை
10. அரசின் தலையிடாக் கொள்கை
11. வெளிவாரி விளைவுகள்
12. விளம்பரம்
13. காரணிகளின் அருமைத்தன்மை, பல பயன்பாட்டுத்தன்மை, திறன் அடிப்படையில் உற்பத்தி காரணிகளின் விலை நிர்ணயிக்கப்படும்.

சந்தைப் பொருளாதாரத்தில் விலையின் மூன்று பணிகள்

1. தகவல்களையும் சமிக்ஞைகளையும் வழங்குதல்
2. ஊக்குவிப்புக்களை வழங்குதல்
3. பங்கீடு செய்தல் தொழிற்பாடு

சந்தை முறையில் காணப்படும் பண்புகளை விளக்குதல்

- **சொத்துரிமை :**

நிலம், மூலதனம் போன்ற சொத்துக்களை கொள்வனவு செய்ய, விற்பனை செய்ய, வைத்திருக்கப் பயன்படுத்த தனியாருக்கு சட்டப்படி அதிகாரம் உண்டு என்பதையே குறிக்கும்.

சட்டத்திற்கு உட்பட்ட வகையில் ஒருவர் எவ்வளவு சொத்துக்களையும் வைத்திருக்கும் உரிமையுடையவர் அதாவது சொத்துக்களுக்கு உச்ச வரம்பு எதனையும் அரசு விதிக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **தொழிற் சுதந்திரம் :**

சட்டத்திற்குட்பட்ட வகையில் ஒருவர் விரும்பிய தொழிலை செய்வதற்கும் விரும்பிய நேரத்தில் தொழிலை செய்வதற்கும் தொழில் செய்யாமல் இருப்பதற்கும் உரித்துடையவர். என்பதனையே தொழிற் சுதந்திரம் குறிப்பிடுகிறது.

- **விலை பொறி முறை :**

பொருளாதார அடிப்படை பிரச்சினைகள் யாவும் விலை பொறி முறையின் ஊடாக தீர்க்கப்பட்டு உற்பத்தி, விலை நிர்ணயம், பங்கீடு யாவும் இடம் பெறும்.

- **மூலதனத் திரட்சி :**

இலாப நோக்கம், தொழில் சுதந்திரம், சொத்துரிமை, பொருளாதாரத்தில் அரச தலையீடு இன்மை ஆகியன காணப்படுவதால் மூலதனமானது குறிப்பிட்ட ஒரு சாராரிடம் ஒதுங்குகிறது. இதனையே மூலதனத் திரட்சி என்பர்.

- **வருமான ஏற்றத்தாழ்வு :**

இலாப நோக்கம், தொழில் சுதந்திரம், சொத்துரிமை, பொருளாதாரத்தில் அரச தலையீடு இன்மை, மூலதனத் திரட்சி ஆகிய பண்புகளால் சந்தை பொருளாதாரத்தில் வருமானமானது அதிக ஏற்றத்தாழ்வான முறையிலே விலை பொறி முறையினால் பங்கிடப்படுகிறது.

- **வெளிவாரி விளைவுகள் :**

விலை பொறி முறையானது வெளிவாரி விளைவுகளை பிரதிபலிக்காது தனியார் உச்ச இலாப நோக்குடன் சொத்துக் குவிப்பில் ஈடுபடுவார் ஆகவே சமூக நலன் புறக்கணிக்கப்பட்டு தீயவெளிவாரி விளைவுகள் அதிகளவில் இடம் பெற்று சூழல் சீரழிவுகள் இடம் பெறுகின்றன.

- **சுயமான ஆர்வம்/ சுய ஊக்கம்**

பொருளாதாரத்தில் உள்ள நுகர்வோர், உற்பத்தியாளர், காரணிகளை நிரம்பல் செய்வோர் போன்ற பொருளாதார அலகுகளும் சுய ஆர்வத்துடன் தீர்மானங்களை மேற்கொள்ள முடியும்.

இச்சுய ஆர்வமே முதலாளித்துவத்தை இயக்கும் மறை சக்தியாகவும் ஆற்றலின் பிறப்பிடமாகவும் அமைகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலைப்பொறி முறை *Price Mechanism*

சந்தை சக்திகளான கேள்வியும் நிரம்பலும் போட்டியிட்டு விலையினை தீர்மானிக்கின்ற ஒட்டுமொத்த செயற்பாடு விலைபொறி முறையாகும்.

விலை பொறிமுறை தொழிற்படுவதற்கு கேள்வி, நிரம்பல் ஆகிய இரு சக்திகளும் காணப்பட வேண்டும்.



- விலைப்பொறிமுறை சந்தைக்குள் தொழிற்படும்.
- விலைப்பொறிமுறையானது இலாபத்தன்மை உள்ளவற்றில் மட்டுமே தொழிற்படும்.
- இலாபத்தன்மை உடையவற்றிற்கு மட்டுமே கேள்வி, நிரம்பல் ஆகிய இரண்டும் காணப்படும்.
- பொருளாதார அடிப்படை பிரச்சினைகள் விலை பொறி மூலம் தீர்க்கப்படுமாயின் அவை சந்தை முறைமை ஆகும்.
- விலைப்பொறிமுறையானது சில குறைபாடுகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இது பொருளாதாரத்தில் அரச தலையீட்டுக்கு ஒரு காரணமாகிறது.

ஒரு சந்தை பொருளாதாரத்திலே விலைகளின் தொழிற்பாடுகள்

(i) ஒரு பொருளாதாரமொன்றில் உற்பத்தி, நுகர்வு தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளத் தேவையான தகவல்களை அளித்தல். The Information (Signaling) Function.

நுகர்வுத் தொடர்பான தீர்மானங்கள்

1. என்ன பொருளை நுகர்வது?
2. என்ன பொருளை நுகராது விடுவது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்பத்தி தொடர்பான தீர்மானங்கள்

1. என்ன பொருளை உற்பத்தி செய்தல்?
2. எவ்வளவு பொருளை உற்பத்தி செய்தல்?
3. எவ்வாறு உற்பத்தி செய்தல்?
4. யாருக்காக உற்பத்தி செய்தல்?

(ii) தூண்டல் The Incentive Function

(iii) வள ஒதுக்கீடு The allocation Function

குறிப்பு :-

* பொருட் சந்தையிலும் காரணிச் சந்தையிலும் நுகர்வோருக்கும் உற்பத்தியினருக்கும் சமிக்ஞைகளை அளிப்பதன் மூலம் விலைப்பொறி முறை இத்தொழிற்பாட்டை நிறைவேற்றுகிறது.

சந்தைப் பொருளாதாரத்தில் பொருளாதார அடிப்படைப் பிரச்சினைகளுக்கான தீர்வுகள்

சந்தை பொருளாதாரத்தில் ஆக்கம் சாதனங்கள் தனியார் உடமையாகும். இங்கு இலாபநோக்க அடிப்படையில், விலைப் பொறிமுறையினால் பொருளாதார அடிப்படை பிரச்சினைகள் தீர்க்கப்படும். சுதந்திரம் முயற்சியும் மற்றும் தெரிவுச் சுதந்திரமும் இங்கு காணப்படும்.

என்ன பொருளை உற்பத்தி செய்தல்?

எவ்வளவு பொருளை உற்பத்தி செய்தல்?

எவ்வாறு உற்பத்தி செய்தல்?

யாருக்காக உற்பத்தி செய்தல்?

ஆகிய அடிப்படை பொருளாதார பிரச்சனைகளை தீர்ப்பதன் மூலம் விலைப்பொறிமுறை சந்தை பொருளாதாரத்தில் வளப்பங்கீட்டை தீர்மானிக்கிறது.

பொருட் சந்தையிலும் காரணி சந்தையிலும் நுகர்வோருக்கும் உற்பத்தியாளருக்கும் சமிக்கை அளிப்பதன் மூலம் விலைப்பொறி முறை இப்பணியை நிறைவேற்றுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தை பொருளாதாரத்தில் சார்பு விலைகள் 3 பிரதான தொழிற்பாடுகளை செய்வதன் ஊடாக வள ஒதுக்கீட்டை மேற் கொள்கிறது.

1. தகவல் வழங்கும் தொழிற்பாடு (Information function)
2. ஊக்குவிப்பு வழங்கும் தொழிற்பாடு (Incontive function)
3. பங்கீடு செய்யும் தொழிற்பாடு (Rationing function)

1. என்ன பொருளை உற்பத்தி செய்தல்?

- **வரைவிலக்கணம் :**

  ஒரு சமூகம் தனக்கு கிடைகின்ற பற்றாக்குறையுடையதும் மாற்றுபயோகத்தன்மையுடையதுமான வளங்களின் பெரும் பகுதியை எந்த உற்பத்திக்கு ஒதுக்கீடு செய்வது என்ற பிரச்சினை இதுவாகும்.

- **தீர்வு :**

  எப்பொருளின் விலையுயர்வாக காணப்படுகின்றதோ அப்பொருளின் உற்பத்திக்கு வளங்களின் பெரும் பகுதி விலைப்பொறிமுறையால் ஒதுக்கீடு செய்யப்படும். (இலாபச் சார்பின் அடிப்படையில்)

- **காரணம் :**

  எப்பொருளின் விலையுயர்வாக காணப்படுகின்றதோ அப்பொருளில் இருந்து கிடைக்கும் இலாப அளவும் உயர்வாக காணப்படும் என்பதாலாகும். (உற்பத்திச் செலவு மாறவில்லை)

2. எவ்வளவு பொருளை உற்பத்தி செய்தல்?

- **வரைவிலக்கணம் :**

  குறித்த பொருளாதாரம் உற்பத்தி செய்கின்ற பொருட்கள் சேவைகள் எந்த அளவில் உற்பத்தி செய்வது? என்ற பிரச்சினை இதுவாகும் இது உற்பத்தி மட்ட தீர்மான பிரச்சினை.

- **தீர்வு :**

  விலை வீழ்ச்சி உண்டு பண்ணாத ஓர் அளவு உற்பத்தி, விலைப் பொறி முறையால் இடம் பெறும். (இலாபச் சார்பை பாதிக்காத ஓர் உற்பத்தி மட்டம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• **காரணம் :**

விலை வீழ்ச்சி அடையுமாயின் இலாபமளவு வீழ்ச்சியடையும் என்பதாலாகும்.

3. எவ்வாறு உற்பத்தி செய்தல்?

• **வரைவிலக்கணம் :**

பொருட்கள் சேவைகளின் உற்பத்திக்கு எந்த தொழில்நுட்ப முறையினை தெரிவு செய்வது கையாள்வது என்ற பிரச்சினை இதுவாகும். இது ஒரு கையாள் தொழில் நுட்ப தெரிவுப் பிரச்சினையாகும்.

• **தீர்வு :**

எத்தொழில்நுட்ப முறை மலிவானதாக காணப்படுகின்றதோ அத்தொழில் நுட்ப முறையை விலைப்பொறி முறையால் தெரிவு செய்யப்பட்டு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும். (காரணிச் சார்பு விலைகளின் அடிப்படையில்)

• **காரணம் :**

உற்பத்தி செலவை குறைத்து இலாபத்தை உச்சப்படுத்தல்.

4. யாருக்காக உற்பத்தி செய்தல்?

• **வரைவிலக்கணம் :**

முடிவுப் பொருட்கள் சேவைகளை பொருளாதாரத்தில் உள்ள பல்வேறு பொருளாதார வர்க்கங்களுக்கிடையே எவ்வாறு பங்கீடு செய்வது என்ற பிரச்சினை இதுவாகும்.

இது ஒரு வருமானப் பங்கீட்டுடன் தொடர்பான/ ஒரு முடிவுப் பொருள் பங்கீட்டுப் பிரச்சினையாகும்.

• **தீர்வு :**

உயர்வர்க்கத்தவர் உயர்வளவிலான விலைகளை முடிவுப் பொருட்கள் சேவைகளுக்கு கொடுக்க முன்வருவர் ஆகவே அவர்களுக்கு உயர்ந்த அளவிலான முடிவுப் பொருட்கள் சேவைகளும்

நடுத்தர வர்க்கத்தவர் நடுத்தர அளவிலான விலைகளை முடிவுப் பொருட்கள் சேவைகளுக்கு கொடுக்க முன்வருவர் ஆகவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்கு நடுத்தர அளவிலான முடிவுப் பொருட்கள் சேவைகளும் கீழ்வர்க்கம் மிகக் குறைந்த விலைகளையே முடிவுப் பொருட்கள் சேவைகளுக்கு கொடுக்க முன்வருவர் ஆகவே அவர்களுக்கு மிகக் குறைந்தளவிலான முடிவுப் பொருட்கள் சேவைகளும் விலைப் பொறிமுறையால் ஒதுக்கீடு செய்யப்படும். (வருமானச் சார்பின் அடிப்படையில்)

சந்தை பொருளாதாரத்தில் பலமான அம்சங்கள்/ அனுகூலங்கள்

1. உச்ச இலாப நோக்கில் சாதனங்கள் திறமையாக பயன்படுத்தப் படும்.
2. உற்பத்தி அதிகரிப்பு வேகம் மிக உயர்வாக காணப்படுதல்.
3. நுகர்வோர் இறைமை காணப்படும்.
4. துரித பொருளாதார வளர்ச்சி
5. புதிய கண்டுபிடிப்புக்கள் ஊக்குவிக்கப்படுதல்.

சந்தைப்பொருளாதாரத்தின் பலவீனங்கள்/ பிரதிகூலங்கள்

1. பொதுப்பண்டங்கள் உற்பத்திக்கு வள ஒதுக்கீடு இடம் பெற மாட்டாது அல்லது குறைந்தளவு இடம்பெறும்.
2. மேன்மைப்பண்டங்களின் உற்பத்திக்கு குறைந்தளவு (செயற்திறனற்ற) வள ஒதுக்கீடு
3. கெடுதிப்பண்டங்களுக்கு மிகையான (செயற்திறனற்ற) வள ஒதுக்கீடு
4. வெளிவாரி விளைவுகள் கவனத்தில் கொள்ளப்படாது.
5. வருமான ஏற்றத்தாழ்வுகள் ஏற்படும்.
6. நுகர்வோர் சுரண்டலுக்கு ஆளாகலாம். (விலை, எல்லை செலவை விட உயர்வாக இருக்கும் போது)
7. பேரினப் பொருளாதார சமமின்மை ஏற்படும்.
8. விளம்பரங்களின் மூலம் நுகர்வோர் தெரிவுகளில் மாற்றமேற்படும்.
9. பொது வளங்களின் பயன்பாடு செயற்திறன் அற்றதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுப்பாடற்ற சந்தை பொருளாதாரத்தில் அரசு தலையீட்டுக்கான நியாயங்கள்

1. சொத்து தொடர்பான நடவடிக்கைகளை அமுல்படுத்துவதற்கு
2. பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்தல்.
3. பேரின பொருளாதார உறுதிப்பாட்டை ஏற்படுத்தல்.
4. நிலைத்து நிற்கக் கூடிய அபிவிருத்தியை ஏற்படுத்துதல். (Sustainable Development)
5. பொது பொருட்களை உற்பத்தி செய்ய.
6. நலன் தரு பண்டங்களின் உற்பத்தியை குறைநிரப்பு செய்ய.
7. தீங்கு தரு பண்டங்களின் உற்பத்தியை கட்டுப்படுத்த
8. வெளிவாரி விளைவுகளை ஒழுங்குபடுத்த.
9. தனியாரை ஊக்குவிக்க.
10. சிற்றினப் பொருளாதார மாறிகளில் சமநிலை ஏற்படுத்த.
11. உற்பத்தி செலவை குறைக்க.
12. உற்பத்தி வேகத்தை அதிகரிக்க.
13. தனியாரால் மேற்கொள்ள முடியாத பாரிய முதலீடுகளை மேற்கொள்ள.
14. வேலைவாய்ப்புக்களை அதிகரிக்க.
15. வருமான ஏற்றத்தாழ்வைக் குறைக்க.
16. பணவீக்கத்தை கட்டுபடுத்த.
17. பொருளாதார உறுதியை ஏற்படுத்த.
18. அரசியல் உறுதியை ஏற்படுத்த.
19. நிலைத்து நிற்கும் அபிவிருத்தியை ஏற்படுத்த.
20. வளப்பயன்பாட்டை செயற்றிறன் உடையதாக்க.
21. பேரினப் பொருளாதார உறுதியை ஏற்படுத்த.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. இறைக்கொள்கை
2. பணக்கொள்கை
3. நாணயமாற்றுவீத கொள்கை
4. நேரடித் தலையீடு
5. ஏனைய தலையீடுகள் (விவசாய கொள்கை, கைத்தொழில் கொள்கை)

Q. விலைப்பொறி முறையின் மறைவுகரத் தொழிற்பாட்டை விளக்குக.

விலைப்பொறி முறையின் செயன்முறையினையே அடம் ஸ்மித் மறைகர தொழிற்பாடு என வர்ணித்தார்.

விலைப்பொறி முறை என்பது சந்தையில் கேள்வியும் நிரம்பலும் போட்டியிட்டு விலையை தீர்மானிக்கின்ற ஒட்டு மொத்த செயற்பாடே ஆகும்.

விலைப்பொறி முறையானது நுகர்வோர் நடத்தையையும் உற்பத்தியாளர் நடத்தையை ஒழுங்குபடுத்துவதையே விலைப் பொறி முறையின் மறைவுகரத்தொழிற்பாடு என அடம் ஸ்மித் குறிப்பிட்டார்.

உற்பத்தியாளன் நடத்தை என்பது

(i) என்ன பொருளை உற்பத்தி செய்வது?
(ii) எவ்வளவு பொருளை உற்பத்தி செய்வது?
(iii) எங்கே உற்பத்தி செய்வது?
(iv) எவ்வாறு உற்பத்தி செய்வது?
(v) யாருக்காக உற்பத்தி செய்வது? என்பதாகும்.

நுகர்வோன் நடத்தை

(i) என்ன பொருளை நுகர்வது?
(ii) என்ன பொருளை நுகராது விடுவது? என்பதாகும்.

விலை அதிகரிப்பானது உற்பத்தியாளர்களுக்கு உற்பத்திக்கான ஒரு தூண்டலாக (அழைப்பாக அல்லது ஊக்குவிப்பாக) அமைய மறுபுறம் நுகர்வோருக்கு நுகர்வுக்கான தடையாக அமைகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலை வீழ்ச்சியானது உற்பத்தியாளருக்கு உற்பத்திக்கான ஒரு தடையாக அமைய மறுபுறம் நுகர்வோருக்கு நுகர்வுக்கான அழைப்பாக அமைகிறது.

இதனையே மறைவுகர (கட்புலனாகாகரம்) தொழிற்பாடு என அடம்ஸ்மித் சொல்கிறார்.

விலைப்பொறி முறையானது சந்தை பொருளாதாரத்தில் அனைத்து பொருளாதார நடவடிக்கைகளுக்கும் மறைமுக உதவி கருவியாக தொழிற்படுகிறது. இதனையே மறைகரத் தொழிற்பாடு என்பர்.

பின்வருவன விலையின் தொழிற்பாடுகளாகும்

(I) உற்பத்தியாளருக்கும் நுகர்வோருக்கும் தேவையான தகவல்களை வழங்கல். - The Information (Signaling) Function

(ii) தூண்டல் - Thed Incentive Function

(iii) வள ஒதுக்கீடு - The allocation Function

உற்பத்தி, நுகர்வு பங்கீடு அனைத்தும் விலைகொண்ட நிர்ணயிக் கப்படுகிறது. பொருளாதார அடிப்படை பிரச்சினைகள் யாவும் விலைப்பொறி முறை மூலம் தீர்க்கப்படுகிறது.

வாடகை, கூலி, வட்டி, இலாபம் இவையெல்லாம் விலையாகும்

விலைப்பொறிமுறையானது தன்னிச்சையாகவே அனைத்து பொருளாதார நடவடிக்கைகளையும் தீர்த்துவிடுவதாக அடம்ஸ்மித் குறிப்பிட்டார்.

விலையே அனைத்து நடவடிக்கைகளுக்கும் சந்தை பொருளா தாரத்தில் வழிகாட்டியாக அமைகின்றது.

$$\text{முதலீட்டு வீதம்} = \frac{\text{மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம்}}{\text{மொத்த உள்நாட்ட உற்பத்தி}} \times 100$$

$$\text{முதலீட்டு வெளியீட்டு விகிதம்} = \frac{\text{வெளியீடு}}{\text{முதலீடு}}$$

$$\text{உள்நாட்டு சேமிப்பு வீதம்} = \frac{\text{உள்நாட்டு சேமிப்பு}}{\text{மொத்த உள்நாட்டு உற்பத்தி}} \times 100$$

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Q. சந்தை பொருளாதாரத்தில் நுகர்வோன் இறைமை பற்றி விபரிக்க.

பொருளாதார அடிப்படை பிரச்சினைகள் யாவும் சந்தையினூடாக இயங்குகின்ற சக்திகள் மூலம் தீர்க்கப்பட்டு இயங்குகின்ற பொருளாதாரமே சந்தை பொருளாதாரமாகும்.

சந்தை பொருளாதாரத்தில் உற்பத்தியாளனின் நோக்கம் உச்ச இலாபமாகும்.

உற்பத்தியாளர் தமது நோக்கத்தை அடைய வேண்டுமாயின் நுகர்வோன் தேவைகள், விருப்பங்கள், அபிலாஷைகள் ஆகியவற்றை கருத்தில் கொள்ள வேண்டும்.

உற்பத்தி நடவடிக்கைகள் யாவும் நுகர்வோனை மையமாக வைத்தே மேற்கொள்ளப்படும்.

ஆகவே சந்தை பொருளாதாரத்தில் நுகர்வோன் பிரதான இடம் வகிக்கின்றான். என்பதனாலேயே சந்தை பொருளாதாரத்தில் நுகர்வோன் இறைமை படைத்தவனாக கருதப்பட்ட போதும் பின்வரும் நிலைமைகள் நுகர்வோன் இறைமையை பாதிக்கின்றன.

- சந்தை பொருளாதாரத்தில் விலைளை உற்பத்தியாளனும் நுகர்வோனும் சேர்ந்தே தீர்மானிக்கிறார்கள். ஆகவே விலை நிர்ணயத்தில் நுகர்வோனை செல்வாக்கு மிக்கவனாக கருத முடியாது.
- நுகர்வோன் மட்டுமல்ல உற்பத்தியாளனும் பிரதான இடத்தை வகிக்கின்றான்.
- தனியுரிமை நிலை காணப்படுதல்.
- நிறுவன இணைப்புக்கள் காணப்படுதல்.
- சிலருரிமை நிலை காணப்படுதல்.
- நுகர்வோர் இறைமை நிறைபோட்டி சந்தை அமைப்பிலேயே சாத்தியம். ஆனால் நடைமுறை உலகில் நிறை போட்டி சந்தை அமைப்பை காணமுடியாமை.
- விளம்பரங்களும் விற்பனை மேம்பாடுகளும் இடம் பெறல்.

ஆகவே சந்தைப்பொருளாதாரத்தில் நுகர்வோன் இறைமை படைத்தவன் என்பது அரைகுறை உண்மையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Q. சந்தைப்பொருளாதாரத்தில் நுகர்வோர் பேரரசன் எனக் கூறப்படுவதேன்?

பொருளாதார அடிப்படை பிரச்சினைகள் யாவும் சந்தையினூடாக இயங்குகின்ற சந்தை சக்திகள் மூலம் தீர்க்கப்பட்டு இயங்குகின்ற பொருளாதாரமே சந்தைப்பொருளாதாரமாகும்.

சந்தைப்பொருளாதாரத்தில் உற்பத்தியாளனின் நோக்கம் உச்ச இலாபமாகும்.

உற்பத்தியாளர் தமது நோக்கத்தை அடைய வேண்டுமாயின் நுகர்வோன் தேவைகள், விருப்பங்கள், அபிலாஷைகள் ஆகியவற்றை கருத்தில் கொள்ள வேண்டும்.

உற்பத்தி நடவடிக்கைகள் யாவும் நுகர்வோனை மையமாக வைத்தே மேற்கொள்ளப்படும்.

ஆகவே சந்தைப்பொருளாதாரத்தில் நுகர்வோன் பிரதான இடம் வகிக்கின்றான். என்பதனாலேயே சந்தைப்பொருளாதாரத்தில் நுகர்வோன் பேரரசனாக கருதப்பட்ட போதும் பின்வரும் நிலைமைகள் இதனை பாதிக்கின்றன.

- சந்தைப்பொருளாதாரத்தில் விலையை உற்பத்தியாளனும் நுகர்வோனும் சேர்ந்தே தீர்மானிக்கிறார்கள். ஆகவே விலை நிர்ணயத்தில் நுகர்வோனை செல்வாக்கு மிக்கவனாக கருத முடியாது.
- நுகர்வோன் மட்டுமல்ல உற்பத்தியாளனும் பிரதான இடத்தை வகிக்கின்றான்.
- தனியுரிமை நிலை காணப்படுதல்.
- நிறுவன இணைப்புக்கள் காணப்படுதல்.
- சிலருரிமை நிலை காணப்படுதல்.
- நுகர்வோர் இறைமை நிறைபோட்டி சந்தை அமைப்பிலேயே சாத்தியம். ஆனால் நடைமுறை உலகில் நிறை போட்டி சந்தை அமைப்பை காணமுடியாமை.
- விளம்பரங்களும் விற்பனை மேம்பாடுகளும் இடம் பெறல்.

ஆகவே சந்தைப்பொருளாதாரத்தில் நுகர்வோன் பேரரசன் என்பது அரைகுறை உண்மையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Q. 'வெளிவாரி விளைவுகள் காணப்படும் போது சந்தை முறைமை தோல்வியடைகின்றது' விளக்குக.

வெளவாரி விளைவுகள்.

வெளவாரி விளைவுகள் என்பவை உற்பத்தியிலும் நுகர்விலும் தொடர்புபடாத 3ம் நபர் அல்லது சமூகம் அடைகின்ற நன்மைகள், தீமைகள் என்பன ஆகும்.

கட்டணம் ஏதும் செலுத்தாது 3ம் நபர் வெளிவாரி விளைவுகளுக்கு உட்படுகிறார்.

தனிப்பட்ட செலவுக்கும் சமூக செலவுக்கும் இடையிலான வித்தியாசம் வெளிவாரி விளைவுகளாகும்.

தனிப்பட்ட செலவு.

உற்பத்தியுடனும் நுகர்வுடனும் தொடர்புடையவர்களுக்கு ஏற்படுகின்ற செலவுகள் தனிப்பட்ட செலவாகும்.

சமூகச் செலவு.

உற்பத்தியுடனும் நுகர்வுடனும் தொடர்புடையவர்களுக்கு ஏற்படுகின்ற செலவுகளுடன் அதனால் ஏற்படும் வெளிவாரி விளைவுகளையும் சேர்க்க வருவது சமூக செலவாகும்.

விலைப்பொறிமுறை.

தனிப்பட்ட செலவுகளை விலைப்பொறிமுறையானது பிரதிபலிக்கும், தனிப்பட்ட செலவுகள் ஏடுகளில் பதியக்கூடியவை.

விலைப்பொறிமுறை வெளிவாரி விளைவுகளை பிரதிபலிக்காது. ஆகவே சமூகச் செலவை விலைப்பொறிமுறை காட்டாது.

விலைப்பொறிமுறையானது வெளிவாரி விளைவுகளை பிரதி பலிக்காமைக்கான காரணங்கள்.

- விலைப்பொறிமுறை சந்தைக்குள் தொழிற்படும் ஆனால் வெளிவாரி விளைவுகள் சந்தைக்கு வெளியே இடம்பெறும்.
- தனியார் உச்ச இலாப நோக்கில் செயற்படுவர்.
- தனிப்பட்ட செலவுகள், தனிப்பட்ட நன்மைகள் அடிப்படையில் தீர்மானம் எடுக்கப்படும்.
- வெளிவாரி விளைவுகளை கட்டணம் செலுத்தாது நுகர வேண்டியிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலைப்பொறிமுறையால் இடம்பெறும் வளஒதுக்கீட்டு மட்டம்.

தனிப்பட்ட செலவுகள், தனிப்பட்ட நன்மைகள் அடிப்படையிலேயே விலைப்பொறிமுறையின் வள ஒதுக்கீட்டு மட்டம் அமையும்.

சமூகத்திறன் வாய்ந்த வளஒதுக்கீட்டு மட்டம்.

உற்பத்தியிலும் நுகர்விலும் தொடர்புடையவர்களுக்கு ஏற்படுகின்ற செலவுகளுடன் அதனால் ஏற்படுகின்ற வெளிவாரி விளைவுகளையும் கவனத்தில் கொள்ளும் போது இடம்பெறுகின்ற வள ஒதுக்கீட்டு மட்டமே சமூகத்திறன் வாய்ந்த வள ஒதுக்கீட்டு மட்டமாகும்.

விளைவுகள்.

- விலைப்பொறிமுறையானது வெளிவாரி விளைவுகளை பிரதிபலிக்க மாட்டாது.
- ஆகவே வெளிவாரி விளைவுகள் காணப்படும் போது விலைப் பொறிமுறையினால் இடம்பெறுகின்ற வள ஒதுக்கீடானது சமூகத் திறன் வாய்ந்த வள ஒதுக்கீட்டு மட்டமாக அமையாது.
- அதாவது சமூகத்திறன் வாய்ந்த வள ஒதுக்கீட்டு மட்டத்தை விட உயர்வாக அல்லது சமூகத்திறன் வாய்ந்த மட்டத்தை விட குறைவாக அமையும்.
- தீய வெளிவாரி விளைவுகள் காணப்படும் போது விலைப்பொறி முறையால் இடம்பெறுகின்ற வள ஒதுக்கீட்டு மட்டமானது சமூகத் திறன் வாய்ந்த வள ஒதுக்கீட்டு மட்டத்தை விட உயர்வாக இருக்கும்.
- நேர்க்கணிய வெளிவாரி விளைவுகள் காணப்படும் போது விலைபொறிமுறையால் இடம்பெறுகின்ற வள ஒதுக்கீட்டு மட்டமானது சமூகத்தின் வாய்ந்த வள ஒதுக்கீட்டு மட்டத்தை விட குறைவாக இருக்கும்.
- இது திறனற்ற வள ஒதுக்கீடு ஆகும்.
- வெளிவாரி விளைவுகள் காணப்படும் போது விலைப்பொறி முறையினால் இடம்பெறுகின்ற வள ஒதுக்கீடானது திறனற்றதாக அமையும்.
- இதனால் சந்தைத் தோல்வி ஏற்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Q. "தனிப்பட்ட செலவைவிட சமூகச் செலவு உயர்வாக காணப்படும் போது கட்டில்லாச் சந்தைப் பொருளாதாரம் தோல்வியடைகின்றது" இதனை வரிப்படம் ஒன்றின் உதவியுடன் **விளக்குக.**

தனிப்பட்ட செலவைவிட சமூகச் செலவு உயர்வாக காணப்படுமாயின் அது எதிர்க்கணிய வெளிவாரி விளைவுகளை குறிக்கும்.

எதிர்கணிய வெளிவாரி விளைவு

- உற்பத்தியுடனும் நுகர்வுடனும் தொடர்புபடாத 3ம் நபர் அல்லது சமூகம் அனுபவிக்கும் தீய விளைவுகள் எதிர்க்கணிய வெளிவாரி விளைவுகளாகும்.
- தனிப்பட்ட செலவைவிட சமூகச் செலவு உயர்வாக காணப்படுமாயின் அவ்விரு செலவுகளுக்கும் இடையிலான வித்தியாசம் எதிர்க்கணிய வெளிவாரி விளைவாகும்.



விலைப்பொறி முறையால் இடம் பெறும் வள ஒதுக்கீட்டு மட்டம்
தனிப்பட்ட செலவுகள், தனிப்பட்ட நன்மைகள் அடிப்படையிலே விலைப்பொறிமுறையின் வள ஒதுக்கீட்டு மட்டம் அமையும். விலைப்பொறிமுறையின் வள ஒதுக்கீட்டு மட்டமானது தனிப்பட்ட செலவுகளை தனிப்பட்ட நன்மைகளை மாத்திரமே உள்ளடக்கியது.

விலைப்பொறி முறையால் இடம் பெறும் வள ஒதுக்கீட்டு மட்டமானது வெளிவாரி விளைவுகளை உள்ளடக்கி இருக்க மாட்டாது, **ஏனெனில்**

1. விலைப்பொறி முறையானது சந்தைக்குள் தொழிற்படும் ஆனால் வெளிவாரி விளைவுகள் சந்தைக்கு வெளியே தொழிற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. தனியார் உச்ச இலாப நோக்கில் செயற்படுவர்.
3. தனிப்பட்ட செலவுகள், தனிப்பட்ட நன்மைகள் அடிப்படையில் தீர்மானம் எடுக்கப்படும்.
4. வெளிவாரி விளைவுகளை கட்டணம் செலுத்தாது நுகர வேண்டியிருக்கும்.

எதிர்க்கணிய வெளிவாரி விளைவுகள் கவனத்தில் கொள்ளப்படுமாயின் நிரம்பல் குறைவடையும். அதன்படி படத்திலுள்ளவாறு SS என்ற நிரம்பல் கோடானது S_1 , S_2 ஆக மேல் நோக்கி நகர்ந்துள்ளது. இங்கு இடம் பெறுகின்ற வள ஒதுக்கீட்டு மட்டமானது சமூகத் திறன் வாய்ந்த வள ஒதுக்கீட்டு மட்டமாக அமையும்.

சமூகத் திறன் வாய்ந்த வள ஒதுக்கீட்டு மட்டம்

உற்பத்தியுடனும் நுகர்வுடனும் தொடர்புடையவர்களுக்கு ஏற்படுகின்ற செலவுடன் அதனால் ஏற்படுகின்ற வெளிவாரி விளைவுகளையும் கவனத்தில் கொள்ளும் போது இடம் பெறுகின்ற வள ஒதுக்கீட்டு மட்டம் இதுவாகும்.

இங்கு தனிப்பட்ட செலவுக்கு மேலதிகமாக அதனுடன் தொடர்புடைய வெளிவாரி விளைவுகளும் கவனத்தில் கொள்ளப் பட்டிருக்கும்.

ஒப்பீடு

- எதிர்க்கணிய வெளிவாரி விளைவுகள் காணப்படும் போது

Q_5	>	Q_3

விலைப்பொறிமுறையினால் இடம்பெறும் வள ஒதுக்கீட்டு மட்டம்	>	சமூகத்திறன்வாய்ந்த வளஒதுக்கீட்டு மட்டம்

E	>	E_1

- எதிர்க்கணிய வெளிவாரி விளைவுகள் காணப்படும் போது விலைப்பொறிமுறையினால் இடம்பெறும் வள ஒதுக்கீட்டு மட்டமானது சமூகத்திறன் வாய்ந்த வள ஒதுக்கீட்டு மட்டத்தை விட உயர்வாக காணப்படும்.
- இது திறனற்ற வள ஒதுக்கீடாகும்.
- இதனால் சந்தை தோல்வி ஏற்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டளை பொருளாதாரமுறை

மத்திய திட்டமிடல் குழு மூலம் எடுக்கப்படும் கட்டளைக்களுள் மூலம் பொருளாதார அடிப்படை பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு இயங்குகின்ற பொருளாதாரமே.

ஆக்கச் சாதனங்கள் (உழைப்பு தவிர்ந்த) அனைத்தும் அரசுக் குரியதும் சமூகநலன், சமூக நீதி நோக்குடன் செயல்பட்டு மத்திய திட்டமிடல் குழுவினால் அடிப்படை பொருளாதார பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டு உற்பத்தி, விலை நிர்ணயம், பங்கீடு மத்திய திட்டமிடல் குழுவினால் மேற்கொள்ளபடுகின்ற பொருளாதார முறைமை ஆகும்.

மத்திய திட்டமிடல் பொருளாதார முறைமையின் பண்புகள்

1. ஆக்கசாதனங்கள் அரசுக்கு சொந்தமாய் இருத்தல் (உழைப்பு தவிர்ந்த)
2. மத்திய திட்டமிடல் குழுவால் பொருளாதார அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படும்.
3. சேவை நோக்கமாக தொழிற்படல்.
4. உற்பத்தி, விலைநிர்ணயம், பங்கீடு மத்தியதிட்டமிடல் குழுவால் மேற்கொள்ளப்படல்.
5. கட்டாயத் தொழில் வாய்ப்பு
6. வர்க்க வேறுபாடு இல்லை.
7. சமூக நலன் அடிப்படையில் செயற்படுதல்.
8. பொது நலன் நோக்குடன் செயற்படுதல்.

மத்திய திட்டமிடல் அதிகாரக்குழு

பொருளாதார அடிப்படை பிரச்சினைகளை தீர்த்து, பொருளா தாரத்தை சிறப்பாக நடத்தி செல்வதற்காக அரசினால் நியமிக்கப்பட்ட குழுவே மத்திய திட்டமிடல் குழுவாகும்.

இதனை பணி குழு, செயற் குழு எனவும் அழைப்பர்.

பணிகுழுவின் மூலம் பொருளாதார பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு இயங்குகின்ற பொருளாதாரங்கள் திட்டமிட்ட பொருளாதாரங்கள் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமவுடமைப் பொருளாதாரமானது திட்டமிட்ட பொருளாதாரம், வழி நடத்தப்பட்ட பொருளாதாரம், சோசலிஷ பொருளாதாரம், மார்ஸிஸ பொருளாதாரம், சமதர்ம பொருளாதாரம், கட்டளைப் பொருளாதாரம் எனவும் அழைக்கப்படுகின்றது.

இன்று உலகில் அதிகளவு சமவுடமை நாடுகள் சந்தை முறைமையை நோக்கி நகர்கின்றன. இவை மாறுநிலை பொருளாதாரங்கள் என அழைக்கப்படுகின்றன.

இங்கு மேற்கொள்ளப்படும் சீர்த்திருத்தக் கொள்கையானது சந்தை நட்புறவு கொள்கை எனப்படுகிறது.

பொருளாதார அடிப்படைப் பிரச்சினைகளுக்கு மத்திய திட்டமிடல் குழு மூலமான தீர்வுகள்

1. என்ன பொருளை உற்பத்தி செய்தல்?

- **வரைவிலக்கணம் :**
  ஒரு சமூகம் தனக்கு கிடைகின்ற பற்றாக்குறையுடையதும் மாற்றுப யோகத்தன்மையுடையதுமான வளங்களின் பெரும் பகுதியை எந்த உற்பத்திக்கு ஒதுக்கீடு செய்வது என்ற வளப்பங்கீட்டுப் பிரச்சினை இதுவாகும்.

- **தீர்வு :**
  குறித்த நாட்டில் குறித்த காலப்பகுதிக்கு எந்த உற்பத்தி அதிகளவு தேவையென மத்திய திட்டமிடல் குழு கருதுகின்றதோ அந்த உற்பத்திக்கு வளங்களின் பெரும்பகுதி ஒதுக்கீடு செய்யப்படும்.

2. எவ்வளவு பொருளை உற்பத்தி செய்தல்?

- **வரைவிலக்கணம் :**
  குறித்த பொருளாதாரம் உற்பத்தி செய்கின்ற பொருட்கள் சேவைகள் எந்த அளவில் உற்பத்தி செய்வது? என்ற பிரச்சினை இதுவாகும் இது உற்பத்தி மட்ட தீர்மான பிரச்சினை இதுவாகும்.

- **தீர்வு :**
  குறித்த நாட்டில் குறித்த காலப்பகுதிக்கு எந்த உற்பத்தி அவசியம் என மத்திய திட்டமிடல் குழு கருதுகின்றதோ அந்தளவு உற்பத்தி இடம்பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. எவ்வாறு உற்பத்தி செய்தல்?

- **வரைவிலக்கணம் :**

பொருட்கள் சேவைகளின் உற்பத்திக்கு எந்த தொழில்நுட்ப முறையினை தெரிவு செய்வது கையாள்வது என்ற பிரச்சினை இதுவாகும். இது ஒரு கையாள் தொழில் நுட்ப பிரச்சினையாகும்.

- **தீர்வு :**

குறித்த நாட்டில் குறித்த காலப்பகுதிக்கு எந்த தொழிநுட்ப முறை நாட்டுக்கு பொருத்தமானது (நாட்டுடை தொழில் நுட்பம்) என மத்திய திட்டமிடல் குழு கருதுகின்றதோ அந்த தொழில் நுட்ப முறை தெரிவு செய்யப்பட்டு உற்பத்தி மேற்கொள்ளப்படும்.

4. யாருக்காக உற்பத்தி செய்தல்?

- **வரைவிலக்கணம் :**

முடிவுப் பொருட்கள் சேவைகளை பொருளாதாரத்தில் உள்ள பல்வேறு பொருளாதார வர்க்கங்களுக்கிடையே எவ்வாறு பங்கீடு செய்வது என்ற பிரச்சினை இதுவாகும்.

இது ஒரு வருமானப் பங்கீட்டுடன் தொடர்பான பிரச்சினையாகும்.

- **தீர்வு :**

குறித்த நாட்டில் குறித்த காலப்பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட முடிவுப் பொருட்கள் சேவைகளை மத்திய திட்டமிடல் குழு சமூகத்தில் உள்ள அனைவருக்கும் சமனாக பங்கிடமுறப்படும்.

மத்திய திட்டமிடல் குழுவானது

1. காரணிகளின் பங்கீடு 2. காரணிகளின் விலைநிர்ணயம்

என்பவற்றை மேற்கொள்வது மூலம் வருமான சமத்துவத்தை உண்டாக்கி வருமானப் பங்கீடு, வெளியீட்டுப் பங்கீட்டு என்பன சிறப்பாக அமைய வழிகோல்கிறது.

கட்டளை பொருளாதாரத்தின் பலமான அம்சங்கள்

1. சொத்துக்கள் அரசினது உடமையாகக் காணப்படல்.
2. கட்டாயத் தொழில் வாய்ப்பு
3. சமூக நீதி
4. நியாயமான விலை நிர்ணயம்
5. பொருளாதார வர்க்க வேறுபாடு இல்லை
6. வளங்களின் திறமையான பயன்பாடு
7. திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டளை பொருளாதாரத்தின் பிரதிகூலங்கள் குறைபாடுகள்

1. மத்திய திட்டமிடல் குழுவின் சிறு பிழை கூட பொருளாதாரத்தை பாரிய அளவில் பாதித்தல்.
2. மத்திய திட்டமிடல் குழுவின் திறமையற்ற முகாமை.
3. திறமையற்ற வளப்பங்கீடு.
4. நுகர்வோன் இறைமையின்மை.
5. மத்திய திட்டமிடல் குழுவிற்கு போட்டியின்மை.
6. அளவுக்கதிகமான அரசு தலையீடு.
7. வழக்கொழிந்த தொழில் நுட்பங்கள் பயன்படுத்தப்படுதல்.
8. உற்பத்திக்கான உள்ளார்ந்த ஊக்குவிப்புக்களின்மை.
9. சந்தை தகவல் சரியாக கணக்கெடுக்கப்படாமை.

திட்டமிட்ட பொருளாதாரத்தில் திட்டமிட்ட இலாபங்களின் பயன்கள் அல்லது நோக்கங்கள்

- பொருளாதார செயற்பாட்டை அதிக ஏற்றமின்றி முன் நகர்த்தல்.
- சேமிப்பை உருவாக்க.
- எதிர்பாராத பொருளாதார நட்டங்களை ஈடுசெய்ய.
- முதலீடுகளை மேற்கொள்ள.
- வளங்களின் திறமையான பயன்பாட்டுக்கு வழிவகுக்க.
- வேறு பொருளாதார நலன்களுக்காக

அரசாங்க தோல்வி

- மத்திய திட்டமிடல் குழுவில் உள்ள குறைபாடுகள் காரணமாகவும் வேறு அழுத்தங்களாலும் மத்தியதிட்டமிடல் குழுவினால் வழிநடத்தப்படுகின்ற பொருளாதாரம் தோல்வியடையுமாயின் அது அரசாங்கத் தோல்வி ஆகும்.
- அரசு தனது பொருளாதார இலக்குகளை வெற்றிகரமாக அடைய முடியாத நிலையைக் குறிக்கும்.
- இதன் போது பணவீக்கம், வேலையின்மை, உற்பத்தி பெருக்கம் போதாமை, நாணயத்தின் வெளிப்பெறுமதித் தேய்வு என்பன இடம்பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மத்திய திட்டமிடல் குழுவின் குறைபாடுகள்.
  அவையாவன :
  - மத்திய திட்டமிடல் குழுவுக்கு போட்டியின்மை.
  - வழக்கொழிந்த முகாமை.
  - திறமையற்ற முகாமை.
  - திறனற்ற வள ஒதுக்கீடு.
  - உற்பத்தி திறன் போதாமை.
  - உற்பத்திக்கான உள்ளார்ந்த ஊக்குவிப்பின்மை.
  - நுகர்வோர் இறைமையின்மை.
  - அதிக அரச தலையீடுகள்.
  - முதலாளித்துவப் பொருளாதாரத்தின் அழுத்தம்.

Q. திட்டமிட்ட பொருளாதார முறை மக்களால் நிராகரிக்கப் பட்டமைக்கான காரணங்கள்/ மாறுநிலை பொருளாதாரங்கள் தோன்றியமைக்கான காரணங்கள் எவை?

- போட்டியின்மை, புதிய கண்டுபிடிப்புகளுக்கான ஊக்கமின்மை நுகர்வோர் இறைமையின்மை மத்திய குழுவிடம் தமது சுதந்திரத்தை இழக்க மக்கள் விரும்பாமை.
- மத்திய திட்டமிடல் குழுவினரின் திறனற்ற முகாமை, ஊழல் மோசடிகள் என்பன.
- மத்திய திட்டமிடல் குழு, அரச கொள்கை வகுப்போர் ஆகியோர் நாட்டில் அதிகாரம் பெற்றுத் திகழ நாட்டு மக்களின் பெரும்பகுதியினர் கூலிகளாக இருக்க விரும்பாமை.
- பெரும் பகுதியான மக்கள் தமது உழைப்பை தொடர்ந்து பங்கிடப்படுவதை விரும்பாமை.
- முதலாளித்துவமானது சமவுடமையிலிருந்து பல்வேறு நல்ல அம்சங்களை உள்வாங்கித் தன்னைப் புதுப்பித்துக் கொண்டது போல் காலத்திற்கேற்ப தன்னை உருவாக்கிக்கொள்ளாமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Q. "சம உடமைப் பொருளாதாரத்தில் இலாபப் பங்கு சிறிதும் இல்லை" இக்கூற்றை ஏற்பீரா? உமது விடைக்கான விளக்கம் தருக.

- இக்கூற்றை ஏற்க முடியாது.
- பொருளாதாரத்தை தொடர்ந்து நடாத்திச் செல்வதற்கு தேவையான இலாபத்தை விலை உள்ளடக்கியிருக்கும். அதாவது விலை யானது திட்டமிடப்பட்ட இலாபத்தை உள்ளடக்கி இருக்கும்.

Q. "சம உடமைப் பொருளாதாரத்தில் விலையின் பங்கு எதுவும் இல்லை" இக்கூற்றை ஏற்பீரா? உமது விடைக்கான விளக்கம் தருக.

- இக்கூற்றை ஏற்க முடியாது.
- சமவுடமைப் பொருளாதாரத்தில் விலையின் பங்கு உண்டு.
- கொடுப்பனவை அளவிட, குறிக்க.
- பொருட்கள் சேவைகளின் பெறுமதியை அளவிட
- பொருட்கள் சேவைகளின் பரிமாற்றத்திற்கு விலை பயன்படுத்தப் படுகின்றது.
- அத்துடன் பொருளாதாரத்தை தொடர்ந்து நடாத்திச் செல்வதற்கு தேவையான இலாபத்தை விலை உள்ளடக்கியிருக்கும். அதாவது விலையானது திட்டமிடப்பட்ட இலாபத்தை உள்ளடக்கி இருக்கும்.

பொருளியல் கோட்பாடொன்றை வெளிபடுத்தும் மாற்று முறைகள்

- வாக்கியம் மூலம்
- கேத்திர கணிதம் மூலம்
- புள்ளி விபரங்கள் மூலம்
- சமன்பாடுகள் மூலம்

மாக்ஸிசத்தின் பெயரால் நடந்த கொடுமைகளை கண்ட கார்ல் மாக்ஸ் மனம் வெதும்பிச் சொன்ன வார்த்தைகள், நான் கார்ல் மாக்ஸ் ஆனால் நான் மாக்ஸிஸ் அல்லன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலப்புப் பொருளாதாரம்

சந்தை பொறிமுறையினாலும் திட்டமிடல் குழுவின் செயற்பாட்டினாலும் வள ஒதுக்கீடு இடம்பெறுவது பெருமளவுக்கு ஒன்றுகொன்று சமனான அளவில் இடம்பெறும் பொருளாதார முறைமை ஆகும்.

கலப்புப் பொருளாதாரத்தின் பண்புகள்

1. பொருளாதாரத்தின் பிரதான தொழிற்பாட்டு அலகுகளாவன நுகர்வோர்கள், உற்பத்தியாளர்கள், உற்பத்தி வள உரிமையாளர்கள், அரசாங்கம் என்பனவாகும்.

2. தனியார்துறையை ஊக்குவிக்கின்ற காரணியாக சுயநலன் காணப்படுகையில் பொதுத்துறையை ஊக்குவிக்கின்ற காரணியாக பொதுநலன் காணப்படும்.

3. தனியார்துறை, பொது துறையாகிய இரண்டும் வள உரிமையைக் கொண்டுள்ளன.

4. வள ஒதுக்கீட்டுத் தீர்மானமானது திட்டமிடல் மூலமும் விலை பொறிமுறை மூலமும் மேற்கொள்ளப்படும்.

5. அரசாங்கமானது பொருளாதாரத்தினுள் முக்கியமான பல தொழிற்பாடுகளை நிறைவேற்றுகின்றது.

வருமான ஏற்றத்தாழ்வு

உற்பத்தியில் ஈடுபட்ட உற்பத்திக் காரணிகளுக்கான வருமானங்கள் அதன் உடமையாளர்களிடையே அதிகளவு ஏற்றத்தாழ்வான முறையில் அதாவது நியாயமற்ற முறையில் பங்கீடு செய்யப்படுமாயின் அதுவே வருமான ஏற்றத்தாழ்வு ஆகும்.

- தனியாராலும்
- பணவீக்க காலத்திலும்
- விலைப்பொறி முறையினாலும்

இடம்பெறுகின்ற வருமானப் பங்கீடானது நியாயமற்றதாக காணப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலப்புப் பொருளாதாரத்தின் அரசின் பணிகள்

- ஊழியர் நலன்புரி சட்டங்களை உருவாக்கம்
- குறைந்தபட்ச கூலிச் சட்டத்தை அமுலாக்கல்
- தொழிற்சங்க சட்டங்களை உருவாக்கல்



- வீட்டுத்துறை மீது வரிவித்தலும் அரசாங்க செலவுகளை மேற்கொள்ளலும்
- பொதுப்பண்டங்களையும் மேன்மைப் பண்டங்களையும் வழங்கல்
- நுகர்வோரைப் பாதுகாத்தல்
- பொருட்கொள்வனவில் ஈடுபடல்

- நிறுவனத்துறை மீது வரிவித்தலும் அரசாங்க செலவுகளை மேற்கொள்ளலும்
- ஊக்குவிப்புக்களை வழங்கல்
- பாதுகாப்பை வழங்கல்
- போட்டியை ஏற்படுத்தலும் பேணலும்

முதலாளித்துவ பொருளாதாரத்தில் திட்டமிடல் பொறிமுறையையும் சமவுடமைப் பொருளாதாரத்தில் விலை பொறிமுறையையும் உள்ளடக்கிய மாற்றுச் சேர்க்கை பொருளாதார அமைப்புக்கள்.

1. சமூக சந்தை பொருளாதாரம்
2. சமவுடமைச் சந்தை பொருளாதாரம்

சமூக சந்தை பொருளாதாரம்

சமூக நியாயத்துவத்தில் அதிகளவில் கவனம் செலுத்துகின்ற சந்தை பொருளாதார முறை சமூக சந்தை பொருளாதாரமாகும்.

சந்தை பொருளாதார முறையில் சமூக நியாயத்துவத்தை ஏற்படுத்துவதற்கு அரசு தலையிடுகின்ற பொருளாதார முறை சமூக சந்தை பொருளாதார முறையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக சந்தைப் பொருளாதாரமானது லிபரல் சந்தைப் பொருளாதாரத்திற்கு எதிரானதாகும்.

சமூக நியாயத்துவத்தை ஏற்படுத்த சந்தை பொருளாதாரத்தின் அரசாங்க தலையீடு அவசியம் என சமூக சந்தை பொருளாதாரத்தை ஆதரிக்கும் குழுவினர் கருதுகிறார்கள்.

சமூக சந்தைப் பொருளாதாரத்தில் உற்பத்தி வளங்களின் உடமை தனியாருக்கு இருந்தாலும் கூட வளப்பயன்பாடு தொடர்பாக அதிகளவு தாக்கத்தை அரசாங்கம் மேற்கொள்ளும். பொருளாதாரம், அரசியல், உள்நாட்டு நிர்வாகம், சமூக கலாசாரம் என்ற மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு அரசாங்கம் தலையீட்டை மேற்கொண்டு விரிவான சமூக வலைப்பின்னலைச் செயற்படுத்துகின்றது. சமூக சந்தை அமைப்பானது பொருளாதாரத்தில் பிரஜைகளின் அடிப்படை உரிமைகள் பாதிக்கப்படும் சந்தர்ப்பங்களில் தேவையான பாதுகாப்பை வழங்குகின்றது.

தொழிலீடுபட்டிருக்கும் போது ஏற்படும் விபத்துக்கள், சுகயீனங்கள், முதுமையடைதல், வறுமை, தொழிலின்மை, குழந்தை பராமரிப்பதில் சிக்கல்கள் போன்ற சிக்கலான சூழ்நிலைகளில் சமூக சந்தைப் பொருளாதாரத்தில் அரசாங்கமானது அதன் பிரஜைகளுக்குச் சமூக பாதுகாப்பு வலைப்பின்னலை ஏற்படுத்தும்.

இத்தகைய சமூகப் பாதுகாப்பு வலைப்பின்னலை வழங்குவதற்குத் தேவையான நிதியின் பெரும்பகுதியை நாட்டில் உள்ள பிரஜைகளிடமிருந்து வரி அறவீட்டின் மூலமே மேற்கொள்கின்றது. இப்பொருளாதாரத்தில் அரசின் சமூக நல சேவையானது நாட்டு மக்களுக்குக் கிடைப்பதனால் அவர்களும் விருப்பத்துடன் வரியைச் செலுத்துவர்.

சமூக சந்தைப் பொருளாதார முறை நிலவும் நாடுகளுக்கு உதாரணங்களாக நோர்வே, சுவீடன், பின்லாந்து போன்ற நாடுகளைக் குறிப்பிடலாம்.

சந்தைப் பொருளாதாரங்கள்

அடம் ஸ்மித் சுதந்திரமான சந்தைப் பொருளாதாரத்தை ஆதரித்தார். கெயின்ஸ் பொருளாதாரத்தில் அரசினரின் கண் காணிப்பை வலியுறுத்தி, அரசினை மூன்றாவது கண் என வர்ணித்தவர் இவர். வழிநடத்தப்படும் சந்தைப் பொருளாதாரம் சிறந்தது எனக் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தாராள சந்தைப் பொருளாதாரங்கள் செயற்றிறன் மிக்கவையாக இருந்த போதும் சமூக நீதியின்மையை அதிகம் தோற்றுவித்து விடுகிறது.

இதற்கு மாற்று முறையாக

- இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின் சில ஐரோப்பிய நாடுகளில் சமூக நீதித் தன்மையில் அதிக கரிசனை கொண்ட சந்தைப் பொருளாதாரங்கள் உருவாயின.

சமூக நியாயத்துவத்தில் அதிக அக்கறை கொண்ட இச்சந்தைப் பொருளாதாரங்கள் சமூகச் சந்தைப் பொருளாதாரங்கள் என அழைக்கப்படுகின்றன.

சமவுடமைச் சந்தை பொருளாதாரம்

- சமவுடமைச் சந்தைப் பொருளாதாரம் என்பது அடிப்படையில் சமவுடமையின் தத்துவத்தின் அடிப்படையில் செயற்படும். ஒரு குறிப்பிட்ட எல்லைக்குச் சந்தைச் சக்திகளும் செயற்படுவதற்கு இடமளிக்கும் பொருளாதார அமைப்பாகும்.

- சமவுடைமைப் பொருளாதார முறையானது சமூக சந்தைப் பொருளாதார முறையிலிருந்து பெருமளவில் வேறுபட்டதாகும். சமவுடமைச் சந்தைப் பொருளாதாரத்தில் உற்பத்திக் காரணிகள் அரசாங்கத்திற்கு உடமையாகும். ஆனால் வளப்பயன்பாடு தொடர்பாகத் தீர்மானம் எடுக்கும் உரிமை தனியாருக்குரியது. அதாவது சந்தைச் சக்திகளுக்கு ஏற்ப உற்பத்தி நிறுவனங்களின் உற்பத்தி அளவு, பொருட்களின் விலை தீர்மானம் தொடர்பாக உரிமை காணப்படும்.

- சமவுடமைச் சந்தைப் பொருளாதாரங்களுக்கு உதாரணங்களாக சீனா, ஹங்கேரி, பல்கேரியா போன்ற நாடுகளை குறிப்பிடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய பாரம்பரிய பொருளாதார அமைப்பு

சமயம் / பாரம்பரிய சமூகம் / அடிப்படையாகக் கொண்டு புதிய கலாசார சட்டத்தை தோன்றிய போக்கு காணப்படும்.

பொருளாதார அமைப்பொன்றின் செயலாற்றுகையை மதிப்பிட கையாளபடுகின்ற நியதிகள்

1. நிறைதொழில் மட்டம்
2. பொளாதார வினைத்திறன்
3. பொருளாதார வளர்ச்சி
4. விலை உறுதிப்பாடு
5. நியாயமான வருமான பரம்பல்
6. வெளிநாட்டு உறுதி
7. சூழலின் தர ரீதியான தன்மை
8. பொருளாதார சுதந்திரம்

பொருளாதார முறையின் வெற்றியை அளவிடப் பயன்படும் அளவைகள்

பொருளாதார அமைப்பொன்றின் நோக்கம் பொருளாதார அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்த்து வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வதாகும். பொருளாதாரச் செயலாற்றத்தை மதிப்பிட வெவ்வேறு அளவீடுகள் பயன்படுத்தப்படுகின்றன. இவையே பொருளாதாரத்தின் இலக்குகள் ஆகும். இப்போது இந்த பொருளாதார இலக்குகளை அடைவதில் பொருளாதாரங்கள் பெறும் வெற்றியின் அடிப்படையிலேயே அப்பொருளாதாரத்தின் செயலாற்றத்தை மதிப்பிட முடியும்.

பொருளாதாரங்கள் அடைய எதிர்பார்க்கும் பொது இலக்குகள்

- நிறைதொழில் மட்டம்
- விலையுறுதி
- நியாயமான வருமானப் பங்கீடு
- பொருளாதார வளர்ச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சமூக நலன் அபிவிருத்தி
- வெளியக உறுதித்தன்மை (External Stability)
- பொருளாதாரச் சுதந்திரம்
- சூழல் தரம்
- பொருளாதாரச் செயற்திறன்

	வேறுபாடுகள்	
	சந்தை பொருளாதாரம்	சமவுடைமை பொருளாதாரம்
• ஆக்கச்சாதனம்	....	....
• தீர்வுக்கருவி	....	....
• நோக்கம்	....	....
• கொடுப்பனவு	....	....
• நுகர்வோர் இறைமை	....	....
• வருமான ஏற்றத்தாழ்வு	....	....
• தொழிற் சுதந்திரம்	....	....
• அரச தலையீடு	....	....
• சொத்துரிமை	....	....
• விளம்பரம்	....	....

Credit ratting

கடன் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கான தகுதியினை (Credit ratting) மதிப்பீடு செய்வதாகும்.

தனிநபர் கம்பனி அல்லது நாடொன்று கடன் ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்கான தகுதியினை மதிப்பீடு பெறுகின்றது.

கடன் ஒன்றைப் பெற்றுக்கொடுக்கும் போது அதனை மீளபெற்றுக் கொள்ளும் சாத்தியங்கள், கடன் உரிமை போன்றவற்றை அறிந்துகொள்ள கடன் தரமிடல் உதவுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்ச்சி மட்டம் 1.8 : உற்பத்திச் சாத்திய வளையியின் அடிப்படையில் அமையச்செலவு நடத்தையை விளக்குவார்.

பாட உள்ளடக்கம் :

- ⊙ உற்பத்தி சாத்திய வளையி
- ⊙ உற்பத்தி சாத்திய வளையிகளை அமைக்கும் போது பயன் படுத்தும் எடுகோள்கள்
- ⊙ நிலையான, கூடிச்செல்லும் சந்தர்ப்பர்ச் செலவு நிலைமைகளில் உற்பத்தி சாத்திய வளையி
- ⊙ கூடிச் செல்லும் சந்தர்ப்பச் செலவுக்கும் யாதார்த்த நிலைமைகளுக்கான பொருத்தப்பாடுகள்

உற்பத்திச் சாத்திய வளையி *Production Possibility Curve*

தரப்பட்டகாலப்பகுதியில் மாறா தொழில் நுட்பத்தின் கீழ் உற்பத்தி செய்யக் கூடிய இரு வேறுபட்ட உற்பத்திகளின் சேர்க்கை புள்ளிகளை இணைத்து வரையப்படுவதே உற்பத்திச் சாத்திய வளையி ஆகும்.



உற்பத்திச் சாத்தியவளையி பல்வேறு எடுகோள்களின் அடிப்படையில் வரையப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்பத்திச்சாத்திய வளையியின் பண்புகள் *Features of PPC*

1. உற்பத்தி சாத்திய வளையியானது உற்பத்தி சாத்திய பகுதியையும் உற்பத்தி சாத்தியமற்ற பகுதியையும் பிரித்து நிற்கும் ஒரு எல்லைக் கோடாக காணப்படுகிறது.

2. நடைமுறையில் உற்பத்தி சாத்திய வளையியின் வடிவம் உற்பத்தித்தானத்திற்கு குழிவானதாக காணப்படும். (அதிகரித்துச் செல்லும் அமையச் செலவு)

   அதாவது உற்பத்திச் சாத்தியவளையிகளில் பெரும்பாலானவை வெளிநோக்கிக் குவிவடைந்து செல்கின்றன.



உற்பத்தி இயலளவை தீர்மானிக்கும் காரணிகள்

1. வளங்களின் அளவு, நிலம், உழைப்பு, மூலதனம், முயற்சி
2. வளங்களின் விளைதிறன், தொழினுட்பம், முகாமைத்துவம், மனித மூலதனம், தொழிற் சிறப்பு தேர்ச்சியும்.

நாடடொன்றில் உற்பத்தி இயலளவில் மாற்றத்தை ஏற்படுத்தும் பிரதான காரணிகள்

1. வளத்திரட்சி மாற்றமடைதல்.
2. வள விளைதிறன் மாற்றமடைதல்.
3. வளக்கிடைப்பனவு மாற்றமடைதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்பத்திச்சாத்திய வளையி வரைவதற்கான அடிப்படை எடுகோள்கள்

1. வளங்கள் தரப்பட்ட நிலை
2. வளங்கள் பற்றாக்குறை உடைய நிலை
3. வளங்கள் வரையறுக்கப்பட்ட நிலை
4. வளங்கள் மாற்று உபயோகத்தன்மையுடைய நிலை
5. வளங்கள் முழுமையாக பயன்படுத்தப்படும் நிலை
6. வளங்கள் திறமையாக பயன்படுத்தப்படும் நிலை
7. வளங்களின் வினைதிறன் மாறா நிலை
8. தொழினுட்பம் மாறா நிலை
9. அமையச் செலவு இடம்பெறும் நிலை
10. இரு வேறுபட்ட பண்டங்கள் அல்லது இரு வேறுபட்ட பண்டத் தொகுதிகள் உற்பத்தி செய்யப்படும் நிலை
11. தரப்பட்ட காலப்பகுதி

உற்பத்தி சாத்திய வளையின் சரிவு

உற்பத்தி சாத்திய வளையியின் வழியே செல்லும்போது ஒரு பண்டத்தின் உற்பத்தியைக் குறிப்பிட்ட அளவால் அதிகரிக்கையில் மற்றைய பண்டத்தில் இழக்கும் அளவு என்ற இரண்டுக்கும் இடையிலான விகிதம் சாய்வு அல்லது சரிவு என அழைக்கப்படும்.

எல்லை சந்தர்ப்ப செலவு

உற்பத்தி சாத்திய சாய்வின் மூலம் எல்லை சந்தர்ப்பச் செலவு காட்டப்படுகின்றது. எல்லை சந்தர்ப்பச்செலவு எப்போதும் எதிர்க் கணியப் பெறுமதியைக் கொண்டிருக்கும்.

உற்பத்திய சத்திய வளையி ஒன்றை எல்லை அமையச் செலவின் நடத்தை அடிப்படையில் வகைப்படுத்தல்

1. நிலையான சந்தர்ப்பச் செலவு
2. அதிகரித்துச் செல்லும் சந்தர்ப்பச் செலவு
3. குறைந்து செல்லும் சந்தர்ப்பச் செலவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- குறித்த பண்ட உற்பத்தியை ஒரு அலகுகளால் தொடர்ச்சியாக அதிகரித்து செல்லும் பொழுது அதற்காக விட்டுகொடுக்கப் படுகின்ற மற்றைய உற்பத்தியின் அளவு தொடர்ச்சியாக அதிகரித்து செல்லுமாயின் அது அதிகரித்துச் செல்லும் அமையச் செலவாகும்.

- உற்பத்திகளுக்கு இடையிலான அமையச்செலவு விகிதங்கள் அதிகரித்து செல்லுமாயின் அது அதிகரித்துச் செல்லும் அமையச் செலவாகும்.

- உற்பத்திச் சாத்திய வளையி உற்பத்தி தானத்திற்கு குழிவாக இருக்குமாயின் அது அதிகரித்துச் செல்லும் அமையச் செலவாகும்.

அதிகரித்து செல்லும் அமையச்செலவினை காட்டும் அட்டவணை

x பண்டம் (அலகு)	y பண்டம் (அலகு)
0	100
1	90
2	70
3	40
4	0

(↑ y பண்ட அமையச் செலவு)

x பண்ட உற்பத்தியை ஒரு அலகுகளால் தொடர்ச்சியாக அதிகரித்து செல்லும் பொழுது அதற்காக விட்டுக்கொடுக்கப் படுகின்ற y பண்ட உற்பத்தியின் அளவு 10, 20, 30, 40 அலகுகளாக தொடர்ச்சியாக அதிகரித்து செல்கிறது.

y பண்ட உற்பத்தியை ஒரு அலகுகளால் தொடர்ச்சியாக அதிகரித்து செல்லும் போது அதற்காக விட்டுக்கொடுக்கப் படுகின்ற x பண்ட உற்பத்தியின் அளவு $1/40$, $1/30$, $1/20$, $1/10$

அலகுகளாக தொடர்ச்சியாக அதிகரித்து செல்கிறது ஆகவே இது அதிகரித்துச் செல்லும் அமையச் செலவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமையச்செலவு விகிதங்கள்

x பண்டம்	:	y பண்டம்	x பண்டம்	:	y பண்டம்
1	:	10	1	:	$\frac{1}{40}$
1	:	20	1	:	$\frac{1}{30}$
1	:	30	1	:	$\frac{1}{20}$
1	:	40	1	:	$\frac{1}{10}$

அமையச் செலவு விகதங்கள் அதிகரித்துச் செல்கின்றன. ஆகவே இது அதிகரித்துச் செல்லும் அமையச்செலவாகும்.

அதிகரித்து செல்லும் அமையச்செலவினை காட்டும் உற்பத்தி சாத்திய வளையி



உற்பத்தி சாத்தியவளையி உற்பத்தி தானத்திற்கு குழிவாக இருக்குமாயின் அது அதிகரித்துச் செல்லும் அமையச் செலவாகும்.

உற்பத்திச் சாத்திய எல்லையில் உள்ள புள்ளி குறிப்பது

நிறை தொழில் மட்டத்தை குறிக்கின்றது.

அதாவது நிலவுகின்ற தொழிநுட்பத்தில் வளங்கள் பூரணமாக உற்பத்தியில் ஈடுபடலை குறிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்ப புள்ளிக்கு குழிந்த வடிவில் அமைந்த உற்பத்தி சாத்திய வளையியில் அமையச் செலவின் போக்கு

குழிந்த வடிவிலான உற்பத்திச்சாத்திய வளையி அதிகரித்து செல்லும் அமையச்செலவை காட்டுகிறது.

ஒரு உற்பத்தியை ஒரு அலகால் தொடர்ச்சியாக அதிகரித்து செல்லும் போது விட்டுக்கொடுக்கப்படும் மற்றைய உற்பத்தியானது தொடர்ச்சியாக அதிகரித்து செல்லுமாயின் அது அதிகரித்து செல்லும் அமையச் செலவாகும்.

உற்பத்திச் சாத்திய வளையி



உற்பத்திச்சாத்திய வளையி உற்பத்தி தானத்திற்கு குழிவாக காணப்படுகிறது.

ஆகவே இது அதிகரித்து செல்லும் அமையச் செலவு ஆகும்.

அமையச்செலவு விகிதங்கள்

பேராயுதம் : அத்தியாவசியப் பண்டம்		
1	:	10
1	:	20
1	:	30
1	:	40

அத்தியாவசியப் : பேராயுதம் பண்டம்		
1	:	1/40
1	:	1/30
1	:	1/20
1	:	1/10

அமையச் செலவு விகதங்கள் அதிகரித்துச் செல்கின்றன. ஆகவே இது அதிகரித்துச் செல்லும் செலவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- குறித்த பண்ட உற்பத்தியை ஒரு அலகுகளால் தொடர்ச்சியாக அதிகரித்து செல்லும் பொழுது அதற்காக விட்டுகொடுக்கப்படும் மற்றைய உற்பத்தியின் அளவு தொடர்ச்சியாக மாறாது காணப்படுமாயின் அது மாறா அமையச் செலவாகும்.
- உற்பத்திகளுக்கு இடையிலான அமையச்செலவு விகிதங்கள் தொடர்ச்சியாக மாறாமல் இருக்குமாயின் அது மாறா அமையச் செலவாகும்.
- உற்பத்தி சாத்திய வளையி நேர்கோடாக காணப்படுமாயின் அது மாறா அமையச் செலவாகும்.

மாறா அமையச்செலவினைக் காட்டும் அட்டவணை

x பண்டம் (அலகு)	y பண்டம் (அலகு)
0	100
1	80
2	60
3	40
4	20
5	0

y பண்ட அமையச் செலவு ↑

x பண்ட உற்பத்தியை ஒரு அலகுகளால் தொடர்ச்சியாக அதிகரித்து செல்லும் பொழுது விட்டுகொடுக்கப்படுகின்ற y பண்ட உற்பத்தியின் அளவு 20 அலகுகளாக தொடர்ச்சியாக மாறாமல் காணப்படுகிறது.

y பண்ட உற்பத்தியை ஒரு அலகுகளால் தொடர்ச்சியாக மாறாமல் செல்லும் போது அதற்காக விட்டுகொடுக்கப்படும் x பண்ட உற்பத்தியின் அளவு தொடர்ச்சியாக $\frac{1}{20}$ அலகுகளாக மாறாமல் காணப்படுகிறது. ஆகவே இது மாறா அமையச்செலவாகும்.

அமையச்செலவு விகிதங்கள்

x பண்டம்	:	y பண்டம்	x பண்டம்	:	y பண்டம்
1	:	20	1	:	$\frac{1}{20}$
1	:	20	1	:	$\frac{1}{20}$
1	:	20	1	:	$\frac{1}{20}$
1	:	20	1	:	$\frac{1}{20}$
1	:	20	1	:	$\frac{1}{20}$

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்பத்திகளுக்கு இடையிலான அமையச் செலவு விகிதம் தொடர்ச்சியாக மாறாமல் இருக்கிறது. ஆகவே இது மாறா அமையச் செலவாகும்.

மாறா அமையச்செலவைக் காட்டும் உற்பத்தி சாத்திய வளையி



உற்பத்திச் சாத்திய வளையி நேர் கோடாக காணப்படுகிறது. ஆகவே இது மாறா சந்தர்ப்பச் செலவாகும்.

நேரான உற்பத்தி சாத்திய வளையி வெளிக்காட்டும் அமையச் செலவு

நேரான உற்பத்திச்சாத்திய வளையி மாறா அமையச் செலவை காட்டி நிற்கிறது.

ஒரு உற்பத்தியை ஒரு அலகால் தொடர்ச்சியாக அதிகரித்து செல்லும்போது விட்டுக் கொடுக்கப்படும் மற்றைய உற்பத்தி ஆனது தொடர்ச்சியாக மாறாது காணப்படுமாயின் அதுவே மாறா அமையச் செலவு எனப்படும்.

உற்பத்திச்சாத்திய வளையி



உற்பத்திச்சாத்தியவளையி நேர்கோடாக காணப்படுகிறது

ஆகவே இது மாறா அமையச் செலவு ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமையச்செலவு விகிதங்கள்

பேராயுதம் : அத்தியாவசியப் பண்டம்		
1	:	5
1	:	5
1	:	5
1	:	5
1	:	5

அத்தியாவசியப் பண்டம் : பேராயுதம்		
1	:	1/5
1	:	1/5
1	:	1/5
1	:	1/5
1	:	1/5

அமையச் செலவு விகதங்கள் அதிகரித்துச் செல்கின்றன. ஆகவே இது மாறா அமையச் செலவாகும்.

அமையச்செலவு ஒரு நிலை வரை அதிகரித்து பின் நிலையாக இருத்தல்



AB வரை அமையச் செலவு அதிகரித்துச் சென்று (உற்பத்தி தானத்திற்கு குழிவாக உற்பத்தி சாத்திய வளையி காணப்படுகிறது.)

BC வரை அமையச் செலவு நிலையாக உள்ளது.

(நேர் கோட்டுத்தன்மை உடையதாக உற்பத்தி சாத்திய வளையி உள்ளது.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

	அதிகரித்துச் செல்லும் அமையச் செலவு	மாறா அமையச் செலவு
		
1. PPC வடிவம் (சரிவு)	உற்பத்தி தானத்திற்கு குழிவு	நேர்கோடு
2. காலம்	குறுங்காலம்	நீண்டகாலம்
3. உற்பத்தி சிக்கனங்கள்	குறுங்காலத்தில் உற்பத்தி சிக்கனம் காணப்படுவதில்லை.	நீண்டகாலத்தில் உற்பத்தி சிக்கனம் காணப்படும் போது
4. எத்தொழில்களில்	உற்பத்தி சிக்கனம் காணப்படுவதில்லை	உற்பத்திச் சிக்கனம் உள்ள தொழில்களில்
5. வளங்களின் மாற்றுபயோக தன்மை	வளங்களின் மாற்றுபயோக தன்மை 100% விட குறைவாக இருக்கும்	வளங்களின் மாற்றுபயோக தன்மை 100% ஆக இருக்கும்
6. வளங்களின் விசேட தன்மை	வளங்களின் விசேட தன்மை இழக்கப்படல்	வளங்களின் விசேட தன்மை அடைதல்
7. விதி	குறைந்து செல்லும் எல்லைவிளைவு விதி	மாறா அளவுதிட்ட விதி

நிலையான சந்தர்ப்பச்செலவு தோன்றக் காரணங்கள்	அதிகரிக்கும் சந்தர்ப்பச்செலவு தோன்றக் காரணங்கள்
1. வளங்கள் ஓரினதன்மை வாய்ந்தவை	1. வளங்கள் ஓரினதன்மை அற்றவை
2. தொழினுட்பமானது இன்னுமொரு உற்பத்திக்குப் பூரண பதிலீட்டுத் தன்மை கொண்டிருத்தல்.	2. ஒரு உற்பத்திக்குத் தேர்ச்சி வாய்ந்த வளம் இன்னுமொரு உற்பத்திக்குத் தேர்ச்சி யற்றிருத்தல்.
3. ஒரு உற்பத்திக்குப் பயன் படுத்தும் வினைத்திறனான வளங்கள் மற்றொரு உற்பத்திக்கு வினைத்திறனாக இருத்தல்	3. ஒரு உற்பத்திக்குப் பயன் படுத்தும் வினைத்திறனான வளங்கள் மற்றொரு உற்பத்திக்கு வினைத்திறனாக இருத்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Q. "உற்பத்திச் சாத்திய வளையியின் சாத்திய பகுதியில் உள்ள பொருளாதாரத்திற்கு உற்பத்தி அதிகரிப்புக்கு உற்பத்திச் சாத்திய வளையி வரை அமையச் செலவு எப்பொழுதும் பூச்சியமாகக் காணப்படும்."

இக்கூற்றை ஏற்பீரா? உமது விடையை விளக்குக.

ஏற்க முடியாது.

சாத்தியப் பகுதியிலுள்ள பொருளாதாரத்திற்கு பின்வரும் பகுதிக்குள் உற்பத்தி அதிகரிப்பதற்கு அமையச் செலவு பூச்சியம்.





UR / UT / SU *அளவு உற்பத்தி அதிகரிப்புக்கு அமையச் செலவு பூச்சியம்.*

சாத்தியப்பகுதியிலுள்ள பொருளாதாரம் கீழ்வருமாறு அசைந்தால் அமையச் செலவு ஏற்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாத்திய பகுதியில் உள்ளபொருளாதாரம் மேலே காட்டியவாறு அசைவு போது அங்கு அமையச் செலவு தோன்றும்.

U பொருளாதார உற்பத்தி அதிகரிப்புக்கு அமையச் செலவு உள்ள, அமையச் செலவு அற்ற பிரதேசங்கள்



புதிய தொழில்நுட்பம் ஒன்றின் வருகை கைத்தொழில் துறை உற்பத்திகளை அதிகரித்த அதேவேளை விவசாயத்துறை உற்பத்திகளை வீழ்ச்சியடையச் செய்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்ச்சி 1. 9 : பொருளியலின் அடிப்படை எண்ணக்கருக்கள் மற்றும் உற்பத்தி இயலளவு மாற்றம் என்பனவற்றை உற்பத்தி சாத்திய வளையி யொன்றின் அடிப்படையில் விளக்குவார்.

பாட உள்ளடக்கம் :

- சிற்றினப் பொருளாதார எண்ணக்கருக்களை உற்பத்திச் சாத்திய வளையியின் அடிப்படையில் முன்வைத்தல்.
- பேரினப் பொருளாதார எண்ணக்கருக்களை உற்பத்திச் சாத்திய வளையியின் அடிப்படையில் முன்வைத்தல்.
- உற்பத்தி இயலளவு மாற்றமடைவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளுக்கேற்ப உற்பத்தி இயலளவு மாற்ற மடையும் விதத்தை உற்பத்திச் சாத்திய வளையியின் மூலம் காட்டுதல்.

உற்பத்திய சாத்திய வளையில் காட்டகூடிய சிற்றினப் பொருளியல் எண்ணக்கருக்கள்

1. அருமை
2. மாற்றுபயன்பாடு
3. தெரிவு
4. அமையச்செலவு
5. உற்பத்தி வினைதிறன்
6. வள ஒதுக்கீட்டில் வினைதிறன்

உற்பத்திய சாத்திய வளையில் காட்டகூடிய பேரினப் பொருளியல் எண்ணக்கருக்கள்

(i) நிறைத் தொழில் மட்டம்

(ii) குறைதொழில் மட்டம்

(iii) பொருளாதாரப் பின்னடைவு

(iv) பொருளாதார மாற்றம்

(v) பொருளாதார வளர்ச்சி

(vi) நிகழ்கால நுகர்வும் எதிர்கால நுகர்வுக்குமிடையே வளப்பங்கீடு

(vii) பொருளாதார வீழ்ச்சியடைதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரைவிலக்கணம் :

எல்லையற்ற மனித தேவைகளுடன் வரையறுக்கப்பட்ட வளங்களை ஒப்பீடும் போது வளங்கள் பற்றாக்குறையாக காணப்படும். இதுவே வளப்பற்றாக்குறை ஆகும்.

உற்பத்தி சாத்திய வளையியை வரைவதற்கான அடிப்படை எடு கோள்களில் இதுவும் ஒன்றாகும்.

உற்பத்திச் சாத்தியமற்ற பகுதியில் உள்ள பொருட்குவியலை உற்பத்தி செய்ய முடியாமைக்கு காரணம் வளப்பற்றாக்குறையே ஆகும்.



K பொருட்குவியல் உற்பத்திச்சாத்தியமற்ற பகுதியில் உள்ளது.

குறுங்காலத்தில் K ஐ உற்பத்தி செய்ய முடியாது ஏனெனில் வளங்கள் பற்றாக்குறையாக உள்ளது.

ஓர் உற்பத்திச் சாத்திய எல்லையின் வடிவத்தினை அல்லது சாய்வினை நிர்ணயிக்கும் காரணிகள்

அதிகரித்து செல்லும் அமையச்செலவு, மாறா அமையச் செலவு, குறைந்து செல்லும் அமையச்செலவு

அல்லது

குறைந்து செல்லும் எல்லை விளைவு விதி, மாறா அளவுத்திட்ட விதி, அதிகரித்து செல்லும் அளவுத்திட்ட விதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **வரைவிலக்கணம் :**

குறித்த வளத்தை குறித்த நேரத்தில் பல உற்பத்திகளுக்கு பயன்படுத்தக் கூடியதாக இருந்தலே வளங்களின் மாற்றுபயோகத் தன்மை எனப்படும்.

வளங்கள் பல பயன்பாட்டுத்தன்மையுடையதாக காணப்படுதலே வளங்களின் மாற்றுபயோகத் தன்மையாகும்.

- **எடுகோள் :**

உற்பத்திச்சாத்திய வளையியை வரைவதற்கான எடுகோள்களில் வளங்களின் மாற்றுபயோகத் தன்மையுடையது என்பதும் ஒன்றாகும்.



படத்தில் : A, B என்பன உற்பத்திச்சாத்திய வளையில் உள்ள புள்ளிகள்

விளக்கம் : A யிலிருந்து B க்கு செல்லும் போது PQ அளவு X பண்ட உற்பத்தி அதிகரிக்கிறது.

அதேவேளை y பண்ட உற்பத்தி RS அளவு குறைகிறது.

y பண்டத்தின் உற்பத்திக்குப் பயன்படுத்தப்பட்ட வளங்கள் குறைக்கப் பட்ட அவை x பண்டத்தின் உற்பத்திக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இதுவே வளங்களின் மாற்றுபயோகத்தன்மை ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **வரைவிலக்கணம் :**

குறித்த வளத்தை குறித்த உற்பத்திக்கு அல்லது நுகர்விற்கு பயன்படுத்தும் போது இழக்கப்படுகின்ற ஏனைய உற்பத்திகளுள் அல்லது நுகர்வுகளுள் மிகச் சிறந்த தெரிவே குறித்த உற்பத்திக்கான அல்லது நுகர்விற்கான அமையச் செலவு ஆகும்.

- **எடுகோள் :**

உற்பத்தி சாத்திய வளையியை வரைவதற்கான எடுகோள்களில் இதுவும் ஒன்று



படத்தில் : A, B என்பன உற்பத்திச்சாத்திய வளையில் உள்ள புள்ளிகள்

விளக்கம் : A→B க்கு செல்லும் போது,
PQ அளவு x பண்டம் ஏற்கப்பட,
ST அளவு y பண்டம் இழக்கப்படுகிறது.

ஏற்பும், இழப்பும் காணப்படும் ஆயின் அது அமையச் செலவு ஆகும்.

A→B செல்வதன் மூலம் அமையச் செலவு காட்டப்படுகிறது.

- உற்பத்தி சாத்திய வளையியில் உள்ள புள்ளிகளின் நகர்வு அமையச் செலவைக் காட்டுக.
- உற்பத்தி சாத்திய வளையியின் சரிவு, (வடிவம்) அது அதிகரிக்கும், அமையச் செலவா, மாறா அமையச் செலவா, குறைந்து செல்லும் அமையச் செலவா என்பதைக் காட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமையச் செலவு வளையி

உற்பத்தி சாத்திய வளையி வரைவதற்கான உற்பத்தி ஆள்கூறுகள் ஏற்பு, இழப்பு என்ற அடிப்படையிலேயே பெறப்படுகின்றது. இதனால் உற்பத்திச் சாத்திய வளையியை அமையச் செலவு வளையி எனவும் அழைப்பர்.

பேராயுதம் (அலகு)	அத்தியாவசியப் பண்டம் (அலகு)
0	100
1	90
2	70
3	40
4	0



வரி அறவீடு
வாத்தின் மிகக் குறைந்த முனகலுடன் இறகுகளை பிடுங்குவது போல் வரி அறவீடு மிருதுவாக செய்யப்பட வேண்டும். இல்லையெனின் வாத்தையும் இறகுகளையும் இழப்பது போலாகிவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **வரைவிலக்கணம் i :**

  ஒரு உற்பத்தியில் மாற்றத்தை உண்டு பண்ணும் போது அது மற்றைய உற்பத்தியில் மாற்றத்தை அது ஏற்படுத்துமாயின் அது வளங்களின் திறமையான பயன்பாட்டை காட்டும்.

- **வரைவிலக்கணம் ii :**

  ஒருவருடைய வருமானத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும் போது அது இன்னொரு வருடைய வருமானத்தில் மாற்றத்தை அது உண்டு பண்ணுமாயின் அது வளங்களின் திறமையான பயன் பாட்டை குறிக்கும்.

- **வரைவிலக்கணம் iii :**

  ஒரு சமூகத்தின் நலனில் மாற்றத்தை உண்டு பண்ணும் போது அது இன்னொரு சமூகத்தின் நலனில் மாற்றத்தை அது உண்டு பண்ணுமாயின் அது வளங்களின் திறமையான பயன்பாட்டைக் குறிக்கும்.

- **எடுகோள் :**

  உற்பத்தி சாத்திய வளையியை வரைவதற்கான எடுகோள்களில் இதுவும் ஒன்று



படத்தில் : V உற்பத்திச்சாத்திய வளையில் உள்ள பொருளாதாரம் ஆகும்.

விளக்கம் : V இல் பொருளாதாரம் காணப்படுமாயின் அது வளங்களின் திறமையான பயன்பாட்டை குறிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்பத்தி வினைதிறன்

- தரப்பட்ட உள்ளீடுகளைக் கொண்டு உச்ச வெளியீட்டைப் பெறல்.
- தரப்பட்ட வெளியீடுகளை குறைந்த உள்ளீடுகளை கொண்டு பெறல்.
- மிகக்குறைந்த உற்பத்திச் செலவில் பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்வதாகும்.

இந்நிலையில் ஒன்றில் வெளியீட்டில் மாற்றத்தை ஏற்படுத்தினால் அது மற்றையதன் வெளியீட்டிலும் மாற்றத்தை ஏற்படுத்தம்.

இதன் கருத்து யாதெனில் பொருளாதாரம் உற்பத்திச் சாத்திய வளையியில் அமைந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது என்பதாகும்.

உற்பத்தியில் செயற்றிறன் ஏற்படுத்துவதன் பொருட்டு பூர்த்தி செய்யப்பட வேண்டிய இரு நிபந்தனைகள்

1. முழுவேலை வாய்ப்பு, நிறைதொழில் மட்டம் (சகல வளங்களும் உற்பத்தியில் பயன்படுத்தப்படல்)
2. முழு உற்பத்தி (சகல வளங்களும் அதிகூடிய செயற்றிறனுடன் பயன்படுத்தப்படல்)

வள ஒதுக்கீட்டு செயற்திறன்

- வள ஒதுக்கீட்டின் வினைத்திறன் என்பது பொருளாதாரத்தில் உள்ள வரையறைக்குட்பட்ட வளங்களையும் சமூகத் தெரிவுக்குப் பொருத்தமான வகையில் பிரித்து ஒதுக்குவதாகும். இங்கு நிறைவேற்றப்பட வேண்டிய நிபந்தனையாவது எல்லை செலவு எல்லை நலனுக்குச் சமப்படுவதாகும். (MB = MC) அல்லது (MC = MR) ஆகும். வளப்பங்கீட்டில் வினைத்திறன் காணப்படுவது உற்பத்திச் சாத்திய வளையியின் ஒரு புள்ளியில் மட்டுமே.
- வளப்பங்கீட்டின் வினைத்திறன் மற்றும் உற்பத்தியில் வினைத் திறன் ஆகிய இரண்டினதும் மொத்தம் பொருளாதார வினைத் திறனாகும்.
- குறித்த பண்டத்தின் மேலதிக அலகொன்றை நுகர்வதனால் பெறப்படும் நலன் எல்லை பயனாகும். இது பண்டத்திற்கான நுகர்வோன் செலுத்த விரும்பும் உச்ச விலையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சமூகத்திற்கும் அதிகமாக தேவைப்படும் பொருட்கள் சேவைகளை உற்பத்தி செயற்பொருட்டு அருமையான வளங்களை ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்பதாகும்.

- பொருளாதாரத்தில் சகல சந்தையினதும் சமநிலைகளில் எல்லை வருமானமும் எல்லைச் செலவும் சமனாக அமையும்போது வள ஒதுக்கீட்டுச் செயற்றிறன் வாய்ந்ததாக அமையும்.

- சகல பொருட்களினதும் எல்லைச் செலவுகள் அவ்வக்காரணிகளின் விலைக்குச் சமனாகும் போது (MC = P எல்லைக்கோடு = விலை) காரணி ஒதுக்கீட்டின் செயற்றிறன் ஏற்படும்.

இதனால் எல்லைப்பயன் (MB) விலைக்கு (P) சமப்படும். குறித்த ஒரு பண்டத்தின் உற்பத்தியை ஒரு அலகால் அதிகரிக்கும்போது மொத்தச் செலவிற்கு புதிதாகச் சேரும் பெறுமதி எல்லைச் செலவாகும் (MC).

இதனால் வள ஒதுக்கீட்டு வினைத்திறன் நிறைவேற்றப்படுவதற்கு MC = MB = P என அமைதல் வேண்டும். இந்நிபந்தனையானது உற்பத்திச் சாத்திய வளையியின் மீதுள்ள விசேட ஒரு புள்ளியில் மட்டுமே காணப்படும்.

இதனைப் பின்வருமாறு வரைபடம் மூலம் காட்டலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **வரைவிலக்கணம் :**

  குறிப்பிட்ட பொருளாதாரத்தில் உள்ள வளங்கள் முழுமையாக பயன்படுத்தப்படும் நிலை நிறை தொழில் மட்டம் எனப்படும்.

- **எடுகோள் :**

  உற்பத்தி சாத்திய வளையியை வரைவதற்கான எடுகோள்களில் இதுவும் ஒன்று

- **பொருளாதாரம் காணப்படும் இடம் :**

  உற்பத்தி சாத்திய வளையியில் பொருளாதாரம் காணப்படுமாயின் அது நிறைதொழில் மட்டத்தை குறிக்கும்.



படத்தில் : R உற்பத்திச்சாத்திய வளையில் உள்ள பொருளாதாரம் ஆகும்.

விளக்கம் : R இல் பொருளாதாரம் காணப்படுமாயின் அது நிறை தொழில் மட்டபொருளாதாரம் ஆகும்.

உற்பத்திச் சாத்திய வளையியை இடம் நகர்த்தக் கூடிய காரணி வளத்திரட்சி மாற்றமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **வரைவிலக்கணம் :**

குறிப்பிட்ட பொருளாதாரத்தில் உள்ள வளங்களின் பயன் படுத்தப்படும் நிலையே வேலையின்மை எனப்படும்.

குறித்த பொருளாதாரத்தில் உள்ள வளங்கள் முழுமையாகப் பயன்படுத்தப்படாத நிலையினை இது குறிக்கும்.

உற்பத்திச் சாத்தியப் பகுதியினுள் ஒரு பொருளாதார காணப்படு மாயின் அது வேலையின்மை உள்ள பொருளாதாரம் ஆகும்.



படத்தில் : R உற்பத்திச்சாத்தியப் பகுதியில் உள்ள பொருளாதாரம் ஆகும்.

விளக்கம் : R இல் பொருளாதாரம் காணப்படுமாயின் அது வேலையின்மை நிலவுகின்ற பொருளாதாரமாகும்.

வேலையின்மையிலுள்ள வளத்தின் அளவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **R வேலையின்மையில் உள்ள பொருளாதாரம் ஆகும்**

RU அளவு x பண்டத்தை உற்பத்தி செய்யக்கூடியவளம் பயன்படுத்தப்படவில்லை (வேலையின்மையில் உள்ளது)

அல்லது

RS அளவு y பண்டத்தை உற்பத்தி செய்யக்கூடியவளம் பயன்படுத்தப்படவில்லை (வேலையின்மையில் உள்ளது)

அல்லது

இரு உற்பத்திகளையும் அதிகரித்து R ஐ உற்பத்தி சாத்திய வளையியில் இடம் பெறச் செய்யக்கூடிய RT அளவு வளம் பயன் படுத்தப்படவில்லை (வேலையின்மையில் உள்ளது)

வேலையின்மையும் அமையச் செலவும்

வேலையின்மை காணப்படும் போது கீழ் காட்டியவாறு அசைவுறுமாயின் அங்கு உற்பத்தி அதிகரிப்பிற்கான அமையச் செலவு 0 (பூச்சியம்)



- **R வேலையின்மையில் உள்ள பொருளாதாரம்**

இங்கு,

RU/ RS/ RT வரை உற்பத்தி அதிகரிப்பிற்கு அமையச் செலவு இல்லை.

R இல் இருந்து உற்பத்திச்சாத்திய வளையி (STU பிரதேசம்) வரை உற்பத்தி அதிகரிப்புக்கு அமையச் செலவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார மந்தம்

பொருளாதார பின்னடைவின் நீண்டகால நிலைமை பொருளாதார மந்தமாகும்.

நீண்டகால நிலைமையில் வளங்கள் அழிவடையும் நிலையில் உற்பத்தி சாத்திய வளையி இடது புறம் நோக்கி நகர்வடையும்.

குறுங்கால நிலைமையில் வளங்கள் அழிவடையா நிலையில்





A → B ஆனது பொருளாதார மந்தத்தை காட்டும்.

பொருளாதார பின்னடைவு

பொருளாதாரப் பின்னடைவு என்பது பொருட்கள் சேவைகளுக்காக அப்பொருளாதாரத்தில் கேள்வி குறைவடைவதனால் உற்பத்தி வீழ்ச்சி அடைதல் ஆகும்.

பொருளாதாரப் பின்னடைவு ஒரு குறுங்கால நிலைமையாகும். அதேவேளை பின்னடைவு நிலைமை காரணமாக வேலையின்மை மட்டம் அதிகரிக்கும்.



இது அருகிலுள்ள உதாரணப்படி A புள்ளியிலிருந்து B புள்ளி வரை வளையினுள்ளே உள்நோக்கி செல்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்பத்தி சாத்திய வளையி பொருளாதார வளர்ச்சி காரணமாக வலது புறம் நோக்கி நகரும்.



AB ஆரம்ப உற்பத்தி சாத்திய வளையி

CD புதிய உற்பத்தி சாத்திய வளையி

பொருளாதார வளர்ச்சி காரணமாக ஆரம்ப உற்பத்திச் சாத்திய வளையி AB வலது புறம் நோக்கி நகர்ந்து CD ஆக அமைந்துள்ளது.

பொருளாதார வளர்ச்சி வீதம் $= \frac{BD}{OB} \times 100$

$$= \frac{AC}{OA} \times 100$$

$$= \frac{XY}{OX} \times 100$$

> Price War
>
> கொரோனாவின் தாக்கம், விமானப் போக்குவரத்து உட்பட ஏனைய போக்குவரத்துக்களின் வீழ்ச்சி, தொழிற்சாலைகளில் வேலைநேரக் குறைப்பு, வேறு உலகப் பொருளாதார நெருக்கடிகள் காரணமாக மசகெண்ணைகான கேள்வி குறைந்துவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார வீழ்ச்சி காரணமாக உற்பத்திசாத்தியவளையி கீழ் புறம் நோக்கி நகரும்.



AB ஆரம்ப உற்பத்தி சாத்திய வளையி
CD புதிய உற்பத்தி சாத்திய வளையி

பொருளாதார வீழ்ச்சி காரணமாக ஆரம்ப உற்பத்திச் சாத்திய வளையி AB இடது புறம் நோக்கி நகர்ந்து CD ஆக அமைந்துள்ளது.

$$\text{பொருளாதார வீழ்ச்சி வீதம்} = \frac{BD}{OB} \times 100$$

$$= \frac{AC}{OA} \times 100$$

$$= \frac{YX}{OY} \times 100$$

பெற்றோலிய விலையை தக்க வைக்க OPEC நாடான சவுதி, OPEC+ இல் உள்ள நாடுகளையும் உற்பத்தியை குறைக்க சொல்ல, இவ்வாறான ஒரு குறைப்பை எம்மால் செய்ய முடியாது. அத்துடன் OPEC அமைப்பில் அங்கத்துவம் இல்லாத எம்மைக் கட்டுப்படுத்த முடியாது எனக் கூறி ரஷ்யா வெளியேறியது.

போட்டிப்போட்டுக் கொண்டு உற்பத்தி செய்தார்கள். கொள்வன வாளர்களுக்கு பல்வேறு வரப்பிரசாதங்களை வழங்கினர். சந்தையை தக்க வைக்க விலை குறைப்பில் ஈடுபட்டனர். இதனால் விலை பாரியளவால் வீழ்ச்சி கண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்கால நுகர்வும் எதிர்கால நுகர்வுக்குமிடையே வளப்பங்கீடு

நிகழ்கால நுகர்வுக்காக அதிக வளங்களை ஒதுக்கீடு செய்யும் பொருளாதாரம் இதளைன யு காட்டுகிறது.



இந்நாட்டின் பொருளாதார வளர்ச்சி குறைவாக அமையும்.

எதிர்கால உற்பத்தி சாத்திய வளையி நிகழ்கால உற்பத்தி சாத்திய வளையியிலிருந்து மிக சிறிய அளவிலேயே வலது புறம் நோக்கி நகரும்.



நிகழ்கால முதலீட்டிற்காக அதிகளவு வளங்களை ஒதுக்கீடு செய்யும் பொருளாதாரம் இதனை ட காட்டுகிறது.



இந்நாட்டின் பொருளாதார வளர்ச்சி உயர்வாக அமையும்.

எதிர்கால உற்பத்தி சாத்திய வளையி நிகழ்கால உற்பத்தி சாத்திய வளையியிலிருந்து மிக பெரிய அளவில் வலது புறம் நோக்கி நகரும்.



நிகழ்காலத்தில் நுகர்வை தியாகம் செய்து முதலீட்டுக்கு வளங்களை அதிகமாக ஒதுக்கீடு செய்யும் பொருளாதாரம் துரித/ உயர்ந்த பொருளாதார வளர்ச்சி வேகத்தினை கொண்டிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளங்களின் திறமையற்ற பயன்பாடு

- **வரைவிலக்கணம் :**

  ஒரு சமூகத்தின் அல்லது ஒரு நபரின் நலனில் மாற்றத்தை உண்டு பண்ணும் போது அது இன்னொரு சமூகத்தின் நலனின் அல்லது நபரின் நலனின் **மாற்றத்தை உண்டு பண்ணாவிடில்** அது வளங்களின் திறமையற்ற பயன்பாடு எனப்படும்.

- **பொருளாதாரம் காணப்படும் இடம் :**

  உற்பத்தி சாத்திய பகுதியில் ஒரு பொருளாதார காணப்படுமாயின் அது வளங்களின் திறமையற்ற பயன்பாட்டைக் குறிக்கும்.



படத்தில் : R உற்பத்திச்சாத்திய பகுதியினுள் உள்ள பொருளாதார ஆகும்.

விளக்கம் : R இல் பொருளாதாரம் காணப்படுமாயின் அது வளங்களின் திறமையற்ற பயன்பாட்டைக் குறிக்கும்.

பொதுப் பொருட்கள்	போலிப்பொதுப் பொருட்கள்	அரைகுறைப்பொதுப் பொருட்கள்
தேசிய பாதுகாப்பு	நூதனசாலை	கல்வி, சுகாதாரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறமையற்ற முறையில் பயன்படுத்தப்படுகின்ற வளத்தின் அளவு



- **R திறமையற்ற வளப்பயன்பாட்டை கொண்டுள்ள பொருளாதாரம்**

  RU அளவு x பண்டத்தை உற்பத்தி செய்யக்கூடிய வளம் திறமையற்ற முறையில் பயன்படுத்தப்படுகின்றது.

  அல்லது

  RS அளவு y பண்டத்தை உற்பத்தி செய்யக்கூடிய வளம் திறமையற்ற முறையில் பயன்படுத்தப்படுகின்றது.

  அல்லது

  இரு உற்பத்திகளையும் அதிகரித்து R ஐ உற்பத்தி சாத்திய வளையியில் இடம் பெறச்செய்யக்கூடிய RT அளவு வளம் திறமையற்ற முறையில் பயன்படுத்தப்படுகின்றது.

வளங்களின் திறமையற்ற பயன்பாடும் அமையச் செலவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளங்களின் திறமையற்ற பயன்பாட்டில் உள்ள போது கீழ் காட்டியவாறு அசைவுறுமாயின் அங்கு உற்பத்தி அதிகரிப்பிற்கான அமையச் செலவு பூச்சியமாக இருக்கும்.

- **R வளங்களின் திறமையற்ற பயன்பாட்டில் உள்ள பொருளாதாரம் ஆகும்.**

  இங்கு, RU/ RS/ RT வரை உற்பத்தி அதிகரிப்பிற்கு அமையச் செலவு இல்லை.

  R இலிருந்து உற்பத்தி சாத்திய வளையி வரை (STU பிரதேசம்) உற்பத்தி அதிகரிப்புக்கு அமையச் செலவு இல்லை.

என்ன பொருளை உற்பத்தி செய்தல்?

- **வரைவிலக்கணம் :**

  ஒரு சமூகம் தனக்கு கிடைக்கின்ற பற்றாக்குறையுடையதும் மாற்றுபயோகத் தன்மையுடையதுமான வளங்களின் பெரும் பகுதியை எந்த உற்பத்திக்கு ஒதுக்கீடு செய்வது என்ற பிரச்சினையே இதுவாகும்.



படத்தில் : A : வளங்களின் பெரும் பகுதி y பண்ட உற்பத்திக்கு ஒதுக்கப்பட்டதைக் காட்டுகிறது.

: B : வளங்களின் பெரும்பகுதி x பண்ட உற்பத்திக்கு ஒதுக்கப்பட்டதைக் காட்டுகிறது.

விளக்கம் : வள ஒதுக்கீட்டை A உள்ளவாறு மேற்கொள்வதா அல்லது B உள்ளவாறு மேற்கொள்வதா என்ற பிரச்சினையே இதுவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **வரைவிலக்கணம் :**

குறித்த நாட்டில், குறித்த காலத்தில் உற்பத்தி செய்யப்பட்ட முடிவுப் பொருட்கள் சேவைகள் சமூகத்தில் உள்ள பல்வேறு பொருளாதார வர்க்கங்கள் இடையே எவ்வாறு பங்கீடு செய்வது என்ற பிரச்சினை இதுவாகும்.



படத்தில் : A - உயர்வர்க்கம், B - நடுத்தரவர்க்கம், C - கீழ்வாக்கம்
K இல் பொருளாதாரம் காணப்படுகிறது.
K இன் உற்பத்தி இயல் அளவு 100 அலகு அத்தியாவசியப் பண்டமும் 50 அலகு ஆடம்பர பண்டமும் ஆகும்.

விளக்கம் : A க்கு அதிகளவிலான முடிவுப் பொருட்கள், சேவைகள் ஒதுக்கீடு செய்யப்படும்.
(60 அலகு அத்தியாவசியப்பண்டமும், 30 அலகு ஆடம்பர பண்டமும்)

B க்கு நடுத்தர அளவிலான முடிவுப் பொருட்கள், சேவைகள் ஒதுக்கீடு செய்யப்படும்.
(30 அலகு அத்தியாவசியப்பண்டமும், 15 அலகு ஆடம்பர பண்டமும்)

C க்கு குறைந்த அளவிலான முடிவுப் பொருட்கள், சேவைகள் ஒதுக்கீடு செய்யப்படும்.
(10 அலகு அத்தியாவசியப்பண்டமும், 5 அலகு ஆடம்பர பண்டமும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்பங்கீட்டு அட்டவணை

K பொருளாதாரத்தில்

பொருளாதார வர்க்கங்கள்	அத்தியாவசிய பண்டம்	ஆடம்பரப் பண்டம்
A	60	30
B	30	15
C	10	5
K இயலளவு	100	50

யாருக்காக உற்பத்தி செய்தல்? (சமவுடைமை பொருளாதாரத்தில்)

- **வரைவிலக்கணம் :**

  குறித்த நாட்டில், குறித்த காலத்தில் உற்பத்தி செய்யப்பட்ட முடிவுப் பொருட்கள் சேவைகள் சமூகத்தில் எவ்வாறு பங்கீடு செய்வது என்ற பிரச்சினை இதுவாகும்.



படத்தில் : K இல் பொருளாதாரம் காணப்படுகிறது.
K இன் உற்பத்தி இயல் அளவு 100 அலகு அத்தியாவசியப் பண்டமும் 50 அலகு ஆடம்பர பண்டமும் ஆகும்.

சமவுடைமை பொருளாதாரத்தில் வர்க்க வேறுபாடுகளில்லை.

விளக்கம் : K யில் உற்பத்தி செய்யப்பட்ட முடிவுபொருட்கள் சேவைகள் சமூகத்தில் உள்ள எல்லோருக்கும் சமமாகப் பங்கிடப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இலங்கை தனது முழுவளங்களையும் பயன்படுத்தி 10 000 அலகு கணினிகளை உற்பத்தி செய்யலாம் அல்லது 50 000 அலகு தேயிலையை உற்பத்தி செய்யலாம்.

- சீனா தனது முழுவளங்களையும் பயன்படுத்தி 50 000 அலகு கணினிகளை உற்பத்தி செய்யலாம் அல்லது 150 000 அலகு தேயிலை உற்பத்தி செய்யலாம்.

(i) தேயிலை உற்பத்திக்கு இலங்கை, சீனா என்பவற்றுக்கான அமையச் செலவுகளை கணிக்க.

இலங்கை



சீனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ii) இரு நாடுகளும் நன்மை அடையக்கூடியவாறான ஒரு வர்த்தகச் சாத்தியப்பாடு **உண்டா?** உமது விடைக்கான **விளக்கம் தருக.**

அமையச்செலவுகள்

	இலங்கை	சீனா
தேயிலை	$\frac{1}{5}$ அலகு கணனி ✓	$\frac{1}{3}$ அலகு கணனி
கணினி	5 அலகு தேயிலை	3 அலகு தேயிலை ✓

✓ ஒப்பீட்டுரீதியில் அமையச் செலவு குறைவு

அமையச் செலவுகளை ஒப்பீட்டு இரு நாடுகளும் நன்மை அடையக் கூடிய வர்த்தக சாத்தியப்பாட்டை உருவாக்க முடியும்.

இலங்கை

தேயிலை உற்பத்திக்கான அமையச் செலவுகளை ஒப்பிடுவோமாயின் இலங்கைக்கு தேயிலை உற்பத்திக்கான அமையச் செலவு ஒப்பீட்டு ரீதியில் குறைவாகக் காணப்படுகிறது.

ஆகவே இலங்கை வளங்களின் பெரும் பகுதியை தேயிலை உற்பத்திக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

சீனா

கணினி உற்பத்திக்கான அமையச் செலவுகளை ஒப்பிடுவோமாயின் சீனாவுக்கு கணினி உற்பத்திக்கான அமையச் செலவு ஒப்பீட்டு ரீதியில் குறைவாகக் காணப்படுகிறது.

ஆகவே சீனாவளங்களின் பெரும்பகுதியை கணினி உற்பத்திக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

இலங்கை தேயிலையை சீனாவுக்கு வழங்குவதன் மூலமும் சீனா கணினியை இலங்கைக்கு வழங்குவதன் மூலமும் இரு நாடுகளும் நன்மை அடையக் கூடிய வர்த்தகச் சாத்தியப் பாட்டை உருவாக்கலாம்.

	இலங்கை	சீனா
தேயிலை	$\frac{1}{5}$ அலகு கணனி	$\frac{1}{3}$ அலகு கணனி ×
கணினி	5 அலகு தேயிலை ×	3 அலகு தேயிலை

× ஒப்பீட்டுரீதியில் அமையச் செலவு உயர்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளங்களின் கூடுதலான பயன்பாட்டினால் ஏற்படும் உற்பத்தி அதிகரிப்பு



M இலிருந்து W ற்குரிய நகர்வு வளங்களின் கூடுதலான பயன்பாடு அதிகரிப்பதனை குறிக்கும்.

வேலை நிறுத்தம் காரணமாக தொழிற்சாலைகள் சில மூடப்படல்

வேலை நிறுத்தம் காரணமாக தொழிற்சாலைகள் சில மூடப்பட்டால் உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்படும்.

ஆகவே உற்பத்தி சாத்திய வளையியில் உள்ள புள்ளி உற்பத்தி சாத்தியப் பகுதியை நோக்கி நகரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A - உற்பத்திச்சாத்திய வளையி உள்ள புள்ளி.

B - உற்பத்திச்சாத்திய பகுதியில் உள்ள புள்ளி.

வேலை நிறுத்தம் காரணமாக தொழிற்சாலைகள் சில மூடப் பட்டதால் உற்பத்திச்சாத்திய வளையில் உள்ள புள்ளி A நகர்ந்து உற்பத்திச் சாத்தியப்பகுதியில் உள்ள B ஆக (A → B) அமைந்துள்ளது.

மின்வெட்டு அமுலுக்கு வரல்

மின்வெட்டு அமுலுக்கு வருமாயின் உற்பத்தி வீழ்ச்சி ஏற்படும். உற்பத்திச்சாத்திய வளையில் உள்ள புள்ளி உற்பத்திச்சாத்தியப் பகுதியை நோக்கி நகரும்.



V - உற்பத்திச்சாத்திய வளையி உள்ள புள்ளி.

K - உற்பத்திச்சாத்திய பகுதியில் உள்ள புள்ளி.

உற்பத்திச்சாத்திய வளையி உள்ள புள்ளி V மின்வெட்டு காரணமாக உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்படுவதால் உற்பத்திச்சாத்தியப் பகுதியை நோக்கி நகர்ந்து புள்ளி K ஆகவுள்ளது.

உற்பத்திச் சாத்திய வளையியை உட்புறம் நகர்த்தக் கூடிய இரு பெரும் காரணிகள்

- வளக்கிடைப்பனவில் ஏற்படும் வீழ்ச்சி
- வளங்களின் வினைத்திறன் வீழ்ச்சி
- வளத்திரட்சி வீழ்ச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாய உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி



A - உற்பத்திச்சாத்திய வளையியில் உள்ள புள்ளி.

B - உற்பத்திச்சாத்திய பகுதியில் உள்ள புள்ளி.

விவசாய உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக A → B அமையும்.

குறிப்பு :-

- விவசாய உற்பத்தி குறிக்கப்பட்ட அச்சுக்கு சமாந்தரமாக A → B நகர்வு இருப்பதை கவனிக்க.

நாட்டின் உற்பத்தி திறன் அதிகரிக்கின்ற அதே வேளை விவசாய உற்பத்தி வீழ்ச்சி அடைதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டின் உற்பத்தி திறன் அதிகரிக்கின்ற அதே வேளை விவசாய உற்பத்தி வீழ்ச்சி அடைதல் காரணமாக R→T அமைகிறது.

வேலையின்மை வீழ்ச்சியடைதல்

வேலையின்மை வீழ்ச்சி அடைவதால் உற்பத்தி சாத்திய பகுதியில் உள்ள புள்ளி உற்பத்தி சாத்திய வளையியை நோக்கி நகரும்.



C, D என்பன உற்பத்தி சாத்திய பகுதியில் உள்ள புள்ளிகள்

D யை விட C உற்பத்திச் சாத்திய வளையிக்கு அருகில் உள்ளது.

வேலையின்மை வீழ்ச்சியடைவதன் காரணமாக உற்பத்தி சாத்திய பகுதியில் D→C அமையும்.

சமூகம் அதிகளவு உணவையும் குறைந்தளவு உடையினையும் பெறத் தீர்மானித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

B உணவு குறிக்கப்பட்ட அச்சுக்கு அருகில் உற்பத்திச்சாத்திய வளையில் அமைத்துக் காட்டப்பட்டுள்ளது.

மோட்டார் வாகன உற்பத்தித்துறையில் வேலையின்மை ஏற்படுகின்ற அதேவேளை கணினி உற்பத்தியில் அது எவ்வித தாக்கத்தையும் உண்டுபண்ணவில்லை



மோட்டார் வாகன உற்பத்தி துறையில் வேலையின்மை ஏற்படுகின்ற அதேவேளை கணினி உற்பத்தியில் அது எவ்வித தாக்கத்தையும் உண்டு பண்ணாத நிலை காணப்படுவதால் மோட்டார் வாகன உற்பத்தி குறிக்கப்பட்ட அச்சிற்கு சமாந்தரமாக வலமிருந்து இடமாக புள்ளி நகரும்.

ஆரம்ப புள்ளி உற்பத்தி சாத்திய வளையியில் அமைந்து காணப்படும்.

A - உற்பத்திச்சாத்திய வளையியிலுள்ளது.
B - உற்பத்திச்சாத்திய பகுதியிலுள்ளது.

A → B நகர்வு மோட்டார் வாகன உற்பத்தி குறிக்கப்பட்ட அச்சிற்கு சமாந்தரமாக நகர்வினால் காட்டப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாயத்துறை பண்டங்களின் உற்பத்தியில் 50 வீத உற்பத்தித்திறன் அதிகரிப்பும் கைத்தொழில் துறைப் பண்டங்களின் உற்பத்தியில் 100 வீத உற்பத்தித்திறன் அதிகரிப்பும் இடம்பெறல்



கைத்தொழில் துறைப்பண்ட உற்பத்தி அதிகரிப்பு வீதம்

$$= \frac{XC}{OX} \times 100 = 100\%$$

விவசாயத்துறைப் பண்ட உற்பத்தி அதிகரிப்பு வீதம்

$$= \frac{BY}{OY} \times 100 = 50\%$$

25% பொருளாதார வளர்ச்சி

உற்பத்தி சாத்திய வளையி 25% பொருளாதார வளர்ச்சி காரணமாக வலது புறம் நோக்கி நகரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

AB ஆரம்ப உற்பத்தி சாத்திய வளையி
CD புதிய உற்பத்தி சாத்திய வளையி

25% பொருளாதார வீழ்ச்சி காரணமாக ஆரம்ப உற்பத்திச் சாத்திய வளையி AB இடது புறம் நோக்கி நகர்ந்து CD ஆக அமைந்துள்ளது.

பொருளாதார வளர்ச்சி வீதம் $= \frac{BD}{OB} \times 100 = 25\%$

$= \frac{AC}{OA} \times 100 = 25\%$

$= \frac{XY}{OX} \times 100 = 25\%$

20% பொருளாதார வீழ்ச்சி

20% பொருளாதார வீழ்ச்சி காரணமாக உற்பத்திசாத்தியவளையி கீழ் புறம் நோக்கி நகரும்.



AB ஆரம்ப உற்பத்தி சாத்திய வளையி
CD புதிய உற்பத்தி சாத்திய வளையி

20% பொருளாதார வீழ்ச்சி காரணமாக ஆரம்ப உற்பத்திச் சாத்திய வளையி AB இடது புறம் நோக்கி நகர்ந்து CD ஆக அமைந்துள்ளது.

பொருளாதார வளர்ச்சி வீதம் $= \frac{BD}{OB} \times 100 = 20\%$

$= \frac{AC}{OA} \times 100 = 20\%$

$= \frac{YX}{OY} \times 100 = 20\%$

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினைத்திறன் மிக்க கணிசமான கணினித் தொழிலாளர்களின் தேறிய குடியகல்வு



XY - ஆரம்ப உற்பத்திச்சாத்திய வளையி

X_1B_1 - புதிய உற்பத்திச்சாத்திய வளையி

ஆரம்ப உற்பத்தி சாத்திய வளையி (XY) ஆகும்.

வினைத்திறன் மிக்க கணிசமான கணினித் தொழிலாளர்களின் தேறிய குடியகல்வு காரணமாக உற்பத்தி சாத்திய வளையில் கணினி உற்பத்தி குறிக்கப்பட்ட அச்சில் அதிக அளவு உட்புறம் நோக்கி இடம் பெயர்ந்து X_1B_1 ஆக அமைந்துள்ளது.

குறிப்பு :-

- வினைத்திறன்மிக்க கணிசமான கணினி தொழிலாளர்களின் தேறிய குடியகல்வு மற்றைய உற்பத்தியிலும் சிறிதளவு வீழ்ச்சியை உண்டு பண்ணியிருப்பதை காணலாம்.

சதவீதம் கணிப்பதற்கான சமன்பாடு

$$\text{சதவீதம்} = \frac{\text{மாற்றம்}}{\text{ஆரம்பம்}} \times 100$$

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊழியவளம் முழுமையாகப் பயன்படுத்தப்படும் நிலை



K உற்பத்திச்சாத்திய பகுதியில் உள்ள புள்ளி.

ஊழியவளம் முழுமையாக பயன்படுத்தப்படும் நிலையை K குறிக்கிறது.

குறிப்பு :-

♣ ஊழிய வளம் முழுமையாகப் பயன்படுத்தப்படுகிறது என்பதன் உட்கிடையான அர்த்தம் ஏனைய வளங்கள் முழுமையாகப் பயன்படுத்தப் படவில்லை என்பதாகும்.

நிறைதொழில் பொருளாதாரத்தில் வளங்களின் திறமையான பயன்பாடு



A, B என்பன உற்பத்திச்சாத்திய வளையில் உள்ள புள்ளிகள் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறை தொழில் பொருளாதாரத்தில் வளங்கள் திறமையாக பயன்படுத்தபடுமாயின் உற்பத்திச்சாத்திய எல்லை கோட்டில் பொருளாதாரம் அமையும். (A / B)

நிறை தொழில் பொருளாதாரத்தில் திறமையற்ற சாதனப் பயன்பாடு



C - உற்பத்திச்சாத்திய பகுதியில் உள்ளது.

திறமையற்ற சாதனப்பயன்பாடு காரணமாக உற்பத்திச்சாத்திய பகுதியில் பொருளாதாரம் அமைந்து காணப்படும். இங்கு C இதனை குறிக்கின்றது.

அரச முயற்சிகள் தனியார் மயப்படுத்தலினால் வினைத் திறனின்மைகள் குறைந்து வெளியீடுகள் அதிகரித்தல்



இதன் காரணமாக வெளியீடு அதிகரிக்கும் உற்பத்திச்சாத்திய பகுதியில் உள்ள புள்ளி உற்பத்திசாத்திய வளையியை நோக்கி நகரும் (A → B)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீரற்ற பொருளாதார வளர்ச்சி என்பது உற்பத்திகளில் ஏற்படுகின்ற உற்பத்தி அதிகரிப்புக்களின் வீதங்கள் சமனாக அமையாது.



AB - ஆரம்ப உற்பத்திச்சாத்திய வளையி

CD - புதிய உற்பத்திச்சாத்திய வளையி

ஆரம்ப உற்பத்தி சாத்திய வளையி AB ஆனது சீரற்ற பொருளாதார வளர்ச்சியினால் வலப்புறமாக நகர்ந்து புதிய உற்பத்தி சாத்திய வளையி CD ஆக அமைந்துள்ளது.

ஆடம்பரபண்டத்தின் உற்பத்தி அதிகரிப்பு %		அத்தியாவசியப்பண்டம் உற்பத்தி அதிகரிப்பு %
$\frac{AC}{OA} \times 100$	$\neq$	$\frac{BD}{OB} \times 100$

இங்கு உற்பத்திகளில் ஏற்பட்ட வளர்ச்சி வீதங்கள் சமனாக காணப்பட மாட்டாது.

வரியிடலில் கிடைநிலைச் சமத்துவம் (Horiziontal equity)

வரி அறவீட்டின் போது சமமான பொருளாதார நிலையிலுள்ள நபர்கள் மீது சமமான வரிச்சுமை ஏற்படுவதன்மூலம் நியாயத்துவம் பேணப்படுகிறது. சமமான தரத்தில் உள்ளவர்களை சமமாக நடத்துவது கிடைநிலைச் சமத்துவம் எனப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளங்கள் சிறந்த முகாமையின் கீழ் கொண்டு வருவதால் உற்பத்தி அதிகரித்தல்

வளங்கள் சிறந்த முகாமையின் கீழ் கொண்டு வருவதால் உற்பத்தி அதிகரிப்பு காரணமாக உற்பத்தி சாத்திய பகுதியிலுள்ள A புள்ளி உற்பத்தி சாத்திய வளையி நோக்கி நகரும்.



A, B என்பன உற்பத்திச்சாத்தியப்பகுதியில் அமைந்துள்ளன.

B உற்பத்திச் சாத்திய வளையிக்கு அருகில் உள்ள புள்ளி ஆகும் (Aயை விட)

வளங்கள் சிறந்த முகாமையின் கீழ் கொண்டு வருவதால் உற்பத்தி அதிகரித்தால் உற்பத்திச்சாத்திய பகுதியிலுள் A புள்ளி உற்பத்தி சாத்திய வளையி நோக்கி நகர்ந்து B ஆக அமைந்துள்ளது.

மையப் பணவீக்கம்

1975இல் றொபேட் J.கோர்டன் என்பவரினால் மையப் பணவீக்க எண்ணக்கரு வலியுறுத்தப்பட்டது.

முதன்மைப் பணவீக்கத்திலிருந்து அதிகளவு தளம்பலைக் கொண்ட பொருட்களின் நிர்வகிக்கப்பட்ட விலைகளை விலக்குவதன் மூலம் பொதுவாக கணிப்பிடப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடம்பரப் பண்டங்களை உற்பத்தி செய்யும் சில தொழிற்சாலைகளில் மட்டும் வேலைநிறுத்தம் இடம்பெறல்



R - ஆரம்ப உற்பத்திச்சாத்திய வளையி உள்ள புள்ளி

T - புதிய உற்பத்திச்சாத்திய பகுதியில் உள்ள புள்ளி

உற்பத்திச்சாத்திய வளையி உள்ள புள்ளி R ஆடம்பரப் பண்டங்களை உற்பத்தி செய்யும் சில தொழிற்சாலைகளில் மட்டும் வேலை நிறுத்தம் இடம்பெறுவதால் உற்பத்திச்சாத்திய பகுதியை நோக்கி நகர்ந்து T ஆகவுள்ளது.

குறிப்பு :-

- R → T ஆடம்பரப்பண்டம் குறிக்கப்பட்ட அச்சுக்குச் சமாந்தரமான நகர்வதை அவதானிக்கலாம்.

குத்துநிலைச் சமத்துவம் (Vertical equity)

பொருளாதார ரீதியில் சமமற்ற நிலையில் உள்ள நபர்கள் மீது வரிச்சுமை சமமற்ற விதத்தில் சுமத்தப்படுவது நியாயத்துவம் பேணப்பட அவசியமானதென்பதை குத்துநிலைச் சமத்துவம் என்னும் எண்ணக்கரு விளக்குகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறுங்காலம்

உற்பத்தி : உற்பத்தி சாத்திய வளையி குறுங்காலத்தில் அப் பொருளாதாரம் உற்பத்தி செய்யக்கூடிய மிக உச்ச அளவுகளை காட்டி நிற்கின்றது.

ஆகவே, அதற்கு அப்பால் அதாவது உற்பத்திச் சாத்தியமற்ற பகுதியிலுள்ள பொருட்குவியலை குறுங் காலத்தில் உற்பத்தி செய்ய முடியாது.

நுகர்வு : உற்பத்தி சாத்தியமற்ற பகுதியிலுள்ள பொருட்குவியலின் நுகர்வு குறுங்காலத்தில் சாத்தியம்.

இதனை ஒரு பொருளாதாரம் எவ்வாறு மேற் கொள்கின்றது என்றும் அதற்கான நிபந்தனைகள், வரையறைகள் என்பனவற்றை மாணவர்களுக்கு ஏற்கனவே விளக்கியுள்ளேன். குறுங்காலத்தில் உற்பத்தி செய்ய முடியாது.

நீண்டகாலம்

உற்பத்தி சாத்தியமற்ற பகுதியிலுள்ள குறித்த பொருட்குவியலை பொருளாதாரம் நீண்ட காலத்தில் உற்பத்தி செய்து நுகர முடியும்.

இதற்கு பொருளாதாரத்தில் ஏற்படவேண்டிய முக்கியமான மாற்றம் யாதெனில் பொருளாதார வளர்ச்சி ஏற்பட வேண்டும். அதுவும் போதுமானதான பொருளாதார வளர்ச்சியாக காணப்படும் பட்சத்திலேயே குறித்த பொருட்குவியலின் உற்பத்தி, நுகர்வு என்பன சாத்தியமானதாகும்.

இதனை பின்வரும் வரிபடம் மூலம் தெளிவாக்கப்படுகின்றது.



K பொருட்குவியல் உற்பத்திச்சாத்தியமற்ற பகுதியில் உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்பத்திச் சாத்தியமற்ற பகுதியில் உள்ள பொருட்குவியலின் நுகர்வு சாத்தியமாக வேண்டின் கீழ்வரும் மூன்று நிபந்தனைகளும் பூர்த்தியாக்கப்பட்டு இருக்க வேண்டும்.

- குறித்த பொருட்குவியலை நுகர பொருளாதாரம் நாட்டமுடைய தாக இருத்தல்.
- திறந்த பொருளாதாரமானதாக இருப்பதுடன் இறக்குமதி, ஏற்றுமதி வசதித்தன்மை உடையதாக இருத்தல்.
- குறித்த பொருட்குவியலை இறக்குமதி செய்வதற்கு போதுமான ஏற்றுமதியின் இறக்குமதி ஆற்றல் காணப்படல்.

உற்பத்திச் சாத்தியமற்ற பகுதியில் உள்ள பொருட்குவியல்

- குறுங்காலத்தில் உற்பத்தி செய்ய முடியாது.
- குறுங்காலத்தில் நுகர்வு செய்யலாம்.
- சர்வதேச பரிமாற்றத்தை மேற்கொள்வதன் மூலம் இதனை மேற்கொள்ள ஏற்றுமதியின் இறக்குமதி ஆற்றல் (தேறிய பண்ட வர்த்தக மாற்று விகிதம்) போதியளவு காணப்படவேண்டும்.
- நீண்டகாலத்தில் பொருளாதாரம் உற்பத்தி செய்து நுகரலாம்.
- குறித்த பொருட்குவியல் தொடர்பாக போதுமான பொருளாதார வளர்ச்சி இடம் பெறும் போது மட்டுமே இது சாத்தியம்

கடன் தரமிடலுக்கு பொதுவான அளவு கருவிகள்

AAA-BBB முதலீட்டு வகுப்பு

இவ்வாறான கடன்களை மீள்ப்பெறமுடியாமல் போவதற்கான சாத்தியங்கள் மிகக் குறைவு

B-D முதலீடு அல்லாத வகுப்பு உத்தேச வகுப்புக்கள் இவை மீளப்பெறமுடியாமல் போவதற்கான சாத்தியங்கள் அதிகம்.

கடன் தரமிடல் செய்யும் பிரதான மூன்று சர்வதேச நிறுவனங்கள்

1. Moody's
2. Standard@Poors
3. Fitcg Rating

கடன்தரமிடல் பொருட்டு குறிப்பிட்ட நிறுவனத்தில் நிதி நடவடிக்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாடு தனது இயல் அளவிற்கு அப்பால் இருக்கின்ற பொருட் குவியலை சர்வதேச பரிவர்த்தனையினூடாக நுகர்தல்.

Q. ஒரு நாடு தனது உற்பத்தி இயலளவை விட உயர்ந்த மட்டத்தில் நுகர்வை வைத்திருப்பது **சாத்தியமா?** உமது விடையை **விளக்குக.**



y பண்டத்தின் DE அளவினை ஏற்றுமதி செய்வதன் மூலம்

x பண்டத்தின் CD அளவினை இறக்குமதி செய்யலாம்.

இது உள்நாட்டு பரிமாற்றமாகிய DF அளவை விட FC அளவினால் அதிகமாக காணப்படுகிறது.

நாட்டின் ஏற்றுமதியின் இறக்குமதி ஆற்றல் இதனை தீர்மானிக்கும்.

பொருளாதாரமொன்றில் உற்பத்தித் திறனை தீர்மானிக்கும் பிரதான காரணிகள்

- வளக்கட்டமைப்பு (பௌதீக மூலதனம், மனித மூலதனம், இயற்கை மூலதனம்)
- தொழினுட்ப அறிவு
- புத்தகங்கள்
- வரி முறை முகாமைத்துவம்
- கட்டற்ற வர்த்தகம்
- நிதியமைப்பின் விருத்தி
- தொழில் தருநர்
- தொழிலாளி இடையிலான தொடர்புகள்
- உட்கட்டமைப்பு வசதிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார வளர்ச்சி ஏற்படுத்த வேண்டுமாயின் நிகழ்காலத்தில் வளங்களை அதிகளவு முதலீட்டுக்கு ஒதுக்க வேண்டும்.

ஆகவே பொருளாதார வளர்ச்சிகான அமையச் செலவாக நிகழ்கால நுகர்வு உள்ளது.



படத்தில் : AB என்பன உற்பத்திச்சாத்திய வளையியில் உள்ள புள்ளிகள்

A யிலிருந்து B க்கு நகரும் போது,

பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான முதலீட்டுப் பண்டங்கள் அதிகளவு இடம்பெறுவதையும் நுகர்வுப்பண்டங்களில் ஒரு குறைவு ஏற்படுவதையும் அவதானிக்கலாம்.

இதன் மூலம் பொருளாதார வளர்ச்சிக்கான அமையச்செலவு காட்டப்படுகிறது.

குறிப்பு :-

- இங்கு, நிகழ்கால வாழ்க்கைத் தரத்தில் ஒரு தேய்வு இடம்பெறுகின்ற அதேவேளை, எதிர்கால வாழ்க்கைத் தரத்தில் ஓர் அதிகரிப்பு ஏற்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடொன்றின் பொருளாதாரச் செயலாற்றத்தை மதிப்பீடு செய்வதற்கு உற்பத்தி சாத்திய வளையி பயன்படும் விதம்

உற்பத்தி சாத்திய வளையியை பயன்படுத்தி பின்வரும் அம்சங்களை விளக்க முடியும். அதனூடாக நாடொன்றின் பொருளாதார செயலாற்றத்தை மதிப்பிட்டுக் கொள்ள முடியும்.

1. வளங்களின் வினைத்திறனான பயன்பாடும், வளங்களின் வினைத் திறனற்ற பயன்பாடும்.



2. பொருளாதார வளர்ச்சி அல்லது பொருளாதார வீழ்ச்சி

பொருளாதார வளர்ச்சி காரணமாக உற்பத்திச் சாத்திய வளையி வலது புறம் நோக்கி நகரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார வீழ்ச்சி காரணமாக உற்பத்திசாத்தியவளையி கீழ் புறம் நோக்கி நகரும்.



3. உற்பத்தித்திறன் அதிகரிப்பு அல்லது உற்பத்தித் திறன் வீழ்ச்சி



Q. ஒரு பொருளாதாரத்தின் உற்பத்திச் சார்பு உமக்கு கீழே தரப்பட்டுள்ளது.

$$2A = 200 - 4B$$

A = விமான எதிர்ப்பாயுதங்களையும்

B = மருத்துவப் பொருட்களையும் குறிக்கின்றன.

உற்பத்திக்களுக்கான சந்தர்ப்பக்கிரயங்கள் நிலையானவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ. பொருளாதாரத்தின் உற்பத்திச் சாத்திய வளையி எவ்வாறு **அமையும்?**

விமான எதிர்ப்பு ஆயுதங்கள் (அலகு)	மருத்துவப் பொருட்கள் (அலகு)
100	0
0	50



ஆ. விமான எதிர்பாயுத உற்பத்திக்கான அமையச் செலவு **யாது?**

விமான எதிர்பாயுதத்துக்கான அமையச் செலவு

$$= \frac{50 \text{ அலகு மருத்துவப் பொருட்கள்}}{100}$$

$$= \frac{1}{2} \text{ அலகு மருத்துவப் பொருட்கள்}$$

இ. மருத்துவப் பொருளுற்பத்திக்கான அமையச் செலவு **யாது?**

மருத்துவப் பொருளுற்பத்திக்கான அமையச் செலவு

$$= \frac{100 \text{ அலகு விமான எதிர்ப்பாயுதங்கள்}}{50}$$

$$= 2 \text{ அலகு விமான எதிர்ப்பாயுதங்கள்}$$

Q. ஒரு பொருளாதாரத்தின் உற்பத்திச் சார்பு வருமாறு.

$$D = 400 - 20C$$

D = ஆடம்பரப்பண்டம்

C = அத்தியாவசியப் பண்டம் என்பவற்றை குறிக்கின்றன.

இரு பண்டங்கள் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகின்றன. வளங்கள் முழுமையாகவும் திறமையாகவும் மாறா அமையச் செலவின் கீழ் இடம்பெறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ. 25% பொருளாதார வீழ்ச்சி பதிவாகி உள்ள நிலைமையை வரிப்படத்தில் காட்டுக.

D = 400 - 20C

ஆடம்பரப்பண்டம் (அலகு)	அத்தியாவசியப்பண்டம் (அலகு)
400	0
0	20

D = 300 - 20C

ஆடம்பரப்பண்டம் (அலகு)	அத்தியாவசியப்பண்டம் (அலகு)
300	0
0	15



ஆ. ஆடம்பரப்பண்டத்திற்கு ஆரம்பத்தில் காணப்பட்ட அமையச் செலவு யாது?

ஆடம்பரப்பண்டத்திற்கான ஆரம்ப அமையச் செலவு

$= \dfrac{20 \text{ அலகு அத்தியவசிப்பண்டம்}}{400}$

$=$ 1/20 அலகு அத்தியாவசிப்பண்டம்

இ. ஆடம்பரப்பண்டத்திற்கான புதிய அமையச் செலவு யாது?

ஆடம்பரப்பண்டத்திற்கான புதிய அமையச் செலவு

$= \dfrac{15 \text{ அலகு அத்தியவசிப்பண்டம்}}{300}$

$=$ 1/20 அலகு அத்தியாவசிப்பண்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ. அத்தியாவசியப்பண்டத்திற்கான ஆரம்ப அமையச் செலவு **யாது?**

அத்தியாவசியப்பண்டத்திற்கான ஆரம்ப அமையச் செலவு

$$= \frac{400 \text{ அலகு ஆடம்பரப்பண்டம்}}{20}$$

$$= 20 \text{ அலகு ஆடம்பரப்பண்டம்}$$

உ. அத்தியாவசியப்பண்டத்திற்கான புதிய அமையச் செலவு **யாது?**

அத்தியாவசியப்பண்டத்திற்கான புதிய அமையச் செலவு

$$= \frac{300 \text{ அலகு ஆடம்பரப்பண்டம்}}{150}$$

$$= 20 \text{ அலகு ஆடம்பரப்பண்டம்}$$

Q. x, y ஆகிய இரு பண்டங்களை உற்பத்தி செய்கின்ற பொருளாதாரத்தில் வளங்கள் முழுமையாகவும், திறமையாகவும் பயன்படுத்தப்படுகின்றது தொழில்நுட்பம் மாறவில்லை.

உற்பத்தி சாத்திய வளையிகள் நேர்கோட்டு தன்மை உடையவை எனக் கொள்க. இப்பொருளாதாரத்தின் அமையச் செலவு சார்பு பின்வருமாறு அமைந்து காணப்படுகின்றது.

$$Y = \frac{1}{2}x$$

அ. இப்பொருளாதாரத்தில் உற்பத்தி சாத்திய வளையியை **வரைக.**

y = *புடவை*

x = *அரிசி உற்பத்திகளைக் குறிக்கின்றன.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. ஒரு புதிய தொழில்நுட்பத்தின் அரிசி உற்பத்தியில் மாத்திரம் 20% அதிகரிப்பை உண்டு பண்ணியது.

இதனை உற்பத்திசாத்திய வளையியில் **காட்டுக.**



y பண்ட உற்பத்தி அதிகரிப்பு % $= \frac{0}{20} \times 100$

$= 0$

x பண்ட உற்பத்தி அதிகரிப்பு % $= \frac{2}{10} \times 100$

$= 20\%$

இ. அரிசிக்கான ஆரம்ப அமையச் செலவை **கணிக்க.**

அரிசி உற்பத்திக்கான ஆரம்ப அமையச் செலவு

$= \frac{20 \text{ அலகு புடவை}}{10}$

$= 2$ அலகு புடவை

ஈ. அரிசி உற்பத்திக்கான புதிய அமையச் செலவைக் **கணிக்க.**

அரிசி உற்பத்திக்கான புதிய அமையச் செலவு

$= \frac{20 \text{ அலகு புடவை}}{10}$

$= 1.67$ அலகு புடவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ. புடவை உற்பத்திக்கான ஆரம்ப அமையச் செலவை **கணிக்க.**

புடவை உற்பத்திக்கான ஆரம்ப அமையச் செலவு

$$= \frac{10 \text{ அலகு அரிசி}}{20}$$

$$= 0.5 \text{ அலகு அரிசி}$$

ஊ. புடவை உற்பத்திக்கான புதிய அமையச் செலவைக் **கணிக்க.**

புடவை உற்பத்திக்கான புதிய அமையச் செலவு

$$= \frac{12 \text{ அலகு அரிசி}}{20}$$

$$= 0.6 \text{ அலகு அரிசி}$$

ஒரு உற்பத்தியில் மட்டும் அதிகரிப்பு ஏற்படுகின்ற போது ஆரம்ப, புதிய அமையச் செலவுகளின் படி எந்த உற்பத்திக்கான அமையச் செலவு குறைகிறது என்பதை மாணவர் நன்கறிந்து நினைவில் வைத்திருக்க வேண்டும்.

Q. ஒரு பொருளாதாரம் பற்றி விபரங்கள் வருமாறு.

- *வளங்கள் முழுமையாக பயன்படுத்தப்படுகின்றது.*
- *வளங்கள் திறமையாக பயன்படுத்தப்படுகிறது.*
- *மாறா தொழில் நுட்பத்தில் இரு வேறுபட்ட பண்டங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.*

4S = 500 - 10T *என்பது உற்பத்தி சார்பாக அமைந்து காணப் படுகின்றது.*

S = *மருத்துவப் பொருட்கள்*

T = *யுத்த தளபாடங்கள்*

அ. உற்பத்திச் சாத்திய வளையியை **வரைக.**

மருத்துவப் பொருட்கள் (அலகு)	*யுத்த தளபாடங்கள் (அலகு)*
125	0
0	50

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆ. யுத்த தளபாட உற்பத்தித்திறன் 25% இல் வீழ்ச்சியடைந்து பின் உள்ள நிலைமையை வரிப்படத்தில் **காட்டுக.**



இ. யுத்ததளபாடங்களுக்கான ஆரம்ப அமையச் செலவு **யாது?**

யுத்த தளபாட உற்பத்திக்கான ஆரம்ப அமையச் செலவு

$$= \frac{125 \text{ அலகு மருத்துவப் பொருட்கள்}}{50 \text{ அலகு}}$$

$$= 2.5 \text{ அலகு மருத்துவப் பொருட்கள்}$$

ஈ. யுத்த தளபாடங்களுக்கான புதிய அமையச் செலவு **யாது?**

யுத்த தளபாட உற்பத்திக்கான புதிய அமையச் செலவு

$$= \frac{125 \text{ அலகு மருத்துவப் பொருட்கள்}}{37.5}$$

$$= 3.33 \text{ அலகு மருத்துவப் பொருட்கள்}$$

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. பொருளாதார நடத்தை தொடர்பில் பின்வரும் கூற்றுக்களில் மிகச்சரியானது எது?

(1) ஒரு பொருளாதாரத்தில் நடைபெற்ற, நடைபெறுகின்ற உண்மையான விடயங்களுடன் தொடர்புடைய ஆய்வு செயற்பாடுகள்.

(2) வரையறுக்கப்பட்ட வளங்களைப் பயன்படுத்தி பௌதீகத் தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவேற்றப்படும் செயற்பாடாகும்.

(3) சமூகத்தின் தேவைகளை நிறைவேற்றுவது தொடர்பான மனித நடத்தையாகும்.

(4) வரையறுக்கப்பட்ட வளங்களை கொண்டு அனைத்து மனித தேவைகளையும் விருப்பங்களையும் பூர்த்தி செய்யும் செயற்பாடாகும்.

(5) மனிதனுடைய பல்துறைசார் நலன் பற்றிய நடத்தையாகும்.

2. பின்வருவனவற்றுள் உளத்தேவையாக கருதப்படுவது யாது?

(1) உணவு (2) உடை (3) வீடு

(4) அன்பு (5) போக்குவரத்து

3. பின்வருவனவற்றுள் எது சிற்றின பொருளியல் ஆய்விற்குள் **உள்ளடங்காத** விடயமாகும்?

(1) குறித்தவொரு பண்டத்திற்கான கேள்வி, நிரம்பல் விலை தீர்மானம் தொடர்பான ஆய்வு.

(2) சந்தையில் நுகர்வோரின் நடத்தை.

(3) நிறுவனமொன்றின் உற்பத்தி தொழிற்பாடு.

(4) ஒவ்வொரு பண்டம் தொடர்பாகச் சந்தை தொழிற்பாடு.

(5) பொருளாதார வளர்ச்சி தொடர்பான ஆய்வு

4. வீட்டுத்துறையினரும் நிறுவனத்துறையினரும் தனித்தனியே மேற்கொள்ளும் தீர்மானங்களை பற்றி ஆய்வு செய்யும் பொருளியல் ஆய்வு பிரிவானது

(1) பேரின பொருளியல் ஆகும்

(2) சிற்றின பொருளியல் ஆகும்.

(3) நேர்பொருளியல் ஆகும்.

(4) நியம பொருளியல் ஆகும்.

(5) மனை பொருளியல் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. நேர்கூற்று தொடர்பான மிகச்சரியான கூற்று எது?

(1) ஒரு பொருளாதாரத்தினுள் யாது நிகழவேண்டும்? எவ்வாறு பொருளாதாரம் இருத்தல் வேண்டும்? என்ற அடிப்படையில் அமைந்தது.

(2) உண்மை தன்மை நடைமுறை உலகத்துடன் ஒப்பிட்டு நோக்க முடியாது.

(3) நேர்கூற்றுக்கள் தனிநபர் கருத்துக்கள் நம்பிக்கைகளின் அடிப்படையில் இருப்பதனால் பெரும்பாலும் தனிநபர் ரீதியானது.

(4) நேர் கூற்றுக்களில் விஞ்ஞான பூர்வமான தன்மையையும் கோட்பாட்டு ரீதியான தன்மையையும் கொண்டது.

(5) பொருளாதார கொள்கைகளை வகுக்கும்போது நேர்கூற்றுக்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

6. பின்வருவனவற்றுள் நியமக்கூற்றாக அமைவது எது?

(1) ஒவ்வொரு ஊழியரினதும் மாதாந்தச் சம்பளத்தை ரூ. 10% இனால் உயர்த்துதல் வேண்டும்.

(2) 2017 ஆம் ஆண்டில் இலங்கையின் வேலையின்மை வீதமானது 42% ஆகும்.

(3) விலைக்கும் கேள்வித் தொகைக்குமிடையே எதிர்கணிய தொடர்பு காணப்படும்.

(4) சுற்றாடல் என்பது அருமையான வளத்திற்கான ஓர் உதாரணமாகும்.

(5) இலங்கையின் பணவீக்கம் தற்போது ஒற்றை இலக்கத்தில் உள்ளது.

7. பின்வரும் வினாக்களில் எது நேர்பொருளியல் ஆய்வுமுறை மூலம் பரீட்சிக்கப்பட **முடியாதது?**

(1) எப்பொருட்களும் சேவைகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன?

(2) எவ்வாறு பொருட்களும் சேவைகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன?

(3) தனிநபர்களிடையே பொருட்களும் சேவைகளும் எவ்வாறு பகிரப்பட வேண்டும்?

(4) உற்பத்தியில் எத்தகைய வளங்கள் பயன்படுத்தப்பட இருக்கின்றன?

(5) முதலீட்டு மட்டம் எவ்வாறு தீர்மானிக்கப்படுகின்றது?

8. பின்வருவனவற்றுள் பொருளாதார பண்டமாக அமைவது எது?

(1) சூரிய ஒளி (2) கடல்

(3) நீர் (4) வானொலி

(5) வளிமண்டலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. பின்வரும் எந்த வகையான பொருள் சந்தர்ப்பச் செலவு காணப்படுதல் அல்லது காணப்படாதிருத்தல் மூலம் ஒன்றிலிருந்து மற்றையதை வேறு படுத்துகின்றது?

(1) மேன்மையற்ற பண்டமும் மேன்மைப் பண்டமும்.

(2) இழிவுப் பண்டமும் சாதாரணப் பண்டமும்.

(3) தனியார் பண்டமும் பொது பண்டமும்.

(4) பொதுப் பண்டம் அரைப்பொதுப் பண்டமும்.

(5) பொருளாதார பண்டமும் இலவச பண்டமும்.

10. பொருளாதாரமல்லா பண்டம் தொடர்பான கூற்றுக்களில் **பிழையான** கூற்று எது?

(1) மானிய விலையில் கிடைக்கக்கூடியது.

(2) அருமையான வளங்களை பயன்படுத்தி உற்பத்தி செய்ய முடியாதது.

(3) அமையச்செலவு கொண்டது.

(4) இலவசமாக கிடைக்கக்கூடியது.

(5) இலாபம் உழைப்பதற்கு பயன்படுத்தக்கூடியது.

11. பின்வருவனவற்றுள் புதுப்பிக்ககூடிய வளம் எது?

(1) மீன்வளம்

(2) கனியவளம்

(3) எரிவாயு

(4) நிலக்கரி

(5) இரத்தினக்கல்

12. பின்வருவனவற்றுள் உற்பத்தி காரணி **அல்லாதது** எது?

(1) நிலம்

(2) உழைப்பு

(3) மூலதனம்

(4) முயற்சி

(5) பணம்

13. மனித வளங்களாக அமைவது,

(1) நிலமும் மூலதனமும்

(2) நிலமும் உழைப்பும்

(3) மூலதனமும் உழைப்பும்

(4) உழைப்பும் மூலதனமும்

(5) உழைப்பும் முயற்சியாண்மையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. ஆதன வளங்கள் எனப்படுபவை

(1) மூலதன வளமும் முயற்சியும்

(2) உழைப்பும் முயற்சியாண்மையும்

(3) இயற்கை வளமும் உழைப்பும்

(4) இயற்கை வளமும் மூலதன வளமும்

(5) இயற்கை வளமும் முயற்சியும்

15. உற்பத்தி காரணியான நிலம் தொடர்பில் மிகச்சரியான கூற்று எது?

(1) நிரம்பல் நெகிழ்வற்றது.

(2) நிலத்திற்கான காரணி கொடுப்பனவு வட்டியாகும்.

(3) பெறுமானத் தேய்வு அடையக்கூடியது.

(4) வினைத்திறன் கொண்டது.

(5) மனிதனினால் உருவாக்கப்பட்ட வளம்.

16. நிலம், உழைப்பு, மூலதனம், முயற்சி என்னும் வள உரிமையாளர்களுக்கு வழங்கப்படும் வருமானச் செலுத்தல்களான முறையே,

(1) வட்டி, கூலி, வாடகை இலாபமாகும்.

(2) வாடகை, கூலி, பங்கிலாபம் வட்டியாகும்.

(3) வாடகை, இலாபம், கூலி வட்டியாகும்.

(4) வாடகை, கூலி, வட்டி இலாபமாகும்.

(5) வட்டி, கூலி, பங்கிலாபம் வாடகையாகும்.

17. பின்வருவனவற்றுள் உற்பத்தி காரணி என்ற ரீதியில் மூலதனம் என்பதற்கு உதாரணமாக அமைவது,

(1) ஒரு வங்கி கடன் (2) பணம்

(3) காடுகள் (4) நீர்வீழ்ச்சி

(5) ஓர் உழவு இயந்திரம்

18. ஊழியரிடமுள்ள அறிவு, அனுபவம், திறமை என்பன பின்வருவனவற்றுள் எந்த வகை மூலதனத்தை சார்ந்தது?

(1) இயற்கை மூலதனம் (2) தொழிற்படு மூலதனம்

(3) மானிட மூலதனம் (4) சமூக பொதுச்செயற்பாட்டு மூலதனம்

(5) சமூக மூலதனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. முயற்சியாண்மையின் (முயற்சியாளரின்) தொழிற்பாடுகளில் **உள்ளடங்காதது** எது?

(1) கொள்கை ரீதியான தீர்மானங்களை மேற்கொள்ளல்.

(2) உற்பத்தி நடவடிக்கைகளை ஒழுங்கமைத்தல்.

(3) புது பொருட்களின் உற்பத்தியில் ஈடுபடல்.

(4) ஆபத்துக்களை எதிர்கொள்ளல்.

(5) அருமை பிரச்சினைக்கு தீர்வு காணுதல்.

20. காரணி உற்பத்தி திறனை நிர்ணயிக்கும் காரணிகளுள் **உள்ளடங்காத** விடயம் எது?

(1) தொழினுட்பம் (2) மனித மூலதனம்

(3) முகாமைத்துவத்திறன் (4) தொழிற்பிரிப்பும் சிறப்பு தேர்ச்சியும்

(5) வளங்களின் அருமை

21. பொருளியலின் "அருமை" என்ற எண்ணக்கருவினால் குறிப்பிடப்படுவது

(1) கிடைக்கப்பெற்ற வளங்களை கொண்டு மக்களின் விருப்பங்களை பூர்த்தி செய்ய இயலாத நிலையாகும்.

(2) வரையறுக்கப்பட்ட வளங்களை சமூகம் பயன்படுத்தாத நிலையாகும்.

(3) உற்பத்தி வினைத்திறனாகவுள்ள போதிலும் பங்கீடு வினைத்திறனற்ற நிலையாகும்.

(4) ஒவ்வொரு சமூகத்திலுள்ள வறுமையை குறிப்பதாகும்.

(5) வளங்களை உரிய உற்பத்திக்கு பயன்படுத்தாத நிலையாகும்.

22. பின்வரும் கூற்றுக்களில் சரியாக கூற்றுக்களை உள்ளடக்கும் தொகுதியை தெரிவு செய்க.

a. அமையச் செலவில் நேர் செலவு மட்டுமே உள்ளடங்கும்.

b. அமையச் செலவு என்பது ஒரு மெய்ரீதியான எண்ணக்கருவாகும்.

c. அமையச் செலவினுள் வெளிவாரிச் செலவும் உள்ளடங்கும்.

d. அமையச் செலவு நேரக்கணியப் பெறுமானத்தை பெறும் பொருட்கள் பொருளாதாரப் பண்டங்களாகும்.

(1) *a, b* (2) *a, b, c*

(3) *b, d* (4) *a, b, c, d*

(5) *a, d*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. அருமைப் பிரச்சினையானது.

(1) சந்தை பொறிமுறையில் இயங்கும் பொருளாதார முறைமையினுள் மட்டுமே காணப்படும்.

(2) திட்டமிடற் பொறிமுறையில் இயங்கும் பொருளாதார முறைமையினுள் மட்டுமே காணப்படும்.

(3) எல்லாப் பொருளாதாரங்களிலும் காணப்படும்.

(4) மனிதர்கள் தமது வருமானத்தை உத்தமமான விதத்தில் செலவிடாத போது மட்டும் ஏற்படும்.

(5) எல்லா பொருளாதாரங்களிலும் காணப்படுகின்ற போதிலும் பொருளாதார வளர்ச்சியின் மூலம் அது அகற்றப்பட்டுவிடும்.

24. ஒவ்வொரு சமூகத்திலும் அருமை இருப்பதற்கான காரணம்

(1) வரையறுக்கப்பட்ட விருப்பங்களும் கைவிடப்பட்ட வளங்களும்

(2) வரையறுக்கப்பட்ட வளங்களும் வரையறுக்கப்படாத உற்பத்தி ஆற்றலும்

(3) வரையறுக்கப்பட்ட வளங்களும் வரையறுக்கப்படாத விருப்பங்களும்

(4) வரையறுக்கப்பட்ட உற்பத்தி ஆற்றலும் வரையறுக்கப்படாத பொருளாதார வளங்களின் அளவும்

(5) வரையறுக்கப்படாத வளங்களும் வரையறுக்கப்பட்ட விருப்பங்களும்

25. பொருளியலில் அமையச் செலவென வரைவிலக்கணப்படுத்தப்படுவது.

(1) ஏதேனும் ஒன்றை பெற்றுகொள்ளும் பொருட்டு இழக்கப்பட்ட ஏனைய வாய்ப்புக்களாகும்.

(2) ஏதேனும் ஒன்றைப் பெற்றுகொள்ளும் பொருட்டு செலவிடப்பட்ட பணச் செலவாகும்.

(3) ஏதேனும் ஒன்றைப் பெற்றுகொள்ளும் பொருட்டு ஏற்பட்ட காலத்தின் செலவாகும்.

(4) ஏதேனும் ஒன்றைப் பெற்றுகொள்ளும் பொருட்டு ஏற்பட்ட நிலையான மற்றும் மாறும் செலவுகளின் கூட்டுத்தொகையாகும்.

(5) ஏதேனும் ஒன்றைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு இழக்கப்பட்ட அதற்கு அடுத்த சிறந்த தெரிவின் பெறுமதியாகும்.

26. பின்வருவனவற்றுள் சமூக சந்தை பொருளாதாரம் முறைமையை **பின்பற்றாத** நாடு எது?

(1) நோர்வே (2) ஜேர்மனி (3) சுவீடன்

(4) ஜப்பான் (5) பின்லாந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27. பொருளியலில் ஆராயப்படும் விடயம்

(1) வளங்களின் அருமைத்தன்மையும் நிறைதொழில் மட்டமாகும்.

(2) வளங்களின் அருமைத்தன்மையும் உற்பத்தியும்.

(3) வளங்களின் அருமைத்தன்மையும் தெரிவும்.

(4) வளங்களின் அருமைத்தன்மையும் வினைத்திறனுமாகும்.

(5) வளங்களின் அருமைத் தன்மையும் பதிலீட்டுத்தன்மையும்.

28. நுகர்வோன் ஒருவனால் ஏற்கனவே கொள்வனவு செய்யப்பட்ட பண்டம் ஒன்றின் அமையச் செலவாக பின்வருவனவற்றில் எதனை கருதலாம்?

(1) வருமான மட்டுப்பாடு காரணமாக கொள்வனவு செய்யாது விடப்பட்ட அதிக விருப்பமுள்ள பொருளொன்றின் நலன்.

(2) அதே விலையுடைய ஏனைய பல பொருட்களிலிருந்தான நலன்கள்.

(3) மிகவும் குறைந்த தரம் காரணமாக நுகர்வுக்கு உகந்ததல்லாததாக கருதப்பட்டு கொள்வனவு செய்யாதுவிட்ட பொருளொன்றின் நலன்

(4) அப்பொருளுடன் ஒப்பிடும்போது அடுத்த உயர்ந்த விலை காரணமாக கொள்வனவு செய்யாது விட்ட அதே மாதிரியான பொருளொன்றிலிருந்தான நலன்.

(5) அதே விலையில் கொள்வனவு செய்யத் தீர்மானிக்கப்பட்டிருந்த மற்றொரு பொருளின் நலன்.

29. குறித்த ஒரு நடவடிக்கையின் அமையச் செலவானது.

(1) அக்குறித்த நடவடிக்கையை மேற்கொள்ளும் அனைவருக்கும் சமமானதாக இருக்கும்.

(2) அந்நடவடிக்கையின் பணச்செலவு மற்றும் தியாகம் செய்யப்பட்ட வருமானம் ஆகிய இரண்டையும் உள்ளடக்கும்.

(3) அந்நடவடிக்கையின் பணச்செலவை மட்டும் உள்ளடக்கும்.

(4) அந்நடவடிக்கையின் தியாகம் செய்யப்பட்ட வருமானங்களை மட்டும் உள்ளடக்கும்.

(5) அந்நடவடிக்கையின் நேரடி நன்மைகளை மட்டும் அளவிடுகிறது.

30. பொருளாதாரத்தில் அரசாங்க ஈடுபாட்டின் (தலையீட்டின்) அளவு மிக உயர்வாக இருப்பது.

(1) சந்தை பொருளாதாரம் (2) கட்டளை பொருளாதாரம்

(3) மரபு ரீதியான பொருளாதாரம் (4) கலப்பு பொருளாதாரம்

(5) சமூக சந்தை பொருளாதாரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31. பொருளியலின் மையக் கருத்துக்களில் ஒன்று வளங்கள் அருமையானவை என்பதாகும். இது எதனைக் குறிப்பாக உணர்த்துகின்றது?

(1) சிக்கலான தெரிவுகளை பொருளாதார முகவர்களினால் தவிர்க்க முடியாதிருத்தல்.

(2) உணவுப் பற்றாக்குறையானது எப்பொழுதும் பாரிய பிரச்சினையாக இருந்து வருகின்றது.

(3) விலைப்பொறிமுறையினால் வள ஒதுக்கீட்டை தனியாக தீர்க்க முடியாதிருத்தல்.

(4) பொருட்களின் விலைகள் தொடர்ச்சியாக அதிகரித்து செல்லும் போக்கு நிலவுதல்.

(5) ஒவ்வொரு வியாபாரமும் பேரின பொருளாதார சமமின்மை பிரச்சினை களை எதிர்கொள்ளுதல்.

32. அமையச்செலவு தோன்றுவதற்கான காரணமாக அமைவது

(1) வளங்களின் அருமைத்தன்மையும் வள மாற்றுபயன்பாடும்.

(2) வளங்களின் அருமைத்தன்மையும் பெறுமதியும்.

(3) வளங்களின் அருமைத்தன்மையும் பங்கீட்டு முறையும்.

(4) வளங்களின் பெறுமதியும் தெரிவுமுறையும்.

(5) வளங்களின் பற்றாக்குறையும் எல்லையற்ற விருப்பங்களும்

33. A. வளங்கள் வரையறுக்கப்பட்டவையாக இருத்தல்.

B. அருமையான வளங்கள் மாற்று பயன்பாட்டுத் தன்மையை கொண்டிருத்தல்.

C. மனித தேவைகளோடு ஒப்பிடுகையில் வளங்கள் வரையறை அற்றதாக இருத்தல்.

D. மனித விருப்பங்கள் வரையறையற்றவையாகக் காணப்படுதல்.

மேற்தரப்பட்ட விடயங்களுள் அடிப்படை பொருளாதார பிரச்சினைகள் தோன்றுவதற்கு ஏதுவாக அமைவன?

(1) A, B, C மட்டும். (2) A, D மட்டும். (3) A, B, D மட்டும்.

(4) A மட்டும். (5) A, B, C, D அனைத்தும்.

34. எந்த செயற்பாடு சந்தை பொருளாதாரத்தை விட திட்டமிட்ட பொருளாதாரத்தால் அதிகம் உருவாக்கப்படக்கூடியது?

(1) போட்டி (2) பாதுகாப்பு (3) ஊக்குவிப்பு

(4) கண்டுபிடிப்பு (5) நுகர்வோன் இறைமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35. பொருளாதார முறைமையொன்றின் தீர்மானம் மேற்கொள்ளும் மூன்று குழுக்களாவன.

(1) வீட்டுத்துறை, அரசதுறை மற்றும் வங்கிகள்

(2) வீட்டுத்துறை, நிறுவனத்துறை மற்றும் அரசதுறை

(3) வீட்டுத்துறை, வங்கிகள், வெளிநாட்டுதுறை

(4) நிறுவனத்துறை, அரச சார்பற்ற நிறுவனங்கள்

(5) வீட்டுத்துறை, நிறுவனத்துறை மற்றும் வெளிநாட்டுதுறை

36. சந்தை பொருளாதாரமொன்றின் **பண்பல்லாதது** எது?

(1) தனியார் முயற்சியாண்மை காணப்படல்.

(2) நுகர்வோர் இறைமை காணப்படல்.

(3) விலைப்பொறிமுறையின் செயற்பாடு காணப்படல்.

(4) போட்டி காணப்படாமை.

(5) சுதந்திர முயற்சி காணப்படல்.

37. போட்டி சந்தையொன்றில் வெளிவாரிகளற்ற நிலையில் வள ஒதுக்கீட்டு வினைதிறன் நிலவுவது எல்லாச் சந்தைகளிலும் விலை

(1) எல்லை உற்பத்தியின் செலவுக்கு சமப்படும் போதாகும்.

(2) மொத்த செலவுக்கு சமப்படும் போதாகும்.

(3) எல்லை வருவாய்க்கு சமப்படும் போதாகும்.

(4) சராசரி மாறுஞ்செலவுக்கு சமப்படும் போதாகும்.

(5) எல்லை செலவுக்கு சமப்படும் போதாகும்.

38. பின்வருவனவற்றுள் கட்டளை பொருளாதாரமொன்றின் முக்கிய பண்பாக அமைவது எது?

(1) மத்திய திட்டமிடல்.

(2) சந்தைகளில் பெரிதும் தங்கியிருத்தல்.

(3) மூலதனத்தின் தனியார் உரிமை.

(4) சந்தை சக்திகளின் ஒன்றுகுவிப்பு.

(5) தனிப்பட்ட நன்மைகளின் அடிப்படையில் தீர்மானமெடுத்தல்.

39. உற்பத்திக் காரணிகளின் கிடைப்பனவு அளவில் தாக்கம் **செலுத்தாத** காரணி யாது?

(1) நிலம் (2) உழைப்பு (3) மூலதனம்

(4) முயற்சி (5) பணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

40. சுதந்திரமான சந்தை பொருளதாரமொன்றில் விலைப்பொறிமுறையின் தொழிற்பாடு தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் சரியானது எது?

(1) விலையுறுதி நிலையை உறுதிசெய்கிறது.

(2) உற்பத்தி இலக்குகளை நிர்ணயிக்கும் பொருட்டு விலை பொறி முறையை அரசாங்கம் பயன்படுத்துகிறது.

(3) விலைகள் வீழ்ச்சியடைகின்றமை நிறுவனங்கள் சந்தையில் நுழை வதை ஊக்குவிக்கும்.

(4) விலைப்பொறிமுறை தகவல் வழங்கல், ஊக்குவித்தல், ஒதுக்கீட்டு தொழிற்பாடுகளை மேற்கொள்கிறது.

(5) சந்தை சக்திகளினூடாக மிகை நிரம்பலை அகற்றுகின்றது.

41. கலப்பு பொருளாதார முறைகள் காணப்படுவதற்கான காரணங்களில் ஒன்று

(1) இலாப நோக்கமானது எப்போதும் விரும்பத்தக்கதாக இல்லாமையாகும்.

(2) சுதந்திரமான சந்தைப் பொருளாதாரமானது சந்தை தோல்விக்கு இட்டு செல்லலாம் என்பதாகும்.

(3) சந்தை பொருளாதாரம் தனியார் சொத்து உரிமைகளை உறுதி செய்யாமையாகும்.

(4) சந்தை பொருளாதாரம் எப்போதும் வளங்களை வினைத்திறனுடன் ஒதுக்கீட்டு செய்கின்றது என்பதாகும்.

(5) சந்தை பொருளாதார முறையின் போட்டி தன்மை நுகர்வோன் நலனை உச்சப்படுத்தும் என்பதனால் ஆகும்.

42. நுகர்வோன் இறைமை ஏற்படுவது.

(1) சந்தையில் பொருளுக்கு விளம்பரம் இல்லாத போதாகும்.

(2) கேள்வி நிரம்பலுக்கு சமப்படும் போதாகும்.

(3) சந்தையில் தெரிவொன்றை மேற்கொள்ள வாய்ப்பிருக்கும் போதாகும்.

(4) நுகர்வோன் கேள்வியானது எது உற்பத்தி செய்யப்பட வேண்டும் என்பதை நிர்ணயிக்கும் போதாகும்.

(5) நுகர்வோன் தான் ஒரு பொருளுக்கு செலுத்த விரும்பும் விலையை விடக் குறைந்த விலையினைச் செலுத்தும் போதாகும்.

43. சந்தை விலைப் பொறிமுறையின் பங்கீட்டுத் தொழிற்பாடு என்ற நடவடிக்கையை தடைசெய்வது எது?

(1) குறையும் விலைகள் (2) விலைக்கட்டுப்பாடுகள்

(3) அதிகரிக்கும் இலாபங்கள் (4) சுய நன்மை

(5) அதிகரிக்கும் விலைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

44. சந்தை பொருளாதாரத்தில் எவ்வாறு உற்பத்தி செய்தல் தொடர்பான பிரச்சினையானது தீர்க்கப்படுவது

(1) சார்பு காரணி விலைகளை அடிப்படையாக கொண்டு
(2) மூலதனச் செறிவான தொழில்நுட்ப முறையைத் தெரிவு செய்வதன் மூலம்
(3) சார்பு உற்பத்தி விலைகளை அடிப்படையாகக் கொண்டு
(4) சமூக நலனை அடிப்படையாக கொண்டு
(5) அரசாங்க அறிவுறுத்தல்களுக்கிணங்க

45. வருமான பங்கீடு தொடர்பான பிரச்சினையானது சமூக நலனை அடிப்படையாக கொண்டு மத்திய திட்டமிடல் குழுவினால் தீர்க்கப்படும் பொளாதார முறைமை எது?

(1) சந்தை பொருளாதாரம்
(2) சமூக சந்தை பொருளாதாரம்
(3) கட்டளை பொருளாதாரம்
(4) கலப்பு பொருளாதாரம்
(5) மரபுரீதியான பொருளாதாரம்

46. சந்தை பொருளாதாரத்தின் அனுகூலமாக அமைவது.

(1) சமூகநலன் கவனத்தில் கொள்ளப்படும்.
(2) போட்டி காரணமாக ஏற்படும் வினைத்திறனின்மை குறைக்கப்படல்.
(3) பொருளாதார நடவடிக்கைகள் நீண்டகால நோக்கில் மேற்கொள்ளப்படும்
(4) கட்டுப்பாட்டு விலைகள் காணப்படுவதனால் பேரின பொருளாதார உறுதி காணப்படல்.
(5) தொழில் சுதந்திரம் மற்றும் தெரிவு சுதந்திரம் நிலவுதல்.

47. திட்டமிடல் பொருளாதாரத்தின் பிரதிகூலமாக அமைவது எது?

(1) வள ஒதுக்கீட்டில் வினைதிறனின்மை.
(2) வருமானப் பங்கீட்டில் நீதியின்மை.
(3) பேரினப் பொருளாதார உறுதியின்மை.
(4) நுகர்வோன் இறைமை காணப்படாமை.
(5) அதிக போட்டி காரணமாக வளங்கள் வீண்விரயம் செய்யப்படுதல்.

48. இலங்கையானது எந்த பொருளாதார முறைமையை பின்பற்றுகின்றது?

(1) சந்தை பொருளாதாரம்
(2) திட்டமிடல் பொருளாதாரம்
(3) கலப்பு பொருளாதாரம்
(4) சமூக சந்தை பொருளாதாரம்
(5) மரபுரீதியான பொருளாதாரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

49. லிபரல் சந்தை பொருளாதாரம் என்பது.

(1) சமூக நியாயத்துவத்தை ஏற்படுத்துவதற்கு அரசு தலையிடுகின்ற பொருளாதார முறைமையாகும்.

(2) அரச தலையீடற்ற வகையில் சுதந்திர சந்தை சக்திகளின் மூலம் செயற்படும் பொருளாதார முறைமையாகும்.

(3) உற்பத்தி காரணிகளின் உடமை அரசாங்கத்திற்கு உரியதாயினும் வளப்பயன்பாட்டு தீர்மானம் தனியாருக்கு உரிமையான பொருளாதார ஆகும்.

(4) சமூக நல சேவை கருதி முழு காரணி உடைமையும் அரசிற்கே உரியதான பொருளாதார முறைமையாகும்.

(5) சமயம் அல்லது பாரம்பரிய சமூகத்தை அடிப்படையாக கொண்ட பொருளாதாரமாகும்.

50. இலங்கையானது ஒரு கலப்பு பொருளாதாரமாகக் கொள்ளப்படுவதற்கான காரணமாக **அமையாதது**?

(1) வளங்களின் உரிமை தனியாரிடமும், அரசிடமும் காணப்படல்.

(2) அரச முயற்சியாண்மை, தனியார் முயற்சியாண்மை ஆகிய இரண்டும் காணப்படல்.

(3) நுகர்வு, முதலீட்டு நடவடிக்கைகளில் அரசும் தனியாரும் ஈடுபடல்.

(4) சமூக நல நோக்கில் அரசு மட்டும் சேவை அடிப்படையில் செயற்படல்.

(5) தொழில் வாய்ப்பு உருவாக்கத்தில் தனியார் துறையும் அரசதுறையும் பங்களிப்புச் செய்தல்.

51. பொருளாதார முறைமையொன்றின் செயலாற்றத்தை மதிப்பிடுவதில் பயன்படுத்தப்படும் தகுதி விதிகளில் **உள்ளடக்கப்படாதது** எது?

(1) நிறைதொழில் மட்டம் (2) பொருளாதார வினைத்திறன்

(3) வெளிநாட்டு உறுதி (4) பொருளாதார வளர்ச்சி

(5) வளங்களின் அருமை

52. சிற்றின பொருளியலில் ஆராயப்படும் விடயம் **அல்லாதது**?

(1) அருமை (2) வளங்களின் மாற்று பயன்பாடு

(3) அமையச்செலவு (4) குறைதொழில் மட்டம்

(5) உற்பத்தி வினைத்திறன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

53. "ஊக்குவிப்பின் இயல்புகள்" எனும் நியமத்திற்கு அமைய பொருளாதார அமைப்புக்களை பல வகைப்படுத்தலாம். பாரம்பரிய பொருளாதார அமைப்பில் ஊக்குவிப்புக்கள் வழங்கப்படும் மூலம் யாது?

(1) பொருள் ரீதியிலான ஊக்குவிப்புக்கள்.

(2) ஒப்பீட்டு ரீதியிலான விலைமூலம்.

(3) வழக்கம் மற்றும் விழுமியம் சார் ஊக்குவிப்பு.

(4) ஆட்சியாளர்களின் கட்டளை மூலம்.

(5) அதிகாரம் மற்றும் பொருள் ரீதியான ஊக்குவிப்புக்கள்.

54. உற்பத்தி சாத்திய வளையி என்னும் பதத்தை சரியாக விளக்கும் கூற்று எது?

(1) நிலையற்ற வளங்களை பயன்படுத்தி நிலையான தொழினுட்பத்தின் கீழ் உற்பத்தி செய்யப்படும் பொருள் சேர்க்கைகளின் வளைகோடாகும்.

(2) வளங்கள் பூரணமாக உச்சசெயற்திறனுடன் பயன்படுத்தி நிலையற்ற தொழினுட்பத்தின் கீழ் உற்பத்தி செய்யப்படும் பொருள் சேர்க்கைகளின் வளைகோடாகும்.

(3) தொழினுட்ப மாற்றம் காரணமாக உற்பத்தி புள்ளியின் மாற்றங்களை காட்டும் வளைகோடாகும்.

(4) தரப்பட்ட வளங்களை பூரணமாகவும் உச்ச செயற்றிறனுடனும் பயன்படுத்தி நிலையான தொழினுட்பத்தின் கீழ் உற்பத்தி செய்யக்கூடிய இரண்டு வகையான பொருட்களின் பல்வேறு சேர்க்கை புள்ளிகளை காட்டும் ஒரு கோடாகும்.

(5) இரு வேறுபட்ட உற்பத்தி பொருட்களின் பல்வேறு உற்பத்தி மட்டங்களை காட்டும் ஒரு கோடாகும்.

55. பின்வருவனவற்றுள் உற்பத்தி சாத்திய இயல்தகவு எல்லை ஒன்றில் எடுகோளாக **கருதப்படாதது?**

(1) வளங்களின் தரத்தை மாற்றியமைக்க முடிதல்.

(2) வளங்கள் முழுமையாகவும் திறமையாகவும் பயன்படுத்தப்படல்.

(3) நிலையான தொழினுட்பம்.

(4) இருவகையான பண்டங்களை மட்டும் உற்பத்தி செய்ய முடிதல்.

(5) வளங்களின் அளவு மாற்றமடையாதிருத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

56. உற்பத்திசாத்திய வளையி ஒன்றின் பிரயோக ரீதியான வடிவமும் அதற்கான பிரதான காரணமும் பின்வருவனவற்றில் எதுவாக இருக்கும்?

(1) வெளிநோக்கி குழிந்தது - குறையும் எல்லை விளைதிறன்

(2) வெளிநோக்கி குவிந்தது - குறையும் எல்லை விளைதிறன்

(3) வெளிநோக்கி குவிந்தது - வளங்களின் ஓரினமற்ற தன்மை

(4) வெளிநோக்கி குழிந்தது - வள்ங்களின் ஓரினமற்ற தன்மை

(5) வெளிநோக்கி குழிந்தது - அதிகரிக்கும் எல்லை வினைதிறன்

57. உற்பத்தி செயற்றிறனுக்கான பிரதான இரு நிபந்தனைகளையும் உள்ளடக்கும் தொகுதி

a. பேரண்டப் பொருளாதா உறுதி

b. நிறைதொழில் மட்டம்

c. முழு உற்பத்தி

d. விலை எல்லைச் செலவுக்கு சமனாதல்

(1) *a* யும் *b* யும் (2) *b* யும் *c* யும் (3) *c* யும் *d* யும்

(4) *d* யும் *c* யும் (5) *c* யும் *e* யும்

58. உற்பத்தி சாத்திய வளைகோட்டிற்கு உட்புறத்தில் அமைந்துள்ள புள்ளி குறிப்பது.

(1) வளங்களின் வினைத்திறனின்மை.

(2) வேலையின்மை

(3) இருக்கின்ற வளங்களை உயர்ந்த உற்பத்தி மட்டத்தை அடைவதற்கு இன்னும் பயன்படுத்தக்கூடிய நிலை

(4) கீழுழைப்பு

(5) மேற்கூறியவற்றில் எதுவாகவும் அமையலாம்

59. மாறா அமையச் செலவுடைய உற்பத்தி சாத்திய வளையி தோன்றுவதற் கான காரணங்கள் யாவை?

(1) வளங்கள் பூரணபதிலீட்ட தன்மை, ஒரே நிலையான தொழிநுட்பம்

(2) பூரண மாற்று பயன்பாட்டு தன்மை, வளங்களின் அளவு மாற்றம்

(3) வளங்களின் தரம், நிலையான தொழினுட்பம்

(4) வளங்களின் தெரிவு, வளங்களின் மாற்றுப்பயன்பாடு

(5) வள ஒதுக்கீட்டில் வினைத்திறன், நிலையான தொழினுட்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

60. அதிகரிக்கும் அமையச் செலவுடைய உற்பத்தி சாத்திய வளையி தோன்ற காரணமாக **அமையாத** காரணி யாது?

(1) உற்பத்தி காரணிகள் பூரணபதிலீட்டு தன்மையினை கொண்டிக்காமை.

(2) வெவ்வேறு வகையான தொழில்நுட்ப முறைகள்

(3) ஒரு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் ஒரு காரணி மற்றைய உற்பத்திக்கு பொருத்தமற்றதாக காணப்படல்.

(4) உற்பத்தி காரணிகள் ஒத்த தன்மையானவையாக காணப்படாமை.

(5) உற்பத்தி காரணிகள் வள ஒதுக்கீட்டின் வினைத்திறனின்மை.

61. பொருளாதார செயற்றிறனை அடைவதற்குரிய பிரதான இரு நிபந்தனை களாக அமைவன?

(1) பூரண வேலைவாய்ப்பு, சராசரிச் செலவானது எல்லை செலவுக்கு சமம்

(2) பூரண உற்பத்தி, பூரண வேலைவாய்ப்பு

(3) உற்பத்திச் செயற்றிறன், வள ஒதுக்கீட்டு செயற்றிறன்

(4) முழு உற்பத்தி, உற்பத்திச் செயற்றிறன்

(5) வளஒதுக்கீட்டு வினைத்திறன், வளங்களின் மாற்றுப்பயன்பாடு

62. உற்பத்தி இயலதகவு எல்லையின் உள்ளே அமைந்துள்ள ஒரு புள்ளியானது

(1) அடைய முடியாத ஒன்றாகும்.

(2) வேலையற்றிருக்கும் வளங்கள் சில உள்ளதை குறிக்கும்.

(3) வள பூரணப்பயன்பாட்டை பிரதிபலிக்கும்.

(4) அமையச்செலவு பற்றிய கருத்தினை வெளிப்படுத்தும்.

(5) வளஒதுக்கீட்டில் வினைத்திறனை காட்டும்.

63. நிறைதொழில் மட்டத்திலுள்ள பொருளாதாரமொன்றின் மூலதன முதலீட்டினை அதிகரித்துக் கொள்வதற்கான அமையச் செலவானது

(1) நுகர்வில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி

(2) வருமானத்தில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி

(3) சேமிப்பில் ஏற்படும் ஒரு அதிகரிப்பு

(4) வெளியீட்டில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி

(5) வட்டிவீதத்தில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

64. *a.* பூரண வேலை வாய்ப்பு

b. பூரண உற்பத்தி

c. சராசரிச் செலவானது எல்லைச் செலவை விட குறைவாக காணப்படும்

d. எல்லை நலனானது விலைக்கு சமனாக காணப்படும்

e. எல்லை செலவு எல்லை நலனுக்கு சமப்படுதல்

மேற்தரப்பட்டவற்றுள் உற்பத்தி செயற்றிறனை அடைவதற்கு பூர்த்தி செய்ய வேண்டிய நிபந்தனைகளாவன

(1) *a, b, e* (2) *a, b* (3) *b, d, c*

(4) *b, c, d* (5) *a, d, e*

65. வள ஒதுக்கீட்டில் செயற்றிறன் என்பதை விளக்கும் சரியான கூற்று எது?

(1) தரப்பட்ட வளங்களிலிருந்து உச்சமான உற்பத்தியை பெறுதல்

(2) சமூகம் அதிகம் விரும்பும் பொருட்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்வதற்கு அருமையான வளங்களை ஒதுக்குவதாகும்.

(3) வளங்களை பூரண வேலைவாய்ப்பு மட்டத்தில் பயன்படுத்தல்.

(4) வளங்களை பொருளாதார வினைத்திறன் மட்டத்தில் பேணல்.

(5) மூலதன நுகர்வு பொருள் உற்பத்திக்கு சமமான மட்டத்தில் உற்பத்தியை மேற்கொள்ளல்.

66. பின்வருவனவற்றுள் உற்பத்தி காரணிகளின் வினைதிறனை அதிகரிக்கும் சந்தர்ப்பம் **அல்லாதது** எது?

(1) தொழினுட்பம் முன்னேற்றமடைதல்.

(2) ஊழியத்தின் வினைத்திறன் அதிகரித்தல்.

(3) முகாமைத்துவத்திறன் முன்னேற்றமடைதல்.

(4) தொழிற்பிரிப்பும் சிறப்பு தேர்ச்சியும் ஏற்படல்.

(5) புதிய வளங்கள் கண்டுபிடிக்கப்படல்.

67. பொருளாதார பின்னடைவு தொடர்பான **பிழையான** கூற்று எது?

(1) ஒரு பொருளாதாரத்தில் பொருட்கள் சேவைகளுக்கான கேள்வி குறைவடைந்து உற்பத்தி வீழ்ச்சியடைதலை குறிக்கும்.

(2) இது ஒரு குறுங்கால நிலைமையாகும்.

(3) பொருளாதார பின்னடைவு காரணமாக வேலையின்மை மட்டம் அதிகரிக்கும்.

(4) பொருளாதார பின்னடைவினால் உற்பத்தி சாத்திய வளையி இடப்புறம் நகரும்.

(5) பொருளாதார பின்னடைவின் நீண்டகால நிலைமை பொருளாதார மந்தம் என்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

68. பின்வருவனவற்றுள் பொருளாதார வீழ்ச்சியை **ஏற்படுத்தாத** காரணி யாது?

(1) யுத்தம் காரணமாக வளங்கள் அழிவடைதல்.

(2) ஊழியப்படை வீழ்ச்சியடைதல்.

(3) இயற்கை அழிவுகள், சுனாமி, வெள்ளம் போன்றவை ஏற்படல்.

(4) பழைய தொழில்நுட்ப முறைகளின் பயன்பாடு

(5) முதலீடுகள் அதிகரித்தல்.

69. கிடையச்சில் x பண்டத்தையும் குத்தச்சில் y பண்டத்தையும் காட்டுகின்ற உற்பத்தி சாத்திய வளையி ஒன்றின் உற்பத்தி சேர்க்கை

x பண்டம்	y பண்டம்
0	50
50	40
70	30
85	20
100	0

மேற்படி தகவல்களின்படி

(1) சகல உற்பத்தி மட்டங்களிலும் அமையச்செலவு நிலையான பெறுமதியை பெறுகின்றது.

(2) சாத்திய வளையியின் வழியாக மேலே செல்லும்போது அமையச்செலவு விகிதம் படிப்படியாக அதிகரிக்கும்.

(3) x பண்டத்திற்கு பயன்படுத்தப்படும் வளங்கள் y பண்டத்துக்கு பூரண பதிலீடாகும்.

(4) சாத்திய வளையியின் வழியாக மேலே செல்லும் போது அமையச் செலவு விகிதம் படிப்படியாகக் குறைவடையும்.

(5) x மற்றும் y பண்டங்களின் உற்பத்தியில் பயன்படுத்தப்படும் தொழில் நுட்பம் நிலையானது.

70. இங்கு காட்டப்பட்டுள்ள வரைபடம் ஒரு பொருளாதாரத்தின் உற்பத்தி இயல்தகவு வளையியைக் காட்டுகின்றது. இப்பொருளாதாரத்தின் உற்பத்தி மட்டமானது புள்ளி A யிலிருந்து புள்ளி B நோக்கி மாற்றமடைவதன் அமையச் செலவானது



(1) 10 அலகு உடையாகும்.

(2) 20 அலகு உணவாகும்.

(3) பூச்சியமாகும்.

(4) ஒரு அலகு உணவு 2 அலகு உடையாகும்.

(5) 20 அலகு உணவும் 10 அலகு உடையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

71. பின்வரும் அட்டவணையானது தரப்பட்ட காலப்பகுதியொன்றில் தனது சகல வளங்களையும் குரக்கன் மற்றும் சோளம் என்பவற்றின் உற்பத்தியில் பயன்படுத்தும் விவசாயி ஒருவரின் உற்பத்திச் சாத்தியங்களைக் காட்டுகின்றது.

குரக்கன் (புசல்களில்)	சோளம் (புசல்களில்)
0	55
10	50
20	42
30	28
40	0

விவசாயி தற்போது 20 புசல் குரக்கனையும் 42 புசல் சோளத்தையும் உற்பத்தி செய்வதாகக் கருதுக. மேற்படி அட்டவணையின்படி மேலும் 10 புசல் குரக்கன் உற்பத்தி செய்வதற்கான அமையச் செலவு

(1) 5 புசல் சோளம் ஆகும்.

(2) 8 புசல் சோளம் ஆகும்.

(3) 14 புசல் சோளம் ஆகும்.

(4) 1.4 புசல் சோளம் ஆகும்.

(5) 28 புசல் சோளம் ஆகும்.

72. பின்வரும் வரைபடம் A என்னும் புள்ளியில் உற்பத்தி செய்யும் பொருளாதாரம் ஒன்றின் உற்பத்தி இயல்தகவு எல்லையைக் காட்டுகின்றது.

y பொருளை உற்பத்தி செய்வதற்காக இழக்கப்படும் x பொருளின் தொகை யாது?



(1) 100

(2) 300

(3) 200

(4) 400

(5) 500

73. பின்வரும் வரைபடம் பொருளாதாரமொன்றின் உற்பத்தி சாத்திய எல்லை வளையியைக் காட்டுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொருளாதாரம் தொடர்பாக பின்வரும் கூற்றுக்களில் எது சரியானது?

(1) A புள்ளியில் இருந்து B புள்ளியை நோக்கிச் செல்லும்போது குறைந்து செல்லும் சந்தர்ப்பச் செலவு காட்டப்பட்டுள்ளது.

(2) F புள்ளியிலிருந்து B புள்ளியை நோக்கி செல்வதற்காக அரிசி உற்பத்தியில் புதிய தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுவது அவசியமாகும்.

(3) F புள்ளியிலிருந்து B புள்ளியை நோக்கிச் செல்லல். அரிசி இறக்குமதி துரிதமாக அதிகரிப்பதால் நிகழ்வதாகும்.

(4) A புள்ளியில் வளப்பங்கீட்டின் வினைத்திறன் காணப்பட்ட போதிலும் உற்பத்தி வினைத்திறன் காணப்படவில்லை.

(5) B புள்ளியில் உற்பத்தி வினைத்திறன் காணப்பட்ட போதிலும் வளப்பங்கீட்டின் வினைத்திறன் காணப்படவில்லை.

74. ஒரு பொருளாதாரமானது வள ஒதுக்கீட்டு வினைத்திறனை அடைந்துள்ளமையைக் காட்டுவது

(1) அப்பொருளாதாரம் மற்றொரு பொருளின் உற்பத்தியைக் குறைக்காமல் ஒரு பொருளின் உற்பத்தியை அதிகரிக்க முடியாமல் உள்ளபோது

(2) ஒவ்வொரு பொருளையும் உற்பத்திசெய்யும்போது ஏற்படும் எல்லைச் செலவானது அதன் விலைக்குச் சமமாக உள்ளபோது

(3) அப்பொருளாதாரம் அனைத்து எதிர்க்கணிய வெளிவாரி விளைவு களையும் இல்லாமல் செய்துள்ளபோது

(4) சமூகத்தினால் அதிகம் விரும்பப்படும் பொருட்களையும் சேவை களையும் உற்பத்தி செய்வதற்காக வளங்கள் ஒதுக்கப்படுகின்றது போது

(5) அப்பொருளாதாரம் அனைத்து உற்பத்தி பொருட்களிலும் தன்னிறை வினைக் கொண்டபோது

75. பொருளாதாரமொன்றின் உற்பத்தி சாத்திய எல்லையின் உள்ளே உற்பத்திப் புள்ளியானது செயற்றிறனின்மையை குறிக்கின்றது என கூறப்படுவதற்கு காரணம்

(1) சில பொருட்கள் பற்றாக்குறையாக இருப்பதும் விற்கப்படாத ஏனைய இருப்புக்கள் இருப்பதும் தவிர்க்க முடியாததாகவுள்ளது.

(2) தனிநபர்கள் வேலையின்மை நிலைமையின்போது அதிக ஓய்வை அனுபவித்தல்.

(3) ஒரு பொருளின் உற்பத்தியை விட்டுக்கொடுக்காமல் மற்றைய பொருளின் உற்பத்தியை அதிகரிக்கக் கூடியதாகவிருத்தல்.

(4) பொருளாதாரமானது சர்வதேச வர்த்தகத்தில் பங்குபற்றாமல் இருத்தல்.

(5) உற்பத்தி சாத்திய எல்லை வெளிப்புறம் நகராமல் இருக்க பொருளாதாரம் இரு பொருட்களின் உற்பத்தியையும் ஒரே நேரத்தில் அதிகரிக்க முடியாததாகவிருத்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

76. ஒரு நிறுவனம் ஒதுக்கீட்டு ரீதியில் வினைத்திறன் மிக்க வெளியீட்டு மட்டத்தில் உள்ளபோது

(1) மொத்த வருவாய் மொத்தச் செலவுக்குச் சமப்படும்.

(2) எல்லை வருவாய் எல்லைச் செலவுக்குச் சமப்படும்.

(3) எல்லை வருவாய் எல்லைச் செலவை விடக் கூடுதலாக இருக்கும்.

(4) விலையானது சராசரி மொத்தச் செலவுக்குச் சமப்படும்.

(5) விலையானது எல்லை செலவுக்குச் சமப்படும்.

77. பின்வரும் வரைபடமானது PF எனும் உற்பத்தி சாத்திய வளையியைக் காட்டுகின்றது. பொருளாதாரம் x எனும் ஆரம்ப புள்ளியில் உள்ளது. பொருளாதாரமானது உண்மையான பொருளாதார வளர்ச்சியை அடைந்த போதிலும் சாத்திய வளர்ச்சியை அடையவில்லை எனின் இறுதிப் புள்ளி எதுவாகவிருக்கும்?



(1) A புள்ளி (2) B புள்ளி

(3) C புள்ளி (4) D புள்ளி

(5) X புள்ளி

78. சமூகத்தில் பின்வருவனவற்றில் உற்பத்தி இயல்தகவு, எல்லையை வெளிப்புறமாக நகர்வடையச் **செய்யாதது**

(1) தொழில் நுட்ப முன்னேற்றமாகும்.

(2) தாராள வர்த்தகத்தை நோக்கியதான மிக வெளிப்படையான ஒரு நகர்வாகும்.

(3) வேலையின்மை வீழ்ச்சியடைவதாகும்.

(4) பொதுமக்களின் கல்வி மட்டத்தில் ஏற்படும் அதிகரிப்பாகும்.

(5) உற்பத்தித் திறனில் ஏற்படும் முன்னேற்றமாகும்.

79. எல்லா உற்பத்தி நடவடிக்கைகளிலும் வளங்கள் பூரண பதிலீடுகளாகப் பயன்படுத்தப்படுமாயின் பின்வருவனவற்றில் எக்கூற்று உண்மையாகும்?

(1) சகல பொருள்களினதும் வெளியீட்டை பூச்சிய அமையச் செலவில் அதிகரிக்கலாம்.

(2) உற்பத்தி இயல்தகவு வளையி ஒரு நேர்கோடாகும்.

(3) சிறப்பு தேர்ச்சியும் பரஸ்பர நன்மையுள்ள வர்த்தகமும் ஏற்படுவது சாத்தியமில்லை

(4) ஒரு நாடோ அல்லது தனிநபரோ எந்த ஒரு நடவடிக்கையிலும் ஒப்பீட்டு நன்மையைக் கொண்டிருக்க முடியாது.

(5) வளங்களின் அருமைத்தன்மை அறவே ஒழிக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

80. உற்பத்தி இயல்தகவு வளையியைப் பயன்படுத்தி பொருளாதார வளர்ச்சியை பின்வருவனவற்றில் எதன் மூலம் காட்டலாம்?

(1) வளையியின் ஒரு வலப்புற நகர்வின் மூலம்

(2) தற்போதுள்ள வளையியின் மீதுள்ள புள்ளியிலிருந்து மேல் நோக்கிய அசைவின் மூலம்

(3) தற்போதுள்ள வளையியின் மீதுள்ள புள்ளியிலிருந்து கீழ் நோக்கிய அசைவின் மூலம்

(4) வளையியின் வெளிப்புறமுள்ள ஒரு புள்ளியிலிருந்து வளையியின் மீதுள்ள ஒரு புள்ளியை நோக்கிய அசைவின் மூலம்

(5) வளையியின் மீதுள்ள ஒரு புள்ளியிலிருந்து வளையியின் உட்புறமுள்ள ஒரு புள்ளியை நோக்கிய அசைவின் மூலம்

81. பின்வரும் வரைபடம் பொருளாதாரமொன்றின் உற்பத்தி சாத்திய வளையியைக் காட்டுகின்றது.

உற்பத்திப் புள்ளியானது A இலிருந்து B இற்கு நகர்வதை விளக்குவது பின்வருவனவற்றில் ஏதுவாக இருக்கும்?



(1) தொழில்நுட்ப முன்னேற்றம் ஒன்று.

(2) உற்பத்தி இயலளவில் ஏற்படும் வளர்ச்சி.

(3) அதிக சாதகமான வர்த்தகமாற்று வீதம்.

(4) பொருளாதாரப் பின்னடைவிலிருந்து மீளுதல்.

(5) வேலையின்மை அதிகரித்தல்.

82. சந்தை பொருளாதாரமொன்றில், அரச தலையீடானது "பொருளாதார வளர்ச்சி மற்றும் நியமத்துவம்" ஆகிய இரண்டு முரண்பட்ட நோக்கங்களையும் ஒரே தடவையில் மட்டும் அடைந்து கொள்வதற்கான வழிமுறையானது

(1) வரிகட்டமைப்பின் நியாயத்துவத்தை பேணுதலும் ஓய்வுபெற்றோரின் வருமானத்தை அதிகரித்தலும்.

(2) குடும்பங்களுக்கான மானியக் கொடுப்பனவை அதிகரித்தலும் தனிநபர் மீதான வரிகளை குறைத்தல்.

(3) ஊழியத்தை மேலும் விருத்தி செய்வதற்கும், வரிக்கட்டமைப்பின் நியாயத்துவத்தை பேணுதலும்.

(4) நவீன தொழில் நுட்பங்களை அறிமுகப்படுத்தலும் முதலீடுகளை அதிகரித்தலும்

(5) கிராமிய சிறிய குளங்களை விருத்தி செய்தலும் புதிய மின்சார திட்டங்களை அறிமுகப்படுத்தலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

83. பின்வரும் வரைபடமானது ஒரு பொருளாதாரத்தில் உற்பத்தி இயல்தகவு வளையியை காட்டுகிறது. உற்பத்தி புள்ளியானது A இலிருந்து B இற்கு நகர்வதற்கு எது காரணமாகும்?



(1) உண்மையான பொருளாதார வளர்ச்சி
(2) வேலையின்மையில் ஒரு அதிகரிப்பு
(3) ஒரு பொருளாதாரப் பின்னடைவு
(4) ஒரு நேர்க்கணிய வெளியீட்டு இடைவெளி
(5) பொருளாதார மந்தம்

84. அமையச் செலவு என்னும் எண்ணக்கருவானது **பொருந்தாத** நிலை ஏற்படுவது

(1) பொருளாதாரத்தில் வறுமை நிலை இல்லாத போதாகும்.
(2) எல்லா வளங்களினதும் நிரம்பல் வரையற்றதாக உள்ள போதாகும்.
(3) வளங்கள் வினைத்திறனாக ஒதுக்கீடு செய்யும் போதாகும்.
(4) புதிய தொழிநுட்ப முன்னேற்றம் அடையும் போதாகும்.
(5) முதலீடுகள் அதிகரிக்கும் போதாகும்.

85. பின்வரும் வரைபடமானது AB எனும் உற்பத்தி சாத்திய வளையியை காட்டுகின்றது.

எல்லையானது CD ஆக நகர்வதற்கு பின்வருவனவற்றில் எது காரணமாகவிருக்கும்?



(1) தொழில்நுட்ப முன்னேற்றம்
(2) வளங்களை மீள் ஒதுக்கீடு செய்தல்
(3) வளங்களின் குறைப்பயன்பாடு
(4) இயற்கை வளங்கள் சிதைவடைதல்
(5) வேலையின்மையில் அதிகரிப்பு

86. பின்வரும் வரைபடத்தில் உற்பத்தி சாத்திய எல்லை LM இலிருந்து NP இற்கு நகர்வதற்கான காரணம் யாது?



(1) x, y பண்ட உற்பத்திகளிலும் தொழில்நுட்ப முன்னேற்றம் ஏற்படல்.
(2) வேலையின்மையில் ஒரு வீழ்ச்சி
(3) வள ஒதுக்கீட்டின் வினைத்திறன் ஏற்படல்
(4) வளங்களின் மிகைப்பயன்பாடாகும்
(5) இயற்கை வளங்களின் வெளிச்செல்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

87. ஒரு பொருளாதாரத்தின் உற்பத்தி சாத்திய எல்லை பின்வருமாறு காட்டப்படுகின்றது. உற்பத்தி சாத்திய எல்லை கீழ் நோக்கிச்சரிந்து செல்வதற்கான காரணம் யாது?



(1) இருபண்ட உற்பத்திகளுக்குமான நுகர்வோர்கள் வேறுபட்டவர்கள் ஆவர்.

(2) வளங்கள் வரையறுக்கப்பட்டவை.

(3) வளங்கள் ஓரினத்தன்மையற்றவை.

(4) இரு பண்டங்களும் அதிகரிக்கும் அளவுத்திட்ட விளைவுகளைக் கொண்டிருத்தல்.

(5) இருபண்டங்களும் குறையும் அளவுத்திட்ட விளைவுகளை கொண்டிருத்தல்.

88. பின்வருவனவற்றில் சமூகமொன்றின் உற்பத்தி சாத்திய வளையியின் வெளிப்புற நகர்வை ஏற்படுத்துவது

(1) பொது விலைமட்டத்தில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு

(2) ஊழியப்படையில் ஏற்படும் ஒரு அதிகரிப்பு

(3) முகாமைத்துவ வினைத்திறனின்மை நீக்கப்படல்

(4) வேலையின்மையில் மட்டத்தில் ஏற்படும் ஒரு குறைவு

(5) ஆயுதப்படை மீதான அரசாங்கத்தின் செலவினத்தில் ஏற்படும் ஒரு வீழ்ச்சி

89. ஒரு பொருளாதாரம் தனது வரையறுக்கப்பட்ட மூலதன மற்றும் ஊழிய அளவுகளைக் கொண்டு x, y ஆகிய இருவகையான பண்டங்களை உற்பத்தி செய்கின்றது எனக் கொள்க. உற்பத்தி சாத்திய வளையியின் சமன்பாடு $y = 750 - 5x$ என தரப்படுகின்றது. y பொருளில் மேலதிக அலகொன்றை உற்பத்தி செய்வதற்கான அமையச்செலவு யாது?

(1) 5 அலகுகள் x பொருள்

(2) 750 அலகுகள் x பொருள்

(3) 2.5 அலகுகள் x பொருள்

(4) 0.2 அலகுகள் x பொருள்

(5) 150 அலகுகள் x பொருள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

90. உற்பத்தி இயல்தகவு வளையியின் உட்புறமுள்ள புள்ளியொன்றில் காட்டப்படுவது

(1) வேலையின்மையாகும்.

(2) வளங்களின் அருமைத்தன்மையாகும்.

(3) முன்னேற்றமடையாத தொழில்நுட்பமாகும்.

(4) வளங்களின் மிகைப் பயன்பாடாகும்.

(5) பயிற்றப்படாத ஊழியம் காணப்படுவதாகும்.

91. நாடொன்றின் உற்பத்தி இயல்தகவு எல்லையின் வழியே

(1) கிடைக்கத்தக்கதாகவுள்ள வளங்கள் பூரணமாக பயன்படுத்தப்படாமை.

(2) பொருளாதாரத்தில் உற்பத்தி வினைத்திறன் நிலவுகிறது.

(3) தொழினுட்ப மட்டமானது மாற்றமடையும்.

(4) வளங்கள் பூரணமாக பயன்படுத்தப்படுகின்றன.

(5) ஒரு பொருளின் அதிக அளவினை மற்றொரு பொருளின் உற்பத்தியை விட்டுக்கொடுக்காமல் உற்பத்தி செய்ய முடியும்.

92. வளங்கள் சகல பொருளாதார நடவடிக்கைகளிலும் ஒன்றுக்கொன்று பூரண பதிலீடாகக் காணப்படுமாயின் பின்வருவனவற்றில் எது உண்மையாகும்?

(1) சகல பொருள்களினதும் வெளியீட்டை அதிகரிக்க முடியும்.

(2) உற்பத்தி இயல்தகவு வளையி ஒரு நேர்கோடாகும்.

(3) சிறப்பு தேர்ச்சியும் பரஸ்பர நன்மை தரும் வர்த்தகமும் உருவாகச் சாத்தியமில்லை

(4) எந்த ஒரு நாடோ அல்லது நபரோ எந்தவொரு நடவடிக்கையிலும் ஒப்பீட்டு நன்மையைக் கொண்டிருக்க முடியாது

(5) வளங்களின் அருமைத்தன்மை இல்லாமற் போய்விடும்.

93. உற்பத்தி இயல்தகவு வளையியின் மீது இயங்கும் பொருளாதாரமொன்றை தொடர்பில் பின்வருவனவற்றுள் எது எப்போதும் உண்மையாக இருக்கும்?

(1) அது ஒரு தாராள சந்தைப்பொருளாதாரமாக இருத்தல் வேண்டும்.

(2) அது ஒரு கட்டளை பொருளாதாரமாக இருத்தல் வேண்டும்.

(3) அதன் வளங்கள் பூரணமாக வேலைவாய்ப்பில் இருக்கும்.

(4) அது உற்பத்தி வினைதிறனைப் பெற்றுள்ள போதிலும் வள ஒதுக்கீட்டு வினைத்திறனை அதனால் எவ்விதத்திலும் அடைய முடியாது.

(5) அது ஒரு நேர்க்கோட்டு இய்லதகவு வளைப்பியைக் கொண்டிருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

94. உற்பத்தி இயல்தகவு வளையியொன்று வரையப்பட்டுள்ள வரைபடத்தில் அமையச் செலவைக் காட்டுவது

(1) உற்பத்தி இயல்தகவு வளையியின் சாய்வின் மூலமாகும்.

(2) உற்பத்தி இயல்தகவு வளையியின் உட்புறமுள்ள ஒரு புள்ளியின் மூலமாகும்.

(3) ஆரம்பப் புள்ளிக்கூடாகச் செல்லும் ஒரு நேர்க்கோட்டின் மூலமாகும்.

(4) குத்தச்சின் மீதுள்ள ஒரு புள்ளி மூலமாகும்.

(5) கிடையச்சின் மீதுள்ள ஒரு புள்ளி மூலமாகும்.

95. பொருளாதாரமொன்றின் உற்பத்தி இயல்தகவு எல்லை வரைபடத்திற் காட்டப்பட்டுள்ளது. உற்பத்தி இயல்தகவு எல்லையில் A புள்ளியிலிருந்து B புள்ளியை நோக்கி நகர்வதனால் கருதப்படுவது யாதெனில்,

(1) பொருளாதாரத்தின் உற்பத்தி வினைத்திறன் மென்மேலும் அதிகரித்து செல்வதையாகும்.

(2) பொருளாதாரத்தின் வளங்கள் அதிகளவில் பயன்படுத்தப் படுவதையாகும்.

(3) அளவுத்திட்டச் சிக்கனங்களால் பொருளாதாரத்திற்கு நன்மையான விளைவுகள் ஏற்படுவதையாகும்.



(4) மூலதனப் பொருள்களின் உற்பத்தியில் அமையச் செலவு வீழ்ச்சியடைகின்றமையாகும்.

(5) மூலதனப் பொருள்களின் உற்பத்தியில் அமையச் செலவு அதிகரித்துச் செல்வதையாகும்.

96. பின்வரும் வரைபடமானது தொழில்நுட்ப முன்னேற்றத்திற்கு முன்னும், பின்னுமாக இரு உற்பத்தி சாத்திய வளையிகளைக் காட்டுகின்றது. (EF உம் GH உம்) தொழில்நுட்ப முன்னேற்றம் இடம்பெற்ற பின்னர் OX அளவு நுகர்வுப் பொருளை உற்பத்தி செய்வதற்கான அமையச்செலவு எத்தனை அலகுகள் மூலதனப் பொருட்களாக காணப்படும்?

(1) MH

(2) OH

(3) OM

(4) YF

(5) FH



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

97. வரைபடமானது X மற்றும் Y ஆகிய இரு நாடுகளின் உற்பத்தி இயல்தகவு வளையிகளைக் காட்டுகிறது. இவ்விரு பொருளாதாரங்கள் தொடர்பில் சரியான கூற்று பின்வருவனவற்றுள் எது?



(1) இரு பொருளாதாரங்களும் எப்போதும் சமமான அமையச்செலவைக் கொண்டுள்ளன.

(2) இரு பொருளாதாரங்களும் சமமான எதிர்கால வளர்ச்சிக்கு சாத்தியங்களைக் கொண்டுள்ள.

(3) இரு பொருளாதாரங்களிலும் அமையச்செலவுகள் அதிகரிக்கின்றன.

(4) இரு பொருளாதாரங்களும் ஒருபோதும் ஒரே பொருட்சேர்க்கையினை உற்பத்தி செய்ய முடியாது.

(5) நுகர்வுப் பொருள்களை உற்பத்தி செய்வதில் X நாடு Y நாட்டை விட உயர்ந்த அமையச் செலவைக்கொண்டுள்ளது.

98. தனியார் பண்டங்களையும் பொதுப்பண்டங்களையும் உற்பத்தி செய்யும் ஒரு பொருளாதாரத்தைக் கருதுக. அப்பொருளாதாரம் உற்பத்திசாத்திய எல்லையில் செயற்படும் போது பொதுப்பண்டங்களின் உற்பத்தியில் ஏற்படும் அதிகரிப்பு

(1) தனியார் பண்டங்களின் உற்பத்தியைப் பாதிக்க மாட்டாது.

(2) தனியார் பண்டங்களின் அமையவிலையை உயர்த்தும்.

(3) பொதுப் பண்டங்கள் போட்டியற்றனலாதலால் மொத்த உற்பத்தியை அதிகரிக்கும்.

(4) தனியார் பண்டங்களின் உற்பத்தி குறைவதைக் குறிக்கும்.

(5) உற்பத்திச் சாத்திய எல்லைக் கோட்டை இடப்புறமாக நகர்த்தும்.

99. x பண்ட உற்பத்தியில் செல்வாக்குடைய தொழில்நுட்ப மாற்றத்திற்கு முன்னும் பின்னும் காணப்படும் உற்பத்தி இயல்தகவு வளையிகள் வரைபடத்திற் காட்டப்பட்டுள்ளன. x பண்டத்தின் OQ அளவை உற்பத்தி செய்வதற்கான அமையச் செலவானது y பண்டம் தொடர்பில் வீழ்ச்சியடைந்துள்ளமையைச் சரியாகக் காட்டும் இடைவெளி பின்வருவன வற்றில் எது?

(1) IO

(2) IN

(3) MN

(4) KL

(5) OK



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

100. பின்வரும் கூற்றுக்கள் உற்பத்தி சாத்திய எல்லைகளைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. நீர் ஏற்றுக்கொள்ளும் கூற்றுக்களை அடையாளப்படுத்துக.

1. உற்பத்தி காரணிகளின் இருப்பு அதிகரித்தாலே உற்பத்தி சாத்திய எல்லை இடது பக்கமாக அசைவுறும்.
2. ஊழியம் வேலையற்றிருந்ததால் உற்பத்திப் புள்ளி எல்லைக்கு இடது பக்கமாக அமையும்.
3. ஊழியம் நிறைவும் பயன்பாட்டிலிருந்தால் உற்பத்திப்புள்ளி எப்பொழுதும் எல்லையில் அமையும்.
4. எல்லையின் சாய்வு உற்பத்தியில் அதிகரிக்கும் அமையச் செலவினைப் பிரதிபலிக்கின்றது.
5. எல்லையில் உள்ள புள்ளிகள் சமூகத்தினால் தெரிந்து கொள்ளக்கூடிய பொருட்களின் மாற்று அளவுச் சேர்க்கைகளை காட்டுகின்றது.

(1) 1 உம் 2 உம் (2) 2 உம் 3 உம் (3) 2 உம் 4 உம்

(4) 2 உம் 5 உம் (5) 3 உம் 5 உம்

உலக வர்த்தக நிறுவனம் (WTO)

சர்வதேச வர்த்தகத்தை முடிந்தளவு தடையற்ற விதத்திலும் எதிர்வு கூறத்தக்க வகையிலும் சீராக மேற்கொள்ள அவசியமான உலகளாவிய சட்டதிட்டங்களை உருவாக்கும் நோக்கில் அதுவரை காலமும் நிலவிய புயுவுவு அமைப்புக்கு பதிலாக 1995 இல் உருவாக்கப்பட்ட நிறுவனமே இதுவாகும்.

மேற்படி குறிக்கோளை எய்தும் பொருட்டு அந்நிறுவனமானது பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

- வர்த்தக உடன்படிக்கைகளை நிர்வகித்தல்.
- வர்த்தக பேச்சு வார்த்தைகளுக்கான களம் அமைத்தல்.
- வர்த்தக பிணக்குகளைத் தீர்த்து வைத்தல்.
- பல்வேறு நாடுகளினதும் வர்த்தகக் கொள்கைகளை மீளாய்வு செய்தல்.
- தொழில்நுட்ப உதவி மற்றும் பயிற்சித்திட்டங்கள் ஊடாக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் வர்த்தகக் கொள்கைகளின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண உதவுதல்.
- ஏனைய சர்வதேச நிறுவனங்களுடன் ஒத்துழைத்துச் செயற்படல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. (i) பொருளியலை இயற்கை விஞ்ஞானத்திலிருந்து வேறுபடுத்தி விளக்குக.
(ii) அமையச்செலவு எண்ணக்கருவை விளக்கி, அருமை பிரச்சினையுடன் அமையச் செலவு எவ்வாறு தொடர்புபடுகின்றது என்பதை விளக்குக.
(iii) உற்பத்தி செயற்றிறன் வள ஒதுக்கீட்டு செயற்றிறன் ஆகியவற்றை வேறுபடுத்துக.
(iv) உற்பத்தி சாத்திய இயல்தகவு வளையி என்றால் என்ன?
(v) உற்பத்தி இயல்தகவு வளையி ஒன்றின் எடுகோள்கள் யாவை?

2. (i) மனித தேவைகளின் இரு வகைகளையும் குறிப்பிட்டு, அவற்றினை விளக்குக.
(ii) அடிப்படை பொருளாதார பிரச்சினைகள் யாவை? அவற்றிற்கு விளக்கம் தருக.
(iii) அமையச்செலவு பூச்சியமாகும் சந்தர்ப்பங்கள் நான்கினை தருக.
(iv) கலப்பு பொருளாதாரம் ஒன்றின் பண்புகள் நான்கு தருக.
(v) உற்பத்தி சாத்திய வளையியின் வலது நகர்வுக்கு பொறுப்பாக இருக்கக்கூடிய காரணிகள் எவை?

3. (i) நேர்கூற்று, நியமக்கூற்றினை விளக்கி அவ்விரண்டிற்கும் இவ்விரு உதாரணம் தருக.
(ii) திட்டமிட்ட பொருளாதார முறையொன்றுடன் ஒப்பிடுகையில் சந்தை பொருளாதாரமொன்றில் அடிப்படை பொருளாதார பிரச்சினைகள் தொடர்பான தீர்மானங்கள் எவ்வாறு வேறுபட்ட வகையில் மேற் கொள்ளப்படுகின்றன.
(iii) பொருளாதார அமைப்பொன்றின் செயலாற்றுகையை மதிப்பீடு செய்கின்ற நான்கு நியதிகளை தருக.
(iv) அருமையானது பொருளியலில் மையப் பிரச்சினையாக கருதப்படு வதற்கான காரணங்கள் யாவை?
(v) ஊழிய படை, ஊழிய நிரம்பல் என்பவற்றை வேறுபடுத்துக.

4. (i) பொருளாதாரப்பண்டம், இலவசப்பண்டம் ஆகிய பதங்களை விளக்கி, அவற்றை வேறுபடுத்துக.
(ii) பொருளாதார முறைமைகள் என்றால் என்பதை குறிப்பிட்டு, அவை வேறுபடுவதற்கான நியதிகளை விளக்குக.
(iii) உற்பத்தி இயல்தகவு வளையியில் காட்டக்கூடிய சிற்றின பொருளியல் எண்ணக்கருக்கள், பேரின பொருளியல் எண்ணக்கருக்களை தலா இரண்டு வீதம் தருக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(iv) முயற்சியாண்மையின் பொருளாதார நடவடிக்கைகள் எவை?

(v) மனித மூலதனத்தை விருத்தி செய்ய எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் யாவை?

5. (i) பொருளாதார வளங்களின் நான்கு வகைகளும் எவை? அவற்றின் பண்புகள் இவ்விரண்டு வீதம் தருக.

(ii) முயற்சியாளனொருவனின் பிரதான தொழிற்பாடுகள் எவை?

(iii) பின்வரும் பொருளாதார அமைப்புக்களை சுருக்கமாக விளக்குக.

1. சமூக சந்தை பொருளாதாரம்

2. சமவுடமை சந்தை பொருளாதாரம்

(iv) பொருளாதார முறையில் தீர்மானம் மேற்கொள்ளும் பிரதான பிரிவினர்கள் யாவர்?

(v) உற்பத்தி சாத்திய வளையியின் பயன்பாடுகள் எவை?

6. (i) அருமை, மாற்றுப்பயன்பாடு, தெரிவு என்பவற்றை விளக்கி, அவற்றுக்கிடையிலான தொடர்பினை எடுத்து கூறுக.

(ii) சந்தை பொருளாதாரமொன்றில் விலைகளின் மூன்று பிரதான தொழிற்பாடுகள் எவை?

(iii) (அ) அதிகரித்து செல்லும் அமையச்செலவு விதியினை விளக்குக.

(ஆ) அமையச் செலவு அதிகரிக்க ஏதுவான காரணிகள் யாவை?

(iv) பொருளியல் இலாபக் கணிப்பீட்டின் முக்கியத்துவத்தை தருக.

(v) ஊழிய வளம், மூலதன வளம் என்பவற்றின் முக்கியத்துவத்தைத் தருக.

7. (i) சமூகம் வளங்களை ஏன் உசிதமாகப் பயன்படுத்தல் வேண்டும்?

(ii) அருமை, பொருளாதார அடிப்படைப் பிரச்சினைகள் என்பவற்றுக்கு இடையிலான தொடர்பு, பொதுத்தன்மை, வேறுபாடு என்பவற்றை எடுத்துக் காட்டுக.

(iii) உற்பத்திச் சாத்திய வளையியின் துணையுடன் பின்வரும் எண்ணக்கருக்களை விளக்குக.

a. பொருளாதார வளர்ச்சி *b.* அருமை

c. பொருளாதார மந்தம் *d.* பொருளாதார பின்னடைவு

(iv) பொருளாதார வினைத்திறனுக்குள் அடங்குபவன எவை?

(v) பொருளாதார முறைமைகளில் காணப்படும் பல்வேறு ஊக்குவிப்பு வடிவங்களைத் தருக.

8. (i) வளங்களின் மாற்றுபயோகத்தன்மையினால் தோன்றிய இரு பொருளியல் பிரச்சினைகளை குறிப்பிடுக.

(ii) பொருளாதார முறமைகளை வேறுபடுத்தும் முக்கிய நியதிகள் நான்கைக் குறிப்பிடுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(iii) உற்பத்திச் சாத்திய வளையினை இடப்பெயர்க்கக்கூடிய பிரதான காரணிகள் இரண்டினைத் தருக.

(iv) நிலையான சந்தர்ப்பக் கிரயத்தினை உற்பத்தி சாத்திய வளையி எவ்வாறு வெளிப்படுத்தி நிற்கும் என்பதை விளக்குக.

(v) பொருளாதார வளர்ச்சிக்கான சந்தர்ப்பச் செலவை உற்பத்திச் சாத்திய வளையின் உதவியுடன் விளக்குக.

9. (i) "மனித தேவைகள் பொருளியலுடன் மட்டும் தொடர்புடைய எண்ணக்கரு" இக்கூற்றை ஏற்பீரா? உமது விடைக்கான நியாயங்களை குறிப்பிடுக.

(ii) (அ) இயற்கை வளங்களின் இருவகைகள் எவை?

(ஆ) அவற்றுக்கு தலா இரு உதாரணங்கள் தருக.

(iii) சந்தைப் பொருளாதார வகைகள் மூன்றைக் குறிப்பிடுக.

(iv) பொருளாதாரத்தின் செயலாற்றத்தை அளவிடும் நியதிகள் யாவை?

(v) உற்பத்திச் சாத்திய வளையியில் காட்டப்படக் கூடிய சிற்றினப் பொருளியல் விடயங்கள் இரண்டினையும் பேரினப் பொருளியல் விடயங்கள் இரண்டினையும் தருக.

10. (i) பொருளியல் என்பதனால் நீர் கருதுவது யாது?

(ii) தெரிவுப் பிரச்சினை தோன்றுவதற்கான காரணங்கள் எவை?

(iii) பொருளாதாரமல்ல வளம் என்றால் என்ன?

(iv) உற்பத்திச் சாத்திய வளையி என்பதனை பொருள் வரையான செய்க.

(v) பின்வரும் எண்ணக்கருக்களை உற்பத்தி சாத்திய வளையி எவ்வாறு வெளிப்படுத்தி நிற்கிறது எனக்காட்டுக.

(அ) 10% பொருளாதார வீழ்ச்சி

(ஆ) ஊழிய வளத்தின் முழுமையான பயன்பாடு

(இ) 20% பொருளாதார வளர்ச்சி

(ஈ) புடவைத் தொழிற்சாலைகளில் வேலை நிறுத்தம்

11. (i) பொருளியல்விஞ்ஞானக்கூற்று வடிவங்கள் இரண்டையும் விளக்குக.

(ii) திட்டமிட்ட பொருளாதாரத்திலும் சந்தைப் பொருளாதாரத்திலும் இலாபத்தின் பங்கு பெறும் முக்கியத்துவத்தை ஆராய்க.

(iii) ஒதுக்கீட்டு வினைத்திறனை அடைவதற்கான நிபந்தனைகளை வரைபடங்கள் உதவியுடன் விளக்குக.

(iv) உற்பத்திச் சாத்திய வளையின் பண்புகள் நான்கினை குறிப்பிட்டு விளக்குக.

(v) பின்வரும் விடயங்களை உற்பத்திச் சாத்திய வளையின் துணை கொண்டு விளக்குக.

a. சந்தைப் பொருளாதாரத்தில் யாருக்காக உற்பத்தி செய்தல் என்பதற்கான தீர்வு

b. திறமையற்ற (சீரற்ற) பொருளாதார வளர்ச்சி

c. மின்வெட்டு அமுல்க்கு வரல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. (i) (அ) சந்தர்ப்பச் செலவு எண்ணக்கருவின் பண்புகள் மூன்றை எழுதுக.

(ஆ) சந்தர்ப்பச் செலவு தோன்றாக இரு சந்தர்ப்பங்களை தருக.

(ii) இயற்கை வளங்களை எல்லையற்றுப் பயன்படுத்துவதனால் சர்வதேச ரீதியாக எதிர் நோக்கப்படும் பிரச்சினைகள் நான்கை குறிப்பிடுக.

(iii) ஊழியவளம், முயற்சி என்பவற்றை வேறுபடுத்தி அவற்றை நிர்ணயிக்கும் காரணிகளைத் தருக.

(iv) (அ) காரணி வினைதிறன் என்பதனால் கருதப்படுவது யாது?

(ஆ) காரணி வினைதிறனை தீர்மானிக்கும் காரணிகள் யாவை?

(v) (அ) சமூகச் சந்தை பொருளாதாரத்தில் அரசின் வகிபாகத்தினை விளக்குக.

(ஆ) லிபரல் சந்தை அமைப்பு என்றால் என்ன?

13. (i) பொருளியல் ஆராயும் மனித தேவையை ஆராய்க.

(ii) பொருளியலைக் கற்பதன் முக்கியத்துவத்தை விளக்குக.

(iii) அதிகரித்துச் செல்லும் சந்தர்ப்பச் செலவு தோன்றுவதற்கான காரணங்கள் எவை?

(iv) மானிட மூலதனம், பொருளாதார பொதுச் செயற்பாட்டு மூலதனம், சமூகப் பொதுச் செயற்பாட்டு மூலதனம் என்பவற்றிற்கு இடையில் நீர் காணும் வேறுபாடு யாது?

(v) எல்லா பொருளாதார வடிவத்திலும் காணப்படும் அரசாங்கத்திற்கு உடமையான தொழிற்பாடுகள் நான்கு தருக.

14. (i) பொருளியல் பாடத்தின் இரு வகைகள் எவை?

(ii) பொருளாதாரமல்லப் பண்டம் பொருளாதாரப் பண்டமாக மாறும் விசேட சந்தர்ப்பங்கள் இரண்டை தருக.

(iii) சந்தை பொருளாதாரத்தில் விலைப்பொறி முறையின் மறைவுகரத் தொழிற்பாட்டை விளக்குக.

(iv) பொருளாதார முறைமையொன்றில் காணப்படும் அடிப்படைகள் யாவை?

(v) பின்வரும் நிகழ்வுகள் ஏற்படுத்தும் தாக்கங்களை உற்பத்தி சாத்திய வளையில் காட்டுக.

(அ) எதிர்கால பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்தத்தக்க வகையில் வள ஒதுக்கீட்டில் மாற்றம் இடம்பெறல்.

(ஆ) பொருளாதார ஒன்றில் மிகமோசமான காலநிலை நிலவுதல்.

(இ) பொருளாதார உட்கட்டமைப்புகளில் ஒரு மேம்பாடு

(ஈ) தனியார் மயப்படுத்தல் காரணமாக பொதுத் துறையின் செயற்றிறன்மை குறைதல்.

(உ) கோரோனாவின் தாக்கத்திலிருந்து பொருளாதாரம் மீட்சி அடைதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. (i) நுண்பாக பொருளியல், பேரின பொருளியல் ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாடுகளை உதாரணத்துடன் விளக்குக.

(ii) (அ) இயற்கை வளங்களின் இருவகை தந்து அவற்றிற்கு உதாரணம் தந்து விளக்குக.

(ஆ) பணம் ஏன் ஒரு மூலதனமான கருதப்படாமைக்கான காரணங்களை தந்து விளக்குக.

(iii) சந்தை பொருளாதார முறையும் கட்டளை பொருளாதார முறையும் அடிப்படை பொருளாதார பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் முறையை விளக்குக.

(iv) நிகழ்கால நுகர்வை குறைத்து கொள்ள தயாராக உள்ள நாடுகளின் பொருளாதாரம் துரித வளர்ச்சியை எவ்வாறு அடைய முடியும் என்பதை உற்பத்தி இயல்தகவு வளையியை பயன்படுத்தி விளக்குக.

(v) உற்பத்தி இயல்தகவு வளையிகளின் துணையுடன் பின்வரும் எண்ணக்கருக்களை பிரதிபலித்து காட்டுக.

(அ) பொருளாதார பின்னடைவு

(ஆ) வளமாற்றுபயன்பாடு

(இ) அருமை

(ஈ) நிறைதொழில் மட்டம்

16. (i) (அ) மனித தேவைகளையும் விருப்பங்களையும் வேறுபடுத்துக.

(ஆ) மனித தேவைகிள்ன இருவகைகளுக்கும் தலா ஒவ்வொரு உதாரணம் தருக.

(ii) (அ) பொருளாதார பண்டம், பொருளாதாரமல்லா பண்டம் ஆகியவற்றுக்கிடையேயான வேறுபாடுகளை விளக்குக.

(ஆ) சந்தை பொருளாதாரத்தின் பிரதிகூலங்கள் நான்கு தருக.

(iii) (அ) காரணி வினைத்திறன் என்றால் என்ன என்பதை விளக்கி அதனை தீர்மானிக்கும் காரணிகள் நான்கு தருக.

(ஆ) மூலதனத்தின் வகைகளை குறிப்பிட்டு, அவற்றில் இரண்டினை விளக்குக.

(iv) (அ) உற்பத்தி இயல்தகவு வளையி என்றால் என்ன? உற்பத்தி இயல்ாகவு வளையி ஒன்றின் எடுகோள்கள் எவை?

(ஆ) உற்பத்தி இயல்தகவு வளையியில் காட்டக்கூடிய சிற்றின பொருளியல் எண்ணக்கருக்கள் பேரின பொருளியல் எண்ணக்கருக்களை தலா இரண்டு வீதம் உற்பத்திசாத்திய வளையியில் வரைந்து காட்டுக.

(v) உற்பத்தி சாத்திய இயல்தகவு வளையியின் வெளிப்புற நகர்வுக்கான காரணங்கள் யாவை?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1603

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் கரவெட்டியை சேர்ந்தவரும் கொழும்பு புனித அந்தோனியார் தமிழ் மகா வித்தியாலய ஆசிரியருமான திரு. எஸ். ஸ்ரீராம் அவர்கள் பொருளியலில் மிகுந்த பற்றுக்கொண்டவர்.

இவர் தனது தொடர் வாசிப்பின் மூலமும் கொழும்பில் நடைபெறும் பொருளியல் பாட ஆசிரியர்களுக்கான கருத்தரங்குகளில் தவறாது கலந்துகொண்டும் தனது அறிவை இற்றைப்படுத்திக்கொள்பவர். மேலும் இலங்கை ரூபாவாஹினி கூட்டுத்தாபனத்தின் நேத்திராத் தொலைக்காட்சியில் அறிவாரம் நிகழ்ச்சியில் தனது தொடர் பொருளியல் விரிவுரைகளை ஆற்றியவர், தற்போது குருகுலம் கல்வி நிகழ்ச்சியில் பங்கேற்று பொருளியல் பாட மாணவர்களுக்கு கற்பிக்கின்றார்.

புதியப்பாடத்திட்டத்திற்கு அமைய தனது அனுபவத்தை கொண்டு இந்நூலை கல்விச்சமூகத்திற்கு அளித்துள்ளார்.

மாணவர்கள் பொருளியலின் அறிமுகத்தினை தெளிவாக விளங்கிக் கொள்வதற்கும் பரீட்சைகளில் வெற்றிகரமாக வினாக்களுக்கு விடையளிப்பதற்கும் இந்நூல் சிறந்த வளநூலொன்றாக அமையுமென்பது எனது நம்பிக்கையாகும். ஆகையால், பொருளியல் பாட ஆசிரியர்களும் மாணவர்களும் திரு. எஸ். ஸ்ரீராம் ஆசிரியரது ஆக்கபூர்வமான இம்முயற்சிக்கு ஆதரவளிப்பீர்களென எதிர்பார்க்கின்றேன். தொடர்ந்து ஏனைய தேர்ச்சிகளுக்கும் இவ்வாறான வளநூல்களை ஆக்கித்தந்து தமிழ்மொழி மூல மாணவர்களது வெற்றிக்குப் பங்களிக்க வேண்டுமென வாழ்த்துவதோடு, இறை ஆசிகளும் கிடைக்கப்பெறப் பிராத்திக்கின்றேன்.

கலாநிதி எஸ். கே. பிரபாகரன்
சிரேஷ்ட விரிவுரையாளர், செயற்றிட்டத் தலைவர்
வணிகத்துறை
தேசிய கல்வி நிறுவகம், மகரகம
இலங்கை

9 789553 426420
ISBN - 978-955-3426-42-0

விலை 350 /-

LOYAL PUBLI[...]N
125, NEW MOOR STREET, CO[...]
TEL : 011-24 33874 , 077[...]

PBD
201025052
Rs. 350.00
PORULIYAL A/L THERCHCHI I
060620

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org